


MARX–MARXISTS

SOME BOOKS – SOME NOTES

R. PATTABIRAMAN

MARX MARXISTS SOME BOOKS SOME NOTES

மார்க்ஸ்- மார்க்சியர்

சில நூல்கள்- சில குறிப்புகள்

உள்ளே

இர்பான் ஹபீப்- சோசலிசம்

அரசியல் மார்க்ஸ்

தோழர் பால் ஸ்வீசி நினைவில்..

மார்க்சும் பாட்டாளியும்

லூயி பிஷரின் லெனின்

காந்தி -மார்க்ஸ் - இந்தியா

பியாரிலால்- காந்தி- மார்க்ஸ்

பேரா. தோழர் அ.மார்க்ஸ் எழுதிய கார்ல் மார்க்ஸ்

தோழர் டிராட்ஸ்கி

மாவோ-தோழர் டாங் பிங் ஹான்

மாவோ- ஜோனத்தன் கிளமண்ட்ஸ்

மாவோ- காந்தி

சீனா கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு

அகலத் திறந்து வைப்பீர்- தோழர் மாவோ

No bounds to practice - no end to theoretical innovation

தோழர் ஹோசிமின்

டேவிட் ரியாஜனாவ்

தோழர் கோர்பசேவ் மறைவு

ஷரியாதி எனும் சமூகவியலாளர்

இந்திய வரலாறு குறித்த கார்ல் மார்க்ஸ் குறிப்புகள்

கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ

ஹரால்ட் லாஸ்கியின் கம்யூனிசம்

பீட்டர் வோர்ஸ்லியின் மார்க்ஸ்- மார்க்சியம்

நினைவுச் சுழல்

ஆர் பி தத் - இந்தியாவின் உற்ற தோழர்

பில்கிராமியின் ஆய்வுலகில் அந்நியமாகா பெருவாழ்வு..

இஸ்த்வான் மீசாரஸ்

Essays on Scientific Socialism

சில உதிரிப் பதிவுகள்

முன்னுரை அல்லது மார்க்ஸ் வாசிப்பு

கார்ல் மார்க்ஸ் உடன் கடந்த 45 ஆண்டுகளாக ஏதோ ஒருவகையில் எனது பயணம் நடந்திருக்கிறது. புத்தகங்கள், சர்வதேச இதழ்கள், இந்திய இதழ்கள், மாநில பத்திரிகைகள், மார்க்சியர் உரைகள் என இந்தப் பயணம் என்னை அழைத்துச் சென்றுள்ளது.

இடைவெளியே இல்லாமல் இது நடந்துவிட்டது எனச் சொல்லமுடியாது. அவ்வப்போது இடைவெளிகள்..ஆனால் அவை சில நாட்கள், சில வாரங்கள் என்ற அளவிலேயே இருந்திருக்கும். மாதக்கணக்கில் மார்க்சிடம் செல்லவில்லை என்ற நிலை இருந்திருக்காது. ஏதோ ஒரு article என்றாவது தொடர்பு இருந்திருக்கும்.

ஏராள பக்கங்கள் (Marx corpus எனப்பார்க்கும்போது இது மிகக்குறைவானதே) அவ்வப்போது இந்த ஆண்டுகளில் என் கண் வழி மிதந்திருக்கும். புரிந்தும் புரியாமலும் வரிகளை விழிகள் நகர்த்திருக்கும். சில நேரங்களில் உச்ச concentration உடனும் பல நேரங்களில் எண்ண அலை பாய்தல் கணங்களாகவும் அவை கடந்து போயிருக்கும். படித்தவை பல நினைவில் நீங்காமல் அமரவில்லை.

சில புத்தகங்கள் திரும்ப படிக்கலாம் என்ற எண்ணத்தை உருவாக்கியிருக்கும். படிக்கவும் வாய்ப்பு இருந்திருக்கும்.

கீழ்கண்ட சில புத்தகங்கள் மார்க்ஸ் குறித்த கம்யூனிஸ்ட் கட்சிகளின் மதிப்பீட்டிற்கு அப்பாற்பட்டு, ஆய்வாளர்களின் ஆய்வுப்புரிதலில் வந்தவையாக எனக்குத் தோன்றும். அங்கு வெறும் ஆராதனைகள் எனும் hagiography முறை இருக்காது. மார்க்சின் பெருமிதங்கள் , சிந்தனை உயர்வு குறித்த மதிப்பிடல்கள் நடத்தப்பட்டிருக்கும். அந்த அந்த ஆசிரியர் உணரும் குறைகள் சில சொல்லப்பட்டிருக்கும். கேலி பேச்சுக்கள் இருக்காது. அப்படியான நான் வாசித்த சில புத்தகங்களை இங்கு தந்துள்ளேன்.

மார்க்சை முன்முடிவின்றி நேர்மையாக புரிந்துகொள்ள விழையும் எவருக்கும் இக்குறிப்புகள் உதவக்கூடும் எனக் கருதுகிறேன். நான் வாசித்த சில புத்தகங்கள் கடந்த 110 ஆண்டுகள் இடைவெளியில் வந்தவை. புதிய புதிய தகவல்களுடன் பெரும் உழைப்பை நல்கி வந்தவையாக எனக்குப்படுகின்ற புத்தகங்கள் இவை. தமிழிலும் சில புத்தகங்கள் உள்ளன. சாமிநாத சர்மாவின் மார்க்ஸ் இன்றும் சிறப்பான நூலாகவே இருக்கிறது.

Frans Mehring - The story of Karl Marx (1914ல் எழுதப்பட்டது)

Otto Rhule - Karl Marx his life and works

David Riazanov- Marx Engels An Introduction

Isaiah Berlin - Karl Marx

Max Beer- Karl Marx

Peter Worsely- Marx and Marxism (பிரமிள் மொழிபெயர்ப்பில் தமிழில் வந்துள்ளது)

Peter Singer- Marx A very short introduction

Harold Laski - Karl Marx an essay

David McClellan- Karl Marx His Life

Francis Wheen - Karl Marx

Gregory claeys- Marx and Marxism

Jonathan Spencer- Karl Marx A Nineteenth century life

Meghnad Desai- Marx’s Revenge

Gareth Stedman Jones- Karl Marx Greatness and Illusion (2017ல் வந்தது)

சாமிநாத சர்மா - கார்ல் மார்க்ஸ் (பெர்லின் மற்றும் ஹரால்ட் லாஸ்கி தழுவல் எனலாம்)

மார்க்ஸ் பிறந்தார் ஹென்றி வோல்காவ்

அப்பாத்துரையாரின் மார்க்ஸ்

சாமி சிதம்பரனாரின் மார்க்ஸ்

மார்க்ஸ் எங்கெல்ஸ் குறித்த நினைவுகள்

கடந்த சில மாதங்களில்/ ஆண்டுகளில் அவ்வப்போது முகநூலில் எழுதியவற்றில் மீட்க முடிந்த சில இடுகைகளை/ குறிப்புகளை இங்கு தொகுத்து தந்துள்ளேன். மேலே குறிப்பிட்ட நூல்கள் அல்லாத வேறு நூல்கள், மார்க்சியர் பற்றிய சில குறிப்புகள் இந்த தொகுப்பில் காணப்படும்.

முகநூலிலிருந்து மீட்க முடிந்தவற்றை மட்டும் இங்கு கொடுத்துள்ளேன். முகநூல் பதிவுகளை காலவரிசைப்படி அடுக்காமல், வாசகருக்கு சற்று உதவக்கூடிய வகையில் அடுக்கியுள்ளேன். முகநூலில் எழுதியவற்றை பெரும்பாலும் மாற்றவில்லை. படிக்க இன்னும் இலகுவாக செய்ய முடிந்ததை செய்துள்ளேன்..

மார்க்ஸ் - லெனின், டிராட்ஸ்கி, மாவோ, ஹோசிமின் மற்றும் சில முக்கிய மார்க்சியர் குறித்தும் இப்பதிவுகள் செல்லும்

'மார்க்ஸ்- மார்க்சியர்- இந்திய தாக்கம்' என்கிற வரிசையில் எனது ஏழாவது நூல் இது. ரோசா லுக்சம்பர்க், மார்க்சிய தடங்கள் இரண்டும் வந்து 25 ஆண்டுகள் ஆகப்போகின்றன. என்சிபிஎச் கொணர்ந்தனர். 'ஹெகல் துவங்கி' என்கிற நூலில் ஹெகல், மார்க்ஸ், எங்கெல்ஸ், பகுனின் குறித்து எழுதியிருந்தேன். அந்நூல் நிர்மல்ராம் உதவியால் கிண்டிலில் வெளியானது.

லெனின் குறித்த 4 கட்டுரைகளை தொகுத்து நூலாக்கம் செய்திருந்தேன். மாக்சிம் கார்க்கியின் அரசியல் பயணம் பற்றிய நூல் ஒன்று.. இந்தியாவின் முன்னோடி கம்யூனிசத் தலைவர்கள் பற்றி மற்றொரு நூல். இந்த இரண்டையும் நாற்கரம் நல்லு வெளியிட்டிருந்தார். எனது இந்த நூல்கள் அனைத்துமே இணையத்தில் கிடைக்கக்கூடியவையே. ரோசா, மார்ச்கிய தடங்கள் நீங்கலாக அனைத்து நூல்களையும் மின் நூல்களாக காரைக்குடி லெனின் அவர்கள் வலையேற்றம் செய்துள்ளார். மேற்கண்ட 6 நூல்களுடன் , இந்நூலையும் இணைத்து வாசிப்பவர்க்கு ஏராள செய்திகள் கிடைக்கும், புரிதலும் கூடலாம்.

முன்னர் வெளியான 6 நூல்களுக்கும் நான் செலுத்திய உழைப்பிற்கு சற்றும் குறைவில்லாத உழைப்பை இத்தொகுப்பும் காட்டும். என் இடுகைகள்- என் புரிதல் மற்றும் ரசனைக்கேற்ப இருக்கும். இங்கு குறிப்பிடப்படும் மூல நூல்களை வாசிப்பவர்க்கு அப்பிரதிகள் வேறு அனுபவங்களையும் தரக்கூடும்.

மார்க்ஸ் குறித்து ஓரளவு வாசிப்புள்ளவர்க்கு, மேலும் ஆர்வத்தை தூண்ட, இப்பதிவுகள் உதவும் என்றால் பெரும் மகிழ்ச்சி

12-05-2025

1.பிரான்ஸ் மெரிங் எழுதிய Karl Marx The story of His Life

கார்ல் மார்க்ஸ் குறித்த முன்னோடி சரிதையாக பிரான்ஸ் மெரிங் எழுதிய Karl Marx The story of His Life பார்க்கப்படுகிறது . 'life and works ' என மெரிங் பெயரிடவில்லை என்பதையும் விளக்கிவிடுகிறார். 1918ல் ஜெர்மான்ய மொழியில் எழுதப்பட்ட இந்நூல், 1935ல் ஆங்கிலத்தில் வெளிவந்தது. Edward Fitzgerald மொழிபெயர்த்திருந்தார்.

மெரிங், மார்க்ஸ் குறித்த பெருமிதங்களை, அவருக்கு தோன்றிய சில விமர்சனங்களுடன் இந்த வாழ்க்கை வரலாற்றில் எழுதியிருப்பார். அதானாலேயே இந்நூல் சிறப்பாகப் பார்க்கவும்படுகிறது. மெரிங் மார்க்சை மட்டுமல்லாமல் பகுனினையும், லசேலையும், லீபினெக்ட்டையும் பெர்ன்ஸ்டைனையும் சேர்த்தே புரிந்துகொள்ள முயன்றார். இந்த விவாதங்களில் அவர் 'anti Marxist' என்ற கெட்ட பெயரையும் எடுத்தார். ரோசா லுக்சம்பர்க் உடன் நின்று காட்ஸ்கியையும், ரியாஸ்னாவையும் எதிர்த்து போராடினார் மெரிங்.

மார்க்ஸின் புதல்வி திருமதி லாரா லபார்க் , மெரிங் மீது நம்பிக்கை வைத்திருந்தவர். அவரும் ஒரு வகையில் மெரிங் இந்நூல் எழுத தூண்டினர் எனச் சொல்லலாம்.

இந்நூலின் 1962 பதிப்பு மாக்ஸ் ஷாக்டன் Max Shachtman அறிமுக உரையுடன் வந்தது. இணையத்தில் கிடைக்கிற நூல். இதையே 'சிந்தன் கிளாசிக்ஸ்' என்று சிந்தன் பதிப்பகம் 2019ல் தங்கள் பதிப்பாகக் கொணர்ந்தனர். 600 பக்கங்கள் கொண்ட நூல். 2019ல் என்ன விலை வைத்தனரோ தெரியவில்லை. 2022 ஜனவரியில் ஸ்டிக்கர் ஒட்டி ரூ 800 என ஆக்கியிருந்தனர். இப்போதும் அதே விலையா எனத் தெரியவில்லை. பதிப்பகத்தார் போட்ட முதலீடுக்கு ஒருவகை வட்டியை வாசகர்கள் கொடுப்பது போல தோன்றியது. அல்லது inflationக்கான ஈடு என எடுத்துக்கொள்ளலாம்.

மார்க்ஸ் குறித்து அதிகம் refer ஆகும் நூல் . மாக்ஸ் ஷாக்டன் தன் அறிமுகத்தில் இப்படி சொல்வார்

Mehring's biography of Marx is to be recommended as it always been by serious scholars and students, as the best introduction to the works , to the life and struggle of the most eminent figure in world socialism.

மெரிங் லிபரல் பத்திரிகையாளராகவும் இருந்தவர். பிஸ்மார்க்கை எதிர்த்து ஜனநாயக பத்திரிகைகளில் எழுதியவர். கிளாரா ஜெட்கினும், ரோசாவும் அவருக்கு துணை நின்றனர். இந்நூலை அவர் கிளாராக்குத்தான் சமர்ப்பணம் செய்திருந்தார். ரோசா , மார்க்ஸின் காபிடல் குறித்த பகுதிகளை எழுதியவர் என்கிற வாக்கு மூலத்தை மெரிங் தந்திருப்பார். எனவே ரோசாவும் இந்நூல் குறித்து நேர்மறை பார்வை வைத்திருந்தவர் எனும் போது, இந்நூல் கூடுதல் சிறப்பைப் பெறுகிறது.

நூற்றாண்டை கடந்த நூல். ஆங்கிலத்தில் வந்தே 90 ஆண்டுகள் ஆகப்போகிறது. இன்றும் இந்நூல் பதிப்புகளைக் கண்டு மார்க்ஸ் குறித்த ஆர்வலர்களிடம் செல்வது பாராட்டிற்குரியது. இதன் தமிழ் வடிவத்தை என் சி பி எச் கொணர்ந்த நினைவு. சரியா என திட்டமாக சொல்லத்தெரியவில்லை..

மெரிங் இந்நூலை லீனியராக காலவரிசைப்படித்தான் அழைத்துச் செல்கிறார். 15 பெரும் அத்தியாயங்களில், 88 உப தலைப்புகளில் அவர் யாத்திருப்பார்.

இந்த பதிவில் on Jewish question பகுதியில் ரூகேவிற்கான பதிலாக இளம் மார்க்ஸ் சொன்ன வரிகளைத் தருகிறேன். இந்தியாவிற்கும் கூட பொருத்தமாக இருக்கலாம். அதை appropriate செய்து காந்தி, அம்பேத்கர், பெரியார் எனக்கூட நீட்டித்துக்கொள்ளலாம்.

Every revolution dissolves the old society and in so far as it does this it is social. Every revolution overthrows the old power and so far as it does this is political

A social revolution with a political soul as demanded by Ruge , was senseless, but a political revolution with a social soul was reasonable

மெரிங் புத்தகத்திற்கு பின்னர், மார்க்ஸ் குறித்து மேலும் மேலும் புதிது புதிதான செய்திகள் அறியப்பட்டு வால்யூம்களும், நூல்களும் வந்துகொண்டேயிருக்கின்றன. ஆர்வமுள்ளவர்க்கும், ஆய்வாளர்க்கும் ஏராளம் கொட்டிக்கிடக்கின்றன. கொஞ்சம் நிதி செலவாகும். சிலவற்றை கண் சிரமப்பட இணையத்தில் படிக்கலாம். மார்க்ஸ் வாழ்க்கை குறித்து படித்த நினைவிற்கு வரும் சில நூல்கள்

Otto Rhule - Karl Marx his life and works

David Riazanov- Marx Engels An Introduction

Isaiah Berlin - Karl Marx

Max Beer- Karl Marx

Marx as politician - David Felix

Hegel to Marx - Sydney Hook

Marx Remembered - Philip Foner

Peter Worsely- Marx and Marxism (பிரமிள் மொழிபெயர்ப்பில் தமிழில் வந்துள்ளது)

Peter Singer- Marx A very short introduction

Harold Laski - Karl Marx an essay

David McClellan- Karl Marx His Life

Francis Wheen - Karl Marx

Marx an Illustrated History - Werner Blumenberg

Gregory claeys- Marx and Marxism

Jonathan Spencer- Karl Marx A Nineteenth century life

Meghnad Desai- Marx's Revenge

Gareth Stedman Jones- Karl Marx Greatness and Illusion (2017ல் வந்தது)

சாமிநாத சர்மா - கார்ல் மார்க்ஸ் (பெர்லின் மற்றும் ஹரால்ட் லாஸ்கி தழுவல் எனலாம்)

மார்க்ஸ் பிறந்தார் ஹென்றி வோல்காவ்

அப்பாத்துரையாரின் மார்க்ஸ்

சாமி சிதம்பரனாரின் மார்க்ஸ்

மார்க்ஸ் எங்கெல்ஸ் குறித்த நினைவுகள்

இந்திய மார்க்சியர் கட்சித்தலைவர்கள் அவ்வப்போது எழுதிய சில கட்டுரைகள்

மார்க்சியம் குறித்து என்றால் ஏராள நூல்கள் ஆர்வமுள்ளவர்க்காக இருக்கின்றன. சுய கல்வி பயிற்சி இருந்தால் கொஞ்சம் தேறலாம்.

may 24, 2024

Karl Marx by Francis Wheen

2. மார்க்ஸ்- பிரான்சிஸ் வீன்

கார்ல் மார்க்ஸ் குறித்த பிரான்சிஸ் வீன் புத்தகத்தை படித்தேன். 1999ல் லண்டனில் புத்தகம் வெளியானது. 2003-4ல் அதை அறிந்தவுடன் படிக்கவேண்டும் என விரும்பினேன். வாங்கமுடியவில்லை. நூலகம் நண்பர்கள் வழிகளிலும் கிடைக்கவில்லை. 2017 ஜூலையில் 17 வருடங்களுக்கு பின்னர் படிக்க முடிந்துள்ளது. இந்த 17 வருடங்களில் என் 40களிலிருந்து 60களில் வாழ்வதால் புரிந்து கொள்ளும் திறன் சற்று கூடியிருக்கலாம்.

மார்க்ஸ் பற்றி ஏராள புத்தகங்களை 22ஆம் வயது முதல் கடந்த 39 வருடங்களாக படித்துக்கொண்டிருக்கும் பழக்கம் இருக்கிறது. சோவியத் வகைப்பட்டவை தவிர அய்ரோப்பிய, அமெரிக்க எழுத்தளர்களின் மேற்கு புத்தகங்களையும் படிக்க முடிந்தது. Otto Rhule, David Riaznov , Isaiah Berlin, Harold Laski , Beer, Sydney Hook, Russel, Henry

Volkov ,Peter worsley, David Mclallan, David Felix, Philip Foner, G D H Cole, சாமிநாத சர்மா போன்றவர்களின் புகழ்வாய்ந்த ஆக்கங்களை படிக்க வாய்ப்பு கிடைத்தது.

சாமிநாத சர்மாவை ஒருவர் தமிழில் படித்து விட்டால் இசையா பெர்லின், ஹரால்ட் லாஸ்கியின் சாரத்தை படித்தது போலாகும். 1930களில் அவர்கள் மார்க்ஸ் பற்றி எழுதினர். சாமிநாத சர்மா 1940 களின் துவக்கத்திலேயே இப்புத்தகங்களைப் பெற்று தமிழ்படுத்தி தனது மிகச்சிறந்த அறிவுத்திறனை காட்டிவிட்டார். அவர் மார்க்ஸ் உடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்த இத்தாலி மாஜினி பற்றியும் எழுத தவறவில்லை. ஹிட்லர் முசோலினி பற்றிக்கூட எழுதியுள்ளார்.

இப்புத்தகமான Francis Wheen சிறப்பு என்னவெனில் பல்வேறு புத்தகங்களில் தனித்தனியே காணப்படும் மார்க்ஸ் சம்பந்தப்பட்ட பல நுண்ணிய தகவல்கள் ஒருசேர கிடைப்பதுதான். மார்க்ஸ் மாபெரும் மாமேதை என்கிற சித்திரம் பொதுப்புத்தியிலேயே இன்று ஏற்கப்படுகிற ஒன்று. ஆனால் அவரின் வளர்ச்சி, மகிழ்ச்சி, துன்பம், போராட்டங்கள், குடும்பத்தார்கள்- உறவுகளை பேணுதல், அவரின் attitude, பெருமை-குறைகள் என ஒருசேர இப்புத்தகத்தில் பேசப்படுகிறது. மார்க்சை தெய்வநிலைக்கு உயர்த்தும் மனோபாவம் கொண்டவர்களுக்கு இம்மாதிரியான எழுத்துக்கள் சற்று வலியைத்தரும் அவ்வகை எழுத்தாளர்கள் குறித்து வசைப்பாடத் தோன்றும்.

நம்மைபோன்ற சக மனிதன் 200 ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்து தனக்கு முந்திய காலத்தின் அறிவையெல்லாம் சேகரித்து ஜீரணித்த மனிதன், பிற்காலம் குறித்த கனவுகளை வசப்படுத்த தனக்கு சரி என உணர்ந்த வழியை அழுத்தமாக தெரிவித்த மனிதன்- கொண்டாடப்படவேண்டிய மனிதன் என்கிற நிதான பார்வை இருந்தால் இம்மாதிரி புத்தகங்கள் பயன்படுவதாக இருக்கும். மனித குல முயற்சியில் முற்றானது முடிந்து போனது என எதுவும் இல்லை. கடக்கவேண்டும்- ஒவ்வொன்றையும் கடந்தாக வேண்டும்.

மார்க்ஸ்க்கு அவருக்கு முந்தி இருந்த எவரும் முற்றானவராக தோன்றவில்லை. மார்க்சியத்தின்படி மார்க்ஸ் முற்றானவர் அல்ல. ஆனால் இதன் பொருள் எதிர்மறையான ஒன்றல்ல. மார்க்ஸ் தேவைப்படுகிறார் என்பதை குறைக்கும் அர்த்தத்தில் அல்ல. இந்தியாவில் மார்க்ஸ் உடன் பெரியார், அம்பேத்கார், காந்தி என சிந்தனை சேர்மான கலவை - chemistry of ideas நடந்து கொண்டுதான் இருக்கிறது. யார் விரும்பினாலும், விலகினாலும் இந்திய சமுகத்தின் எதார்த்தங்களில் மார்க்சியம் ஊடாடவேண்டியிருக்கிறது. இங்கே என் போன்றவர்கள் 40 ஆண்டுகள் செயல்பட்ட தொழிற்சங்கத்தின் மூலவர்கள் என கருதப்பட்ட குப்தா-ஜெகன் மார்க்சிய- காந்திய குழைவை முயற்சித்தனர். தமிழகத்தில் மார்க்சியம்- பெரியாரியம்- அம்பேத்காரியம் என்கிற குழைவு பொதுவாக இடதுசாரிகளால் ஏற்கப்பட்ட ஒன்றாகியுள்ளது.

சுய சிந்தனையும் சமுக மேம்பாடு குறித்த விழிப்புணர்வு கொண்ட எவரும் மார்க்சியத்தை ஒதுக்கிவிடமுடியாது. ஆனால் வாழ்க்கையின் ஓட்டம் குறித்த 'கூகுள் மேப் ஆக' மார்க்சியத்தை வறட்டுத்தனமாக பார்க்கவும் கூடாது.. செயலுக்கும், சிந்திக்கும் பாங்கிற்குமான பொதுவான வழிகாட்டல் என்பதில் கவனம் தேவைப்படுகிறது. அட்சரம் பிசகாமல் மேற்கோள்களை கொண்டு வாழ்க்கையை அளக்கவோ செப்பனிடவோ முடியாது என்கிற அனுபவத்தை புறக்கணிக்கமுடியாது. இந்திய சமுகத்தில் மக்களை ஒன்றுபடுத்த விழையும் பிற சிந்தனைகளை ரீ-ஆக்ஷனரி என்று முத்திரை குத்தி அப்புறப்படுத்துவதற்கு முன்னர் பலமுறை யோசிக்கவேண்டும். அச்சிந்தனைகள் தோழமை கொள்ளத்தக்கவையா- இல்லை எதிரி பக்கம் தள்ளப்படவேண்டியவையா என்று. .

பிரான்சிஸ் வீன் புத்தகம் ஒரு காப்பி மட்டுமே ரவியால் மலிவு விலையில் பெறமுடிந்தது. இப்போது அமேசான் மூலம் வாங்க வேண்டுமெனில் Hard Cover Rs. 4594 , Papaerback Rs 1351 Kindle Edition Rs 345. கிண்டில் வைத்திருப்பவர்கள் படிக்க விரும்பினால் மட்டுமே

345க்கு சற்று மலிவான விலையில் இப்புத்தகம் கிடைக்கிறது. மாவட்ட நூலகங்களில் கிடைக்கிறதா என தெரியவில்லை. கன்னிமாரா நூலகத்தில் இதுவரை என் கண்ணில் படவில்லை.. வாழ்நாள் அனுமதிக்கும்வரை இப்படிப்பட்ட தேடல் தாகம் துரத்தினால் மகிழ்ச்சிதான்.

ஜூலை 16 2017

3. மார்க்சின் மூலதனம் பிறந்த கதை

பிரான்சிஸ் வீன் எழுதிய அளவில் சிறிதான புத்தகம் Marx's Das Capital A Biography. Books that shook the world வரிசையில் பிரான்சிஸ் வீன் இந்த புத்தகத்தையும் டெல்லி மஞ்சுள் என்கிற பதிப்பகத்தார் கொண்டுவந்துள்ளனர். இதில் சுவையான சில செய்திகள் கிடைக்கின்றன.

மார்க்சின் 'மூலதனம் முதல் பாகம்' 4 வருடங்களில் ஜெர்மானிய வாசகர்கள் மத்தியில் 1000 காப்பிகள் விற்றதாம். தொழிலாளர்கள் விடுதலைக்காக தன்னை அழித்துக்கொண்டு அவர் படைத்த இந்த நூலை, ஜெர்மன் தொழிலாளர்கள் சற்று கூடுதல் தியாகம் செய்து பெற்றிருக்கவேண்டும் என ஜென்னியிடம் வேதனையும் வலியும் இருந்ததாம். மார்க்ஸ் கூட கிண்டலாக political economy remains a foreign science in Germany என்றாராம் (பக் 85)

1872ல் மூலதனத்தின் ரஷ்ய மொழி வடிவம் தயாராகிவிட்டது. நமக்கு இடையூறாக ஏதும் இல்லை என்றால் தணிக்கைக்குப் பின்னர் அனுமதிக்கலாம். ஆனால் remove the picture of the author என்று ஜார் ஆட்சி பச்சைக்கொடி காட்டியதால் மூலதனம் ரஷ்ய மொழிக்கு சென்றது. ஒரே ஆண்டில் அங்கு 3000 காப்பிகள் விற்றுப்போனதையறிந்து, மார்க்சிற்கு பெரும் ஆச்சர்யம்.

எங்கெல்ஸ்க்கு எழுதிய கடிதத்தில் is it an irony of fate? என்று மார்க்ஸ் கேட்டாராம். 25 ஆண்டுகள் ரஷ்யர்களை சண்டை போட்டேன். அவர்கள் இப்படி patrons ஆவார்கள் என நினைக்கவில்லை என்றாராம்.

மார்க்சிற்கு பிரஞ்சு மொழி தெரியும். மூலதனம் பிரஞ்சில் வெளிவருவதில் ஏகப்பட்ட 'சொதப்பல்களை' அவர் உணர்ந்து தானே முன்வந்து அவ்வேலையை செய்யலானார்.

இங்கிலாந்தின் தொழில்களைப்பற்றிய ஆய்வைத்தான் லண்டனில் வாழ்ந்துகொண்டு மார்க்ஸ் மூலதனத்தில் எழுதினார். பிரஞ்சு, ஜெர்மன் தெரிந்த சில ஆங்கிலேயே நண்பர்கள், சீடர்கள்தான் அதைப்

படித்திருந்தனர். அதை ஆங்கிலத்தில் கொண்டுவரவேண்டுமே என்கிற பேச்சு எழுந்தது. மார்க்சிடம் பழகிவந்த, ஹைண்ட்மேன் மூலதனத்தின் சில அத்தியாயங்களை மார்க்ஸ் பெயரையோ, நூலையோ சொல்லாமல் 1881ல் England for All நூலில் பயன்படுத்திவிட்டார். மார்க்ஸ் எங்கெல்ஸ் கடுமையாக கோபம் கொண்டனர்.

பெல்பர்ட் பாக்ஸ் மார்க்சின் மேதாவிலாசத்தை வியந்து, மூலதனத்தை அறிமுகப்படுத்தி சில கட்டுரைகளை ஆங்கில பத்திரிகை Modern Thoughtல் எழுதினார். பெர்னார்ட் ஷா கூட தன்னால் பிரஞ்சு மூலதனத்தையே படிக்க முடிந்தது என்றார். That was a turning point in my career என்றார் ஷா. பின்னர் பாபியன் சோசலிஸ்ட்டாக அவர் செயல்பட்டார்.

மார்க்ஸ் மறையும்வரை ஆங்கில மொழிபெயர்ப்பு வரவில்லை. எங்கெல்ஸ் சொல்கிறபடி சாமுவேல் மூர் மொழிபெயர்ப்பு 1887ல் வந்தது.

மார்க்சை ஊன்றி லெனின் படித்தாலும், அவரின் முழு கவனமும் புரட்சிகர அரசை நிறுவுதல் நோக்கிய செயல்திட்டமாக அமைந்தது என்கிற செய்தியும் இந்நூலில் கிடைக்கிறது. மார்க்சிற்கும் லெனினுக்குமான வேறுபாடு என்னவென டிராட்ஸ்கி சொல்வதை பிரான்சிஸ் தருகிறார் (பக் 100)

The whole of Marx appears in the Communist Manifesto, Critique of political economy, in Das Capital…the whole of Lenin on the other hand appears in revolutionary action. His scientific works are only a preliminary for activity

இந்நூலில் பிரான்சிஸ் எழுதும் இந்த வரிகள் மிக முக்கியமாக கவனிக்க வேண்டிவை

“Marxism as practised by Marx himself was not so much an ideology as a critical process, a continuous dialectical argument “

மூலதனம் எழுதும் முயற்சியில் மார்க்ஸ் பட்ட துன்பங்களை பலர் எழுதியுள்ளனர். அவர் முதல் வால்யூம் என எழுதி முடித்தபோது 1200 பக்க கையெழுத்து பிரதியாக இருந்ததாம். 1866 ஜனவரி புத்தாண்டு தினத்தன்று அதை fair செய்யத்துவங்கினார் .அப்போது அவர் தெரிவித்தது licking the infant clean after long birth pangs. நோயினால் அவர் அவதிப்பட்டுக்கொண்டிருந்தார். உடல் முழுதும் கொப்பளங்கள். மார்க்ஸ் எழுதினார்

At all events, I hope the bourgeoisie will remember my carbuncles until their dying day. இதை பிரான்சிஸ் வீன் அவரது சாபம் என வர்ணிக்கிறார்.

இவர் மூலதனத்தை எப்போது முடிப்பார் என்ற கவலை எங்கெல்ஸ்க்கு இருந்தது. போதும் அதிலிருந்து முடித்துவிட்டு வெளியே வாருங்கள் என அவர் சொல்ல நேர்ந்தது. You would and could never extricate yourself until you had got it off your back என எங்கெல்ஸ் அறிவுறுத்தினார். அவ்வளவு தேடல் தவிப்பு கொண்ட மனமாக மார்க்ஸ் வாழ்ந்தார்.

எவ்வளவு மறுப்புகள் மூலதனத்திற்கு எழுதப்பட்டாலும், அன்றாட பொருளாதார வாழ்வில் அதன் ’அப்ளிகேஷன்’ என்பதை அவர் மிகவும் நம்பிய தொழிலாளி வர்க்கம் உணராவிட்டாலும், இன்றும் மூலதன் நூல் பேசுபொருளாகவே இருந்து வருகிறது.

4. டேவிட் மக்லெல்லெனின் மார்க்ஸ் அறிமுகம்

1818ல் பிறந்த கார்ல் மார்க்ஸ் தனது 30 வயதில் புகழ் வாய்ந்த, 175 ஆண்டுகள் ஆன பின்னரும், இன்றும் விவாதிக்கப்படக்கூடிய ஒன்றான கம்யூனிஸ்ட் அறிக்கையை எழுதினார்.

இந்த 30 வயதிற்குள் அவர் பத்திரிகை ஆசிரியராக, பெரும் விவாதக்காரராக, நூலாசிரியாக மிளிர்ந்தார். இளம் மார்க்ஸ் என்கிற வகையில் எழுதிய அனைத்து நூல்களும் இன்றும் மார்க்சியர் வட்டாரத்தில் பேசு பொருளாக, புரிதலைத் தேடக்கூடியனவாகவே இருக்கின்றன.

காதலித்து காக்க வைத்த ஜென்னியை மணமுடித்த ஆண்டு 1843ல், தேனிலவிற்கும் பெட்டி புத்தகங்களுடன், குறிப்பு நோட்டுகளுடன் சென்றவர் மார்க்ஸ். அந்த ஆண்டில் அவர் எழுதியவை தான் critique of Hegel's philosophy of Right, on the Jewish question.

1844ல் எங்கெல்ஸ் தொடர்பில் அறிமுகத்தில் எங்கெல்ஸ் குறிப்பாக எழுதிய outlines of a Critique of political economy என்பதைத் தொடர்ந்து மார்க்ஸ் Economic and Philosophical Manuscripts எழுதினார்.

1845ல் பாரிஸ் அகதி வாழ்க்கையிலிருந்தும் வெளியேற்றப்பட்டு, பிரஸ்ஸல்ஸ் வாழ்க்கை மற்றும். லண்டன் பயணம். இந்த ஆண்டில் Theses on Feuerbach, The Holy Family ஆகிய ஆக்கங்களை மார்க்ஸ் கொடுத்தார்.

1846ல் ஓராண்டிற்கு மேல் உழைத்து எங்கெல்ஸ் உடன் The German Ideology யை அவர் கொடுத்தார்.

1847ல் புகழ் வாய்ந்த பிரஞ்சு அனார்க்கிஸ்ட் புருதான் எழுதிய The Philosophy of Poverty யுடன் விவாதம் செய்கிற வகையில் The poverty philosophy என்பதை எழுதினார்.

1848ல் அனைவராலும் அறியப்பட்ட communist Manifesto எழுதினார்.

1850ல் The class Struggles in France வந்தது

1852ல் The Eighteenth Brumaire of Louis Bonaparte, 1853 About Cologne Communist Trail

இந்த ஆண்டுகளுக்கு பின்னர் அவர் ஏராளம் பத்திரிகைகளுக்கான கட்டுரைகளை எழுதலானார்.

1859ல் A contribution to the Critique of Political Economy எழுதினார்

1865ல் wages, price , profit வந்தது. பிரஸ்ஸல்சில் ஜெர்மன் தொழிலாளர்களுக்கு அவர் எடுத்த வகுப்புகளின் குறிப்புகள் நூலாகி வந்தது.

1867 ல் அவரின் வாழ்நாள் உழைப்பின் பிழிவாக capital vol 1 பெரும் போராட்டத்திற்கு இடையே வந்தது.

1871ல் The Paris commune Civil war in France

1875ல் The critique of Gotha Programme

1883 மார்ச்சில் மார்க்ஸ் மரணித்தார்.

இந்த நூல்களையெல்லாம், குறிப்புகள் போல டேவிட் மக்லெல்லன் தனது The Thought of Karl Marx நூலில் கொணர்ந்திருப்பார்.

சில முக்கிய நூல்கள் மட்டுமே மார்க்சின் எழுத்துக்களில் இங்கு சொல்லப்பட்டுள்ளன. அவரது நூல்கள், கடிதங்கள், பத்திரிகை எழுத்துக்கள் என ஏராள தொகுப்புகள் பல்லாயிரக் கணக்கான பக்கங்களில் ஆங்கிலத்திலும், ஏன் தமிழிலும் கூட நமக்கு கிடைக்கின்றன.

மார்க்ஸ் எழுதியவை, மார்க்ஸ் மார்க்சிசம் பற்றியவை, விமர்சன எழுத்துக்கள் எனப் பார்த்தால் லட்சம் பக்கங்களை விஞ்சலாம். எவருக்கும் வாழ்நாட்கள் போதாது. கொண்டாடக் கூடியவர்களுக்கான எழுத்துக்கள் என்றும், விமர்சிப்பவர்க்கான எழுத்துக்கள் என்றும் மார்க்ஸ் தன்னை வைத்துக்கொண்டிருக்கிறார்.

காந்தியர் போலவே மார்க்சியரும் , மார்க்சியத்தை guide to action, not a dogma என்றே சொல்வர். ஆனால் லெனின் அதில் vanguardism தன்மையை ஏற்றினார் என அகில் பில்கிராமி போன்ற சிந்தனையாளர் சொல்வர். காந்தியிடம் exemplariness தன்மை இருக்கும். வேன்கார்டிசம் இருக்காது.

27-6-2024

5. காரத் ஜோன்சின் மார்க்ஸ்

Gareth Stedman Jones எழுதிய Karl Marx Greatness and Illusion குறித்து முகநூலில் சில பதிவுகளை தந்திருந்தேன். எகனாமிஸ்ட் பத்திரிகை இந்த ஆக்கத்தை there is no better guide to Marx என மதிப்பிட்டிருந்தது. 595 பக்கங்களில் அடர்த்தியான செய்திகளுடனான விவாதப்பரப்பு கொண்ட ஆக்கம். குறிப்புகள் ஆதாரங்கள் எனச் சேர்த்தால் 750 பக்கங்கள் கொண்ட புத்தகம். இங்கிலாந்தில் 2016ல் வந்த புத்தகம். நூல் குறித்த என் பதிவுகள் எல்லாம் சேர்க்கப்பட்ட கட்டுரையாக இதை பாவிக்கலாம். சற்று நீண்ட கட்டுரைதான். சிறு பிரசுரம் அளவிற்கானது.

மார்க்சியத்துடன் பயணிப்பவர்கள் மார்க்ஸின் வாழ்க்கை குறிப்புகளை தொடர்ந்து பல்வேறு தரப்புகளிலிருந்து தேடிக்கொண்டுதான் இருப்பார்கள்.

மூலநூலாக கருதப்படும் பிரான்ஸ் மெஹ்றிங் 1918ல் துவங்கி மார்க்ஸ் வாழ்க்கை சரித நூல்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. நுணுக்கமான தகவல்களையும் தேடித்தரவேண்டும் என்ற தவிப்பில் இப்படி பல நூல்கள் வந்துகொண்டிருக்கின்றன.

டேவிட் மக்லெல்லன், வீண், ஜோனத்தன் போன்றவர் எழுதி கடந்த சில ஆண்டுகளில் வந்தவை மார்க்ஸ் குறித்த புரிதலை மேலும் விரிவாக்கின. இந்நந்நில் பற்றி டேவிட் மக்லெல்லன் ரிவ்யூ ஒன்றும் பார்த்தபின்னர் , அப்படி என்ன இது guide எனப் பார்க்க ஆவல் உருவானது. சில பக்கங்கள் படிக்கும்போதே , நுண்ணிய தகவல்களின் பெரும் தொகுப்பாக இருக்கிறதே என்ற எண்ணம் உருவானது. படிக்கும் போதே ஆங்காங்கே மனதில் தோன்றியவற்றை தொடர் பதிவுகளாக முகநூலில் வெளியிட்டு வந்தேன். மார்க்சிய கருத்துக்கள் என்பதைவிட, மார்க்சிய குடும்பம், வாழ்க்கை குறித்த செய்திகளைத் தர எண்ணினேன். மார்க்சை பேசும்போது அவரின் அறிவார்ந்த

வளர்ச்சிப் பாதையை தொடாமல் பேசமுடியாது. ஆங்காங்கே அதன் சில குறிப்புகளையும் ஓரிரு இடுகைகளில் தந்துள்ளேன்.

இந்த முகநூல் இடுகைகள் 700 பக்கத்திற்கு மேலான காரத் ஜோன்ஸ் புத்தகம் குறித்த முழுமையோ, மார்க்ஸ் வாழ்க்கை குறித்த விரிவோ அல்ல. இங்கும் அங்குமாக படிக்கும் போது, சொல்லலாமே எனத் தோன்றிய சில செய்திகள் தான். .

20-4-2024

காரத் ஸ்டெட்மேன் ஜோன்சின் மார்க்ஸ்

(Karl Marx Greatness and Illusion by Gareth Stedman Jones)

1

கார்ல் மார்க்ஸின் தந்தையார் ஹெயின்ரிச் மார்க்ஸ் (1777-1838) யூத குடும்ப வழி வந்தவர். தனது சட்டத்தொழிலுக்கு பாதுகாப்பிற்கான சூழலை உருவாக்கிக்கொள்ள அவர் கிறிஸ்துவத்திற்கு மாறவேண்டிய நிலை ஏற்பட்டது. மார்க்சின் தந்தைவழி தாத்தா மெயிர் ஹாலவி மார்க்ஸ். அவர் மார்க்ஸ் பிறந்த டிரயர் ஊருக்கு யூத குருமாராக rabbi வந்தவர். ஹாலவியின் மற்றொரு மகன் சாமுவேல் மார்க்ஸ்- அவரும் ராபி குருமார்.

மார்க்ஸின் தாயார் ஹென்ரியட்டே (1788-1863) ஹெயின்ரிச்சை 1814ல் மணமுடித்து 9 குழந்தைகளை பெற்றவர். மார்க்ஸின் தந்தை மறைவிற்குப் பின்னர் 25 ஆண்டுகள் வாழ்ந்தவர்.

நெப்போலியன் பிரஞ்சு வசம் ஊர் வந்தவுடன் , யூதர்கள் கந்துவட்டி வியாபாரம் கூடாது. வேறு தொழிலுக்கு போகவேண்டும் என்ற கட்டளை வந்தது. ரைன்லாந்த் பகுதி பிரஞ்சு கட்டுப்பாட்டிற்கு

போனது. நெப்போலியனுக்கு யூதர்கள் மீது நல்லெண்ணம் இல்லை.வால்டேரின் வாக்கியம் அவரிடம் பதிந்தது.

The Jews are a vile people, cowardly yet cruel.

சாமுவேல் மார்க்ஸ் மற்றும் 71 யூதகுருமார்-ராபிகள் நெப்போலியனால் பிப்ரவரி 9, 1807ல் பாரிசுக்கு அழைக்கப்பட்டு அரசாங்கத்தின் எதிர்ப்பார்ப்புக்களைச் சொல்லி , பிரஞ்சு சட்டத்திற்கு மாறாக எதுவும் கூடாது என்ற அறிவுறுத்தல் செய்யப்பட்டது. நெப்போலியன் தனது பாலிசி எனச் சொன்ன வரிகள்

The people must have a religion; this religion must be in the control of the government.. My policy is to govern men as majority wish to be governed. That is the way I believe, in which one recognises the sovereignty of the people. If I ruled the people of Jews, I would rebuild the Temple of Solomon

நீங்கள் தேசபக்தி, திருமணமுறைகள், கந்து வட்டித்தொழிலை விடுதல், அரசின் அதிகாரத்தை மதித்தல் போன்றவற்றில் கவனமாக இருங்கள். அரசாங்க வேலையில் இருப்பவர் தொடர முடியும் என்ற நம்பிக்கையும் யூதர்களிடம் தரப்பட்டது.

சாமுவேல் மார்க்ஸ் யூத இளைஞர்களிடம் வேறு தொழில்களுக்கு மாற அறிவுறுத்துகிறார். பிறகு டிரயர் பிரஷ்யாவின் ஆளுகைக்கு மாறுகிறது. பிரஷ்ய சட்டங்கள் அமலாக்கப்பட்டன.

மார்க்ஸின் தந்தை, புதிய அரசிற்கு முந்திய நெப்போலியன் ஆட்சி போட்டிருந்த யூத விரோத சட்டங்களை மாற்றக்கோரி 1815 ஜூனில் கடிதம் எழுதினார். அவர் Prussian Evangelical Church ல் baptised என்றாலும், அப்படி நடந்ததற்கான ஆதாரம் ஏதும் இல்லாமல் போனது. இருந்தாலும் அவர் lawyer ஆக நீடிக்க பிரஷ்யா சர்க்கார் அனுமதித்தது.

மார்க்ஸின் தந்தை நவீன தாரளவாத கருத்துக்களுக்கு ஆதரவாக நின்றார். வால்டேரும் ரூசோவும் வீட்டில் பலருக்கும் மனப்பாடம் என அறிகிறோம். மார்க்ஸின் தந்தை ஜனவரி 13, 1834ல் social club ஒன்றில்

160 விருந்தினர் முன்னிலையில் ஆற்றிய வரவேற்புரையில் கீழ்கண்ட வாசகமும் இருந்தது.

The truth should reach to the steps of throne..where indeed should truth lead us, if not there?..where justice is enthroned, there also must truth make its appearance

2

மார்ச் 30, 2023 முகநூலில் மார்க்ஸின் தந்தை குடும்பம் பற்றிய சிறு இடுகை செய்திருந்தேன். நூல்களை படிக்கும்போது, வேறு சிலருக்கும் அது குறித்த செய்தி அல்லது கருத்தாக்கம் செல்லட்டுமே எனத்தோன்றுபோது, இடுகையை செய்து வருகிறேன். இந்த ஸ்டெட்மேன் ஜோன்ஸ் நூல் குறித்தும் தோன்றும்போது செய்யவே சித்தம்.

மார்க்ஸின் தாயார் குறித்து செய்திகள் குறைவாகவே இருந்து வருகின்றன. குடும்பத்தை பராமரித்தார், மார்க்ஸ் உடல்நலம் குறித்து கவலைப்பட்டார், கிறிஸ்துமஸ் காலத்தில் தின்பண்டங்களை அனுப்புவார், கடைசி காலங்களில் மார்க்ஸ் தாயுடன் முரண்பட்டார் என்ற செய்திகள் பொதுவாக கிடைக்கும். ஸ்டெட்மேன் புத்தகத்தில் வேறு சில தகவல்கள் தரப்பட்டுள்ளன.

தாயார் ஹென்ரிட்டே நெதர்லாந்தில் வளர்ந்தவர். டச்சு சூழல். ஜெர்மானிய மொழியை தன் வட்டார உச்சரிப்பில் கொஞ்சம் பேசக்கூடியவர். ஹெயின்ரிச்சிற்கு மனைவியாகி 9 குழந்தைகளை ஈன்றவர் . மகன் மெளரிட்சை அவனது 4வது வயதில்-1819ல், எட்வர்ட் 11 வயதில் 1837ல், ஹெர்மானை 23 வயதில் 1842ல், ஹென்ரியட்டேவை 25 வயதில் 1845ல், கரோலினை 25 வயதில் 1847ல் அத்தாய் பறிகொடுத்தாள். இவ்வளவு இழப்புகளும் பெற்ற அவள் உள்ளத்தை நோகச்செய்திருக்கும். அத்தாய்க்கு மார்க்ஸ் உடன் மூன்று சகோதரிகள் சோபி 1816-1886, லூசி 1821-93, எமிலி 1822-1888 எஞ்சினர்.

மார்க்சின் சகோதரி சோபி தனது தாயாரை small, delicate and very intelligent எனச் சொல்லியிருக்கிறார். ஒருமுறை ஹாலந்த் சென்ற மார்க்ஸிடம்

எனது ஊர் எவ்வளவு ரம்மியமானது பார்த்தாயா என மனம்பூரிக்க தாயார் கேட்டுள்ளார். தனது குழந்தைகள் திருமணமாகி பல இடங்களுக்கு சென்றபோது தனது சகோதரிக்கு மார்க்ஸின் தாய் இப்படி எழுதினாராம்

It seems that the fate of the people of Israel is one again being fulfilled in my case and that my children are to be scattered throughout all the world.

மகள் லூசி மணம் முடித்து தென்னாப்பிரிக்கா செல்கிறாள் என்ற நிலையில் வந்த வரிகள் அவை. கார்ல் தனது பதின்ம வயதில் பான் பல்கலை சென்றபோது behaviour, values, career மீது கவனமாக இரு எனத் தாய் அறிவுறுத்தினார். பெரும்பாலும் அவர் நல்கியவை நடைமுறை சார்ந்த அறிவுரைகளத்தான். காபி போட்டுக்குடி, ஸ்வெட்டர் போடு, ஜலதோஷம் பிடிக்க விடாதே, பாட்டி வைத்தியங்களை சொல்கிறேன் கேள்.. குழந்தைகளுக்கு ஒன்று என்றால் பெற்றோர் தாங்கமாட்டார்கள் என்பதை புரிந்துகொள்..இப்படித்தான் அவரது அறிவுரைகள் சென்றன.

தாய்க்கு 5வது பெண் ஹென்ரியட்டெ. அவள் உடல் சுகவீனமின்றி தொடர் இருமலுடன் இருந்தாள். வீட்டில் மணப்பேச்சு எழுந்தது. இது குறித்து மார்க்சின் காதலி ஜென்னி மார்க்ஸ்க்கு கடிதம் எழுதினார். அப்பெண்ணின் திருமணத்தை தியோடர் சிமோன்ஸ் என்பாருடன் நடத்த முடிவெடுத்தனர். உடல்நலம் குன்றியவளை மணமுடித்து நகரத்தில் வைக்காது கிராமத்திற்கு அனுப்புதல் நியாயமா என்ற உணர்வு ஜென்னிக்கு. Tuberculosis உள்ள அந்த பெண்ணை ஆகஸ்ட் 20, 1844ல் மணமுடித்தனர். ஆனால் ஹென்ரியட்டே ஜனவரி 3, 1845ல் மறைந்தார். மார்க்ஸ்க்கும் chest infections இருந்தது.

பார்க்கலாம்..மார்க்ஸின் பிறந்த ஊரான டிரயரில் அவரது பள்ளிப்பருவம் பற்றி இந்த புத்தகம் என்ன சொல்கிறது என்பதை…

டிரயரில் இருந்த ஜிம்னாசியம் என்கிற வகைப்பட்ட பள்ளியில் தனது 12 வயதில் 1830ல் கார்ல் சேர்க்கப்பட்டார். பல்கலைக்கு முன்னரான பள்ளிக்கல்வி செகண்டரி எஜுகேஷன் அங்கு இருந்தது. பான் பல்கலைக்கழகத்திற்கு செல்வதற்கு முன்னர் இந்த ஜிம்னாசியத்தில் 1835 வரை மார்க்ஸ் படித்தார்.

அவரது வகுப்பில் 25 கத்தோலிக்க மாணவர்கள், 15 புரோடெஸ்டெண்ட் இருந்தனர். யூதர்கள் என எவரும் பதிவாகியிருக்கவில்லை. தலைமை ஆசிரியர் என்ற பொறுப்பில் ஜோகன் வைட்டன்பாக் ஊர் அறிந்தவராக இருந்தார். அவர் reason and free will குறித்து போதித்தார். ஜெர்மானிய ஆரம்ப பாடங்களை தொகுத்தவர் எனப் பெயர் பெற்றார். கதே, ஷில்லர் போன்ற கவிஞர்களை சொல்லிக்கொடுத்தவர் அந்த ஆசிரியர்.

மார்க்ஸின் ஷீனிமான் என்கிற ஆசிரியர் சற்று கலகக்காரராக அறியப்பட்டார். கணிதத்திற்கு ஆசிரியர் ஸ்டெயினிங்கர். மாணவன் கார்ல் ஜெர்மன், லத்தீன், கிரேக்கம், வரலாறு, இலக்கியத்தில் தேர்ச்சி உடையவராக இருந்தார்.

பள்ளிக்காலத்தில் 16 வயதில் மார்க்ஸின் choice of profession essay பலராலும் பாராட்டப்பட்ட ஒன்று. அவரின் வகுப்பு மாணவர்கள் வேறு சிலரும் சிறப்பாக எழுதிய செய்தியும் இருக்கிறது. அந்த essayல் மார்க்ஸ் எழுதிய இந்த வரிகள் பல மார்க்சியர்களால் எடுத்தாளப்பட்டுள்ளன. மார்க்ஸ் அப்படியெல்லாம் மார்க்சியம் ஒன்றை தன் பெயரால் உருவாக்கப்போகிறோம் என்றெல்லாம் அந்த வயதில் நினைத்திருக்க முடியாது.

The chief guide which must direct us in the choice of a profession is the welfare of mankind and our own perfection..for a man's nature is constituted that he can attain his own perfection only by working for the perfection, for the good of his fellow men

இந்த வரிகளில் welfare of mankind and our own perfection என சுய பூரணத்துவ தேடலையும் அந்த மாணவ மார்க்ஸ் சொன்னதைப்

பார்க்கிறோம். ஆசிரியர்களின் கற்பித்தவையும் மாணவ மார்க்சிடம் சென்றிருக்கலாம். Our own perfection என்பதற்கு அவர் வைத்த அளவுகோல்கள் என்ன, அதில் அவர் வாழ்க்கையில் தேறினாரா என்பது புத்தகத்தில் எனக்கு காணக்கிடைக்கவில்லை.

சட்டம் படிக்க பான் நகரம் செல்கிறார் கார்ல். அங்கிருந்து 1836 ஆகஸ்டில் பெர்லின் படிக்கச் செல்கிறார். அவருக்கு கொடுக்கப்பட்ட certificate of releaseல் தடைசெய்யப்பட்ட மாணவர் இயக்கத்தொடர்பு ஏதுமில்லை- rowdiness drunkenness at night- having carried prohibited weapons in cologne என்ற குறிப்புகள் இடம்பெற்றன. பான் படிப்பில் 6 பிரிவுகளை அவர் எடுத்திருந்தார். ரோமன் சட்ட வரலாறு, சட்ட என்சைக்ளோபீடியா,சட்ட நிறுவனங்கள், கிரேக்க ரோம புராணங்கள், ஹோமர், நவீன கலை என்பன அவை. பொதுவாக diligent and attentive என்ற குறிப்புகள் கிடைத்தன. அறிவுத்திறனும் குறும்பும் கொண்டவராகவும், ஊதாரியாக இருந்ததையும் அறிகிறோம்.

4

1836ல் ஜென்னி மீதான காதல் அவரிடம் உறுதியானது. 1837 நவம்பரில் அப்பாவிற்கு எழுதிய கடிதம் ஒன்றில் காதல் எனும் புதுவுலகில் நுழைந்துள்ளதை அவர் தெரிவிக்கிறார். பெர்லின் காலத்தில் மூன்று வால்யூம் கணக்கில் அவர் காதல் கவிதைகளை எழுதினாராம். Book of Love , Book of Songs எனப் பெயர் பெற்றன அவை. ஜென்னி சகோதரன் எட்கர் மார்க்சின் பள்ளித்தோழன். வாழ்நாள் முழுதும் மார்க்சை நேசித்தவர். எட்கருக்கும் மார்க்ஸ் சகோதரி ஒருவர் மீது கண் இருந்ததாம்.

இனி ஜென்னி யார் எனப்பார்ப்போம்.

வெஸ்ட்பாலன் குடும்பம் அரசாங்க அதிகார உத்யோகஸ்தர் குடும்பம். ஜோகன் லுத்விக் வொன் வெஸ்ட்பாலன் ஜென்னியின் தந்தை. அவருக்கு ஆங்கிலம், லத்தீன், கிரேக்கம், இத்தாலியன், பிரஞ்சு, ஸ்பானிஷ் மொழிகள் தெரியும் . அவரின் முதல் மனைவி எலிசபத்

வொன் வெல்தீம். இவர்களுக்கு பெர்டினாண்ட், லூசி, கார்ல், பிரன்சிஸ்கா பிறந்தனர். இரண்டாம் மனைவி கரோலின் ஹியுபெல். இவருக்கு ஜென்னி 1814லும், லாரா 1817ல், எட்கர் 1819ல் பிறந்தனர்.லாரா 4 வயதிலேயே மறைந்தாள்.

இரு துணைவியார்களின் சமூக அந்தஸ்தில் இருந்த ஏற்றத்தாழ்வுகள் குடும்பத்தில் பிரதிபலித்த செய்திகளைக் காண்கிறோம். ஜென்னி அவ்வூரின் அழகுப்பெண். 17 வயதில் இராணுவப்பணி அதிகாரி ஒருவருக்கு அவர் நிச்சயமானாலும் திருமணம் வரை அது போகவில்லை.

கார்ல் மார்க்ஸ் உள்ளத்தை ஜென்னி வசீகரித்தார். கார்ல் விட 4 வயது மூத்தவர் ஜென்னி. வயது பிரச்னையா என்ன என்று கார்ல் சகோதரி , ஜென்னியின் தோழி சோபி உற்சாகமூட்டினாள். கார்ல் வீட்டிற்கு தெரிந்த காதல், வெஸ்ட்பாலன் வீட்டிற்கு தெரியாமல் இருந்தது. ஜென்னியின் சகோதரன் எட்கர், மார்க்ஸின் சகோதரி ஒருவரை நேசித்த செய்தியும் இதில் இடம்பெற்றுள்ளது.

Salzwedel எனும் பகுதியில்தான் ஜென்னி பிறந்துள்ளார். அங்கு நெப்போலியனுக்கு விரோதமாக பேசினார் என்பதற்காக வெஸ்ட்பாலன் கைது செய்யப்பட்டார். பின்னர்தான் அவர் டிரயர் நகருக்கு மாற்றப்பட்டார். தனது எதிர்கால மாமனார் வெஸ்ட்பாலனுடன் மார்க்சிற்கு நல்லுறவு இருந்தது. நடை பயிற்சியில் அவரிடம் ஏராளம் மார்க்ஸ் கற்ற செய்தியை பலரும் பதிவிட்டுள்ளனர்.

மார்க்ஸின் தந்தை இருந்தவரை இரு குடும்பத்தாருக்கும் நல்ல உறவு இருந்துள்ளது. அதற்கு பின்னர் முகம் கொடுக்காமல் திருப்பிக்கொண்டு இருந்துள்ளனர். ஜென்னி சென்றால் மார்க்ஸின் தாய் முகம் கொடுக்க மாட்டார். வெஸ்ட்பாலன் வீட்டு துக்கம் ஒன்றை விசாரிக்கச் சென்ற மார்க்ஸ் வீட்டாருக்கு அவர்கள் முகம்கொடுக்காமல் துயர் உருவாக்கிய செய்தியிருக்கிறது.

இதையெல்லாம் எதிர்கொண்டுதான் ஜென்னி, தன் காதலன் மார்க்ஸ் எப்போது கைப்பிடிக்க வருவான் என காத்திருந்தார். ஜென்னி பள்ளிச் சென்றாரா, முறையான கல்வி இருந்ததா என்கிற செய்தி இல்லை. வீட்டில் புத்தகங்கள் படித்தது, மார்க்சிடம் என்ன புத்தகம் படிக்கலாம் எனக்கேட்ட செய்திகள் கிடைக்கின்றன. மார்க்ஸ் தந்தையிடம் அவ்வப்போது பல்வேறு கருத்து பரிமாற்றங்களை ஜென்னி செய்துள்ளார். அப்பெண் உனக்காக தியாக உருவமாக காத்திருக்கிறாள் என தன் பிள்ளை மார்க்சிற்கு தந்தை அனுப்பிய செய்தி உள்ளது.

5

மார்க்சின் கல்லூரி கால பெர்லின் வாழ்க்கையில் அவர் வீட்டிற்கு அடிக்கடி கடிதம் எழுதுவதே இல்லை என்ற புகார் பெருமளவில் இருந்தது. பணக்கார மாணவர்களே அன்றைய பிரஷ்யாவின் தாலர்களில் 500 செலவழித்தால், மார்க்ஸ் 700 தாலர் செலவழித்தார் என தந்தை வருத்தத்தை வெளிப்படுத்தினார். தந்தை இப்படி அறிவுரையை எழுதினார்

The first of all human virtues, is the strength and will to sacrifice one self, to set aside one's ego, if duty, if love calls for it..it is those daily and hourly recurring sacrifices which arise from the pure heart of a good person.. that give life a sole charm and make it beautiful

சகோதரி சோபியும் ஏதோவொரு நேரத்திலாவது கடிதம் எழுதக்கூடாதா என மார்க்சிடம் கேட்டுள்ளார்.

1830-40 களில் ஜெர்மனியில் தீவிரவாதம், ரிபப்ளிகனிசம், சோசலிசம் பற்றிய உரையாடல்கள் பெருகின. ஹெகலின் தாக்கத்தில் இளம்

குழுவினர் கருத்துபுலத்தில் செயல்பட்டனர். 1841ல் புருனோ பாயருடன் மார்க்ஸ் நட்பு கூடியது. 1842ல் பாயரின் கல்லூரி ஆசிரியர் வேலை நீக்கம், வெஸ்ட்பாலன் மறைவு எனும் இரு நிகழ்வுகள் நடந்தேறின.

மார்க்ஸ் தாயிடம் தனக்கான சொத்தை பிரித்து தர வேண்டினார். தாயார் அதற்கு உடன்படவில்லை. 1841ல் காத்திருந்த ஜென்னி, உனது காதலைத்தவிர என்னிடம் ஏதும் இல்லை, நான் இன்னும் உன்னுடையவளா என்பதை தயவு செய்து சொல்லிவிடு என தன் துயரை வெளிப்படுத்தினார்.

மார்க்ஸ் சட்டப்படியான ஆட்சிமுறை, மதத்தின் பங்கு, ஹெகலின் ஆய்வுகளில் மூழ்கியிருந்தார்.

பாயர் தன் ஆய்வில் வரலாற்று வளர்ச்சியை மூன்று தருணங்களாக விளக்கினார். The moment of substantiality- in which thought was not distinguished from being

Second moment - Religious consciousness- in this the subjectivity was not located in humanity, but in alien other worldly domain. In the alienated world of religious consciousness, mankind perceived its own deeds as those of another.

The third moment- that of enlightenment and French Revolution, free self consciousness enabled to grasp its world as its own creation.

இன்றுள்ள தருணத்தை epoch of revolution ஆக முன்னெடுப்பதுதான் அரசியல் கடமை என்றார் பாயர்.

ரூகே , ப்ருனோபாயர், பாயர்பாக் போலவே இளம் ஹெகலியராக மார்க்ஸ் 1842ல் republican positionயையே எடுத்தார். கிறிஸ்துவ அரசுக்கு மாற்றான உண்மை அரசு என்பதைப் பேசினார். பத்திரிகை சுதந்திரம் அவசியம் என வலியுறுத்தினார். கிறிஸ்துவத்தை நிலப்பிரபுத்துவ fetishism எனப்பார்த்தார். Christian state was not a free association of moral human

beings, but an association of believers' என்றுஎழுதினார். சட்டப்படியான ஆட்சிதான் people's bible of freedom என்றார்.

அரிஸ்டாட்டிலின் அரசு இரு பிரிவுகளைக்கொண்டது. ஒன்று சிட்டிசன் உரையாடலுக்குரிய பொதுவெளி polis , மற்றது household, family, habitat of women , slaves, the site of material production viz OIKOS என அரிஸ்டாட்டில் சொல்லிக்கொடுத்தார். இதில் ஹெகல் மூன்றாவது பிரிவொன்றைச் சேர்த்தார் . அவர் சொன்னது civil society- a space opened up between family and formal constitution of the state. இதனால் சுயேட்சையான சிவில் ஊழியர்கள் குறித்தும் அவர் உரையாடினார்.. the creation of civil society belonged to modern world..இதை ஆடம்ஸ்மித் commercial society என விவரித்தாராம்.

ஹெகலின் மாணவராக பாயர்பாக் 1828ல் the Christian idea of the immorality of the soul originated as a replacement for the ancient idea of citizen எனக் குறிப்பிட்டார். ரூசோ வணிகமும் மதமும் தேசபக்தியை வீழ்த்திவிட்டன என்றார்.

மதம் குறித்த விமர்சனம் எப்படி இருக்கவேண்டும் என மார்க்ஸ் 1842ல் எழுதியது

Religion should be criticised in the framework of criticism of political conditions rather than political conditions should be criticised in the framework of religion. For religion is without content, it owes its being not to heaven, but to earth, and with the abolition of distorted reality, of which it is the theory, it will collapse itself

அடுத்து பார்ப்போம் மார்க்ஸ் ஜென்னி திருமணத்தை… அவர் கம்யூனிச தாக்கம் கொண்டவராக மாறுவதை…

முன்னரான 5 பதிவுகளில் மார்க்ஸ் தாய் தந்தை குடும்பம் பள்ளிக்கூடம் , ஜென்னி , ஆரம்ப சிந்தனைகள் குறித்த சில செய்திகளை கொடுத்திருந்தேன்.

கார்ல் பத்திரிகைகளில் எழுதுபவராக, எடிட்டராக தன் சோதனைகளை நடத்தினார். கார்ல் மார்க்ஸ் ரெயினிஷ் ஜெய்துங் சோதனையும் 1843ல் நின்றது. இந்தப் பத்திரிகை காலத்திலேயே அவரது பெர்லின் நண்பர்களுடன் வேறுபாடுகள் உருவானது. இந்த அனுபவங்களை அவர் ரூகேவுடன் பகிரும்போது

I have become tired of hypocrisy, stupidity, gross arbitraryness, and of our bowing and scraping , dodging and hair splitting over words. Consequently the government has given me back my freedom என எழுதினார்.

1844ல் ரூகே, புருனோ பாயர் ஆகியவர்களிடமிருந்து மார்க்ஸ் பிரியவேண்டிவந்தது. மார்க்ஸ் ரிபப்ளிகன் சிந்தனையிலிருந்து கம்யூனிச சிந்தனை நோக்கி நகரலானார். ஹெகலை தாண்டி செல்லவேண்டியது குறித்து பாயர்பாக் சொல்வதை அவர் உணர்ந்தார். சமூக பிரச்சனை, உழைப்பு, உற்பத்தி, பாட்டாளி கருத்தாக்கங்களில் தீவிர சிந்தையை செலுத்தலானார்.

ரெயினிஷ் பத்திரிகையிலிருந்து விடுவித்துக்கொண்ட கார்ல் தனது காதலி ஜென்னியும் அவரது தாயாரும் இருந்த kreuznach நகருக்கு சென்றார். மார்க்ஸின் டிரயர் நகரிலிருந்து அவ்வூர் 80 கி மீ தூரத்தில் இருந்தது அந்நகர். Riesling and Sivaner வகை திராட்சை தோட்ட ஊராக இருந்ததாம். கரோலின் தன் மகள் ஜென்னியுடன் கணவர் வெஸ்ட்பாலன் மறைவிற்கு பின்னர் சில பொருளாதார காரணங்களுக்காக அங்கு செல்ல நேர்ந்ததாம்.

ஜூன் 19, 1844 அன்று மார்க்ஸ் ஜென்னி திருமணம் St Paul Churchல் கிருயிஷ்னா போதகரால் (Preacher) அங்கேயே நடத்தி வைக்கப்பட்டது. மார்க்சின் வகுப்புத்தோழன் ஒருவர் வந்திருந்தாராம். மார்க்ஸின் தாயார் தனது எழுத்துபூர்வ ஒப்புதலை - written consentயை

அனுப்பியிருந்தார். நேரில் வரவில்லை. அந்நகரில் மணமக்கள் செப்டம்பர்வரை இருந்தனர். அக்டோபரில் இருவரும் பாரிஸ் சென்றனர். அவர்கள் தேன் நிலவு காலத்தில் 40 புத்தகங்கள் மற்றும் குறிப்பெடுக்க கட்டு நோட்டுகளுடன் மார்க்ஸ் சென்றார் என்ற செய்தியும் வேறு புத்தகங்களில் வ்ழி நாம் அறியக்கூடியதாக இருக்கிறது.

கிருயிஷ்னாவில் மார்க்ஸ் ஹெகலின் 'Philosophy of Right' குறித்த விமர்சனத்தை தயார் செய்துகொண்டிருந்தார். முன்னதாக பாயர்பாக் Preliminary Theses on the Reform of Philosophy என ஹெகல் வாசிப்பு ஒன்றை செய்திருந்தார். 1840 லேயே பாயர்பாக் தனது Essence of Christianity மூலம் சிந்தனை வட்டத்தில் புகழடைந்தவர். இந்த புத்தகம் குறித்த வகுப்புகளை பிரஸ்ஸல்சில் மார்க்ஸ் அங்கிருந்த ஜெர்மானிய தொழிலாளர்களுக்கு எடுத்தார்.

பாயர்பாக் இவ்வாறு spicies being குறித்து எழுதினார்

Man in nature was both active and passive. Man embodied reason and freedom, but was first a sensuous being..the first object of man is Man. As a creature of need, man depended on others. In this sense he was a communal being.

The essence of the starting point of man was not the self, but the unity of I and Thou. Man came to consciousness of his humanity, of his species being, through the agency of other men.

ஹெகல், பிக்டே பேசிய I or self in isolation என்பதற்கு மாற்றாக two human beings are needed for the generation of man என்கிற பாயர்பாக் கருத்தாக்கம் தெளிவைக்கொடுத்தது.

மார்க்ஸ் அரசியல் அரசு என்பதில் மனிதன் இரண்டு அம்சங்களைப் பெறுகிறானென்றார். In the political community 'himself'' a communal being and in civil society 'he' acts as a private individual. அதேபோல் மதம் பற்றி பேசும்போது we no longer regard religion as the cause but only as the manifestation of secular narrowness எனக் குறிப்பிட்டார். அரசு மதத்திலிருந்து பெறும்

விடுதலை, மனிதன் மதத்திலிருந்து பெறும் விடுதலையாகாது என்பதை புருனோபாயர் புரிந்துகொள்ளவில்லை என்ற விமர்சனத்தை பாயர்பாக் செல்வாக்கில் மார்க்ஸ் வைத்தார்.

பிரிட்டன், பிரான்சில் வளர்ந்த அளவு தொழிலாளர் இயக்கம் ஜெர்மனியில் 1840களில் வளரவில்லை. பிரான்சில் கம்யூனிச சிந்தனைகள் குறித்த உரையாடல்கள் பெருகியிருந்தன. லூயி பிளாங்கின் Organisation of Labour, புருதான் எழுதிய what is property வந்தன. சோசலிசம், கம்யூனிசம், தொழிலாளர் துயர்கள் ஆகியவற்றை பின்னிய வகையில் உரையாடல்கள் பிரதிகள் எழுந்தன.

1843ல் வைட்லிங்கின் Guarantees of Harmony and Freedom வந்தது. மோசஸ் ஹெஸ் European Triarchy என்கிற நூல்வழி Germany the land of Reformation to realise spiritual freedom, France land of Revolution to attain political freedom, England the land of social revolution to bring social equality ஆகிய மூன்றின் இணக்கம் பற்றிப் பேசினார்.

மார்க்ஸ் 'கம்யூனிசம்' எனச் சொல்வது வெறும் விமர்சன கருத்துரையா அல்லது சமூக இயக்கமா என்பதை விவாதிக்கலானார். அவர் இவ்வாறு எழுதினார்.

The real danger lies not in practical attempts, but in the theoretical elaboration of communist ideas, even mass attempts can be answered by cannon as soon as they become dangerous, whereas ideas, which have conquered our intellect and taken possession of our minds were chains from which one cannot free oneself without a broken heart.

பாயர்பாக்கை வியந்து பிராங்கோ ஜெர்மன் அறிவியல் கூட்டணியின் தேவையை உணர்த்திய முதல் எழுத்தாளர் அவர் என மார்க்ஸ் அப்போது எழுதினார்.

மோசஸ் ஹெஸ் தனது On the Essence of Money என்கிற ஆக்கத்தில் இவ்வாறு எழுதினார்

Money had become the alienated wealth of man, the bartering away of man's activity.

மேலும் பார்க்கலாம்..பாரிஸ், பிரஸ்ஸல்ஸ் வாழ்க்கை கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ நோக்கி மார்க்ஸ் எப்படி நகர்ந்தார் என்பதை..

7

முன்னரான 6 பதிவுகளில் மார்க்ஸ் தாய் தந்தை குடும்பம் பள்ளிக்கூடம் , ஜென்னி , திருமணம் , பத்திரிகை அனுபவம் குறித்த சில செய்திகளை கொடுத்திருந்தேன்.

மார்க்ஸ் பாரிஸ் நகருக்கு அக்டோபர் 1843ல் வந்தார். லண்டனுக்கு அடுத்த புகழ் வாய்ந்த அய்ரோப்பிய நகரம். மக்கள்தொகை ஒரு மில்லியனுக்கு சற்று அதிகமாக இருந்திருக்கலாம். 60 ஆயிரம் ஜெர்மானியர்கள் அப்போது அங்கு இருந்தனராம். அவர்களில் பலர் செருப்புத்தொழில், கைத்தொழில், ஆசிரியர், தையல் தொழிலாளர்கள் என்ற வகையில் வாழ்ந்தனர். அங்கு சற்று கூடுதல் ஊதியம் கிடைக்கும் என வந்து தங்கியவர்கள்.

பிரான்சில் அப்போது பெரும் தொழிற்சாலைகள் இல்லை. 50 சத நிறுவனங்கள் ஓரிரு தொழிலாளர்களை வைத்தே நடந்தன. 10 சத நிறுவனங்களில்தான் 10 தொழிலாளர்களுக்கு மேலாக இருந்தனர்.

1833ல் சோசலிசத்திற்கான நவீன புரிதலை Pierre Leroux தந்தார். அவரும் Religious Democracy என்பதை பேசி வந்தவர்தான். Philippe Buchez என்பவர் கிறிஸ்துவம் பேசும் சமத்துவத்தை சோசலிச வகைப்பட்டே எட்டலாம் என உரையாடினாராம். Cabet கிறிஸ்துவத்தின் நடைமுறையையே தான் கம்யூனிசம் எனச் சொல்வதாக போதித்தார். இப்படி கிறிஸ்துவ பார்வையில் சமத்துவம் பேசிய பலரது சிந்தனைகள் வெளிவந்திருந்தன.

இப்படி கம்யூனிசம்-சோசலிசம் உரையாடல் நிரம்பிய பாரிஸ்க்கு மார்க்ஸ் ஜென்னியுடன் வந்தார். ஆரம்ப நாட்களில் ரூகே, ஹெர்வே,

மார்க்ஸ் மூன்று குடும்பமும் social community வாழ்க்கையை கூட்டாக சோதித்தனர். துணைவியார்களிடம் ஏற்பட்ட வேறுபாட்டால் அச்சோதனை சில நாட்களிலேயே நின்றது.

மார்க்ஸ் தனது Jewish Question ஆக்கத்தில் புதிய உலகத்திற்கான கோட்பாடு எதையும் யூதமதம் தராது. ஆனால் அதிலிருந்து வந்த கிறிஸ்துவத்தில் அரசு என்பதிலிருந்து சிவில் சமூகத்தை பிரித்துக்காண முடியும் என எழுதினார்.

Political emancipation could not emancipate the Jew. Only human emancipation- emancipation from huckstering and money would make Jew impossible என மார்க்ஸ் விமர்சிப்பதை ஜோன்ஸ் சுட்டிக்காட்டுகிறார்.

1844ல் பாட்டாளிக்கும் சோசலிச தத்துவத்திற்குமான உறவை அவர் கட்டுவதைக் காணலாம்.

The emancipation of the German is the emancipation of the human being. The head of the emancipation is philosophy; its heart is the Proletariat…

..as philosophy finds its material weapons in the proletariat, so the proletariat finds its spiritual weapons in philosophy என்கிற இணைப்பை அவர் கட்டுமானம் செய்வதைப் பார்க்கலாம்.

மார்க்ஸ்க்கு அங்கு கவிஞர் ஹெயின்ரிச் ஹெயின் தோழராக இருக்கிறார். கைக்குழந்தையான ஜென்னிக்கு strong cramps வந்தநேரத்தில் அக்குழந்தையை உடன் குளிப்பாட்டி கைவைத்தியத்தில் ஹெயின் காப்பாற்றிய செய்தியை ஜோன்ஸ் எழுதுகிறார்.

அங்கிருந்த நண்பர்கள் வட்டத்தில் கார்ல் கொண்டாடப்பட்டாலும் ரூகே அவரைப் பற்றி இப்படி எழுதினார்.

He has a peculiar personality..He reads a lot works with unusual intensity, critical talent… but he finishes nothing, breaks off everything and plunges himself ever afresh

into an endless see of books...He is irritable, hot tempered when worked himself sick and not gone to bed for three or four nights on end.

Vorwarts Group writers என்று ரூகே, ஹெயின், மார்க்ஸ், ஹெர்வே, பகுனின், வீர்த், எங்கெல்ஸ், பார்ன்ஸ்டெயின் போன்றவர் இருந்தனர். நண்பர்கள் குழுவில் இருந்த 14 பேர்களும் புகைமண்டலம் மத்தியில் இரவு முழுக்க விவாதிப்பவர்களாக பாரிசில் இருந்தனர்.

மார்க்ஸ் தனது பத்திரிகை தொடர்பான பணிகளை நிறுத்திக்கொண்டாலும் Jahrbucher ல் வந்த எங்கெல்சின் outlines of Critique of political economy என்பதை விருப்பத்துடன் படித்தார். எங்கெல்ஸ் தனது ஊருக்கு செல்லும் வழியில் பாரிசில் மார்க்சை சந்தித்து ஆக 28 முதல் செப் 6, 1844 நாட்களில் உரையாடினார். இதன் பின்னர் இருவரும் வாழ்நாள் பந்தப்பட்ட தோழர்களாயினர்.

மீண்டும் வோர்வார்ட்ஸ் பத்திரிகைக்கு எழுதுவது, ஜெர்மன் உழைப்பாளிகளிடம் உரையாடுவது என்பதாக மார்க்ஸ் நாட்கள் நகர்ந்தன. இது குறித்து பாயர்பாகிற்கு எழுதும்போது மார்க்ஸ்

German artisans- communists several hundreds had been attending twice weekly lectures on the Essence of Christianity என பாயர்பாக் புத்தகம் குறித்த வகுப்புகளை தான் எடுத்ததைச் சொல்கிறார்.

பாரிஸ் நகரில் மார்க்ஸ் குடும்பத்தால் நீடிக்க முடியவில்லை. அங்கிருந்து அவர்களை வெளியேற்ற பிரஷ்யா அரசாங்க அழுத்தம் வந்தது. டிசம்பர் 1844ல் ரூகே போன்றவர்களுடன் கார்ல் வெளியேற்றப்படுகிறார். கார்ல்க்கான Brussels Exile 1845ல் துவங்குகிறது.

பார்க்கலாம் மேலும் நடப்பதை..

8

முன்னரான 7 பதிவுகளில் மார்க்ஸ் பிறந்த சூழல், அவரது குடும்பம், பள்ளி கல்லூரிக் காலம், ஜென்னியின் குடும்பம், ஜென்னி மார்க்ஸ்

காதல் திருமணம், மார்க்ஸின் பள்ளிச்சூழல் சிந்தனைகள், இளம் ஹெகலிய தாக்கம், பாயர்பாக் தாக்கம் - பிரான்சின் சோசலிச கம்யூனிச சிந்தனைகளின் தாக்கம் குறித்து ஓரளவு சொல்லப்பட்டது.

இந்தப்பதிவில் பிரஸ்ஸல்ஸ் வாழ்க்கைக் காலத்தைப் பார்ப்போம். குடும்பத்துடன் மார்க்ஸ் பிப் 3, 1845ல் அங்கு வந்து சேர்ந்தார். வந்தவுடன் குடும்பத்தை எப்படி அமைப்பது என்பதைவிட அங்கிருந்த புகழ்வாய்ந்த ஜெர்மானிய கவி ப்ரயிலிகிராத்தை உடன் பார்ப்பது என்ற ஆர்வமே மார்க்சிடம் இருந்ததாம்.

பிரான்சில் இருந்த தட்டுமுட்டுச் சாமான்கள் விற்ற பணத்தைகொண்டு அன்றாட பிரஸ்ஸல்ஸ் வாழ்க்கையை ஜென்னி துவங்கினார். செப்டம்பர் 26, 1845 ல் இரண்டாவது மகள் லாரா பிறந்தாள். இரு குழந்தைகளின் சத்தத்தால் மார்க்ஸ் சிந்தனைப் பணிகள் தடைபடாமல் இருக்க மாடி அறை அவருக்கான ஏற்பாடனது.

எங்கெல்ஸ் உடன் மார்க்ஸ் மான்செஸ்டர் சென்றதால், தாய் கரோலின் டிரயர் வீட்டிற்கு ஜென்னி சென்றார். அப்போது மார்க்ஸின் குடும்பத்தாரையும் ஜென்னி சென்று பார்த்தார். குழந்தை ஜென்னிக்கு அத்தை சோபி அழகான முத்தம் கொடுத்து கொஞ்சிய செய்தி கிடைக்கிறது.

1844ல் ஹெஸ் ஆக்கத்திலிருந்தும் தமது ஆய்வுகளின் வழியேயும் Manuscripts ல் மார்க்ஸ் கவனம் செலுத்தி வந்தார். ஹெஸ்ஸிடமிருந்து மனிதனின் conscious life activity என்பதை சரடாக எடுத்துக்கொண்டு அந்நியமாதல் கருத்தாக்கம் நோக்கி தன் சிந்தனைகளை மார்க்ஸ் நகர்த்தினார். Religious estrangement occurs only in the realm of consciousness, but economic estrangement is that of real life என அவர் வாதிட்டார்.

1844 ஜூன் காலத்திற்குள் political economy அரசியல் பொருளாதாரம் குறித்த 9 நோட்டு புத்தக குறிப்புகளை அவர் எடுத்து வைத்திருந்தாராம். அவ்வளவு உழைப்பு. கூலி, மூலதனம், வாடகை பற்றி முதல் குறிப்பு நோட்டு இருந்ததாம். அந்நியமாதல், உழைப்பு,

தனிச்சொத்து, கம்யூனிசம், ஹெகல் பேசிய இயக்கவியல் என அனைத்தும் பற்றிய குறிப்புகளாக அவை இருந்தனவாம். 1844ல் மார்க்ஸ் labour - labour power வேறுபாடுகளில் அதிக கவனப்படுத்தி பேசவில்லை. பின்னர் 1857-58 களில்தான் அவை குறித்த விளக்கங்களை அவரிடம் காண்கிறோம் என ஜோன்ஸ் சொல்கிறார்.

அரசியல் பொருளாதார ஆய்வுகளை தீவிரமாக்கிய மார்க்சிடம் ஆரம்பத்திலேயே இந்தக் கருத்து சேர்ந்துவிட்டதைக் காண்கிறோம்.

The worker descends into a commodity, and that the poverty of the worker is in inverse proportion to the power and extent of his production… Estrangement related not only to the product of labour but also to the activity of labour itself.. the worker puts his life into the object; but now his life no longer belongs to him but the object

The antithesis between property and lack of property was transformed into that between capital and labour, bourgeois and proletarian.

ஹெஸ் பழக்கத்தில் எங்கெல்ஸ் சோசலிச ஈர்ப்பை பெறுகிறார். தனது சொந்த தொழில் அனுபவங்களைக் கொண்டும் கள ஆய்விலும் அவர் 1845ல் The Condition and of Working Class in England எழுதுகிறார். தொழிலாளர் பின்னணியிலிருந்து வந்த அவரது காதல் தோழி மேரி இதற்கு பெரும் உதவியை செய்தார். மார்க்ஸ் Holy Family யை முடித்து அது மார்க்ஸ் எங்கெல்ஸ் பெயரில் வருகிறது.

1844ல் மாக்ஸ் ஸ்டிர்னர் எழுதிய The Ego and its Own வருகிறது. ஹெஸ் மற்றும் எங்கெல்ஸ் படித்துவிட்டு இதற்கு பதில் தரவேண்டும் என நினைக்கின்றனர். எங்கெல்ஸ் தன் கருத்தை மார்க்சிடம் சொல்கிறார். ஸ்டிர்னர் பாயர்பாக்கை தாக்கியதற்கு பதில் சொல்லவேண்டும் என மார்க்ஸும் நினைத்தார். 1845 ஜூனிற்குள் 300 பக்கங்களில் நீளமான விமர்சன பதிலை மார்க்ஸ் எழுதி வைத்திருந்தாராம். அலுப்பில்லாத அஞ்சாத தனக்கு சரி எனத்தோன்றுவதற்கான பெரும் உழைப்பை நாம் மார்க்சிடம் எப்போதும் காண்கிறோம்.

எங்கெல்ஸ் குறிப்பிடும்போது 1845 லேயே மார்க்சிடம் 'his materialist theory of history developed' எனச் சொல்கிறார். ஆனால் ஜோன்ஸ் இதற்கு விளக்கம் ஒன்றை தருகிறார். ஜோன்சின் வரிகள் முக்கியத்துவம் வாய்ந்தவை .

The supposed battle between idealism and materialism invoked by Engels was a late 19th century preoccupation. During his years in Paris and Brussels , Karl' s ambition was not to develop a 'materialistic conception' , but rather to construct a philosophical system that reconciled materialism and idealism, and incorporated nature and mind without assigning primacy to one or the other.

மேற்கூறிய ஜோன்ஸ் வரிகள் கவனமாக படித்து புரிந்துகொள்ளவேண்டியவை எனக் கருதுகிறேன்.

9

முன்னரான 8 பதிவுகளில் மார்க்ஸ் தாய் தந்தை குடும்பம் பள்ளிக்கூடம் , ஜென்னி , திருமணம் , பத்திரிகை அனுபவம் , பாரிஸ் வாழ்க்கை குறித்த சில செய்திகளை கொடுத்திருந்தேன்.

பிரஸ்ஸல்சில் பாயரையோ, ரூகேவையோ இன்னும் குறிப்பாக பாயர்பாகை சார்ந்து தன் அறிவுப்பயணத்தை நடத்தும் நிலையில் தான் இல்லை என்பதை மார்க்ஸ் தெளிவாக்கினார்.

சுய உருவாக்கத்தின் வழியே தனது சொந்த உழைப்பின் வழியே உருவாகி வருபவன் மனிதன் என்பதை ஹெகல் தெளிவாக்கியதாக மார்க்ஸ் கூறினார். மனிதன் வெறும் இயற்கை ஜீவி மட்டுமல்ல மனித இயற்கை ஜீவி - மிருகங்களைபோல் அல்லாது அவனால் இயற்கையுடன் தனது விருப்ப உறுதி கொண்டும் இயங்க முடிகிறது என்றார். வரலாறு என்பதை humanisation of nature through his conscious life activity and history was the process of man becoming Spies- being.. இந்த spies being என்பது பாயர்பாக் விளக்கம் சார்ந்தது. சுருக்கமாக மார்க்ஸ் இப்படி சொன்னதாக எடுத்துக்கொள்ளலாம்.

Human History might be understood as the continual and cumulative process of interaction between teleology and causality.

பாயர்பாக் ஆய்வுகளில் 1845ல் மார்க்ஸ் third thesisல் இவ்வாறு எழுதியதைக் காண்கிறோம்.

..that the materialist doctrine concerning the changing circumstances and upbringing forgets that circumstances are changed by men and that the educators must himself be educated.

கம்யூனிசம் என்பது மனிதன் முழு மனிதனாக தன்னிடமே வருவது என்ற புரிதலை இந்தக்காலத்தில் அவர் வெளிப்படுத்தினார். அது முழுமையாக வளர்ந்த naturalism equals humanism and fully developed humanism equals naturalism என எழுதியுள்ளார்.

இந்த materialist conception of history என்பதை எங்கெல்ஸ், பிளக்கானோவ், காட்ஸ்கி போன்றவர்கள்தான் பேசினர் என்ற விமர்சனத்தை ஜோன்ஸ் வைக்கிறார். ஜோன்ஸ் இதை விளக்கும்போது மார்க்ஸ் முன்வைத்த வரலாறு குறித்த இந்த விளக்கத்தையும் தருகிறார்.

History is nothing but the succession of the separate generations, each of which uses the materials, the capital funds, the productive forces handed down to it by all preceding generations, and this, on the one hand, continues the traditional activity in completely changed circumstances and, on the other, modifies the old circumstances with a completely changed activity.

1846ல் ரஷ்யாவின் அறிவுஜீவி பாவல் அன்னன்காவிற்கு மார்க்ஸ் எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்ட உற்பத்தி முறை சூழலில் தொடர்பான சமுக கட்டுமானங்கள்- குடும்பம், வர்க்கங்கள் என தொடர்பான சிவில் சமூகம் அமைகிறது என்றும் அதற்கேற்ப அரசியல் சிஸ்டமும் இருக்கிறது என்றும் மார்க்ஸ் குறிப்பிடுகிறார்.

1847 ல் புருதோனுக்கான பதிலில் no antagonism no progress - முரண்பாடில்லையேல் முன்னேற்றமில்லை. Till now the productive forces

have been developed by virtue of this system of class antagonism- வர்க்க மோதலால்தான் உற்பத்தி சக்திகள் வளர்ந்து வருகின்றன எனச் சொல்கிறார் மார்க்ஸ்.

அவர் 'புனித குடும்பத்தில் ' இந்த கேள்வியை எழுப்பினார். It is the question of what proletariat is, and what, in accordance with this being, it will be historically be compelled to do. இப்படி அவர் உழைப்பு உற்பத்தி நிகழ்வு ,முதலாளித்துவம் பாட்டாளி முரண், பாட்டாளிகள் தேடும் சோசலிசம் என்கிற இணைப்பை உருவாக்குவதைக் காண்கிறோம். ஜோன்ஸ் இங்கு குறிப்பிடும் வேறு ஒரு அம்சம் Karl did not endow his proletarians with individuality.

கார்ல் போலவே கிரன் என்பாரும் பான் பெர்லினில் படித்து தொழிலாளர்களை திரட்டியவர். அவர் எங்கெல்ஸ், ஹெஸ் ஆகியவர்களுடன் இணைந்து பணியாற்றியவர். அவர் anti state anti constitutionalist நிலைப்பாட்டில் இருந்தார். அவர் social movement in France and Belgium என்ற புத்தகத்தைக் கொணர்ந்தார். கல்வி, பெண்களின் விடுதலை என்பதை சோசலிசத்துடன் இணைத்துப் பேசினார். ஆனால் அரசியல் பொருளாதாரம் குறித்த விமர்சனம், தொழிலாளர் பாத்திரம் குறித்து கவனம் செலுத்தவில்லை என்பதாலும் , புருதானுடன் உறவுகொண்டார் என்பதாலும் விமர்சனத்திற்கு உள்ளானார்.

1846ல் பிரஸ்ஸல்ஸ் கரஸ்பாண்டிங் கமிட்டியில் சேர பலருக்கும் அழைப்பு விடுத்தார் மார்க்ஸ். புருதானுக்கும் அழைப்பு சென்றது. அவர் சேரவில்லை. இந்த அமர்வு ஒன்றில்தான் பலரும் குறிப்பிட்டு பதிவிட்டுள்ள வைட்லிங் மீதான மார்க்ஸின் கோப விமர்சனம் நடந்தது. அக்காட்சியை பாவல் அன்னன்கோவ் பதிவின்படி தான் பலரும் சொல்கின்றனர். மார்க்ஸ் விவாதத்தின் போதெல்லாம் அறியாமை எதிர்த்து எவ்வளவு கோபமடைகிறார் என்பது இதில் செய்தியாக உணர்த்தப்படுகிறது. பாவலின் பதிவிலிருந்து

Marx at the height of fury, slammed his fist down on the table so hard that the lamp of the table reverberated and tottered, and jumping up from his place, said at the same time: ignorance has never helped anybody…the meeting had ended. While Marx paced the room back and forth in extreme anger and irritation, I hastily bid him and his companion good bye.

அதேபோல் புருதானும் மார்க்சிற்கு முடிந்தவரை மரியாதையுடன் ஆனால் எச்சரிக்கை ஒன்றுடன் பதில் எழுதியதை ஜோன்ஸ் சொல்கிறார். மார்க்ஸ் குழுவினர் becoming apostles of a new religion, even if religion of logic or reason..Don’t create a new theology like your countryman Luther எனச் சொல்லியிருப்பதைக் காண்கிறோம்.

இப்படி பாரிஸ், ஜெர்மன் அறிவுஜீவிகள் மத்தியிலான விவாதங்கள் பல நடந்து, மார்க்ஸ் தனது விமர்சன ஆற்றல் மூலம் மேலெழுந்து வருவதைக் காண்கிறோம்.

மேலும் மார்க்சின் வாழ்க்கை எப்படி போனது எனப் பார்ப்போம் .

10

முன்னரான 9 பதிவுகளில் மார்க்ஸ் தாய் தந்தை குடும்பம் பள்ளிக்கூடம் , ஜென்னி , திருமணம் , பத்திரிகை அனுபவம் , பாரிஸ் , பிரஸ்ஸல்ஸ் வாழ்க்கை குறித்த சில செய்திகளை கொடுத்திருந்தேன்.

1846ல் லண்டனில் செயல்பட்டுவந்த ஷாப்பர் குழுவினர் மார்க்ஸ் பிரஸ்ஸல்ஸ் குழுவுடன் இணைந்து மனிதகுல நன்மைக்கு பணியாற்றும் விருப்பத்தை தெரிவித்தனர். இந்த தொடர்புதான் கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ உருவாக்கத்திற்கு உதவியது. இந்த புத்தகத்தில் லண்டன் ஜஸ்டிஸ் லீக் பின்னர் கம்யூனிஸ்ட் லீக் என மாற்றம் பெறுதல், 1848 ஜன-பிப் கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோவை மார்க்ஸ் எழுதுதல் விரிவாக பேசப்படவில்லை. முன்னர் எங்கெல்ஸ் கேள்வி பதில் வடிவத்தில் எழுதி அனுப்பிய நகல் குறித்தும் விரிவாக பேசப்படவில்லை.

மானிபெஸ்டோ பிப் 1848ல் வந்த பின்னரும், மார்ச் 24, 1848ல் Demands for Communist Party of Germany என்ற பெயரில் மார்க்ஸ், ஷாப்பர், எங்கெல்ஸ், மோல், உல்ப் போன்றோர் ஒன்றுபட்ட ஜெர்மனி என்ற முழக்கத்தை வைத்தனர். வங்கி, போக்குவரத்து தேசியமயம், வரிவிதிப்பு சீர்திருத்தம் கோரினர்.

ஸ்டீபன் பார்ன் என்பார் 1847ல் மார்க்ஸ் வீட்டிற்கு சென்ற தன் பதிவைச் சொல்லியுள்ளார். ஜென்னி எப்போதும் தன் கணவரின் நலன் என்பதில் கவனமாக இருந்தார், பிரஸ்ஸல்ஸ் ஜெர்மானிய பெண்களுக்கு கல்வி கற்பிக்கும் கழகத்தில் ஆர்வத்துடன் செயல்பட்டார் ஜென்னி. 1847 புத்தாண்டில் 130 பேர் கூடிய நிகழ்வில் ஜென்னி தனது திறமையைக் காட்டினார் எனவும் அவர் எழுதியதைக் காண்கிறோம்.

1846 டிசம்பரில்தான் ஜென்னி எட்கரை பிரசவித்திருந்தார். ஆனால் அக்குழந்தை பிறந்ததிலிருந்து நோய்வாய்ப்பட்டிருந்தது. 9 ஆண்டுகள் வாழ்ந்து போராடி எட்கர் மரித்தான்.

ரஷ்யத் தோழர் பாவல் அன்னன்கோவ் மார்க்ஸ் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்.

” அற்புத சக்தியுடன், உறுதிப்பாட்டுடன், தன் சிந்தனையில் பெரும் நம்பிக்கையுடன், கருப்பு தலைமயிர்- கைகளில் முடியுடன் மார்க்ஸ் இருந்தார். பட்டன்களுடன் கோட் அணிந்திருப்பார். பார்வையில் எவருக்கும் அவர் மீதான மரியாதை எழும். அவரது அசைவுகளில் நேர்த்தி இருக்காது- awkward but self confident. அவர் பேசத்துவங்கினால் தெளிவான அறிவிப்புகளாக அவை இருக்கும். சுற்றி நிற்பவர்களின் மூளைகள் அவரது கட்டுப்பாட்டில் இருக்குமாறு அவரது சிந்தனை மிளிரும். அவர் democratic dictator incarnate என பாவல் தன் பதிவில் சொல்வதைக் காணலாம்.

பொதுவாக குழாமில் மார்க்ஸ் சொல்வது ஏற்கப்படும். ஹெஸ் ஏங்கெல்ஸ் இருவரும் விவாதத்தில் ஈடுபடுவராம். கேலி

பேச்சுக்களும் நண்பர்கள் மத்தியில் இருக்குமாம். நாம் பாட்டாளிகள் போல் ஆகவில்லையெனில் சுவர்க்கத்திற்கு செல்லமுடியாது போன்ற நகைச்சுவை உணர்வுகளும் அவர்களிடம் இருக்குமாம்.

1846-47 களில் எங்கெல்ஸ் ஹெஸ் தகராறு சற்று கூடுதலாக இருந்ததை ஜோன்ஸ் சொல்கிறார். ஹெஸ்ஸை சீண்டுவதை எங்கெல்ஸ் செய்வாராம். ஹெஸ் துணைவியார் Sybille இடம் எங்கெல்ஸ் அத்து மீறிய குற்றச்சாட்டு வந்தது. ஜோன்ஸ் இதை இவ்வாறு எழுதியுள்ளார்.

Hess accused Engels of rape and spoke of challenging him to a duel. Engels' attitude was callous..

1847 ல் பாரிசில் இருந்தபோதும் , பாரிஸ் பெண்களுடன் மகிழ்ச்சியாக இருந்த செய்தியை எங்கெல்ஸ் மார்க்ஸிடம் தெரிவித்தையும் காண்கிறோம். If there were no French women, life wouldn't be worth living என எழுதியதை ஜோன்ஸ் மட்டுமல்ல பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். Take it easy policy என எங்கெல்ஸ் இருந்ததாகச் சொல்கின்றனர்.

ஜெர்மன் தொழிலாளர்களுக்கு தத்துவத்தின் வறுமை, கூலி உழைப்பு, மூலதனம் குறித்த விரிவுரைகளை மார்க்ஸ் பிரஸ்ஸல்ஸில் தந்தார். முதலாளித்துவ உற்பத்தி முறை குறித்து பேசினார். சுதந்திர வர்த்தகம் என்பதை விமர்சித்தார். பிரஸ்ஸல்ஸ் கம்யூனிஸ்ட் லீக் என்ற பெயரில் அரசியல் நடவடிக்கைகளை அவரது குழுவினர் கவனித்து வந்தனர். பொதுவாக வகுப்புகள் புதன்கிழமைகளில் இருக்குமாம்.

பெல்ஜியன் அசோசியேசன் என்கிற ஜனநாயக அமைப்பினருடனும் மார்க்ஸ் செயல்பட்டார். 1848 ஜனவரியில் மானிபெஸ்டோவில் அவர் கவனம் செலுத்தினார். ஜோன்ஸ் இங்கு சொல்வது பல நூல்களின் சாரத்திலிருந்து பிழிந்த வடிவமாக கம்யூனிஸ்ட் அறிக்கையை மார்க்ஸ் தந்தார் என்று. எங்கெல்ஸின் principles, condition of working class in England, the poverty of philosophy, articles of Moses Hess, German ideology

குறிப்புகள் என ஜோன்ஸ் பட்டியல் இடுகிறார். ஜோன்ஸ் அதன் சிறப்பை ஏற்கிறார்.

The Manifesto is still rightly celebrated as Karl's most memorable text எனச் சொல்கிறார்.

புகழ்வாய்ந்த டாக்டர் அந்த்ரே கோட்ஸால்க் உடன் உறவு, முரண் என்ற அம்சத்தையும் ஜோன்ஸ் ஓரளவு தொட்டுக்காட்டியுள்ளார்.

1848 பிப்ரவரி புரட்சிகர பாரிஸ் நிகழ்வுகள் பிரஸ்ஸல்சில் எதிரொலித்தன. போலீஸ் நெருக்கடி மார்க்ஸ் குடும்பத்தின் மீது விழுந்தது. கார்ல் கைது செய்யப்பட்டு வெளியேற நேர்ந்ததுடன்,ஜென்னியை மோசமாக நடத்திய நிகழ்வும் நடந்தேறியது. மார்க்ஸ் இதை

My wife under the charge of vagabondage, was taken to prison and locked up in a dark room with prostitutes என துயரத்துடன் எழுதியதை காணலாம்.

நிச்சயமற்ற மார்க்சின் வாழ்க்கை அடுத்து கலோன் நோக்கி நகர்ந்ததைப் பார்ப்போம்.

11

முன்னரான 10 பதிவுகளில் மார்க்ஸ் தாய் தந்தை குடும்பம் பள்ளிக்கூடம் , ஜென்னி , திருமணம் , பத்திரிகை அனுபவம் , பாரிஸ் , பிரஸ்ஸல்ஸ் வாழ்க்கை , எங்கெல்ஸ்- ஹெஸ் முரண்கள் குறித்த சில செய்திகளை கொடுத்திருந்தேன்.

நிச்சயமற்ற துரத்தப்பட்ட வாழ்க்கைப் பயணத்தில் மார்க்ஸ் 1848 ஏப்ரலில் கலோனுக்கு (cologne) வந்தார். எங்கெல்ஸ் கூடவே துணையாக வந்தார். அங்கு அடால்ப் கிளஸ் நண்பர்களுடன் தொழிலாளர் அசோசியேஷன் உறவுகளை மார்க்ஸ் உருவாக்கிக்கொண்டார். ஜெர்மன் நாடாளுமன்றத்திற்கு தொழிலாளர் நலன் காக்கும் பிரதிநிதிகள் தேவை என்ற அறிக்கைகளை தோழர்கள் வெளியிட்டனர்.

கலோன் நகர் சுற்றி 90 ஆயிரம் மக்கள் 1840களில் வாழ்ந்தனர். தொழிலாளர்கள் கணிசமாக இருந்த பகுதி. 30 சத மக்கள் ஏழைகள். வேலையின்மை 25 சதம் இருந்ததாம். டாக்டர் கோட்ஸ்சாக் ஜனநாயக சோசலிஸ்ட்களின் கிளப் ஒன்றை துவக்கினார். விடுதலை, சகோதரத்துவம், வேலை (Freedom, brotherhood, work) என்ற முழக்கங்களுடன் பத்திரிகையும் நடத்தினார். ஆனால் அவர் மார்க்ஸ் தோழர்கள் பேசிய ஏக ஜெர்மனி என்பதை ஏற்கவில்லை. பெடரல் ஜெர்மனிக்காக நின்றார். அதேபோல் அரசியல் அமைப்பு எனில் முடியரசு என்பதே சாத்தியம் எனக் கருதினார். கோட்ஸ்சால்க் குழுவிடம் 7000 மெம்பர்கள் இருந்தால், மார்க்ஸ் செயல்பட்ட ஜனநாயக குழுவில் 700 பேர் இருந்தனராம்.

மார்க்ஸ் நண்பர்கள் ஜூன் 1848ல் தங்கள் 'நியு ரையினிஷ் ஜெய்துங் ' பத்திரிகையைக் கொணர்ந்தனர். லீக் தோழர்கள் கொண்ட - எங்கெல்ஸ், வீர்த், உல்ப் உள்ளிட்டவர் எடிட்டோரியல் குழுவில் இருந்தனர். கார்ல் ஜெர்மன் அரசியல் நிகழ்வுகளையும், எங்கெல்ஸ் வெளி உலக செய்திகளையும், வீர்த் இலக்கிய பகுதியையும் பார்த்துக்கொண்டனர். கோல்ஸ்சாக் பத்திரிகை 17 ஆயிரம் விற்றால், நியு ரையினிஷ் 5000 அளவில் போனதாம்.

பாரிசில் மார்ச் 17 ல் இரகசிய இயக்கத்தலைவர் பிளாங்கி அழைப்பில் லட்சம் பேர் பங்கேற்ற ஆர்ப்பாட்டம் நடந்தது. ஏப்ரலில் அரசியல் அசெம்பிளிக்கு நடந்த தேர்தலில் இடதுகளைவிட மிதவாதிகள் கூடுதலாக வந்தனர். சோசலிஸ்ட்களாக அறியப்பட்டவர்கள் தற்காலிக அரசில் இடம்பெறவில்லை. மார்க்ஸ் தொழிலாளர் எழுச்சியை விதந்து பத்திரிகையில் எழுதினார்.

ஜோன்ஸ் இங்கு, மார்க்ஸின் எழுத்துக்களில் சீரற்ற தன்மை நிலவியதாக, அதாவது ஜனநாயகம் மற்றும் பாட்டாஇ சோசலிசம் என இரு குதிரைகளில் அவர் சவாரி (certain incoherence as a result of riding in two horses the democratic and proletarian socialist) இருந்ததை சுட்டிக்காட்டுகிறார். மார்க்ஸ் தோழர்களால் முழுமையாக தங்கள்

பத்திரிகைகளில் ஜனநாயகம் என்ற முழக்கத்தை கைவிட முடியாத சூழல் இருந்ததைக் காண்கிறோம். புதிய அரசு பிப்ரவரி எழுச்சியின் தாக்கத்தை குறைக்கும் வகையில் வேலை உரிமை (right to work) போன்றவற்றை ரத்து செய்தது.

'பிரசிடெண்ட்க்கான' தேர்தலில் நெப்போலியன் குடும்பம் சார்ந்த லூயிஸ் நெப்போலியன் போனபார்ட் அமோக வெற்றி பெற்றார். அமைச்சரவையில் ரிபப்ளிகன் என எவரும் சேர்க்கப்படவில்லையாம். பாரிசில் செயல்பட்ட ராடிகல்ஸ் என கருதப்பட்டவர்கள் தங்களை தற்காத்துக்கொள்ளவே போராடவேண்டிய நிலை உருவானது.

ஜெர்மனியில் என்னவானது என பார்ப்போம்…

12

கடந்த 11 இடுகைகளில் ஜோன்சின் பார்வையில் மார்க்ஸ் வாழ்க்கைப்பயணம் குறித்த செய்திகளை எனக்குத் தோன்றிய அளவில் எடுத்து தந்துள்ளேன். இந்தப் புத்தகத்தை இதைவிட சிறந்த வழிகாட்டும் புத்தகம் வேறில்லை என எகனாமிஸ்ட் பத்திரிகை குறித்த செய்தியையும் தந்திருந்தேன். அடுத்து ஜெர்மனியில் என்னவென பார்ப்போம்.

1848 மார்ச்சில், 1813 நெப்போலியன் எதிர்த்த நினைவுகளை பிரஷ்ய மன்னர் நினைவு கூர்ந்ததுடன், நாடாளுமன்றம் லிபரல்களும் பங்கேற்கும் வகையில் அமையும் என அறிவித்தார். செப்டம்பரில் அமைச்சரவை ஏற்பட்டு நெருக்கடி தற்காலிகமாக தீர்க்கப்பட்டது. கலோனில் மார்க்ஸ் உள்ளிட்ட நியுரையினிஷ் பத்திரிகைகாரர்கள் ஜனநாயக சொசைட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனாலும் கலோன் நகர அதிகாரிகள் அனுமதிக்கும்வரை அங்கு கார்ல் இருக்கலாம் என்ற நிச்சயமற்ற நிலையே நீடித்தது.

மார்க்ஸ் ஜனநாயக சொசைட்டி, தொழிலாளர் அசோசியேஷன், பொதுபாதுகாப்பு கமிட்டி ஆகியவற்றில் செயல்பட்டுக்கொண்டிருந்தார். இந்த இயக்கங்கள் ஆர்ப்பாட்ட அறைகூவலை விடுத்தன. ஹெஸ்,

எங்கெல்ஸ், ஷாப்பர், உல்ப் போன்றவர்கள் டெமாக்ரடிக் காங்கிரஸ் நடைபெற இருந்த சூழலில் செப்டம்பர் 1848ல் கைதாகும் நிலை ஏற்பட்டது. கார்ல் தொழிலாளர்கள் அவசரப்பட்டு நடவடிக்கையில் இறங்கவேண்டாம் என்ற அறிவுரையை தந்தார். செப் 26 ல் இராணுவ சட்டம் பிரகடமானது. அக்டோபர் மத்தியிலேயே பத்திரிகை பணிகள் பாதிக்கப்பட்டன.

1848 நவம்பரில் தனது சொந்த மாமாவின் தலைமையிலான அமைச்சரவையை மன்னர் அமைத்தார். கார்ல் மற்றும் தோழர்கள் நவம்பர் 15ல் வரிகொடா வேலை நிறுத்தம் என அறைகூவல் விடுத்தனர். அசெம்பிளியை முடக்க அரசர்க்கு உரிமையில்லை என்ற ஆர்ப்பாட்டம் பெருமளவு நடந்தது. வரிகொடா (No tax) இயக்கத்திற்கு ஆரம்பத்தில் ஆதரவு இருந்தாலும் அது பரவலான ஆதரவைப் பெறவில்லை. மார்க்ஸ் இப்படி எழுதினார்

If the Govt continues in this way, we shall have convention not merely for Prussia but for whole Germany- a convention to use all means to cope with civil war..and with inevitable war with Russia. Recognition of National Assembly என்பதில் அவர் அழுத்தம் சென்றதைக் காண்கிறோம்.

1848ல் இறுதி மாதங்களில் ஏற்பட்ட அனுபவத்தில் மார்க்ஸ் ஜெர்மனியில் அரசமைப்பு என்பது முடியாட்சியுடன் என்பதாகவே இருக்கிறது- சமூக குடியரசுக்கான புரட்சி (social republican revolution) சாத்தியமாகாது போலவே இருக்கிறது என எழுதியதைக் காண்கிறோம்.

நியுரையினிஷ் வேலைகளை செப்டம்பர் 1848லிருந்து 1849 ஜனவரிவரை தனி மனிதராக கார்ல் மார்க்சே சுமக்க வேண்டியிருந்தது. எங்கெல்ஸ் கைதாகாமல் தப்பியதுடன், நடந்தே பாரிஸ் சென்றார். மோல் லண்டன் சென்று கம்யூனிஸ்ட் லீக் அமைப்பை செயல்பட வைக்க முயன்றார். பத்திரிகை நிதிக்கு கடன்கள் பெறப்பட்டன. நிதி கிடைப்பது கடினமானது.

பிரஷ்யா அசெம்பிளி தேர்தல் அறிவிக்கப்பட்டது. மார்க்ஸ் மற்றும் நண்பர்கள் ஜனநாயக வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்தனர். ஏழைகள் இல்லாத அனைத்து ஆண்களுக்கும் ஓட்டுரிமை இருந்தது. தொழிலாளர் நேரடி வேட்பாளர் என்ற கருத்தை வேண்டாம் என சூழலைக் கணக்கில்கொண்டு மார்க்ஸ் நிராகரித்திருந்தார் என்பதையும் இங்கு நாம் பார்க்கிறோம். அரசாங்கத்தை எதிர்க்கும் போராட்டத்தில் எங்கள் பகைவர்களுடன் கூட அணிசேர்வோம் என நியுரையினிஷ் எழுதியது.

பிரான்சில் என்ன நடந்தது எனப் பார்ப்போம்…

13

முன்னரான 12 பதிவுகளில் மார்க்ஸ் தாய் தந்தை குடும்பம் பள்ளிக்கூடம் , ஜென்னி , திருமணம் , பத்திரிகை அனுபவம் , பாரிஸ் , பிரஸ்ஸல்ஸ் , கலோன் வாழ்க்கை , எங்கெல்ஸ்- ஹெஸ் முரண்கள் குறித்த சில செய்திகளை கொடுத்திருந்தேன்.

ஆயுத எழுச்சி எதிர்பார்த்த மார்க்ஸ் எங்கெல்ஸ் கலோனிலிருந்து பாடென்- பாலடினேட் சென்றனர். அங்கு இடதுசாரிகளை தங்கள் புரிதலுக்கு தயார் செய்ய விழைந்தனர். இதற்கிடையில் 1849 மே மாதம் மாஜினி போன்ற போராளிகளை பாரிசிலிருந்து வெளியேற்ற போனபார்ட் முடிவெடுத்தார். பாரிஸ் வாழ் ஜெர்மானியர் மீது போலீஸ் கண்காணிப்பு தீவிரமானது. இனி பாரிசில் இருக்கமுடியாது என்ற நிலையில் இங்கிலாந்து லண்டன் செல்ல மார்க்ஸ் முடிவெடுத்தார். ஜென்னி குழந்தைகளுடன் செப்டம்பர் 1849ல் அங்கு வந்து சேர்ந்ததை அறிகிறோம்.

ஆகஸ்டில் லண்டன் வந்தது துவங்கி கம்யூனிஸ்ட் லீகின் மத்திய கமிட்டியை செயலூக்கமாக்கிட மார்க்ஸ் முயன்றார். அதன் முன்னணி தலைவர்களாக எங்கெல்ஸ், ஷாப்பர், வில்லிக் போன்றவர்களை அவர் இணைத்துக்கொண்டார். ஜெர்மன் அகதிகளுக்கான ‘சோசியல் டெமாக்ரடிக் சப்போர்ட்’ குழு ஒன்றை

அமைத்தனர். 'ஒர்க்கர்ஸ் எஜுகேஷனல் அசோசியேஷனில்' கூடி திட்டமிட்டனர். செருப்பு கடைக்காரர் ஹெயின்ரிச் பாயரை ஜெர்மன் சுற்றுப்பயணம் அனுப்பி ஆதரவு தேடினர். சிகரெட் தயாரிப்பாளர் பீட்டர் ரோசர் மூலம் கலோன் கிளையை செயல்பட வைத்தனர்.

மார்ச் 1850ல் மார்க்ஸ் எழுதி எங்கெல்ஸ், வில்லிக் உட்பட்டவர் கையொப்பத்துடன் Address to the Central Authority of League எனும் அறிக்கை வெளியானது. எதிர்காலத்தில் அரசு அதிகாரத்திற்கு நேரடி போராட்டத்தில் பிரான்ஸ், பிரிட்டன் பாட்டாளிகள் தயாராகவேண்டும். ஜெர்மன் நிலை வேறு. அங்கு முதலில் பூர்ஷ்வா புரட்சி, இரண்டாவதாகத்தான் பாட்டாளி புரட்சி என அதில் அவர்கள் மதிப்பிட்டிருந்ததைக் காண்கிறோம். Workers battle cry must be : The Revolution in Permanence என மார்க்ஸ் எழுதியதைக் காணலாம். இந்த நிரந்தர புரட்சி எனும் முழக்கத்தை பின்னாட்களில் டிராட்ஸ்கி எடுத்து கையாண்டதை அறிவோம்.

1850 ஜூலையில் தொழிலாளர்களுக்கு விரிவுரைகளை மார்க்ஸ் வழங்கிக்கொண்டிருந்தார். செப்டம்பர் 15 ல் மத்தியக்குழு கூட்டப்பட்டதாம். அதில் power at once எனப்பேசிய ஷாப்பர் வில்லிக் விமர்சிக்கப்பட்டனராம். 15, 20 ஆண்டுகள் சிவில் யுத்தம் தேவைப்படலாம் என மார்க்ஸ் ஊகித்துள்ளார். லண்டன் கிளையில் கருத்து வேறுபாடு முற்ற 1852 நவம்பரில் மார்க்ஸ் அதை கலைத்து விடுகிறார்.

1851ல் தையல் தொழிலாளி நோத்ஜங் என்பார் கலோன் ஆய்வுத்தாள்கள் சிலவற்றை வைத்திருந்தார் என கைது செய்யப்பட்டாராம். கலோன் கம்யூனிஸ்ட்களுக்கு வில்லிக் அனுப்பிய கடிதங்கள் போலீசாரால் கைப்பற்றப்பட்டன. ஜெர்மனியின் மன்னர் பிரடெரிக் வில்ஹெல்ம் 4 க்கு லண்டனில் மார்க்சிய குழு ஒன்று செயல்பட்டு வருவது கண்ணை உறுத்தியதாம். ஏற்கனவே 1851ல் தொடர்புடைய 11 தோழர்கள் மீது வழக்கு நடைபெற்று வந்தது. கிரிமினல் குற்றம் என ஏதும் நிருபிக்கப்படவில்லை. ஜோன்ஸ்

இதைக் குறிப்பிடும்போது on Oct 4, 1852 the police forged documents to incriminate the 'Marx Party' ..four were acquitted, rest imprisonment for three to six years.

இது குறித்து மார்கஸ் 1853 ஜனவரியில் சிறு வெளியீடு கொணர்ந்தார்- Revelations concerning the Communist Trail in Cologne . பல பிரதிகள் பறிமுதல் செய்யப்பட்டன.

நம்பிக்கை தளராத மார்கஸ் லண்டனில் பத்திரிகை ஜெர்மானிய மொழியில் துவங்கலாம் என எங்கெல்சிற்கு எழுதுகிறார். தியோடர் ஹேகன் என்கிற லீக் உறுப்பினர் உதவியுடன் மாதாந்திர பத்திரிகை நியுரையினிஷ் ஜெய்துங் அரசியல் பொருளாதார இதழ் என முடிவானது .

14

ஜோன்ஸ் தனது நூலின் கடைசிப் பகுதியில் மார்க்ஸ் எங்கெல்ஸ் நூல்தொகைகள் அடுக்கப்பட்ட சிறு வரலாற்று குறிப்பை தந்திருப்பார். அதிலிருந்து சில பகுதிகள்..

மார்க்ஸ் 1883ல் மறைந்த பின்னர் அவரது எழுத்துக்கள் அவரின் வாழ்நாள் தோழர் எங்கெல்ஸ் வசமானது. எங்கெல்ஸ் அதை மார்க்சின் கடைசி மகள் எலியனார் (டஸ்ஸி) வசம் ஒப்படைத்தார். எலியனார் 1898ல் மறைந்தார். மற்றொரு மகளான லாரா லபார்க்கிடம் சில பேப்பர்ஸ் இருந்தனவாம். இந்த மகள்தான் பிரான்ஸ் மெரிங் 1914ல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு எழுத கிரியாவூக்கியாக இருந்த பெண்மணி.

எங்கெல்ஸ்1895ல் மறையும் போது அவரது எழுத்துக்கள் பலவற்றிற்கு ஜெர்மன் சமூக ஜனநாயக கட்சி பொறுப்பேற்றுக்கொண்டது. ஆகஸ்ட் பெபல், எட்வர்ட் பெர்ன்ஸ்டைன் இருவரும் அதற்கு டிரஸ்டியாக்கப்பட்டிருந்தனர். இக்கட்சியால் 1910ல் தான் பெர்லின் எங்கெல்ஸ் கிடங்குடன் மார்க்சின் பேப்பர்களையெல்லாம் கொண்டுவந்து சேர்க்க முடிந்ததாம்.

இந்தக் காலத்தில் ஆஸ்ட்ரோ மார்க்சியர்கள் கூடி மார்க்ஸ் எங்கெல்ஸ் தொகுப்புக்களை கொணர்வதன் அவசியத்தை உணர்ந்தனர். ஆனால் அவர்களால் முடியாமல் போனது.

ரஷ்ய அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி ஆமோதிப்புடன் டேவிட் ரியாஷ்னாவ் மாஸ்கோவில் இதற்கான பெரும் முயற்சியை உழைப்பை நல்கினார். 1920ல் இந்த முயற்சி துவங்கப்பட்டது. அவர் திட்டப்பணிப்படி 42 தொகுப்புகள் என்ற எண்ணம் இருந்தது. Historisch Kritische Gesamtausgabe என்ற பெயரில் 12 வால்யூம்கள் அவரால் கொண்டுவர முடிந்தது. 1927 முதல் இந்த வால்யூம்கள் வரத்துவங்கின. நாம் சுருக்கமாக அறிந்த பெயரில் சொல்வதென்றால் அந்த தொகுப்புகள் MEGA என்பதாகும்.

டேவிட் ரியாஷ்னாவ் ஸ்டாலினுக்கு அசௌகரியமாக இருந்த வகையில் கொல்லப்பட்டவர்களில் ஒருவர் என்பது வேறு கதை.

ஜெர்மன் சமூக ஜனநாயக கட்சிக்குள் வேறுபாடுகள், சோவியத் கட்சிக்கும் அதற்குமான வேறுபாடுகளால் இந்தப் பணி நின்றும் போனது.

மார்க்ஸ் எங்கெல்ஸ் பேப்பர்கள் பல ஹாலந்து, இங்கிலாந்து என இரண்டாம் உலகப்போர் காலத்தில் எடுத்துச் செல்லப்பட்டு பத்திரப்படுத்தப்பட்டனவாம்.

1956 ஸ்டாலின் மறைவிற்குப் பின்னர் அந்த MEGA வை புதுப்பித்து கொணரலாம் என்ற எண்ணத்தை மாஸ்கோவின் பெர்லின் Institute of Marxism Leninism எடுத்தனர். ஆனால் பேப்பர்கள் ஒரே இடத்தில் இல்லை. ஆம்ஸ்டர்டாமில் பெருமளவும், மாஸ்கோவில் சிறிதளவும் இருப்பதை அவர்கள் உணர்ந்தனர். இன்னொரு முக்கிய பிரச்சனையாக நூல்தொகுப்பு முற்றிலும் சோவியத் கட்சி கட்டுப்பாட்டில் வெளியிடப்படவேண்டும் என்பது நிபந்தனையாக வந்தது. அதை அன்றைய சூழலில் எவராலும் அந்நிபந்தனையை

தவிர்க்கமுடியாது . சமரசம் செய்துகொண்டு 1972 முதல் 1991 காலத்தில் 66 தொகுப்புகளை கொணர்ந்தனராம்.

ஜோன்ஸ் தரும் எச்சரிக்கை MEGAவில் 1990க்கு முன்னர் வந்தவை குறித்து

But the publication of each volume continued to be conceived in a Marxist Leninist Frame work. This means that the entire MEGA series before 1990s to be treated with some caution. Not only were there politically inspired omissions, but in some important instances- the 1844 Manuscripts or the German Ideology for instance- published volumes suffered from distortion of the organisation, intention, status of the texts

மற்றொரு முயற்சி MEW Marx Engels Worke என்பதாகும். பெர்லின் தோழர்களின் முயற்சியால் 1956 முதல் 1990 காலத்தில் வெளியான 43 தொகுப்புகள். பரவலான வாசகர்களை சென்றடையும் வகையில் தொகுத்தோம் என்று அத்தோழர்கள் இதைக் கொணர்ந்தனராம்.

அடுத்த முயற்சியாக MECW என்கிற Karl Marx and Friedrich Engels Collected Works மாஸ்கோ, லண்டன், நியுயார்க் என பல்வேறு இடங்களில் 1975 முதல் 2000 வரை 50 நூல் தொகைகளாக வெளியிடப்பட்டன. இது மார்க்ஸ் குறித்து lay man கூட அறிந்துகொள்ள ஏதுவாக அடுக்கப்பட்டதாக கூறினர். இந்த நூல்தொகைகளும் அங்குள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளின் மேற்பார்வையில்தான் கொணரப்பட்டன. எனவே ஜோன்ஸ் இங்கும் தனது எச்சரிக்கையை வைத்துவிடுகிறார். நூறு சத reliability என்பதாகாது என்பது அவரின் கருத்து.

பெர்லின் சுவர் வீழ்த்தப்பட்ட, சோவியத் தகர்ந்து போன சூழலில் ஆம்ஸ்டர்டாம் இன்ஸ்டிட்யூட், மார்க்ஸ் பிறந்த டிரயர் பகுதி அமைப்பு, அய்ரோப்பிய ஆய்வு கவுன்சில் போன்றவை இணைந்து 2025க்குள் 114 நூல்தொகைகள் என்ற இலக்கில் செயல்பட்டு வருகின்றனராம். 5 ஆண்டுகளுக்கு முன்னர்வரை 62 தொகுதிகள் தயாரிக்கப்பட்டுள்ளது என்கிற செய்தியை ஜோன்ஸ் தந்துள்ளார்.

இப்படி நம்மிடம் ஆங்கிலத்தில் வந்து சேர்ந்துள்ள நூல்தொகைகள் எவ்வகை தொகுப்புகள் எனப் பார்த்து அதையும் நாம் எடுத்தாள்கையில் பதிவிட வேண்டும். நம்மிடம் வந்து சேர்பவையும் இப்படி பல வடிகட்டல்களுடந்தான் distillation வந்துள்ளன என்ற புரிதலும் சற்று நம்மை நிதானப்படுத்தி கருத்து பரிமாற்றத்தில் அழைத்துச் செல்லும்.

ஜோன்ஸ் நூலை ஓரளவிற்கு மட்டுமே இங்கு அறிமுகம் செய்துள்ளேன்.

மே 2023

6. Paris Manuscripts

1844 ல் மார்க்சின் கையெழுத்து பிரதிகளை Paris Manuscripts என்பர். அது 4 பகுதியாக கிடைத்தது. மார்க்ஸ் அதை தன் 26 வயதில் எழுதியுள்ளார். 180 ஆண்டுகளுக்கு முன்னரான பிரதிகள் அவை. 1848ல் எழுதப்பட்ட கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோவிற்கும் முந்திய கையெழுத்துப் பிரதிகள் அவை.

1867 மூலதனம் எழுதுவதற்கு முன்னரான பல நகல்களுக்கான உழைப்பை மார்க்ஸ் நல்கினார். அதன் ஒரு பகுதியான நகலான 1844 பாரிஸ் பிரதிகள் என்பதில் கிடைக்கப்பெற்ற 4 பிரதிகளை மக்லெல்லன் தனது புத்தகத்தில் விளக்குகிறார்.

அரசியல் பொருளாதாரம் தொடர்பான இந்த கையெழுத்து பிரதிகளில் முதல் பிரதியில் கூலி, இலாபம், வாடகை, அந்நியமாதல் போன்றவை தொடர்பான 27 பக்கங்கள் கிடைத்தன. அடுத்த பிரதி 4 பக்கங்களில் மூலதனம்- உழைப்பு குறித்தும், மூன்றாவது 45 பக்கப் பிரதியில் தனிச்சொத்து, உழைப்பாளர்- கம்யூனிசம், ஹெகல் குறித்த விமர்சனம், உற்பத்தி, உழைப்பு பிரிவினையும், பணம், நான்காம் பிரதியில் 4 பக்கங்களில் ஹெகலின் நிகழ்வியல்வாதம் பற்றியும் காணப்பட்டது.

மார்க்ஸ் இதற்காக ஆதம்ஸ்மித், ரிகார்டோ, சே போன்ற 15 பொருளாதாரவாதிகளின் புத்தகங்களை படித்தறிந்தாராம். எங்கெல்ஸ் தூண்டுதல் இதற்கு காரணம். எங்கெல்ஸ் எழுதிய அரசியல் பொருளாதாரம் மீதான விமர்சனத்தையும் மார்க்ஸ் படித்தார். பிரஞ்சு, இங்கிலாந்தில் எழுதப்பட்ட சோசலிசம் தொடர்பான புத்தகங்களையும் அவர் வாசித்தார். எங்கெல்ஸ் ஆடம் ஸ்மித்தை படித்துவிட்டு அவர் Luther of economics என்றார். புருதான் மூலதன ஒழிப்பு எனப் பேசியிருந்தால், பூரியர் மற்றும் சைமன் உழைப்பு அந்நியமாதல் பற்றி முன்னரே பேசியிருந்தனர்.

உழைப்பின் மீதான அதிகாரமாகத்தான் மூலதனம் இருக்கிறது என்ற முடிவிற்கு அவர் வருகிறார்.

அரசியல் பொருளாதாரம் மீதான விமர்சனத்தை அவர் இவ்வாறு வைப்பதைக் காண்கிறோம்.

Political economy proceeds from the fact of private property. It does not explain private property..the only wheels which political economy puts in motion are greed and the war among the greedy, competition.

Objectification alienation பற்றி எழுதுகிறார். தான் உழைப்பை செலுத்தி உருவாக்கும் பொருள்களிடமிருந்து தொழிலாளி அந்நியமாவதை மார்க்ஸ் இங்கு பேசுவார். இந்த உழைப்பு நிகழ்வில் உருவாக்கும் பொருட்களிடமிருந்து மட்டுமல்லாமல் சுயத்திலிருந்தும் உழைப்பாளி அந்நியமாகிறான் என்பார்

இந்த இடுகையை போடவேண்டும் என்ற எண்ணத்தை கீழ்கண்ட பாராதான் எனக்கு உருவாக்கியது. அது மூலதனம்- உழைப்பாளி உறவைப் பற்றியது.

The worker is only a worker when he exists as capital for himself,and he only exists as capital when capital is there for him. The existence of capital is his existence, his life, since it determines the content of his life independently of him. Political economy thus does not recognise the unoccupied worker, the working man so far as he is outside this work relationship

அன்று 26 வயதில் இருந்த அந்த இளம் மார்க்ஸ் கம்யூனிசம் என்பதை எப்படி புரிந்துகொண்டு எழுதியுள்ளார் என கீழ்கண்ட வரிகள் காட்டும். அதில் இயற்கைவாதம்- மனிதாபிமானம்-கம்யூனிசம் என்ற இணைப்பை அவர் ஊகித்தார். வரலாறு தன் புதிரை இவ்வகையில் விடுவித்துக்கொல்லும் என அவர் நம்பியதைக் காண்கிறோம்.

Communism as positive overcoming of private property, as human self alienation, and thus the actual appropriation of the human essence through and for man- conscious restoration of man to himself...

This communism as completed naturalism is humanism, as completed humanism is naturalism. It is the genuine resolution of the anatagonism between man and nature and between man and man..it is the true resolution of the conflict between existence and essence, objectification and self affirmation, freedom and necessity, individual and species. It is the riddle of the history solved and knows itself as this solution"

Ref Marx before Marxism David McLellan

may 11,2023

7. டெரி ஈகிள்டனின் மார்க்ஸ் ஏன் சரியானவர் ?

டெரி ஈகிள்டன் அவர்களை எனக்கு பேரா வி இராமசாமி தான் அறிமுகப்படுத்தினார். எங்கள் இளம் கம்யூனிஸ்ட்கள் குழுவில் சற்று மூத்தவர் தோழர் இராமசாமி. அப்போது அவருக்கு மணமாகி இரு குழந்தைகள் இருந்தனர். எங்களுடன் எங்களை ரசித்து கொண்டாடி பல மணிகள் ஒன்றாக இருப்பார். தோழர் தா பாண்டியன் , ஹிரன் முகர்ஜி கட்டுரை எனில் உற்சாகம் பொங்கப் பேசுவார்.

திரு வி க அரசு கல்லூரியில் முற்போக்கு சிந்தனை கொண்ட பல பேராசிரிய பெருமக்கள் இராமசாமி கூட நின்றனர். மறைந்த பேரா அறிவழகன் , சுவாமிநாதன், பாலு, பழநி, கெளதமன் எனத் தொடர் பேராசிரிய தலைவர்கள் இருந்தனர். வங்கி தொழிற்சங்கத் தலைவர் ரகுவின் அறை நல்ல சந்திப்பு விவாத இடமாக இருக்கும். ரகு இப்போது பொள்ளாச்சியில் அதே துடிப்புடன் செயலாற்றி வருகிறார்.

பேரா இராமசாமி உதவியால்தான் அங்கு சமூகவியல் பேரவை துவங்க முடிந்தது. தோழர் வெங்கட்ராமன் (மணியரசன் தோழர்) தோள் கொடுத்தார். பின்னர் பேரா கெளதமன் பொறுப்பேற்று நடத்தினார். பேரா இராமசாமியும் நானும் இணைந்து ராஜிவ் காலத்தில் கொணரப்பட்ட கல்விக்கொள்கை குறித்து பிரசுரம் எழுதி வெளியிட்டோம். மக்ரோத் கமிஷன், யுஜிசி பரிந்துரைகள் குறித்து கல்லூரி ஆசிரியர்களிடம் பேச தொழிற்சங்க கவுன்சில் செயலர் (50 க்கும் மேற்பட்ட தொழிற்சங்க அமைப்பு) என்கிற வகையில் வாய்ப்பு கொடுத்தனர். இன்றும் 45 ஆண்டுகளுக்கு மேலாக அக்கூட்டமைப்பை தோழர்கள் திறமையாக நடத்தி வருகின்றனர். ஊர் முழுவதும் ஏராள இளம் தொழிலாளர்களை அவ்வமைப்பு ஈர்த்தது. ஏராள இயக்கங்களை நடத்திவரும் அமைப்பாக இருக்கிறது.

கல்லூரி மாணவர்கள் மத்தியிலும் அவ்வப்போது பேச முடிந்தது. கல்லூரி நூலகத்தை பயன்படுத்த அனுமதித்தனர். இந்திய

கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்று ஆவணங்கள் கூட அக்கல்லூரி வரலாற்றுத்துறை வழியாக வாங்க முடிந்தது. செகுவார புத்தகங்களை நான் கொடுத்த நினைவு. மார்க்சிய புத்தகங்கள் இப்போது கல்லூரியில் பராமரிக்கப்படுகிறதா எனத் தெரியவில்லை.

பிறை அறிவழகன் தான் நுகர்வோர் கவுன்சிலின் தந்தை என அறியப்பட்டார். அவர் சீடர்கள் இன்றும் நுகர்வோர் கவுன்சிலை சிறப்பாக நடத்தி வருகின்றனர். பேரா சுவாமி, பேரா பழநி கல்லூரி ஆசிரிய சங்க மாநில பொதுச் செயலர்கள் ஆயினர்.

தோழர் இராமசாமி பின்னர் செனட் உறுப்பினராகி திருச்சிக்கு சென்றுவிட்டார். கல்லூரி நூலகத்திற்கு பல மார்க்சிய எழுத்தாளர்களின் புத்தகங்களை , அதிக பிரச்சனை ஏதுமின்றி அங்கு வாங்க முடிந்தது. ஈகிள்டன் புத்தகங்களும் அப்படித்தான் அங்கு வந்தது. Critical Theory, Literary criticism போன்ற நூல்களை பேரா இராமசாமி, இளைஞனாகிய என்னிடம் படிக்க சொன்னார். குறிப்பெல்லாம் எடுத்து அவருடன் ஏதோ தெரிந்த அளவு உரையாடிய நினைவு. எழுதச் சொல்லி தூண்டுவார். சரி செய்து கொடுப்பார். என் கட்டுரைகள் நியு ஏஜில் வந்தது குறித்து மகிழ்ந்தவர்.

சரி. ஏன் இந்த நினைவுச் சுழல் இப்போது. காரணம் ஈகிள்டன் தான். Why Marx was Right - Terry Eagleton படிக்க ஆரம்பித்ததால், 'பழைய நினைப்பு பேராண்டி' வந்தது. ஈகிள்டனின் why Marx was right 2011ல் வெளியான ஆய்வு நூல். கல்கத்தா சீகல்ஸ் போட்ட பதிப்பைத்தான் நான் பார்த்தேன். சீகல்ஸ் குவார்ட்டர்லி கூட ஓரிரு முறை வாங்கிய நினைப்பு (எல்லாம் தான் என்ன செய்து…என்பது வேறு) .

2

ஈகிள்டன் தன் ஆய்விற்கு மார்க்ஸ் குறித்து மிக அதிகமாக வந்திருந்த , சொல்லப்படுகிற 10 விமர்சனங்களை எடுத்துக்கொண்டு, ஒவ்வொன்றிற்கும் பதிலாக ஒவ்வொரு அத்தியாயத்தை அமைத்துக்கொண்டார். முன்னால் preface இறுதியில் conclusion என

அவர் நூலை அடுக்கியிருப்பார். மார்க்ஸ் குறித்து விமர்சிப்பவர்கள், அவர் விமர்சனத்திற்கு நல்ல பதிலை தேடக்கூடியவர்கள் ஈகிள்டனை படிக்கலாம். மார்க்சியம் மீது விருப்பம் கொண்டவர் , சற்று மெதுவாக உள்வாங்கி இந்நூலை படிப்பது நலம். எந்த emotional bondsம் இல்லாமல் எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்கு reason out செய்து தன் பார்வையை ஈகிள்டன் பின்னியிருப்பார்.

மார்க்சியம் குறித்து பொதுவாக சொல்லப்படும் விமர்சனங்களை வைத்துவிட்டு, தான் அறிந்த பதில்களை ஈகிள்டன் தந்திருப்பார். அவர் விவாதிக்க எடுத்துக்கொண்ட விமர்சனங்களை மிகச் சுருக்கமாக இங்கு தந்துள்ளேன்.

- மார்க்சியம் முடிந்து விட்டது.அவ்வளவுதான். Marxism is finished
- மார்க்சியம் கோட்பாடு என்கிற அளவில் மகிழ்விக்கலாம். நடைமுறையில் அது பெரும் கொடுங்கோன்மை- திரள் கொலை. Marxism may be well in theory . Whenever put into practice , the result has been terror tyranny mass murder.
- மார்க்சியம் தீர்மானகரவாதம். மனிதர்களை வரலாற்றின் கருவியாக குறைத்துவிடுகிறது. தனி நபர் சுதந்திரத்தை அனுசரிப்பதில்லை. Marxism a form of determinism. It sees men and women simply as tools of history, strips their freedom and individuality.
- மார்க்சியம் உடோபிய கனவு. மானுட இயல்பை கவனிக்காத, எதார்த்த புறக்கணிப்பு. Marxism is a dream of Utopia. Marx’s vision of the future reflects the absurd unreality of his politics whole
- மார்க்சியம் எல்லாவற்றையும் பொருளாதாரவாதத்தில் சுருக்கிவிடுகிறது. வரலாற்றின் பன்முக அனுபவங்களை இப்படி ஒரு தட்டில் சுருக்கிவிட முடியாது. Marxism reduces everything to economics- economic determinism. Marx was simply an inverted image of the capitalist system he opposed- varied range of historical experiences cannot be crammed into a single rigid framework.

- மார்கஸ் பொருள்முதல்வாதி. அவர் குரூரமாக மதத்தை மறுக்கிறார். மானுடரின் ஆன்மீக உலகம் குறித்து அவர் கவலைப்படவில்லை. Marx was a materialist. He was brutally dismissive of religion, for him end justifies means. He had no interest in the spiritual aspect of humanity
- மார்க்சியம் வர்க்கம் என்பதின் மீது தீரா தாகத்துடன் இருக்கிறது. அவர் புரிந்து பேசிய தொழிலாளி வர்க்கம் காணாமல் போய்விட்டது. நாம் வாழும் உலகில் வர்க்கம் பொருட்டே அல்ல. Marxism obsession with class- fond hope of working class usher socialism disappeared- we live in a social world where class matters less and less
- மார்க்சியம் வன்முறை அரசியல் வழியை போதிக்கிறது. சிறு புரட்சிகர குழுவின் ஆயுதப்போராட்டம் மூலம் ஆட்சி- பெரும்பான்மை மக்களை கட்டுப்படுத்த விழைகிறது. எனவே அதற்கு ஜனநாயகத்துடன் பொருந்த முடியாது. Marxists advocate violent political action. A small band of insurrectionists rise up, overthrow state and impose its will on the majority. Marxism and democracy are daggers drawn.
- மார்க்சியம் ஆக உயர் அதிகார அரசை கட்டமைக்க விழைகிறது. அது கொடுங்கோன்மைக்கு இட்டுச் செல்கிறது. தனிநபர் சுதந்திரம் என்பதை இல்லாமல் ஆக்குகிறது. மக்களுக்காக கட்சி அதிகாரத்தை எடுத்துக்கொள்ளும். கட்சிக்காக அரசு எடுத்துக்கொள்ளும். அரசுக்காக தனி ஏக அதிகாரம் கொண்டவர் வருவார். Marxism believes in all powerful state- by means of despotic power. People will give way to party- party to state and state to monstrous dictator- power will put an end to individual freedom.
- சமூகம் பழைய வர்க்கப்போராட்டம் என்பதிலிருந்து மார்க்சியம் தாண்டிய புதுவகை தீவிர போராட்டங்களை கண்டு வருகிறது. அவை மார்க்சியத்தை பின்னுக்கு தள்ளிவிட்டுவிட்டன. Radical movements sprung up from outside Marxism- from an antiquated class struggle forms to new forms of political activism- left marxism well behind.

டெரி ஈகிள்டன் அடுக்கிக்கொண்டு விவாதித்துள்ள 10 முக்கிய விமர்சனங்கள் மேலே குறிப்பிட்டவை. தனது why Marx was right 240 பக்க அளவிலான நூலில் , தான் தேடி உணர்ந்த பதில்களை மிகவும் கோர்வையாக , எதார்த்தம் சிதறாமல், மேற்கோள்களுக்குள் அதிகம் அடைந்துவிடாமல், கற்பனைகள் கலக்காமல் தர முயற்சித்துள்ளார்.

வாய்ப்புள்ளோர் வாசித்து பார்க்கலாம். மார்க்சிய கிடங்கிற்கு தேவைப்படும் நூல்களில் ஒன்றை ஈகிள்டன் கொடுத்துள்ளார் என்றே எனக்குத் தோன்றுகிறது. (22-6-2024)

3

மார்க்ஸ் ஏன் சரியானவர் என்கிற why Marx was right? டெரி ஈகிள்டன் நூலை அறிமுகப்படுத்தி முன்னர் ஒரு போஸ்ட் செய்திருந்தேன். அதில் மார்க்ஸ், மார்க்சிசம் குறித்த 10 பெரும் விமர்சனங்களை அவர் எவ்வாறு தொகுத்துக்கொண்டு, தன் புரிதலை நூலில் தந்தார் என்பதை சற்று தொட்டுக்காட்டியிருந்தேன்.

இந்த இடுகையில், டெரி மார்க்சை மார்க்சியத்தை எப்படி புரிந்து கொண்டுள்ளார் என்பதற்கான, சில மாதிரிகளை , அவரது மொழியில் கீழே அடுக்கியுள்ளேன். மார்க்ஸ் குறித்து புரிந்துகொள்ளவும், விமர்சிக்கவும் கூட கடுமையான உழைப்பு தேவைப்படும். ஒருவர் பேசுகிற, எழுதுகிற அம்சத்தை பார்க்கையில் அவர் உழைப்பு குறித்த புரிதலும் நமக்கு கூடவே கிட்டும்.

புரிதலோ, விமர்சனமோ அது ஆழமானதாக, பெரும் தேடல் தவிப்பின் பாற்பட்ட உழைப்பு வழி கிட்டும்போது , அவற்றை பொருட்படுத்தி பார்க்க வேண்டும். ஈகிள்டன் அப்படியான உழைப்பை இந்நூலில் செய்திருப்பார். ஏற்கலாம், மறுக்கலாம்- அது அவரவர் கொண்டிருக்கக்கூடிய நேர்மையான பயிற்சி சார்ந்த ஒன்று. இனி ஈகிள்டன் புரிதலிலிருந்து… நிதானமாக வாசிக்கும்போது, ஈகிள்டன் நல்ல விவாதத்தை தருகிறார் என புரிந்துகொள்ளலாம்.

- Marxism is a critique of capitalism

- Capitalism has brought about great material advances. But why do we continue to indulge the myth that the fabulous wealth generated by this mode of production will in the fullness of time become available to all?
- Ideally socialism requires a skilled educated political populace, civic institutions, enlightened liberal traditions and the habit of democracy.
- Socialists will no doubt continue to argue about the detail of a post capitalist economy. There is no flawless model currently on offer.
- Two major doctrines lie at the heart of Marx's thought. The primary role played by the economic in social life, the other is the idea of succession of modes of production.
- Marx is using history in the sense of significant course of events, not as synonym for the whole of human existence to date. Marx believes that the productive forces have a tendency to develop as history unfolds. This is not to claim they progress all the time. History is not at all a tale of progress.
- Marx clearly thinks that material wealth can damage our moral health.
- Productive forces and productive relations do not dance harmoniously hand in hand throughout history. Historical determinism is a recipe for political quietism. Marx does not think that the inevitability of socialism means we can all stay in bed.

Class comes over whenever material production is so organised as to compel transfer of surplus labour to others in order to survive.

Marx wrote so : History does nothing, it possesses no immense wealth, it wages no battles. It is man , the living real man who does all that..history is nothing but the activity of man pursuing his aims.

Marx was a prophet not a fortune teller. The idea that history is moving onwards and upwards to a state of perfection is not a leftist one.

The future is open, but it is not totally open. Nature does not guarantee that socialism will follow on the heels of capitalism. There are many different futures implicit in the

present..socialism represents in one sense of break from the present. Realism and vision go hand in hand.

To see a relationship as exploitive, you need to have some idea of what a non exploitative relationship would look like. Ideals are signposts, not tangible entities. They point us the way to go.

Communism would not spell the end of human strife..envy, domination, possessiveness, competition would still exist. So Marxism holds out no promise of human perfection.

The aims of Marxism is just not just material. Materialists are not those who deny the spiritual, but those who remind us that spiritual fulfilment requires certain material conditions

Marx was a sworn enemy of uniformity. Neither it is possible to have a social order in which everyone is equal. Genuine equality means not treating everyone the same, but attending equally to everyone's different needs. In Marx's view, socialism is pluralistic order.

Marx wrote so in German Ideology: "The class that is ruling material force of society is at the same time the ruling intellectual force" . Only through the collective practical activity of the majority people can the ideas which govern ourselves be really changed.

The claim that everything for Marx is determined by economics is an absurd oversimplification. Classes truly become classes when they become conscious of themselves as such. The prejudice that thought is independent of reality is itself shaped by social reality.

Practice is clearly a material affair, but it is also, inseparably, a matter of meanings, values, purposes and intentions. Human consciousness requires a great deal of material stage setting. Marx thought that those who controlled material production tended to control mental production as well.

Marxism is not a theory of everything.

Class is a question where you stand in the mode of production- what you are doing. Class changes its composition all the time. The working class does not cease to interest Marxists the moment it acquires colour TV etc. it is its place within capitalist mode of production which is most decisive. The working class includes all those selling their labour power to capital.

For Marxism, a revolution is not characterised by how much violence it involves. Revolutions are usually a long time in the brewing. You can socialise industry by Govt order, but legislation alone cannot produce men and women who feel different from their grandparents. That involves healthy lengthy process of education and cultural change.

Revolution cannot be handed down to you by a tight knit vanguard of conspirators. Nor do revolutionaries reject parliamentary democracy. What Marx rejected was the sentimental myth of the State as a source of harmony uniting different groups. The State Marx approved of was the rule of citizens of themselves, not a minority over a majority.

Marx’s critique of capitalist economy is closely bound up with the concern for Nature. Human beings for Marx is part of Nature yet able to stand over against it. He dreams also of an ultimate unity between Nature and humanity.

டெரி அவர்களின் 250 பக்க விரிவான ஆய்வில் ஆங்காங்கே நான் பறித்துப் போட்ட வரிகள் மேலே. குறுக்கு வெட்டு புரிதலை அவை தரலாம். முழுமையாக தமிழில் என்னால் தரமுடியவில்லை. ஆங்கில வரிகளை உள்வாங்க முடிந்தவர்க்கு மிகவும் பயனுள்ள வரிகளை மேலே தந்துள்ளேன். டெரி போல ஏராள மார்க்சிய எழுத்துக்கள் கொட்டிக்கிடக்கின்றன. தாகம் உள்ளவர் தணித்துக்கொள்ளலாம்.

28-6-2024

8. எர்னஸ்ட் பிஷரின் மார்க்சை வாசிப்பது எப்படி?

ஜான் பெல்லமி மன்த்லி ரிவ்யூவில் தொடர்ந்து எழுதி வருபவர். மார்க்ஸ் மார்க்சியம் குறித்து தொடர்ந்து தன் ஆய்வு நூல்களின் வழி விவாதித்து வருபவர். பெல்லமி, எர்னஸ்ட் நூலுக்கு மீண்டும் விவாத இடம் அமைத்து கொடுத்துள்ளார்.

ஆஸ்திரிய மார்க்சிய அறிஞர் எர்னஸ்ட் பிஷர் 1968ல் 'மார்க்ஸ் என்னதான் சொன்னார்' என்கிற அரிய நூல் ஒன்றை தந்தார். 1996ல் மன்த்லி ரிவ்யூ தோழர்கள், 2008ல் இந்திய ஆகார் நிறுவனம் How to Read Karl Marx என்கிற பெயரில் அந்நூலை திரும்ப வாசகர்கள் மத்தியில் உயிர்ப்பித்தனர். மார்க்சை எப்படி வாசிப்பது, அணுகுவது, புரிந்துகொள்வது, வறட்டுத்தன்மையிலிருந்து விடுபட்டு, real context ல் வைத்து அறிவது, டேட்டாக்கள் வழி உற்றுப்பார்ப்பது என அறிவுறுத்தக்கூடிய நூல்கள் பல வந்துள்ளன.

எர்னஸ்ட் அற்புதமாக சொற்செட்டுடன், topic wise அளவான மேற்கோள், அதற்கு தன் விளக்கம் விரிவுரை என்கிற வகையில் இந்நூலை அமைத்துச் செல்வார். ஒவ்வொரு இயலிலும் ஜான் பெல்லமி இன்றைய சூழலுக்குரிய கேள்வியை புரிதல் மேம்பட வைத்திருப்பார். வழக்கமான மார்க்சிய பதங்கள் தான். அவை விளக்கப்படும் முறையில் இந்நூல் சிறப்பான ஒன்றாக பார்க்கப்படுகிறது.

உழைப்பாளர், உற்பத்தி, சரக்கு, மதிப்பு, உபரி, மூலதன குணங்கள், புரட்சி, சோசலிசம் , கம்யூனிசம், சர்வதேச உழைப்பாளர் இயக்கம், நடைமுறை எனும் தத்துவம் போன்ற மார்க்சியர் பயன்படுத்தும் சொற்கிடங்கு வார்த்தைகள்தான். ஆனால் கன கச்சிதமாக அவை விளக்கப்படும் பாங்கு என்பது எர்னஸ்ட்டின் தனித்தன்மையாகவுள்ளது.

மார்க்ஸ் simplify செய்கிறார் என எர்னஸ்ட் தனக்கு படும் இடங்களில் வெளிப்படுத்தாமல் இல்லை.

மார்க்ஸ் இவ்வுலகின் சிதைவுண்ட மனிதன் முழு மனிதனாக மேம்படவேண்டிய கனவு ஒன்றை தன் வாழ்நாள் தேடலாக வைத்திருந்தார் என்பது நூலின் மய்ய செய்தி. மார்க்ஸ் இளமையில் பேசிய அந்நியமாதல் இடங்களில் எல்லாம் , காந்தி வாசிப்புடையவர் அதை நன்றாக உணரமுடியும்.

Fragmentary, imperfect, disfigured man is capable of transforming himself into a total man

The material relationship has grown beyond all individual things and has become an autonomous power

இது போன்ற காந்தி சந்திப்பு புள்ளிகள் எனக்குப்பட்டன.

வாய்ப்புள்ளவர் வாசித்து பார்க்கலாம். How to Read Karl Marx.

4-7-2024

9. மார்க்ஸ் இன்று

இடது இலக்கியங்கள் பலவற்றை ஆகார் -Aakar வெளியிட்டு வருகின்றனர். அதில் ஒரு நூல்தான் Marx for Today. Marcella Musto எடிட் செய்த தொகுப்பு. நூல் 2008 ல் வந்திருந்தாலும், ஆகார் வழி இந்திய பதிப்பு 2018ல் வந்தது.

2010ல் மார்க்சை மீள் வாசிப்பு செய்வது என்பது முதல் பகுதி. அதில் 8 கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. கெவின் ஆண்டர்சன், பரேஷ், லெபோவிட்ஸ், காம்னியல், மஸ்டோ, டெரல் கார்வர், விக்டர் வாலிஸ், ரிக் உல்ப் போன்ற அறிஞர் பெருமக்கள் தங்கள் ஆய்வுக்கோணத்தை தந்துள்ளனர்.

இரண்டாம் பகுதி இன்று உலகம் மார்க்சை எப்படி வரவேற்கிறது என்பதை பேசும் பகுதி. இதில் 10 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. அமெரிக்காவில், பிரேசிலில், ஆங்கில மொழிப் பகுதிகளில், பிரான்சில், ஜெர்மனி, இத்தாலி, ரஷ்யா, சீனா, தென்கொரியா, ஜப்பானில் மார்க்சியம் எப்படியான வரவேற்பை பெறுகிறது என கட்டுரையாளர்கள் தங்கள் உள்வாங்குதலை சொல்கிறார்கள். சொப்ரினா, பொய்ட்டோ- எட்வர்டோ, பிளேக்லெட்ஜ், ஹாப், ரகோனா, ஒயிட்டினென், ஹு, ஜெயாங், உசிதா போன்றவர் எழுதியுள்ளனர்.

இந்தியர் எவரும் இப்பகுதியில் எழுதவில்லை. முதல் பகுதியில் பரேஷ் சட்டோ கட்டுரை ஒன்றே ஒன்று உள்ளது. அவரும் கனடா பல்கலையாளர். இந்தியாவில் மார்க்சிய அனுபவங்கள் குறித்து- சோவியத் வழி பெறப்பட்ட மார்க்சிய புரிதல்- அதிலிருந்து விடுபடல் குறித்து மஸ்டோ ஏன் எவரிடமிருந்தும் கட்டுரை ஒன்றை வாங்கவில்லை என எனக்குத் தெரியவில்லை. அப்படி ஒரு இந்திய மார்க்சிய அறிஞர் எவரின் கட்டுரையாவது இடம் பெற்றிருந்தால் பயனுள்ளதாக இருந்திருக்குமோ எனத் தோன்றுகிறது.

இதில் இடம் பெற்றுள்ள பல கட்டுரையாளர்கள் பெயர்கள் இங்குள்ள இடதுசாரிகளுக்கு அறிமுகமாக வாய்ப்பு குறைவு எனப்படுகிறது.

கெவின், மஸ்டோ, டெரல்கார்வார் போன்றவர்களின் மார்க்ஸ் குறித்த எழுத்துக்கள் சிறிய அளவாவது போயிருக்கலாம்.

20 ஆம் நூற்றாண்டில் சோவியத் சோதனை அக்டோபர் புரட்சியை அடுத்து நடந்தேறியது. இந்தியா உள்ளிட்ட பல நாடுகளுக்கு சோவியத் கட்சியின் பார்வையாகவே மார்க்சியம் கடத்தப்பட்டது. அக்கட்சித் தலைமை, அறிஞர்கள் எழுத்துக்களின் மார்க்சிய புரிதல், எப்படி அவர்கள் மார்க்ஸ் பேசியதிலிருந்து மாற்றிப் பேசினார்கள் போன்ற சில அசௌகரிய அம்சங்களை இந்நூலில் கட்டுரை ஆசிரியர்கள் விவாதித்துள்ளனர்.

மஸ்டோ தனது அறிமுகத்தில் நன்றாகவே குறிப்பிடுகிறார்..

Yet there has always been a return to Marx- a new need develops to refer his work- whether the critique of political economy, the formulations on alienation, political polemics- it has continued to exercise an irresistible fascination to both followers and opponents

டெரிடா சொல்லியதை மஸ்டோ காட்டுகிறார்

It will always be a mistake not to read and reread and discuss Marx.

மார்க்ஸ் வாசிப்பு என்பதும் கூட ஒரு பழக்கம்தான். சமூக மாற்றம் என்கிற சிந்தனைக்கு, மனிதன் விழையும் நல்லெண்ண சமூகத்திற்கான , முன்கூட்டியே திட்டமிடக் கோரும் கோட்பாடு. செயலுக்கான document என மார்க்சியத்தை வாசிக்கலாம்.

மனித வாழ்க்கையின் பாதைக்கு எவரும் இறுதி ஆவணத்தை தரமுடியாது என்கிற limitation உடன் , மார்க்ஸ் வாசிப்புக்களை துணைக்கு வைத்துக்கொள்ள முடியும். இயற்கை- உழைப்பு - உற்பத்தி - நுகர்வில் கண்ணியமான மானுட வாழ்க்கை என்ற கனவை மனித குலத்திற்கு நெருக்கமாக்கியவர் மார்க்ஸ். இங்கு தான் மார்க்ஸ்- காந்தி என்கிற மாபுருஷர்களின் சந்திப்பு புள்ளியைக் காணமுடியும்.

மஸ்டோ தொகுப்பு நல்லதோர் முயற்சி

ap 7, 2024

10. மார்க்சின் இறுதிக்காலம் பற்றி முஸ்ட்டோ

கார்ல் மார்க்ஸ் லண்டன் வாழ்க்கையில் பெரும்பாலும் பிரிட்டிஷ் மியுசியத்தில் மணிக்கணக்காக படித்து குறிப்புகளை எடுப்பவராக இருந்தார் என்பது பலரும் அறிந்த செய்தி.

மார்க்ஸ் தனது சொந்த நூலகம் -படிப்பறை -எழுது மேசை அறை குறித்த செய்தியை மார்க்சிய அறிஞர் மார்செல்லோ முஸ்ட்டோ தனது The Last Marx 1881-83 An Intellectual Biography ல் தருகிறார். முஸ்ட்டோ இந்தப் புத்தகத்தை இத்தாலிய மொழியில் 2016ல் எழுதினார். மார்க்ஸின் 200 ஆம் ஆண்டையொட்டி தமிழ் உட்பட பலமொழிகளில் இவ்வாக்கம் வெளியானது.

தமிழில் முஸ்ட்டோவுடன் பழகிய அறிஞர் எஸ் வி ராஜதுரை , என் சி பி எச் வழியாக 2018ல் மொழிபெயர்த்து அரிய சேவை ஒன்றை ஆற்றியிருக்கிறார்.

மார்க்ஸின் நூலகத்தில் 2000 நூல்கள் இருந்ததாம். மிக அதிக அளவில் ஜெர்மனி, ஆங்கில (1/3 1/3) நூல்கள் இருந்தன. அதற்கு சற்றுக் குறைவாக பிரஞ்சு நூல்களும், சில சிரில்லிக் எழுத்து வகை ரஷ்ய நூல்களும் இருந்தனவாம். அரசியல் கோட்பாடு, வரலாற்று ஆய்வுகள், தத்துவ நூல்கள், இயற்கை அறிவியல் என பல வகைப்பட்ட நூல்கள் இருந்தனவாம்.

1878ல் அவரது படிப்பறையை பார்த்த சிக்காகோ ட்ரிப்யூன் நிருபர் இவ்வாறு எழுதியுள்ளார்

“ ஒரு மனிதரை அவர் படிக்கும் புத்தகங்களைக்கொண்டு பொதுவாக மதிப்பிட முடியும். எனது மேலோட்டமான பார்வைக்கு ஷேக்ஸ்பியர், டிக்கன்ஸ், தாக்கரே, கெதே, வால்டைர், பெய்ன் ஆகியோரின் நூல்கள் தென்பட்டன. ஆங்கில, அமெரிக்க, பிரஞ்சு நூல்கள், புளு புக்ஸ்- (நீலப் புத்தக ஆவணங்கள்) , ரஷிய, ஜெர்மன், ஸ்பானிய, இத்தாலிய இன்னும் பல மொழிகளில் எழுதப்பட்ட அரசியல், தத்துவ நூல்கள் காணப்பட்டன”

லபார்க் அவர்கள் மார்க்சிற்கும் புத்தகங்களுக்குமான உறவை இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்

“ புத்தகங்கள் அவரது சிந்தனைக்கான கருவிகளேயன்றி, ஆடம்பர பொருட்கள் அல்ல. அவை என் அடிமைகள், நான் விரும்பும் அளவிற்கு அவை எனக்கு சேவை புரியவேண்டும் என மார்க்ஸ் சொல்வார். அவர் புத்தகப் பக்க முனைகளை மடித்து வைப்பார். பக்க ஓரங்களில் பென்சிலால் கோடிட்டு சம்பந்தப்பட்ட வரிகளை குறித்து வைப்பார். சில வரிகள் முழுமைக்கும் அடிக்கோடு இடுவார். புத்தகங்களில் அவர் எதையும் எழுத மாட்டார். சம்பந்தப்பட்ட நூலின் ஆசிரியர் தாம் சொல்ல வந்த விஷயத்தில் மட்டுமீறிப் போய்விட்டதைக் கண்டால் அந்த இடத்தில் கேள்விக்குறியையோ ஆச்சரியக்குறியையோ இடாமல் அவரால் இருக்க முடியாது. அடிக்கோடிடும் முறையை அவர் கையாண்டதால் , எந்த நூலிலும் தமக்கு தேவையான பகுதியை அவரால் எளிதாக கண்டறிய முடிந்தது”

மார்க்ஸ் லபார்க்கிற்கு எழுதிய ஏப் 11, 1868 விளக்கம் ஒன்றில் இவ்வாறு தன்னைப் பற்றி சொல்கிறார்

“ புத்தகங்களை விழுங்கி, பின்னர் மாற்றப்பட்ட வடிவத்தில் அவற்றை வரலாற்றின் குப்பை மேட்டில் தூக்கியெறிகின்ற இயந்திரமாக இருக்கும்படி நான் விதிக்கப்பட்டுள்ளேன்”

மார்க்ஸின் படிப்பறையில் சோபா ஒன்றிருந்தது. அவ்வப்போது அதில் அவர் ஓய்வு எடுப்பார். ஓய்விற்கு மற்றொரு முறை அறையில் நடந்து கொண்டிருப்பது. திடிரென வந்த சிந்தனையை எழுத அமர்வார். லபார்க் எழுதுகிறார்- மார்க்சும் அவரது படிப்பறையும் ஒன்று பட்டிருந்தன. அதிலிருந்த புத்தகங்களும் காகிதங்களும் அவரது கைகால்களைப் போலவே அவரது கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருந்தன.

- கார்ல் மார்க்ஸ் அறிவுலகப் பயணத்தில் புதிய திசைகள் மார்செல்லோ முஸ்ட்டோ தமிழில் எஸ் வி ராஜதுரை

(jan 7 2024)

2

மார்செல்லோ முஸ்ட்டோவின் கார்ல் மார்க்ஸின் இறுதி கால (1881-83) செயல்பாடுகள் குறித்த ஆவணப்படுத்தல், மார்க்ஸ் இலக்கிய உலகிற்கு புதிய கொடை எனலாம்.

இந்த ஆண்டுகளில் மார்க்ஸ் எழுதிக் குவித்த குறிப்பேடுகள், மூலதன வால்யூம் குறித்த தவிப்புகள், துணைவி ஜென்னியின் உடல் கோளாறு மரணம், மார்க்ஸின் உடல்நிலை பாதிப்பு- எதுவுமே செய்ய முடியாத ஓய்வுக்காலம்- அல்ஜீரியா ஆப்ரிக்க பயணம் அங்கு ஓய்வில் இருக்கும்போதும் , அங்கு கண்ட அராபியர் பழக்க வழக்கம் பற்றிய அவரின் பார்வைகள், மூன்று மகள்களுடன் தங்குதல், மூத்த மகளின் சாவு, மூன்றாம் மகள் எலியனாரின் மனப்போராட்டங்களை கண்டு வருந்துதல், பேரக்குழந்தைகளுடன் குதூகூலம், எங்கெல்ஸ்க்கும், மகள்களுக்கும் எழுதிய சில கடித வரிகள் என பல்வேறு அம்சங்களை இந்த நூலில் முஸ்ட்டோ பதிவு செய்துள்ளார். கடுமையான பணியை மூல ஆசிரியரும், மொழிபெயர்ப்பு உழைப்பை எஸ் வி ராஜதுரை அவர்களும் நல்கியுள்ளனர்.

கடித இலக்கியம் , ஆவண பிரதிகளைவிட சுவாரஸ்யமாக இருக்கும். ஆவணத்தில் எவ்வளவு அறிவை செலுத்த வேண்டுமோ, பொதுவான வாசகருக்கானதோ- அந்த அளவிற்கு கடிதத்தில் தரத் தேவையிருக்காது, அதில் அந்த தனி மனிதருடன் உரையாடல் அமையும். நேயமோ வருத்தமோ அறிவுரையோ , சற்று கோபம் கூட மனதிலேயிருந்து வெளியாகும்.

MECW Marx Engels Collected Works வால்யூம்களில் பத்து எண்ணிக்கையிலாவது அவர்கள் கடித போக்குவரத்தின் தொகுப்பாக இருக்கலாம். முஸ்ட்டோ அவற்றில் கவனம் செலுத்தியிருக்கக்கூடும்.

குறிப்பாக வால்யூம் 46 யை அவர் அதிகம் எடுத்தாண்டுள்ளார். மகள்களுக்கு எழுதியவை, மகள்கள் எழுதியவை என சில துண்டு வரிகளை பொருத்தமான இடத்தில் இணைத்துள்ளார்.

மார்க்ஸ்- ஜென்னிக்கும் போராட்ட வாழ்க்கையிருந்தாலும், அவர்களை விட அவர்களின் மகள்கள் வாழ்க்கை மகிழ்ச்சி- போராட்டம்- சோகம்- துன்பம் என கழிந்ததாகவே பார்க்கமுடிகிறது. மகள்களின் துன்பத்தை அறிந்த தந்தை என்கிற வகையில் மார்க்ஸ் மிகவும் கவலைப்பட்டதைக் காணமுடிகிறது.

Eleanor Marx Family Life by Yvonne Kapp

Eleanor Marx A Life by Holmes Rachel

The Daughters of Karl Marx by Olga Meir

போன்ற மார்க்ஸின் மகள்கள் குறித்து பலராலும் பேசப்படுகின்ற ஆக்கங்களையும் முஸ்ட்டோ தன் நூலில் சுட்டுகிறார்.

The Last Marx என்கிற மார்செல்லோ முஸ்ட்டோவின் நூல் தமிழில் கிடைப்பதால், மார்க்சிய இலக்கிய பயிற்சி கொண்டவர் எளிதாக வாசிக்கமுடியும் என்றே நம்புகிறேன். (jan 13 2024)

11. மேகநாத் தேசாயின் Marx's Revenge

மேகநாத் தேசாயின் Marx's Revenge : The Resurgence of Capitalism and the Death of Statist Socialism மிக கவனத்துடன் படிக்கப்படவேண்டிய புத்தகம். முதலாளித்துவம் எப்படி தொடர்ந்து தன்னை தற்காத்துக்கொண்டிருக்கிறது என்பதைப் பேசும் புத்தகம். அது மட்டுமல்லாமல் அரசு சோசலிசம் வீழ்ந்த கதையையும் பேசுகிற புத்தகம்.

மார்க்ஸ் எழுதிய காபிடலின் மய்ய சரடிலிருந்து, எங்கெல்ஸ் தொகுத்த மூலதனம் பாகங்கள், பெர்ன்ஸ்டைன், காட்ஸ்கி புரிந்துகொண்டவை, லெனினின் பொருளாதார குறிப்புகள், ரோஸாவின் மூலதனக்குவியல், ஹெல்பர்டிங் எழுதிய இம்பீரியலிசம், லெனின் வரையறுத்த இம்பீரியலிசம் என்ற பல்வேறு ஆக்கங்களின் அடைப்படையில் மிக நுணுக்கமான விவரங்களை மிக கச்சிதமாக முன்வைத்து எழுதப்பட்டுள்ள புத்தகம். ஸ்கும்பீட்டர், கீன்ஸ், ஹாயக் குறித்த சில குறிப்புகளும் சுருக்கமாக இடம்பெற்றுள்ள புத்தகம்.

ஆடம்ஸ்மித் குறித்தும் ஹெகலின் அரசு குறித்தும் தனித்தனியான சாப்டர்கள் பேசப்பட்டுள்ளன. இலாபம் பற்றி ஸ்மித், ரிகார்டோவிற்கு இல்லாத பார்வை மார்க்சிடம் இருந்ததை profits என்ற சாப்டரில் தேசாய் விரிவாக விளக்குகிறார்.

அதேநேரத்தில் one reason for the controversy is the language of Marx used, the labour content of the wage he called 'necessary labour'

Surplus labour= total hours worked- necessary labour

Rate of profit= surplus value / variable capital+ constant capital. இந்த உபரி மதிப்பின் பொருத்தப்பாடு குறித்தும் பல்வேறு பொருளாதார அறிஞர்களின் வாதங்களை இந்த புத்தகம் முன்வைக்கிறது.

மார்க்ஸின் மூன்றாம் வால்யூம் 1894ல் வெளிவந்த பின்னர் அதுவும் பல அறிஞர்களுக்கு திருப்தியை தரவில்லை என்கிறார் தேசாய். அது முன்வைத்த transformation problem akin to destruction of capitalism என்பது விவாதமானது. அது அப்படியாகத்தான் இருக்க வேண்டுமா என்பது விவாதமானது.

இலாபம் வராமல் எவரையும் எந்த முதலாளியும் வேலைக்கு வைத்துக்கொள்வதில்லை. மார்க்ஸின் வகைப்பாட்டில் the falling tendency of profitability became entwined with the probability of survival of capitalism itself. மார்க்ஸ் தான் முதலில் cycle சுழற்சி குறித்தும் ஆழமாக யோசித்த முதல் அறிஞர். ஒருவரை ஒருவர் சார்ந்த ஆனால் முரண்பாடுகள் கொண்ட முதலாளி தொழிலாளி உறவு வழி அதை அவர் விளக்கினார்.

இதையும் மேக்நாத் தேசாய் தெரிவிக்கிறார். மார்க்ஸ் தனது பெரும் படைப்பில் சோசலிசத்தின் தன்மை இப்படித்தான் என்கிற ஊகங்களை வெளிப்படுத்தவில்லை.

மார்க்ஸின் rate of profit had a tendency to fall என்பது அப்படித்தான் வீழும் தன்மையிலாக தொடர்ந்ததா..என்ற கேள்வியும் தேசாயிடம் இருக்கிறது. இங்கு தேசாய் சொல்வது the seeds of recovery are within the crisis itself. The value of capital falls; hence a given amount of profit is now higher rate of profit .

பல நேரங்களில் கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோவை பைபிளாக கொண்டாடுகிறோமே தவிர காபிடல் நூலை அல்ல என்ற வருத்தத்தையும் தேசாய் வைக்கிறார். இதற்கு காரணம் வெகு சிலர் மட்டுமே காபிடலின் மூன்று வால்யூம்களையும் வாசித்து புரிந்துகொண்டதுதான் என்கிறார். மேலும் அப்படி படித்தவர்களில் சிலரும் அவர்கள் சொல்வதைக் கேட்பவர்களில் பலரும் that in Capital Marx provided an analytical argument for the breakdown of capitalism என்று புரிந்துகொண்டுள்ளனர். ஆனால் தேசாய் தன் வாசிப்பாக கீழ்கண்ட

வரிகளையே வந்தடைகிறார். இது தேசாய் வந்தடைந்த முக்கிய புள்ளி.

What we discover is that on reading capital, one could conclude that capitalism will live thorough cycles, and a slow as well as cyclical tendency of the rate of profit to decline.

சோவியத் அனுபவத்தில் டிராட்ஸ்கி போலவே தேசாயும் கேள்வியை வைக்கிறார். If capitalism is a global phenomenon, how can it be successfully challenged by socialists in a single country?

ரோசா லுக்சம்பர்க்கின் accumulation of capital ஆக்கம் குறித்து பேசும் தேசாய் ரோசா பேசிய அந்த 'டிபார்ட்மெண்ட் 3' குறித்த ஆயுத தளவாட உற்பத்தி பற்றிக் கூறுகிறார். லுக்சம்பர்க் 'ஓரநாடுகளின்' இருப்பால் 'மய்ய' நாடுகளின் மூலதன வேட்டை பற்றி பேசினார்.

ஹில்பெர்டிங் வளப்படுத்திய finance capitalism பற்றி சற்று தேசாய் விளக்குகிறார். ருஷ்ய மார்க்சியர்கள் வெரா ஜசுலிச், நரோத்னிக்குகள், லெனின் , புகாரின் போன்றவர்களின் பொருளாதார புரிதல்களைச் சொல்லிச் செல்கிறார். Russian Revolution Miscarriage ஆ எனக்கேட்டு விவாதிக்கிறார். இரண்டாம் அகிலத்தில் காட்ஸ்கியின் புரிதலும் ஓரளவிற்கு தேசாயால் விவாதிக்கப்படுகிறது.

Socialism one or many என்கிற விவாதத்தில் socialism within capitalism, socialism outside capitalism , socialism beyond capitalism என்கிற சோதனைகளைச் சொல்கிறார். நமது நேருவை முன்னதற்கு உதாரணமாக சொல்லலாம் என்றால் (தேசாய் சொல்லவில்லை) சோவியத் முயற்சியை இரண்டாவதற்கும், மார்க்சிய perception யை மூன்றாவதிற்கும் சொல்லலாம் .

இரண்டாவது அகிலத்தின் திருத்தல்வாதம் குறித்த விமர்சனத்துடன் மூன்றாம் அகிலம் பிறந்தாலும் சோவியத் ரஷ்யாவின் தேசிய

நலன்களை ஒட்டியே அதன் பார்வை இருந்ததை தேசாய் உணர்த்துகிறார். என் இ பி மூலம் சில சமரசங்களை லெனின் செய்யவேண்டிய எதார்த்தம் உணரப்பட்டது. லெனின் மறைவிற்குப் பின்னர் மார்க்சிசம் என்பதே ஸ்டாலின் சொல்வது என்றானதை தேசாய் விவரிக்கிறார்.

முசோலினி அரசில் இருந்த அறிஞர் ஜியோவன்னி ஜென்டில் என்பார்தான் totalitarian என்கிற பார்வையை முன்வைத்தவராம். ஜூலை 1932ல் நாசி கட்சி எனப்படும் National socialists அங்கு செயல்பட்ட ஜெர்மானிய கம்யூனிஸ்ட்களின் SPDயை விஞ்சி ஆட்சிக்கு வருகிறது. அந்த நேரத்தில் ஸ்டாலினும் எஸ் பி டி தலைமை எதிர்த்து அங்குள்ள கம்யூனிஸ்ட்கள் போராட வழிகாட்டினாராம். SPD social fascist என ஸ்டாலின் விமர்சித்தார். இன்னொரு தகவலையும் தேசாய் தருகிறார்.

ஹிட்லர் சுதந்திர சந்தை எதிர்த்தும் நின்றாராம். He abandoned the liberal tenets of free trade, free mobility of capital and labour and laissez faire , but without challenging Capitalism and profits என தேசாய் எழுதியுள்ளார். ஸ்டாலினுக்கு, ஹிட்லருக்கும் என்ன இதில் வித்தியாசம் என்பதையும் சுருக்கமாக தேசாய் தருகிறார்.

Statin's challenge to the liberal order was that of economic development and industrialisation without resort to private property and profit making. Hitler's challenge was to declare the free market wasteful, unnecessary for economic growth under capitalism .

பாவர்க், லுத்விக் மைசஸ் , ஹாயக் போன்ற ஆஸ்திரிய பொருளாதார மேதைகள் பற்றிய சிறு அறிமுகத்தையும் தேசாய் தருகிறார். ஸ்கும்பீட்டர் முதலாளித்துவத்தின் நல்லதும் மோசமானதுமான இரட்டை குணங்களை விவரித்ததாக தேசாய் சொல்கிறார். ஹாயக் bank credit- real cycle என்பது குறித்து பேசியதையும் , பால் ஸ்வீசி

போன்றவர்களே தங்கள் இளமையில் Hayak had the key to capitalism சொன்னதாக அறிகிறோம்.

கீன்ஸ் தனது The General Theory of Employment, Interest and Money மூலம் உலக நாடுகளிடம் அரசாங்கங்களிடம் பெரும் தாக்கத்தை உருவாக்கினார். பொருளாதாரத்தின் மொழியையே அவரால் மாற்றமுடிந்தது என தேசாய் எழுதுகிறார். பெர்னார்ட் ஷாவிடம் பேசிய கீன்ஸ் 'தான் பொருளாதார அயின்ஸ்டின்' என சொல்லிக்கொண்டதை தேசாய் குறிப்பிடுகிறார்.

கீன்ஸ் பேசிய வேறு ஒரு முக்கிய உரையாடலை தேசாய் தந்துள்ளார். மார்க்சின் உபரி மதிப்பு சரி ,ஆனால் if goods are not sold, the surplus value is just notional, unrealised என்கிற முக்கிய பார்வையை கீன்ஸ் வெளிப்படுத்தினார். கீன்ஸின் புரட்சி என்று அவர் கொண்டாடப்பட்டதைக் காண்கிறோம். பொருள் விற்கப்படவில்லை என்றால் உபரி மதிப்பை உணரமுடியாது என்ற விவாதம் வந்ததைக் காண்கிறோம்.

சோசலிசம் வேலைக்கு ஆகுமா' என்ற ஒரு அத்தியாயமும் இந்த புத்தகத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது. நியுரத் எனும் அறிஞர் இவ்வாறு எழுதினார் " The theory of Socialist Economy acknowledges only one manager or producer, the society, without calculation of losses or profits and without taking the circulation of money as a basis- no market.."

Mises இதை in societies based on the division of labour, the distribution of property rights effects a kind of mental division of labour, without which neither economy nor systematic production is possible என எழுதியதைப் பார்க்கிறோம். சோசலிசம் வேலையாகுமா என்பதற்கு எதிர்மறையாக அது irrational and impracticable என்றும் அவர் சொல்வதைக் காண்கிறோம். இந்த விவாதங்கள் முன்பே வந்தவைதான். மைசஸ் வாதத்தை மார்க்சிய பொருளாதார அறிஞர்கள் ஏற்கவில்லை.

கார்ல் போலயானியின் கருத்துக்களையும் தேசாய் தொட்டுச்செல்கிறார். இங்கும் உபரி மதிப்பு என்று சொல்வதால் இல்லை, விற்கப்பட்டால்தான் இலாபம் என்ற பிரச்னை சொல்லப்படுகிறது . Markets in labour power arise from the private property rights என தேசாய் இப்பகுதியில் விளக்குகிறார்.

Golden age of capitalism என்கிற பகுதியில் பூர்ஷ்வாமயமாக்கப்பட்டு வரும் தொழிலாளி மார்க்ஸ்க்கு உதவுவானா என்ற விவாதத்தை தேசாய் முன்வைக்கிறார். வால்ட் ரோஸ்டோ தனது Non Communist Manifesto வை எழுதுகிறார். அவர் கென்னடியின் ஆலோசகராகிறார்.

The High Noon of Socialism என்கிற அத்தியாயத்தில் மார்க்சியர்களான பால் பாரன், ஸ்வீசி விவாதிக்கப்படுகின்றனர். மூன்றாம் உலக நாடுகளில் இவர்கள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர். மேற்கு மார்க்சியம், மாவோயிசம், புதிய இடதுகளின் சிந்தனைப் போக்குகளை அறிமுகப்படுத்திச் செல்கிறார் தேசாய். Can a socialist society base its investment and wage policy on the criterion of productivity, which is only hidden signal for profitability? என்ற கேள்வி எழும்புகிறது.

சீனாவில் பல்கலையில் கம்யூனிஸ்ட் அறிக்கை, டூரிங்கிற்கு மறுப்பு, லெனினின் ஏகாதிபத்திய புத்தகங்கள் பாடங்களாக்கப்பட்டதையும் தேசாய் சொல்கிறார். சியாங்காய் ஷேக் தனது கட்டுப்பாட்டு பகுதியில் தனது புத்தகத்தை பாடமாக்கியபோது, மாவோ தனது கட்டுப்பாட்டு பகுதியில் தனது புத்தகத்தை பாடமாக்கிய அனுபவம் அங்கு முன்பே நடந்தேறியது.

அந்தோணி கிராஸ்லாண்ட் தனது 'சோசலித்தின் எதிர்காலம்' என்ற ஆக்கத்தில் party is over என விவாதித்தாராம்..

பொதுத்துறை உழைப்பிற்கு தனியார் துறை உழைப்பிற்குமான வேறுபாட்டை அழகாக தேசாய் விளக்கியுள்ளார். பொதுத்துறையில் உபரி மதிப்பு இலாபம் என்பதை காணமுடியாது. அங்கு அரசு வருவாயிலிருந்து செலவு செய்யப்படுகிறது. ஆனால் தனியார்

துறையில் productive workers accumulation profit என்பது அவசியமாகும். இங்கு தேசாய் இப்படி ஒரு கேள்வியை எழுப்புகிறார்.

Were Marxist writers, revolutionary though they saw themselves to be, unproductive labour?

பால் சாமுவேல்சன் என்கிற அறிஞர் மார்க்ஸின் சுரண்டல் கோட்பாடு குறித்த விமர்சனத்தை வைத்தார். விலை என்பதை மதிப்பு , உபரி மதிப்பு கொண்டுதான் தீர்மானிக்கவேண்டும் என்பதல்ல என்றார். அவர் டெக்னாலஜியின் பங்களிப்பை விதந்து பேசினார்.

சிரபா எனும் அறிஞர் one can calculate a rate of profit for an economy independently of prices, purely as a consequence of the technology of the system. Labour power or surplus value were not required என்கிற முடிவிற்கு வந்தார். இந்த Staffa இத்தாலி மார்க்சியர் கிராம்சியின் நண்பர். கிராம்ஸி சிறையில் இருந்த தருணம் புத்தகங்களை அனுப்பி உதவியவர் என்ற செய்தியை தேசாய் தந்துள்ளார்.

ஜான் வெண் நியுமான் என்கிற அறிஞர் திராட்சை அறுவடைக்கான உழைப்பையும், திராட்சை ஜூஸ் ஒயின் உருவாக்க தேவைப்படும் செயல்முறையும் சொல்லி, இரண்டாவதில் உழைப்பு என்பதற்கு பங்களிப்பு இல்லை என்கிறார். The value of wine exceeds that of the grape juice by a large factor, yet labour contributes nothing to the extra value. Thus, value and surplus value could arise from factors other than labour. உழைப்பின் வழி தான் உபரி மதிப்பு என்பதில்லை என இந்த அறிஞர்கள் பேசுகின்றனர்.

சோவியத்தில் கோர்பசாவ் ஆட்சி ,அவரது நடவடிக்கைகள், சோவியத் வீழ்ச்சியை சற்று குறிப்பிட்டுவிட்டு சோவியத் பொருளாதார அம்சம் ஒன்றையும் தேசாய் எழுதுகிறார். அது நடுத்தர வருவாய் நாடு. அதன் GDP misleading one. அதன் உற்பத்தி பொருட்கள் உலக விலை அடிப்படையில் பார்த்தால், இராணுவ தளவாடங்கள் தவிர மற்றவை

சோவியத்தை மூன்றாம் உலக நாடுகளின் வரிசையில்தான் காட்டியது என்பதையும் தேசாய் எழுதுகிறார்.

ஸ்டாலிசம் குறித்த மதிப்பீடாக தேசாய் முன்வைப்பது

Stalinism had promised plenty for the price of unfreedom, but all it had delivered was poverty and unfreedom.

Leninism became a doctrine of oppression, scarcity, unfreedom என்ற விமர்சனத்தை up from the abyss அத்தியாயத்தில் தேசாய் வைத்துள்ளார்.

சில கேள்விகளை உரத்த சிந்தனைக்காக தேசாய் விட்டுச்செல்கிறார். Was there a proletariat?, How we're the classes defined?, was there any mobility between classes?

இவை குறித்து ஜான் ரோமெர் ஆய்வு செய்ததான செய்தியை தேசாய் தருகிறார்.

சோவியத்தின் வீழ்ச்சி இடதுசாரிகளிடம் பெரும் தாக்கத்தை சோர்வை உண்டாக்காமல் இல்லை. அது எதிர்காலம் குறித்த நம்பிக்கையின் பால் கட்டப்பட்ட ஒன்று. It is a doctrine of hope and its eclipse is the End of Hope. முதலாளித்துவம் இன்னும் இருப்பேன் என்கிறது. Capitalism says that I survived. Not just survived but rejuvenated என தேசாய் தன் ஆய்வில் வந்தடைகிறார்.

தேசாயின் இந்த புத்தகத்தின் சாரத்தை இப்படி சொல்லலாம்.

Capitalism still survived not only survived but become a dynamic worldwide phenomenon yet again- still having a potential. Neither underconsumption and lack of markets, nor workers' organisation and their rising share in total income, nor the loss of empire or the shortage of oil, or the threat of proletariat , all of these and more rehearsed as possible causes of its downfall could stop capitalism

அடுத்து தேசாய் சொல்ல வருவது

There is a need for a longer term complementarity between capital and labour. Conflict is endemic to capitalism, but if it is seen that capitalism is not about to die, then the beliefs, as well as behaviour of the workers undergo a modification.

தேசாய் முன் வைத்து 20 ஆண்டுகள் ஓடிவிட்டன. அவரின் இந்த முன்வைப்புகளை எவரும் செவிமடுத்தது போல் தெரியவில்லை.குறைந்தது மனம் திறந்த வாசிப்பிற்காவது இந்த புத்தகம் உள்ளாக வேண்டும். மார்க்சியர் உலகில் மிக முக்கிய புத்தகமிது.

17-3-2023

12. அல்தூசரின் ‘மார்க்சிற்காக’

Louis Althusser (1918-1990) எழுதிய For Marx , Lenin and Philosophy, Reading Capital போன்றவை மார்க்சிய அறிவு வட்டாரத்தில் அவரின் முக்கிய ஆக்கங்களாகப் பார்க்கப்படுகின்றன.

இதில் அல்தூசரின் ‘மார்க்சிற்காக’ எனச் சொல்லப்படும் நூல் 1960களின் ஆரம்ப ஆண்டுகளில் எழுதப்பட்டு பிரஞ்சு மொழியில் வெளியானது. இந்த கட்டுரைகளின் ஆங்கில தொகுப்பு 1969ல் வெளியானது. அதை பென் ப்ருஸ்டர் மொழி பெயர்த்தார். ஆங்கில நூல் இணையத்தில் கிடைக்கிறது.

மார்க்சிய ஆர்வலர், அமைப்பியல் ஆர்வலர்கள் சிலர் படித்திருக்கக்கூடும். இந்நூலை புகழ் வாய்ந்த மொழிபெயர்ப்பாளர் பேரா பூர்ணசந்திரன் அவர்கள் தமிழில் தருவதில் பெரும் உழைப்பை நல்கியுள்ளார். தோழர் முத்துமோகன் பதிப்பாசிரியர் உழைப்பை நல்கியுள்ளார். சவாலான ஆக்கம். தமிழ் அறிவுலகிற்கு என் சி பி எச் கொடுத்திருக்கும் கொடையாக பாவிக்கலாம். 2021 ல் கொணர்ந்தனர்.

For Marx என்ற நூல் இப்போது மொழி பெயர்ப்பில் ‘மார்க்சுக்கு ஆதரவாக ‘ என்கிற தமிழ் நூலாக கிடைக்கிறது. இந்நூலை வாசிக்க பொறுமையும் நிதானமும் தேவைப்படலாம். உள்வாங்கிக்கொள்ள கவனம் தேவைப்படலாம். மொழிபெயர்ப்பாளர்க்கு சவாலாக இருந்திருக்கக்கூடும். பேரா பூர்ணசந்திரன் மிகுந்த அனுபவம் கொண்டவர் என்ற வகையில் இந்த சவாலை சிரமம் அதிகமின்றி எதிர்கொண்டிருந்திருப்பார். இளம் மார்க்ஸ், இடை மார்க்ஸ், முதிர் மார்க்ஸ் இணக்கமா, அறிவு முறிவு பாய்ச்சலா / அறிவு உடைவு என்ற மய்யமான கேள்வி இதில் விவாதமாக்கப்பட்டிருக்கும்.

மனிதாபிமான கருத்தியல் தள மார்க்சா, முதிர்ந்த அறிவியல் தள மார்க்சா என்பது பேசப்பட்டிருக்கும். இதை மனிதவியல் தளம்- சமூகத் தளம் என முத்துமோகன் பேசுகிறார்.

மொழியாக்கம் அவ்வளவு எளிமையான ஒன்றல்ல எனக் கருதத்தக்க பல பத்திகள் இதில் இருக்கின்றன.

இரண்டாவது அத்தியாயம் on the Young Marx . அதிலிருந்து சில வரிகளைத் தருகிறேன். அதற்கான பூரண சந்திரனின் மொழிபெயர்ப்பையும் தந்துள்ளேன்

" This is the location of the discussion: the young Marx. Really at stake in it : Marxism. The terms of the discussion: whether the young Marx was already and wholly Marx"

மேற்குறித்த தமிழ் நூலில்

" விவாதத்தின் அமைவுக்களம் இதுதான் : ' இளம் மார்க்ஸ்' . உண்மையில் அதில் ஆபத்தில் இருப்பது : மார்க்சியம். விவாதத்தின் பொருள்: இளம் மார்க்ஸ் ஏற்கனவே, முழுமையான (முதிர்ச்சி பெற்ற) மார்க்ஸாக இருந்தாரா என்பது.

ஆங்கிலத்தில் the young Marx என்பது quote க்குள் இல்லை. தமிழில் வந்துள்ளது.

" very schematically, if they want to rescue Marx from the perils of his youth with which his opponents threaten them, they can either agree that the young Marx is not Marx; or that the young Marx is Marx. These extreme theses may be nuanced; but their inspiration extends even to their nuances"

தமிழில் பூரண சந்திரன்

" மிகுந்த திட்டப்படியாக, அவரது எதிரிகள் அச்சுறுத்துகின்ற அவரது இளமையின் தவறுகளிலிருந்து அவர்கள் மார்க்ஸைக் காப்பாற்ற விரும்பினால், அவர்கள் இளம் மார்க்ஸ் மார்க்ஸே அல்ல என்றோ, இளம் மார்க்ஸ் மார்க்ஸ் தான் என்றோ இரண்டில் ஒன்றை ஒப்புக்கொள்ளலாம். இந்த எதிர்முனை முடிபுகள் சிக்கலானவை, பலவித அர்த்தச் சாயைகள் கொண்டவை ஆகலாம்; ஆனால் அவற்றின் அகத்தெழுச்சி, அவற்றின் நுட்பங்களுக்கும் நீள்கிறது."

இங்கு perils என்பது தவறுகள் என்றும், nuanced சிக்கலானவை பலவித அர்த்த சாயைகள் என்றும், nuances நுட்பங்கள் என்றும் செய்யப்பட்டுள்ளன.

" on the contrary, to think the unity of a determinate ideological unity(which presents itself explicitly or implicitly 'lived ' as a whole or as an intention of 'totalisation') by means of the concept of it's problematic is to allow the typical systemic structure unifying all the elements of the thought to be brought to light, and therefore to discover in this unity a determinate content which makes it possible both to conceive the meaning of the ' elements' of the ideology concerned- and to relate this ideology to the problems left or posed to every thinker by the historical period in which he lives"

மொழிபெயர்ப்பாளர்

" மாறாக, ஒரு நிர்ணயித்த கருத்தியல் ஒருமையின் ஒருமை அதன் பிரச்சினைத் தளத்தின் கருத்தாக்க வாயிலாகச் சிந்திப்பது (அது வெளிப்படையாகத் தன்னை ஒரு முழுமையாகக் காட்டிக்கொள்கிறது, மேலும் வெளிப்படையாகவோ, உள்ளார்ந்தோ முழுமையாக்கத்தின் ஓர் உள் நோக்கமாக வாழப்படுகிறது) என்பது அதன் வகைமாதிரியான ஒழுங்கமைவுக் கட்டமைப்பை அச்சிந்தனையின் எல்லாக் கூறுகளையும் ஒருமைப்படுத்தி வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதாகிறது. ஆகவே இந்த ஒருமையில் ஒரு நிர்ணயித்த உள்ளடக்கத்தைக் கண்டுபிடிப்பது, குறித்த கருத்தியலின் கூறுகளின் அர்த்தத்தைக் கருதுவதற்குச் சாத்தியமாகிறது. அதே சமயம் இந்தக் கருத்தியலை ஒரு வரலாற்றுக் கட்டத்தில் வாழும் ஒவ்வொரு சிந்தனையாளருக்கும் முன்வைக்கப்படும் அல்லது விடப்படும் பிரச்சனைகளுடன் தொடர்புறுத்தவும் சாத்தியமாகிறது"

இது போல் நூல் விரிகிறது. அன்றாட வேலை அழுத்தங்களில் இருப்பவர்களுக்கு நேரம் கிடைக்காது. மார்க்சிய தத்துவ தேடலுக்கு

என்று தனித்து ஆர்வத்துடன் நேரம் ஒதுக்குபவர்களுக்கான நூலாக இதைக் கொள்ளலாம்.

மொழி பெயர்ப்பு தேர்ச்சி குறித்து அதில் தோய்ந்த அறிஞர் பெருமக்கள் கருத்து கூறமுடியும். (march 26 2024)

2

அல்தூசரின் 'மார்க்சுக்கு ஆதரவாக' பூரணச்சந்திரன் அவர்களின் மொழிபெயர்ப்பு நூலில் அத் 4 ' பிக்காலோ அரங்கு படித்துக்கொண்டிருந்தபோது, முப்பதாண்டுகளுக்கு முன்னரான நினைவுகள் ஓடின. அல்தூசர் பொருள்முதல்வாத நாடகக்குழு பற்றிய குறிப்புகள் - நாடகம் ஒன்றை விவரித்து பெர்த்தோலஜி மற்றும் பிரக்ட் குறித்து இதில் விவாதித்திருப்பார்.

பிரக்ட் பற்றி வங்கித் தலைவர் தோழர் ரகுபதி பேசியதும், திருவாரூர் தெருக்களில் அவரது நாடகத்தை நிகழ்கலையாக - நிஜ நாடகங்களாக மக்கள் கொஞ்சம் பேராவது கூடி பார்த்திருக்க நிகழ்த்தியதும் நினைவு சுழலாக நிற்கிறது. தொலைபேசித் தோழர்கள், சமீபத்தில் மறைந்த தொழிற்சங்கத் தலைவர் கார்த்தி உட்பட பலரும் ரகுவுடன் நிகழ்கலைகளை, தப்பு பறைகளை முழங்கி வலம் வந்த நினைவுகளை அல்தூசர் கிளறிவிட்டார்.

திருச்சி கூட்டம் ஒன்றில் staging Change என்கிற புத்தகம் குறித்து பேசிவிட்டு , நாடகம் முடித்த தோழர்களுடன் கீழ் இறங்கி வந்தபோது, எங்களைப் போலவே இளம் வயதில் இருந்த அன்றைய தொலைபேசி ஊழியர் - இன்றைய பேரா ராஜன் குறை அவர்கள் அப்புத்தகம் குறித்து, நிகழ்கலை குறித்து என்னுடன் பேசினார் என்று நினைவுச் சொல்கிறது.

சரி நினைவிலிருந்து விடுபட்டு , அல்தூசர் இந்த அத்தியாயத்தில் பேசும் சில வரிகளை தந்துள்ளேன். பூரண சந்திரன் நன்றாக மொழியாக்கம் செய்து உதவியுள்ளார். இனி அல்தூசர் வரிகள்.. என் வசதிக்கேற்ப..

“ ஒன்றுபடுதலில் பார்வையாளர்கள் கதாநாயகனின் விதியோடு சேர்ந்து தொங்குகிறார்கள்.. கதாநாயகன் இல்லை என்றால் ஒன்றுபடுதல் இல்லை . கதாநாயகனை ஒடுக்குதல், பிரக்டின் பொருள்முதல்வாதக் கருத்தாக்கத்துடன்- வெகுமக்கள் தான் வரலாற்றை உருவாக்குகிறார்கள், கதாநாயகர்கள் அல்ல- தொடர்புபடுத்தப்படுகிறது”

“ கதாநாயகனின் காலத்தன்மைதான் முழுமையான காலத்தன்மை. பிற எல்லாம் அதற்குக் கீழ்பட்டவை. அவனது எதிரிகளும் அவனது சமத்திற்கு ஆக்கப்படுகிறார்கள். அவனது எதிரிகளாக இருக்கவேண்டும் என்றால் அப்படித்தான் இருக்க வேண்டும். அவனது காலத்தை அவனது லயத்தை அவர்கள் வாழ்ந்தார்கள், அவனை சார்ந்திருந்தார்கள். அவர்கள் வெறும் சார்பினராகத்தான் இருந்தார்கள்.”

“ எதிரி உண்மையிலேயே அவனது எதிரிதான். மோதலில் கதாநாயகன் எதிரிக்கு சொந்தமானவன். எதிரியும் கதாநாயகனுக்கு சொந்தமானவன். எதிரி, நாயகனின் இரட்டை, அவனின் பிரதிபலிப்பு. அவனது மறுதலை, அவனது இரவு, அவனது சபலம் . அவனது சொந்த நனவிலி அவனுக்கு எதிராக திரும்பிய நிலை…”

“ பிரக்ட் நாடகங்களில் நாயகர்களை இல்லாமல் செய்துவிட்டதால் நாயகர்கள் மறைந்துவிடவில்லை. …நாடகம் அவர்களை சாத்தியமற்றவர்களாக்குகிறது. அவர்களையும் அவர்களின் பிரக்ஞையையும் அதன் போலி தர்க்கத்தையும் அழிக்கிறது…கடவுளும் இல்லை சீசரும் இல்லை…. பார்வையாளர் நாடகத்தின் உயரிய நடுவராக இருக்க முடியாது. நாடகமும் தனது சொந்தக் கதைக்குள் இறுதித் தீர்ப்பை உள்ளடக்க இயலாது “

“ நாம் முதலில் ஒரு நிறுவனத்தால், நிகழ்த்தலினால் இணைக்கப்படுகிறோம்… நமது ஒப்புதலின்றி நம்மை ஆட்சி செய்கின்ற அதே தொன்மங்கள், அதே கருப்பொருள்கள்.. இன்னும் அதே ரொட்டிகளை உண்கிறோம். அதே கோபங்கள், கலகங்கள், அதே

பைத்தியக்காரத்தனம்...எந்த வரலாற்றினாலும் நகர்த்தப்படாத ஒரு காலத்தின் முன் அதே விழுந்து கும்பிடுதலும் இருக்கவே செய்கிறது."

" அதே தூசி நம் கண்களில், அதே மண் நம் வாய்களில். நமக்கும் அதே விடியலும் இரவும் தான்..அதே வரலாற்றைத்தான் பகிர்ந்துகொள்கிறோம். நமது நனவிலிகள்...."

இப்போது இந்தியாவில் நடக்க இருப்பது தேர்தல் - நாடகமல்ல என மனம் நம்பட்டும் (march 28 2024)

3

ஓ இந்த புத்தகம் தமிழில் வந்துவிட்டதா என ஆசை பொங்க வாங்கி படிக்க ஆரம்பிக்கும் போது சற்று ஏமாற்றம் கிடைக்கும் அனுபவம் யாருக்கு வேண்டுமானாலும் ஏற்பட்டிருக்கலாம்.

வலுவான சிக்கலான கோட்பாட்டு புத்தகங்களில் மட்டுமல்ல, சில எளிய புத்தக மொழிபெயர்ப்புகளிலும் கூட இந்த அனுபவங்கள் ஒருவருக்கு கிடைத்திருக்கக்கூடும்.

அட போங்கப்பா ஆங்கிலத்திலேயே மல்லுக்கு நின்றிருக்கலாம் என்ற எண்ணத்தை லூகாக்ஸ் புத்தகம் ஒன்றும் அல்தூசர் புத்தகம் ஒன்றும் எனக்கு கொடுத்தன.

அல்தூசரின் for Marx யை தொட்டும் விட்டும் நிறுத்தாமல், ஆங்கிலத்திலேயே படித்திருந்தால் கொஞ்சம் அஜீரணம் குறைவாக ஒருவேளை இருந்திருக்குமோ எனத் தோன்றுகிறது. எனது படிப்பு குடலின் சக்தி அவ்வளவு தானோ..கஷ்டப்பட்டு அரைக்கப்பார்த்தும் கவளங்கள் அரைபடாமல் போனது.

"மார்க்சுக்கு ஆதரவாக " - மொழி பெயர்ப்பாளர் என்ன செய்வார்..அவர் உழைப்பைத்தான் கொடுக்க முடியும். பிராக்கட்டு பாராக்களைக் கூட அட்சரம் அட்சரமாக மொழி பெயர்த்து தான் தரவியலும். எனக்கு செரிக்கனுமே.. என் படிப்பு குடலுக்கு என்ன பிரச்சனையோ..

ஒரே அஜீரணம்... முடிஞ்சால் படிங்க , யார் கண்டா- உங்களுக்கு செரிமான சக்தி கூடுதலா இருக்கலாம் (ap 4 2024)

may 5 2025

13. டிஜிட்டல் யுகமும் மார்க்சும்

(Marx In the age of Digital Capitalism edited by Christian Fuchs and Vincent Mosco)

எலக்ட்ரானிக் யுகத்தில் மார்க்சை பேச முடியுமா என்கிற பொருளில் ஏராள அறிஞர் பெருமக்கள் எழுதிய பல கட்டுரைகளின் தொகுப்புத்தான் இந்நூல். 'டிஜிட்டல் முதலாளித்துவ காலத்தில் மார்க்ஸ்' நூல் வந்து 10 ஆண்டுகள் ஆகிவிட்டது.

மார்க்ஸ் என்றாலே, முதலாளித்துவத்தை அக்கு அக்காக கழற்றி, அதன் இயங்கியல் குறித்த விமர்சனத்தை வைத்தவர் என்கிற பொதுப்புரிதல் இருக்கும். இந்நூலில் கட்டுரை ஆசிரியர்கள் - இணையம் குறித்த மார்க்சிய வாசிப்புகள், டிஜிட்டல் மார்க்ஸ், மீடியா அதன் அரசியல் பொருளாதாரம், தகவலை வர்த்தகமயமாக்கல், தகவல் காலத்தின் இருண்ட பகுதிகள், கிளவுட் மார்க்ஸ் என பல சுவையான தலைப்புகளில் உரையாடியுள்ளனர். நூல் அளவில் சற்று பெரிய 560 பக்கங்கள் கொண்டது.

பேரா கிறிஸ்டியன் போக்ஸ் தகவல் மற்றும் ஊடகத்துறை ஆய்வாளர். மன்த்லி ரிவ்யூ வில் எழுதி வருபவர். டிஜிட்டல் உலகில் மார்க்ஸ் குறித்து தொடர்ந்து எழுதுபவர். கனடா பேரா வின்செட் மஸ்கோ 'தகவலும் சமூகமும்' என்கிற துறை சார்ந்து ஆய்வுகளை செய்து வருகிறார்.

புரட்சிகர மார்க்சிய இயக்கங்கள் தங்களுக்கான தலைமைக் கேள்வியாக சொத்து யாரிடம் குவிகிறது - எப்படி மேலாண்மை செய்யப்படுகிறது என்பதை வைப்பர். அதைப் பொறுத்தே அவர்களின் பாட்டாளிவர்க்க செயல்திட்டம் கட்டப்படுகிறது.

இந்த டிஜிட்டல் உலகிற்கு மார்க்ஸ் பொருத்தமற்று போய்விட்டாரா என்ற கேள்வி பல மார்க்சியரை மண்டை குடைய வைக்கும் கேள்வி. பொருளாதார நெருக்கடிகளை முதலாளித்துவ உலகம், இந்த உலகமயமாதல் சூழலிலும் உணர்கின்றவரை மார்க்ஸ் எப்படி காணாமல் போவார் என்ற கேள்வியை மார்க்சிய சிறந்த அறிஞர்கள், ஈகிள்டன் போன்றவர்கள் பதில் கேள்வியாக்கி தங்கள் ஆய்வுகளைத் தருகின்றனர்.

கம்யூனிசம் என்பதை எப்போதோ கண்ணுக்கு தெரியா வெகுதொலைவுக்கால லட்சியம் எனக் கருதாதீர். உங்கள் கண் முன் நடக்கக்கூடிய அனைத்து அநீதி, அதல பாதாள வேறுபாடுகளுக்கு எதிராக நடைபெறும் அனைத்துப் போராட்டங்களிலும், கம்யூனிச கனவு விசிறி நிற்கிறது என இவர்கள் பேசுகின்றனர்.

நீங்கள் 'முகநூல், ட்விட்டர், யு ட்யூப்' என்பதில் மட்டும் இவற்றை தேடாமல், உலகில் பல்வேறு சதுக்கங்களில் பேரளவாக நடக்கும் மக்கள் எழுச்சிகளில், சொத்தற்றவர் போராட்டங்களில் அதைப் பார்க்க முடியும் என்கிற நம்பிக்கையை இந்த மார்க்சிய அறிஞர்கள் விதைக்கின்றனர்.

மார்க்சிடம் 'ஜேர்னலிசம்' என ஒன்றை கற்க வாய்ப்பில்லையா எனக் கேட்டும் ஆய்வுகள் நடப்பதாக இந்நூல் சொல்கிறது. நமது ஊடகவியல் ஆய்வில் மார்க்ஸ் எனும் பத்திரிகையாளர் உதவ மாட்டாரா என்கிற ஆய்வை இவர்கள் சொல்கின்றனர். மார்க்ஸ் தன் காலத்தில் மீடியா- தகவல் என்பதை எப்படி உள் வாங்கினார் என்பதை அறிந்து, அதன் இன்றைக்கான பொருத்தப்பாட்டை ஆய்வு செய்யக் கூடாதா என்ற கேள்வியையும், 'டிஜிட்டல் மார்க்ஸ்' ஆய்வாளர்கள் எழுப்புகின்றனர்.

மார்க்சியத்தின் இயக்கவியல் தத்துவ பார்வை செல்வாக்கில் இயங்கும் தகவல்- ஊடகத்துறையை கணக்கில் கொண்டு ஆய்வை செய்ய சிலர் முற்பட்டுள்ளனர். இன்று பரபரப்பாகியுள்ள சமூக

ஊடகத்துறையை மார்க்சிய அறிதல் பார்வை கொண்டு அளக்க முடியுமா என்ற கேள்வியும் அவர்கள் ஆய்வில் இடம் பெறுகிறது என்கின்றனர்.

தாமஸ் பிக்கட்டியின் 2014 காபிடல் நூலை கிறிஸ்டியன் போக்ஸ் வரவேற்றாலும், பிக்கெட்டி 'மார்க்ஸ் குறித்த' தவறான புரிதல்களும் கொண்டவராக இருக்கிறார்- பிக்கெட்டியின் காபிடலை 21ஆம் நூற்றாண்டின் மூலதனம் என்றெல்லாம் உயர்த்துவதை கிறிஸ்டியன் போக்ஸ் ஏற்கவில்லை.

மார்க்சியப்படி தகவல் என்பதற்கான கோட்பாட்டை (Theory of communication) எப்படி உருவாக்குவது- அதை எதில் நிறுத்திப் பார்ப்பது எனச் சொல்ல வரும்போது- அதனை - முதலாளித்துவத்துடன் உள்ள தொடர்பென்ன என்பதில் பார்க்க வேண்டும் என போக்ஸ் முன் வைக்கிறார். இந்த தகவல் நுட்ப காலத்தில் எப்படியான உற்பத்தி, எவை சந்தைமயமாகின்றன எனவும் மார்க்சியர் பார்க்கவேண்டும் என்கிறார் போக்ஸ். அவரின் கீழ்கண்ட ஆங்கிலவரி புரிதலுக்கு உதவலாம்

Communication has always been embedded into structures of inequality in class societies .

இந்த தகவல் தொழில்நுட்ப, சமூக ஊடக செயல்பாட்டு டிஜிட்டல் காலம் சமூகத்தில் பொருளாதார வேறுபாடுகளை சாய்த்து, அசமத்துவ நோக்கத்தை சிறிதாவது குறைத்துள்ளதா- இனியாவது குறைக்கும் என்கிற நம்பிக்கைப் பாதையை அது காட்டுகிறதா என்கிற பொருட்பட கேள்வியை இந்நூல் வைப்பதாக நான் புரிந்து கொள்கிறேன்.

ஊடகத்துறையில் எப்படி மூலதனப் பெருக்கம் நடந்து வருகிறது- அவை எவரின் இலாபக் கிடங்கை நோக்கி நகர்கின்றன. ஊடகத்தை கட்டுப்படுத்தும் மூலதனம் குறித்த ஆய்வென்ன என்ற கேள்விகளை நாம் நேரிட வேண்டியுள்ளது.

ஊடக மூலதனம் என்பதுடன் அது உற்பத்தி செய்யும் ;ஊதியத்திற்கான அறிவுத்துறை' ஊடக ஊழியர்கள் பற்றிய ஆய்வும் இதில் உள்ளடங்க வேண்டியுள்ளது. இந்த மீடியாக்கள் எந்த இசங்களை- எந்த கோட்பாடுகளை சுமந்து ஊர்வலம் வருகின்றன- carrier of what ideology என்ற மிக முக்கிய கேள்வியையும் போக்ஸ் பார்க்கச் சொல்கிறார்.

டெரி ஈகிள்டன் மார்க்சின் மீதான 10 காழ்ப்புணர்வுகளை- பாரபட்ச பார்வைகளை சற்று தொகுத்து அவை ஏன் தவறானவை, மார்க்ஸ் ஏன் சரியானவர் என தன் 2011 நூலில் எழுதினார் என்பதை போக்ஸ் காணச் சொல்கிறார். போக்ஸ் கூட மார்க்ஸ் மீது பலரும் சுமத்தும் சில பாரபட்ச கேள்விகளை எழுப்பி பதில் சொல்ல முனைகிறார். மார்க்ஸ் 19ஆம் நூற்றாண்டவர்- காலவதியானவர், மார்க்சியம் என்றாலே வன்முறை ஆயுத வழிதான்- படுகொலைகள், சோசலிச சமூகம் என்பதெல்லாம் மனோராஜ்ய கற்பனையே, மார்க்சியம் நிர்ணயவாதமே- பார்முலா போன்று சமூக மாற்றத்தை ஒன்றுக்குப்பின் ஒன்று என அது சொல்கிறது, அதேபோல் அனைத்தையும் பொருளாதார அடிப்படை என்கிற குறுக்கல்வாதம் செய்கிறது, சமுகத்தை வர்க்க வழியாகவே அது விளக்கப் பார்க்கிறது, மார்க்சியத்திடம் எந்த அறநெறியையும் எதிர்பார்க்க முடியாது- இலக்கை அடைய எப்படி வேண்டுமானாலும் என அது சொல்லித்தருகிறது- சோசலிச பாட்டாளி சர்வாதிகாரம் பேசி அது ஜனநாயகத்தை அலட்சியம் செய்கிறது- இப்படியான வழக்கமான பாரபட்சம் கொண்ட காழ்ப்புணர்வு ஏச்சுக்களை வைத்து , மார்க்சியத்தை பொது நீரோட்டத்திலிருந்து மீடியாக்கள் அலட்சியம் செய்வதை போக்ஸ் போன்றவர் இந்நூல் வழி விமர்சிக்கின்றனர்.

ஆந்த்ரஸ் விட்டல் மிக முக்கிய கருத்தாக்கம் ஒன்றை இதில் முன்னெடுக்கிறார். அதாவது 'தகவல்களை பகிர்ந்தளிப்பது' என்பதை முதலாளித்துவம் கட்டுக்குள் வைத்து செயல்படுவதை அவர் சொல்கிறார். Capitalist class controls the means of information distribution.

ஜென்ஸ் ஸ்கோர்ட்டர் இன்டெர்நெட் காலம் உராய்வற்ற முதலாளித்துவத்திற்கு சாதகமாக நிற்பதாக சொல்கிறார்- frictionless capitalism.

எரான் பிஷர் இரு கருத்தாங்களை விவாதத்திற்கு முன்னெடுக்கிறார். ஒன்று audience commodification on facebook, மற்றொன்று audience alienation- they cannot control the content production என்பதை பிஷர் பேசுகிறார்.

டல் யோங் ஜின் என்பார் கலாச்சார ஏகாதிபத்தியம் என்பது விவாதிக்கப்பட வேண்டிய ஒன்று என முன்மொழிகிறார்.

மரிசால் சாண்ட்வால் ஆப்பிள் ஐபோன் மற்றும் சீனக் கம்பெனிகளில் தொழிலாளர்களின் மிக மோசமான சுரண்டல் தீவிரமாக வெளிக்கொணரப்படவேண்டும் என வற்புறுத்துகிறார்.

மஸ்கோவின் ஆய்வில் political economy of cloud computing and big data- how state surveillance and threat to labour knowledge போன்ற காரணிகள் விவாதிக்கப்பட வேண்டும் எனப் பேசுகிறார்.

இந்நூலில் மிகக் குறுகிய பகுதியை ஒற்றை வரி செய்திகளாகவே தரப் பார்த்துள்ளேன். இந்நூலை நன்கு வாசித்தவர் எவரேனும் என்னைவிட மிகச் சிறப்பாக எடுத்து விளக்கியிருக்க முடியும். ஓர் அறிமுகம் என்ற அளவில் இந்த கட்டுரையை எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

டிஜிட்டல் உலகில் மார்க்ஸ் நேரம் ஒதுக்கி நன்கு கற்க வேண்டிய பொருள். என் போதாமையை இதில் நான் உணராமல் இல்லை.

5-5-2025

14. பாலினம் குடும்பம் மார்க்ஸ்

(மார்க்ஸ் முழுமையாக ஆண் மய்யவாதியாக எழுதினாரா? மகப்பேறு என்கிற ஒன்றை வெறும் 'பயலாஜிகல்' - உயிரியல் அம்சமாக மட்டும் பார்த்தாரா- அதை ஏன் உழைப்பு பிரிவினையாக வகைப்படுத்தவில்லை போன்ற பெண்ணியலாளர் கேள்விகளை சிறு அளவில் விவாதிக்கிறது இக்கட்டுரை)

பாலினம் மற்றும் குடும்பம் பற்றி மார்க்ஸ் எழுதியதன் மீதான விமர்சன வாசிப்பு என்கிற நூல் ஹீதர் ஏ பிரவுன் அவர்களால் எழுதப்பட்ட ஒன்று. 2012ல் வெளியான நூல். நூலின் ஆங்கிலத் தலைப்பு Marx on Gender and Family- A critical study. வாசிப்பதற்கு சற்று கடுமையான நூல்தான். முடிந்தவரை எளிமைப்படுத்தி தர முயற்சிக்கிறேன்.

பெண்ணிய கோட்பாட்டாளர்களில் மார்க்சை ஏற்று, அதில் பெண்ணியம் சார்ந்த அம்சங்களையும் காலத்திற்குரியதாக தேவைக்கேற்ப வளப்படுத்த முடியும் என நினைப்பவர்களும் இருக்கின்றனர். அது சாத்தியமில்லை என மறுத்து ஏற்காதவர்களும் இருக்கிறார்கள்.

மார்க்சியத்தையும் பெண்ணியத்தையும் இணைத்து குழைத்து சோசலிச பெண்ணியம் என்கிற கருதுகோளை வளப்படுத்த முடியுமா என்கிற விவாதமும் தொடர்கிறது. அதாவது முதலாளித்துவத்திற்கு எதிரான பெண்ணியம் என்பதிலிருந்து இதை மேல் எடுத்து செல்ல முடியுமா எனவும் விவாதிக்கிறார்கள்.

மார்க்சின் 1844 கைப்பிரதிகள், கம்யூனிஸ்ட் அறிக்கை, மார்க்ஸ் எங்கெல்சின் புனித குடும்பம், ஜெர்மன் கருத்தியல், மூலதனம், மார்க்ஸ் எழுதிய செய்தி கட்டுரைகள், எங்கெல்சின் குடும்பம் தனிச்சொத்து , அரசு நூல் போன்ற பலவற்றிலிருந்து அவர்கள் பெண், குடும்பம் குறித்து எழுதியவைகளை வைத்து பெண்ணியவாதிகள்

எப்படி ஏற்பு- மறுப்பு அடிப்படையில் விவாதிக்கிறார்கள் என்பதை இந்நுலாசிரியர் பிரவுன் தொகுத்து கொடுத்துள்ளார்.

’ Marxist theory of women and society’ என ஒன்றை கட்ட முடியுமா என தான் முயற்சிப்பதாகவும் ஆசிரியர் சொல்கிறார். பெண்களின் வீட்டு வேலைகள் என்பதற்கான ’கோட்பாட்டாக்கம்’ குறித்து சிந்திக்க பெண்ணியலாளர் முயற்சித்துள்ளனர்.

ராயா துனயெவ்ஸ்கயா (Dunayevskaya) மார்க்சை கொண்டாடிய பெண்ணிய சிந்தனையாளர் என அறிவோம். அவர் மார்க்சிடம் பெண் விடுதலைக்கான தத்துவக் கூறுகள் இருப்பதை பேசியவர். பெண் விடுதலை என்பதுடன் மார்க்சின் தத்துவத்தை அவர் இணைத்தார் என ஹீதர் ப்ரவுன் பாராட்டிச் சொல்கிறார்.

மார்க்ஸ் தன் மூலதன நூலில் வால்யூம் 1ல் பெண் மற்றும் குழந்தை தொழிலாளர் உழைப்பு குறித்து 80 பக்கங்களுக்கு மேல் விவாதித்துள்ளதை, மார்க்சிடம் நம்பிக்கைக் கொண்ட பெண்ணியவாதிகள் எடுத்தாள்கின்றனர்.

கிறிஸ்டைன் டி ஸ்டீபனோ என்கிற பெண்நிலை எழுத்தாளர் மார்க்சை விமர்சிப்பவர். மார்க்சின் எழுத்துக்கள் ஆண் தொழிலாளர் மய்யம் கொண்ட தாக்குதல் தன்மை எழுத்து- ’masculine and aggressive discursive’ என்கிற விமர்சனம் அவரிடம் வருகிறது. ஆண் பெண் இருமையை சமன் செய்து ஒத்திசைவு ஏதும் செய்யாமல் அவர் முரணை தீர்க்கப் பார்க்கிறார் என்கிற விமர்சனமும் காணப்படுகிறது. மார்க்ஸ் பாரம்பரியமாக ஆண்களின் தொழிலை எடுத்து விவாதிக்கும் போது, மரபுரீதியான பெண் உழைப்பை விடுகிறார் என்கிற கேள்வியை டி ஸ்டிபனோ எழுப்புகிறார்.

மேலும் ஆணின் விடுதலை ஆளுமை என்பதற்கான தேவையாகவே ’இயற்கை- பெண் மீதான’ ஆணின் செயல்பாடுகள் அமைவதாக இப்பெண்ணியவாதிகள் விமர்சித்தனர். டி ஸ்டிபனோ இவ்வாறு எழுதுகிறார்

For all its claims to emancipation and liberation, this vision of unconstrained humanity relies on a sinister mirror image to which women, nature and necessity are bound and against which modern men must relently test their capacities and limits.

கிளாடியா லீப் என்ற எழுத்தாளர் டி ஸ்டிபனோ போல் கடுமையாக பேசாவிட்டாலும் மார்க்சால் இயற்கை மற்றும் கலாச்சாரம் என்கிற இருமை முரணை காண முடியாமல் போனதைச் சொல்கிறார். லீப் இவ்வாறான முடிவிற்கு வருவதாக பிரவுன் குறிப்பிடுகிறார். தன் காலத்தின் பாரபட்ச பார்வைக்கு அவரும் உள்ளானார் என்கிறார்.

Marx was unable to overcome completely the prejudices of his time, especially with regard to women.

இளம் மார்க்ஸ் அந்நியமாதல் சிந்தனையொட்டி பேசும்போது இந்த புரிதலை நமக்கு வழங்கினார்.

Communism is the positive abolition of private property, of human self-alienation, and thus the real appropriation of human nature through and for man. It is, therefore, the return of man himself as a social, i.e., really human, being, a complete and conscious return which assimilates all the wealth of previous development. Communism as a fully-developed naturalism is humanism and as a fully-developed humanism is naturalism. It is the definitive resolution of the antagonism between man and nature, and between man and man. It is the true solution of the conflict between existence and essence, between objectification and self-affirmation, between freedom and necessity, between individual and species. It is the solution of the riddle of history and knows itself to be this solution.

மதம், குடும்ப உறவுகள், ஒழுக்க போதனைகள், கலை, அறிவியல் என பலவும் குறிப்பிட்ட உற்பத்தி முறைகளின் வெளிப்பாடுகள் என அவர் கருதினார். தனியார் சொத்துடைமை அழிவு என்கிற புதிய உற்பத்தி முறையில் இவைகளும் மாறும் என அவர் கருதினார். இதை விளக்கும்போது பிரவுன் இவ்வாறு மார்க்சின் சாதகமான பார்வையை எடுத்துச் சொல்கிறார்.

Thus, Marx points to the need for the family to be transformed as well, although he does not detail this transformation here. ….for Marx, there is no essential human nature. Instead, there are only 'historically specific forms of human nature, that is, human nature specific to feudalism, to capitalism, to socialism, and so on'. Thus, for Marx, human natures can and do change over time

அதாவது காலகாலத்திற்கான மாறா மனித சுபாவம் என எதுவும் இருப்பதாக மார்க்ஸ் கருதவில்லை. எனவே ஆண் பெண் உறவு மேம்பாட்டையும் அவர் அதை உற்பத்தி உறவுகளின் சமூக கட்டம் என்கிற அடிப்படையில் மாறக்கூடிய ஒன்றாகப் பார்த்துள்ளார். மனிதரின் சிந்தனைக்கும் செயலுக்குமான இடைவெளி குறைந்து ஒற்றுமை இணக்கம் அதிகரிக்க அதிகரிக்க மனிதன் அந்நியமாதல் குறையும் என அவர் நம்பினார்.

இயற்கை- மானுட உறவிலும் அவர் இயக்கவியல் பார்வையை அனுசரித்தார். இயற்கையை அடக்கி மேலாண்மை செய்வது என்பதை மார்க்ஸ் நிராகரித்தவராகவே இருக்கிறார். காந்தியால் இங்கு மார்க்சை சந்திக்க முடியும். இங்கு பிரவுன் மார்க்சை அழகாக விளக்குவார்.

To dominate nature would lead to the domination of others, since for Marx nature is, in a dialectical sense, part of humanity. It is humanity's inorganic body.

மார்க்சின் கீழ்கண்ட வரிகள் பிரவுன் பேசியதை வலுப்படுத்துவதாக இருக்கும்.

To say that man lives from nature means that nature is his body with which he must remain in a continuous interchange in order not to die. The statement that the physical and mental life of man, and nature, are interdependent means simply that nature is interdependent with itself, for man is a part of nature

அலிசன் ஜாக்கர் என்பவர் மார்க்ஸ் ஏன் பெண்களின் பேறுகால குழந்தை உற்பத்தியை கவனத்தில் கொள்ளவில்லை என கேள்வி எழுப்புகிறார். அதை வெறும் biological reproduction எனப் பார்த்து விட்டு

விடுகிறாரா எனக் கேட்கிறார்.அது உழைப்பு பிரிவினையில் (division of labour ல்) வராதா என மிக முக்கிய வினாவை எழுப்புகிறார்.

இதற்கு பதிலாக பிரவுன் காட்டுவது, அலிசன் மார்க்சின் அந்நியமாதலை வெறும் உற்பத்தி கேந்திர நிகழ்வாக பார்க்காமல், அனைத்து அம்சங்களிலும் நீட்டித்து பார்க்க வேண்டும் என்பதாக இருக்கிறது. பாலின உறவுகளிலும் பாருங்கள் என்கிறார்.

மார்க்சின் அதிகம் மேற்கோளாக காட்டப்படாத இந்த வரிகளை பிரவுன் தருகிறார்.

The relation of man [Mann] to woman [Weib] is the most natural relation of human being to human being. It indicates, therefore, how far man's [Mensch] natural behavior has become human, and how far his human essence has become a natural essence for him, how far his human nature has become nature for him. It also shows how far man's [Mensch] needs have become human needs, and consequently how far the other person [Mensch], as a person, has become one of his needs, and to what extent he is in his individual existence at the same time a social being

குடும்பம் என்பது குறித்தும் அதன் தன்மை குறித்தும் மார்க்சிற்கு இப்படிப்பட்ட கருத்து இருந்தது

The organisation of the family is conditioned by the general development of society. Only certain family-structures can occur at a definite stage of development.

குடும்பத்தில் ஆண் தலைமைதான் பிற உறுப்பினர்களின் உழைப்புத்தன்மையையும் நிர்ணயிப்பதாக இருக்கிறது என்ற எதார்த்தத்தை மார்க்ஸ் கணக்கில் கொள்ளாமல் இல்லை. மார்க்ஸ் இவ்வாறு சிந்தித்ததையும் நம்மால் பார்க்கமுடிகிறது

Obedience, piety, fidelity in marriage, etc.' may be the ideological and moral element of the family 'but the real body of the family . . . [is] the property relation, the exclusive attitude in relation to other families, forced cohabitation - relations determined

by the existence of children, the structure of modern towns, the formation of capital, etc'

ஒரு சமுகத்தில் பாட்டாளிகள் ஏற்படுத்தும் புரட்சியாலேயே அங்கு குடும்ப வன்முறைகள் உடனடியாக மறைந்து விடும் என்கிற மாயையில் மார்க்ஸ் இல்லை என்பதை அவரது கீழ்கண்ட வரிகள் நமக்கு உணர்த்தும்.

'The revolution did not topple all tyrannies. The evil which one blames on arbitrary forces exists in families, where it causes crises, analogous to those of revolutions'

சோவியத் சீன மற்றும் சோசலிச கட்டுமானம் செய்ததாக சொல்லப்படும் எங்கும் இதுதான் நிலைமை என பிரவுன் தன் வாதமாக இதை முன் நகர்த்தியுள்ளார். (பக் 57/243)

ப்ரவுன் இங்கு சொல்லவருவது : Marx notes two principal aspects of women's oppression. The first of these is institutional. The law itself recognises the authority of the husband over his wife. The second involves social relations more generally.

இந்த பொது சுரண்டல் முதலாளித்துவத்தை ஒழிக்காமல், குடும்ப சுரண்டலிலும் மாற்றம் வராது என பொதுவாக உலகம் முழுதும் மார்க்சியர்கள் எண்ணி வந்ததைத்தான் பெண்ணியவாதிகள் விமர்சித்து வருகின்றனர். வீட்டிலும் நாட்டிலும் பெண்ணிய உரிமை என்பதை சோசலிச மாற்றம் என்கிற பின் தேதிக்கு ஏன் ஒத்தி வைக்கிறீர்கள் என அவர்கள் வினா எழுப்பினர். இது ஆண் ஒவ்வொருவரையும் பார்த்து கேட்கப்பட்ட கேள்வித்தான்.

வர்க்கப் போராட்டம், பாலின சமத்துவப் போராட்டம் இரண்டையும் தனித்தனியான ஒன்றாகவோ, வர்க்கப்போராட்டத்திற்கு துணையான 'செகண்டரி' தான் பாலினப் போராட்டம் என்றோ மார்க்ஸ் சொன்னார் என்பது அவரை மிக குறுக்கி புரிந்துகொள்வதாகும் என பிரவுன் ஏற்கிறார்.

கம்யூனிஸ்ட்கள் ‘communal ownership of women’ என்பதற்காக நிற்கிறார்கள் - அவர்கள் பெண்களையும் பொது உடைமையாக்கிவிடுவார்கள் என்ற குற்றச்சாட்டை எங்கெல்ஸ் கடுமையாக மறுத்து எதிர்வினை ஆற்றினார். சோசலிசம் என்பது பாலின தொழிலாளர் விமோசனத்தையும், அப்படியான ஒன்றை சமுகத்தில் இல்லாமல் ஆக்கி பெண் கண்ணியத்தை மீட்கக்கூடிய சக்தி கொண்டதாக இருக்கும் என எங்கெல்ஸ் எழுதினார்.

மார்க்ஸ் எங்கெல்ஸ் இருவரும் மானுட அனைத்து உறவுகளையும் வெறும் ரொக்கப்பண உறவாக சுருக்கி கௌரவத்தை பாழ்படுத்தியதாக முதலாளித்துவம் மீது விமர்சனம் வைத்தனர். அதன் மீட்சிக்கு பாட்டாளிகள் முதன்மைக் கருவிகள் என அவர்கள் கருதினர். மாறிவரும் சமுக நிலைமைகளில் எழுகிற உரிமைக் குரல்களுக்கு செவிமடுத்து மார்க்சியர் ஆங்காங்கே தங்கள் அன்றாட போராட்டங்களை வலுப்படுத்தும் பயிற்சியில் இல்லாமல் இல்லை. இந்தியாவில் பாலின சமத்துவ போராட்டம் வலுப்பட்டு வருகிறது. பார்க்கலாம். நல்வாழ்த்துகள்

8-3-2025

15. இர்பான் ஹபீப்- சோசலிசம்

மார்க்சிய வரலாற்று அறிஞர் இர்பான் ஹபீப் எடிட் செய்த புத்தகம் on Socialism. 2009ல் அலிகார் வரலாற்றாய்வாளர் சொசைட்டி சார்பில் துலிகா கொணர்ந்த புத்தகம். 2018 வரை 5 பதிப்புகளைக் கண்டது. பின்னர் புதிய பதிப்புகள் வந்தது பற்றி எனக்கு தெரியவில்லை.

மார்க்ஸ் முதலாளித்து சமுதாயத்தின் போக்குகள் அதன் உபரி சுரண்டல் குறித்து தான் தன் வாழ்நாளை செலவிட்டார். மார்க்ஸ் மற்றும் எங்கெல்ஸ் மூலவர்கள் என்ற வகையில் ஆங்காங்கே அவர்கள் விழைந்த, ஆய்வில் வந்தடைந்த சோசலிச சமுதாயம் குறித்து ஆங்காங்கே தொட்டுச் சென்றனர். தோழர் இர்பான் ஹபீப் அவர்களின் எழுத்துக்களில் கிடைத்தவற்றை extracts என்ற வகையில் இந்நூலில் எடுத்து தரும் உழைப்பை செய்துள்ளார்.

இந்நூலில் 6 அத்தியாயங்களை அவர் அடுக்கியுள்ளார். மார்க்ஸ் எங்கெல்ஸ் குறிப்பிகள் முதல் மூன்று அத்தியாயங்களில் வருகின்றன. மூலவர்களைப்போலவே லெனின் மிக முக்கிய கோட்பாட்டளாராகவும், 1917 அக்டோபர் புரட்சி மூலம் ருஷ்யாவில் அவர்கள் சரியெனக் கருதிய சோசலிச கட்டுமான வேலைக்கான கால்கோள் ஊன்றியவராகவும் கருதப்படுகிறார். அவர் குறிப்புகளிலிருந்து தேர்வு செய்து நான்காம் அத்தியாயத்தை இர்பான் தந்துள்ளார்.

லெனின் மறைவிற்கு பின்னர் ஓரளவு கோட்பாட்டாளராகவும், சோசலிச கட்டுமானம் என்பதை , தான் சித்தரித்த மார்க்சிய லெனினிய வகையில் இழுத்துச் சென்றவராகவும் பார்க்கப்படுகிற ஸ்டாலின் குறிப்புகள் 5 ஆம் அத்தியாயத்தில் இடம் பெற்றுள்ளன.

சீனாவில் சோசலிச கட்டுமான சோதனைக்கு அடிக்கல் இட்டு அதை ஓரளவிற்கு தனது மார்க்சிய லெனினிய புரிதலில் சீனக்கட்டுமானமாக வெளிப்படுத்திய மாவோ எழுத்துக்களிலிருந்து எடுக்கப்பட்டவை 6வது அத்தியாயத்தில் இடம் பெற்றுள்ளன.

எடிட்டர் குறிப்புகள் என்கிற வகையில் இர்பான், இறுதியில் The Marxian Theory of Socialism and the Experience of socialist Societies என்பதை எழுதியுள்ளார்.

முதல் பகுதி மார்க்ஸின் கம்யூனிஸ்ட் அறிக்கை மற்றும் மூலதன முதல் பாகத்திலிருந்தும், எங்கெல்சின் 1847 principles of communism என்பதிலிருந்தும் தரப்பட்டுள்ளது.

இதில் இன்றும் கவனிக்கப்படவேண்டிய சில வரிகள் (நான் உணர்வதை எடுத்துக்கொண்டுள்ளேன்.)

The first step in the revolution by the working class is to raise the proletariat to the position of ruling class, to win the battle of democracy

Combination of agriculture with manufacturing industries, gradual abolition of the distinction between town and country by a more equitable distribution of the population over the country.

Free education for all children- abolition of children's factory labour- combination of education with industrial production.

Education will enable young people quickly to go through the whole system of production, it will enable them to pass through from one branch to another according to the needs of society or their inclinations

மார்க்சிய புரிதலில் அவசிய உழைப்பு நேரம் மற்றும் உபரி உழைப்பு நேரம் என்பது அடிப்படையான உரையாடல். முதலாளித்துவ சமூகத்திலிருந்து பிறக்கும் சோசலிச சமூகத்தின் ஆரம்பம் , அதன் முந்திய சமூக சாயல்களை அறவே நீக்கிய ஒன்றாக இருக்காது என்பதும் அங்கு புரிதலாக இருக்கும். இந்த இடத்தில் மார்க்ஸ், புதிய சமுதாயத்தில் உழைப்பு நேரம் necessary labour time என்கிற கோட்பாட்டு அடிப்படை இருந்தாலும் அது சற்று நீட்டிய நேரமாகத்தான் அமையும் என விளக்கியிருப்பார்.

The notion of means of subsistence would considerably expand, and the labourer would lay claim to an altogether different standard of life. ..because a part of what is now surplus labour, would then count as necessary labour, I mean the labour of forming fund for reserve and accumulation என மார்க்ஸ் எழுதியதை இர்பான் மூலதனம் வால்யூம் 1 டோனா தார் எடிட் செய்ததிலிருந்து பக் 539-540 தந்திருப்பார்.

இன்னொரு சுவையான செய்தி எங்கெல்ஸ் கேள்வி பதில் கம்யூனிச கோட்பாட்டில் கிடைக்கிறது. அது கேள்வி 21 what influence will the communist order society have upon family.

எங்கெல்ஸ் பதில் விரிவாக செல்லும் . அதில் பொருத்தமான வரிகள்

It will make the relation between the sexes a purely private relation which concerns only the persons involved, and in which society has no call to interfere-

..destroying twin foundation hither to existing the marriage and the dependence through private property of the wife upon husband and children upon parents. (இதை common rights over women என சொல்வதாக கொச்சை படுத்துவர்களை எங்கெல்ஸ் விமர்சிப்பார்). Prostitution is rooted in private property, communist organisation puts an end to it என எங்கெல்ஸ் எழுதியிருப்பார்.

2023

ap 22 2025

16. அரசியல் மார்க்ஸ்

LeftWord பதிப்பகம் சார்பில் 2023ல் வந்த நூல் 'The Political Marx'. மார்க்சிய அறிஞர் அய்ஜாஸ் அகமதுடன் (1941-2022) மார்க்சிய ஆய்வாளர் விஜய் பிரசாத் நடத்திய உரையாடல் - நூல் வடிவம் பெற்றுள்ளது. இரண்டு அறிஞர்களும் ஏராள நூல்களை எழுதியவர்கள்.

இந்த நூலில் விஜய் பிரசாத் தன் கேள்விவழி உரையாடல் மூலம் அய்ஜாஸ் அவர்களின் மார்க்ஸ் குறித்த உரத்த சிந்தனையை வெளிக்கொணர்ந்துள்ளார். மார்க்சின் 4 நூல்களை இருவரும் எடுத்து அவற்றின் அரசியல் முக்கியத்துவத்தை வெளிக்கொணரும் வகையில் விவாதித்துள்ளனர். அந்த 4 நூல்கள்

கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ, ஜெர்மன் தத்துவம், 18வது புருமர், பிரான்சில் வர்க்கப்போராட்டங்கள்.

இந்நூல்கள் எந்த சூழலில் பிரதியாக்கப்பட்டன, எப்படி ஒன்றுக்கு ஒன்று ஊடாடி துணை நிற்கின்றன. லெனின் தனது அரசும் புரட்சியும் என்கிற நூலை இந்த நூல்களின் துணைகொண்டு எப்படி வளப்படுத்தி, மார்க்சிய இலக்கியத்திற்கு மேலதிக பங்களிப்பை செய்தார் என்பது இந்நூல் செல்லும் விவாத திசையின் சாரம் எனலாம்.

கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ 1848ல் வந்தது. ஜெர்மன் தத்துவம் எழுதப்பட்டு அப்படியே கிடந்து, டேவிட் ரியாஸ்னாவ் முயற்சியால் 1932ல் தான் வெளிஉலகிற்கு கிடைத்தது . 18வது புருமர் லூயிபோனபார்ட் 1852 ல் வந்தது. பிரான்சில் வர்க்கப்போராட்டங்கள் 1871ல் வந்தது.

இந்நூலில் இருவரும் German Ideology என்பதில்தான் உரையாடலை தொடங்கியுள்ளனர். இதை மார்க்சிய சிந்தனைக்கான துவக்கத் தருணமாக வர்ணிக்கின்றனர். இதில் உலகை மாற்றும் வரலாற்று செயல்வழிகள் பேசப்படுகின்றன. இந்த வரிகளை

உரையாடலிலிருந்து பிரித்து தருகிறேன். (இப்படி செய்வது அவ்வளவாக உகந்த ஒன்றல்ல)

Knowing world without acting upon it to change it is pure idealism. Marx comes to see the centrality of acting in history and upon history. Praxis is at the centre of the epistemology. Here production.

இதிலிருந்து அவர் கூலி உழைப்பு, சமூக உற்பத்தி, தனி அபகரிப்பு, முரண்பாடு என உயர்த்திச் செல்வார் மார்க்ஸ்.

அடுத்து மார்க்ஸ் - ஹெகல், பாயர்பாகை கடந்து செல்தல் பற்றி விவாதிக்கின்றனர். இங்கு அய்ஜாஸ் அழகாக ஒன்றை இப்படி விளக்குகிறார்.

The nature itself is historically produced (அதாவது மனிதன் பார்க்கத்தொடங்கிய பின் என புரிந்துகொள்தல்) . We do not know in the way and shape in which physical nature existed before human beings started acting on it, and the nature itself has a history

சிறு வயதில் விளையாட்டாக நாங்கள் கவிதை ஒன்றை எடுத்துக்காட்டி சொல்லி சிரிப்போம்.

நினைவிற்கு வருகிறது.

என் பெயர் ராம்கோவிந்த் (கவிதையில் ராம் சேஷன் என நினைவு)

சூரியன் பெயர் சூரியன்

என் பெயர் எனக்குத் தெரியும்

சூரியன் பெயர் சூரியனுக்கு ?

அடுத்து அவர்களின் உரையாடல் சுற்றி வருவது அந்நியமாதல். நிஜ உலகம் என ஏதாவது பிரதிபலிப்பு இருக்குமா- இல்லை குறித்த காலத்தின் பிரதிபலிப்பா எனப் பேசுகின்றனர். ஜெர்மன் தத்துவத்தில் ‘economic factors- consciousness’ direct relations அதிகம் பேசப்பட்டதை அகமது தொட்டுக்காட்டுகிறார்.

மானிபெஸ்டோ குறித்த உரையாடல் அடுத்து நடக்கிறது.அய்ஜாஸ் எடுத்தவுடனேயே தெளிவு படுத்துகிறார்

It is not a descriptive book- not a description of capitalism but a reflection on the logic of capitalism.

தன்னை மீள் விரிவு செய்துகொள்ளாமல் முதலாளித்துவம் ஜீவிக்காது எனப்பேசும் அரசியல் பிரதி என அய்ஜாஸ் சொல்கிறார். இன்னொரு சுவாரஸ்யமான தகவல் 1848 ல் மார்க்ஸ் இதை எழுதிய காலத்தில் உலகம் முழுதும் 500 தொழிலாளர் அமைப்புகள் கூட இல்லை. ஜெர்மன் புகலிட தொழிலாளர்களின் லீக் அமைப்பிற்காக எழுதப்பட்ட ஒன்று.

இன்னொரு விளக்கம். சோசலிசம் வந்தே தீரும் என மார்க்ஸ் சொல்வதான பொது புத்தி குறித்து. பொருதும் வர்க்கங்கள் ஒன்று முன்னேற்றகரமான சோசலிச சமூகம் நோக்கி செல்லவேண்டும்- இல்லையெனில் பொது அழிவை நோக்கிச் செல்லும். இதையே ரோஸா லுக்சம்பர்க் socialism or barbarism என விரித்து எழுதியதைக் காண்கிறோம். அய்ஜாஸ் விஜய் இருவரும் சோசலிசம் வரலாம் என்பது ஒருவகை statement of optimism என்கின்றனர். Grasping the moment - creating political framework ideologically and intellectually என்கின்றனர்.

18வது புருமர் பற்றி அடுத்து இருவரும் உரையாடுகின்றனர். உற்பத்தி வர்க்க மோதல் , பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம், வர்க்கங்கள் உதிர்தல் போன்ற கருத்தாக்கங்களை விவாதிக்கின்றனர். இதில்தான் அடிக்கடி மேற்கோளாக்கப்படும் வரிகள் வருகின்றன

Men make their history, but they do not make it as they please

The tradition of all dead generations weighs like a nightmare on the brains of the living.

இவற்றை deep dense text எனச் சொல்கின்றனர். 1918ல் லெனின் தனது அரசும் புரட்சியும் நூலில் மானிபெஸ்டோ, 18 வது புருமர், பிரான்சில்

வர்க்கப்போராட்டங்கள் ஆகியவற்றிலிருந்து எடுத்துக்கொண்டதை அய்ஜாஸ் சொல்கிறார். 18வது புருமரில் கற்க வேண்டிய ஒன்றை அய்ஜாஸ் அழுத்தமாகத் தருகிறார்.

Underneath the surface what are the actual class forces that are active, what are the class determinations of day to day politics and how can you analyse those..அதாவது how class struggle manifests itself in day to day politics

அய்ஜாஸ் வேறு ஒன்றையும் கவனப்படுத்துகிறார்.அன்றாட அரசியல் வாழ்வில் போராட்டக்களத்தில் ஊடாடி மறித்துக்கொள்ளும் சக்திகளை அறிந்தால்தான் மார்க்ஸ் பேசுகிற வர்க்கப்போராட்டம் என்பதை விளங்கிக்கொள்ள முடியும் என்கிறார். அவர் சொல்லும் அழகான வரிகள்- முக்கியமான வரிகளும் கூட.

Class does not appear when you are dealing with actual political struggles. Class appears to you embodied in the political forces.it does not appear in front of you in its own purity and wholeness

1871ல் வந்த பிரான்சில் வர்க்கப் போராட்டங்கள் நூல் குறித்ததுடன் இந்நூல் முற்றுப்பெறுகிறது. லெனின் சோவியத் புரட்சி கடந்து 73 வது நாள் உற்சாகத்துடன் ‘டான்ஸ்’ செய்தாராம். பாரிஸ் கம்யூன் புரட்சியின் வாழ்நாளை சோவியத் விஞ்சிவிட்டதே அவரின் உற்சாகத்திற்கு காரணம்.

பாரிஸ் கம்யூன் சுற்றிய இந்த உரையாடலில் முக்கியமான கருத்து ஒன்று சொல்லப்பட்டுள்ளது. அரசு உதிர்தல் என்பதுடனும் அது தொடர்புபடுத்தி பேசப்படுகிறது. Socialist Non State - அரசற்ற சோசலிசம் என்கிற கருத்தாக்கம் , அது எப்படி இருக்கலாம் என்பது அதன் விரிந்த பொருளில் மார்க்ஸால் பேசப்படவில்லை.

பெரும்பான்மை உழைக்கும் மக்களே ஆட்சி அதிகாரம், நாடாளுமன்றம், நீதி நிர்வாகத்தில் என்கிற புரிதலை லெனின் தந்தார். அதாவது distributes functions to the whole specially majority working people என்கிற சோவியத் புரிதல். இங்கு லெனின் எழுதியதை சுட்டிக்காட்டுகின்றனர்

Our revolution will be invincible, if it is not afraid of itself if it transfers all power to the proletariat…

நீளம் கருதி நிறுத்துகிறேன். சற்று அடர்த்தியான உரையாடல்கள் கொண்ட நூல்தான். மேற்கூறிய நான்கு மார்க்ஸ் மூல நூல்களுக்கு , இந்த நூல் ஜன்னலாக இருக்கும்.

22-4-2025

17. தோழர் பால் ஸ்வீசி நினைவில்..

அமெரிக்க மார்க்சிய அறிஞர் பால் ஸ்வீசி மறைந்து 20 ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர் மறைந்தபோது எழுதிய கட்டுரை ஒன்றை தேடி எடுக்க முடியவில்லை.

1949ல் ஸ்வீசி தனது தோழர் லியோ ஹூபர்மென் உடன் இணைந்து புகழ் வாய்ந்த Monthly Review யைக் கொணர்ந்தார். இன்றும் இடது உலகில் பேசப்பட்டு வரும் மாத இதழது. எனக்கு எப்படி யாரால் அறிமுகமானது என மறந்துவிட்டது. 2006 வரை (எப்போது வாங்க ஆரம்பித்தேன் என்பதும் நினைவில் இல்லை) வீட்டிற்கு வந்தது.

அமெரிக்க இதழ் மன்த்லி ரிவ்யூ , கரக்பூர் மே வ ஏஜென்சி ஒன்றின் மூலம் , எனக்கு வந்த நினைவு. அப்போது அந்த இதழுக்கு உலகம் முழுவதும் 8000 subscribers இருந்திருக்கலாம். அதில் ஒரு சந்தாதாரர் என்கிற பெருமிதம் (தேவையா என்பது வேறு) இருந்த நேரமது.

பழைய party life, Janata weekly of socialists, Mainstream, Frontier weekly என இதழ்கள் ஆண்டுதோறும் bound செய்யப்பட்டதுண்டு. AITUC , CITU, INTUC, BMS, NFTE பத்திரிகைகளை பவுண்ட் செய்த தோழர் தீனன் தானே இவற்றை எடுத்துப் போய் பவுண்ட் செய்து தந்துகொண்டிருந்தார். ஊரில் இருந்த 'வீட்டு மாடி ' நூலகத்திற்காக இருந்தது. சென்னை வரும்போது அப்படியே பெரும்பாலானவற்றை விட்டுவிட்டு வரவேண்டிய நிலை ஏற்பட்டது. சமீபத்தில் மறைந்த தோழர் கார்த்தி ஆர்வத்துடன் அவரால் இயன்ற அளவு பராமரித்ததாக தெரிவித்திருந்தார். எல்லாம் soiled ஆக , பிரித்தாலே எனது சைனஸ் வியாதியை தூசு ஒவ்வாமையை அதிகரித்து விடுவதை உணர்ந்தேன்.

எந்த சேர்த்து வைப்பாலும் ஆகப்போவதென்ன என்றாலும், மனம் அவற்றை நாடாமல் இருப்பதில்லை. பால் ஸ்வீசி புத்தகம் ஒன்றை (மாடர்ன் காபிடலிசம்) படிக்க ஆரம்பித்த நேரத்தில் , இந்த நினைவுகள் எழுந்தன. அவரின் எழுத்துக்கள் அவ்வப்போது மன்த்லி ரிவ்யூ வில் வரும். ஆர்த்தோடாக்ஸ் மார்க்சியம் குறித்து விமர்சன

பார்வை வைத்திருந்தார். அதே நேரத்தில் அம்மார்க்சிய எழுத்தாளர்களின் பங்களிப்பையும் விதந்து பேசுவார். தன் மீது நியோ மார்க்சியர் என்கிற லேபிள் ஒட்டப்படுவதையும் அவர் கவனமாக தவிர்க்க விரும்பினார்.

மார்க்ஸ் காலத்திற்கு பின்னர் பெருமளவில் மாறிபோன புதிய முதலாளித்துவம், ராட்சத கார்ப்பரேஷன்கள்- managerial bureaucrats பங்களிப்புகள், ஏகபோகங்களின் காலத்தில் அரசு நிறுவனத்தின் role, சோவியத் சோசலிச பொருளாதார கட்டுமான பிரச்சனைகள், புரட்சிக்கு பிந்திய சமூக கட்டுமான பிரச்சனைகள் என ஏராள அம்சங்களில் அவர் தனியாகவும், தன் அறிஞர் தோழர்களுடன் இணைந்தும் ஆய்வுகளை நமக்கு கொடுத்துச் சென்றுள்ளார்.

பொருளாதார அறிஞர்கள் ஸ்கும்பீட்டர், கலேக்கி, கால்பிரயத், பரேட்டோ, மார்ஷல், கீன்ஸ் , பாரன் என பலரும் (நான் என்னத்த கண்டேன்) ஸ்வீசி நூலில் வருகிறார்கள். Ten Great Economists, நீலகண்டன் அறிமுகத்தில் வந்த பொருளாதார மேதைகள் குறித்த மற்றொரு நூல் (இரண்டு அட்டைப்படமும் ஒரே மாதிரி இருப்பதாக எனக்கு தோன்றும்) என கொஞ்சம் மேய்ந்திருந்தாலும், பொருளாதார அறிவு எனக்கு கிஞ்சிற்றும் இல்லை. ஆனாலும் பால் ஸ்வீசி மற்றும் மன்த்லி ரிவ்யூ எழுத்தாளர்கள், ஆகார் புக்ஸ் வெளியீடு என அவ்வப்போது தேடிப் போகாமல் இல்லை.

மார்க்சின் காபிடல் முதல் வால்யூம் இரு முறை , இரண்டாம் வால்யூம் ஒருமுறை, மூன்று பாதியில்- 30- 35 ஆண்டுகளில் பார்த்து கிழித்தது என்கிற லட்சணம் வேறு. எனக்கு புரியலை என்பதைவிட, என் உழைப்பு அவற்றில் போதவில்லை என்பதுதான் சரியாக இருக்க முடியும். அரசியல் பொருளாதாரத்தை வெறும் பார்முலா மாதிரி உள்வாங்க முடியாத கஷ்டம். Abstractions decoding என்பதில் உள்ள சங்கடம். மானுட அறிவெல்லாம் உத்தேச முன்மொழிவுகள் , அவை இறுதியான absolute இல்லை என்கிற மனத்தடை. கடவுள் முதல்

கம்யூனிசம் வரை கற்பிதங்களே - பெரும் கதை உரையாடல்களே என்கிற பின்நவீனத்துவ பொல்லாப்பு..என பல ரீங்காரங்கள்.

சில நேரம் காந்தியை காட்டி மனது தப்பிக்கவும் செய்கிறது (இது ரொம்ப ungandhian நெறி என்றாலும்) . காந்தி சொன்னார்

Every human being has the right to live and therefore find the wherewithal to feed himself and where necessary to clothe and house himself . But for this simple performance we need no assistance from economists or their laws.

Nature produces enough for our wants from day to day, and if only everybody took enough for himself and nothing more, there would be no pauperism in this world..but so long as we have got this inequality, so long we are thieving.

போகட்டும்..பால் ஸ்வீசியை நேசிக்கக்கூடிய மன்த்லி ரிவ்யூ குழாமினர் இருக்கத்தான் செய்கிறார்கள்.. 18-6-2024

18. மார்க்சும் பாட்டாளியும்

Machinery and Modern Industry என்கிற மார்க்சின் மூலதன வால்யூம் 1 ல் இடம் பெற்ற அத்தியாயத்தை மிகவும் சிலாகித்து பால் ஸ்வீசி பேசுகிறார்.

ஸ்வீசியின் Modern Capitalism Essays ல் Marx and Industrial Revolution, Marx and the Proletariat, Notes on the centennial of Das Capital போன்றவை , நூலின் இறுதிப் பகுதியில் அடுத்து அடுத்து வைக்கப்பட்டிருக்கும் இயல்கள். கூறுவது கூறல் இருக்கும். அதனால் மார்க்சும் பாட்டாளியும் என்பதை மட்டும் எடுத்துக்கொண்டு, ஸ்வீசி முன் வைக்கும் கருத்துக்களை சொல்ல விழைகிறேன்.

ஸ்வீசியின் இந்த மூன்று இயல்களை வாசிக்கும் போது, காந்திய பொருளாதாரம் குறித்த எண்ணங்களும் எழுந்தது. Non capitalist path alternate economic pattern என்பதற்கு காந்திய பொருளாதாரவாதிகள் அழுத்தம் கொடுத்து (less capital availability but more work force context) செயல்பட முனைந்ததை பார்க்க முடிகிறது. போதிய ஆதரவு

பெறமுடியாமல், அவர்களால் அதை மேலெடுத்து செல்ல முடியவில்லை. ஸ்வீசியை பார்ப்போம்.

Marx's conceptualisation of the Industrial Revolution is the basis of his theory of economic development

For Marx, the essence of the Industrial Revolution was the replacement of handwork of machinery, a process which takes place 'from the moment that the tool proper is taken from man and fitted into a mechanism'- construct machines by machines.

The technical basis (making science a productive force) of the industry is revolutionary, while earlier modes of production conservative.

The effects of machinery on the one hand, to expand, homogenise and reduce the costs of production of the labour force and, on the other hand, to slow down the rate of increase of labour force- the demand for labour.

A new and international division of forces suited to the requirements of modern industry springs up, converts one part of globe into a chiefly agri field for supplying the other part- the industrial field (ரோசா லுக்சம்பர்க் இது குறித்து விரிவாக ஆய்வு செய்துள்ளார்)

In Holy Family Marx said " when socialist writers ascribe historical role of proletariat, not all because they take proletarians as gods..because it cannot emancipate without abolishing the inhuman conditions

In Marx's view the proletariat was not a revolutionary force from its birth but on the contrary acquired this quality in the course of the capitalist development

In the manufacturing phase of capitalist development, craft consciousness rather than class consciousness as the hall mark of proletariat. Capitalism in its manufacturing stage, technologically conservative , also was highly resistant to political and social change.

மேற்கண்ட பாரக்களில் ஒன்று தெளிவாயிருக்கும். மார்க்சியர்கள் தொழிலாளிவர்க்கம் என எந்த புனிதத்தையும் ஏற்றி அதை கடவுளாக

தொழுவதில்லை. பிறக்கும் போதே தொழிலாளி புரட்சிகரமானவன் என மார்க்சியம் பேசவில்லை. முதலாளித்துவ சுரண்டல், அசமத்துவ சூழலில் அவன் புரட்சிகரமாக மாறலாம்- மாறவேண்டும் என்கிற முன்மொழிவே நமக்குக் கிடைக்கும்.

Marx viewed a radical change in the mode of production in one sphere of industry involves a similar change in other spheres. It is the capitalist employment of machinery and not merely capitalism in general, which generates the modern proletariat as Marx conceived. In modern industrial phase , the political power of proletariat also emerging.

Paul Sweezy 's equation

Manufacturing stage : Technology conservative, proletariat non revolutionary

Modern industrial stage : Technology revolutionary, proletariat also revolutionary.

இந்த சமன்பாட்டை இன்றுள்ள பொருளாதார சூழலுக்கு நகர்த்திப்பார்த்து- நம்மிடம் வர வேண்டிய கேள்வி

In the international financial capital neo liberal globalisation stage ? தொழில்நுட்ப வளர்ச்சியும் , ஒரு வகையில் உற்பத்தி கருவிகளாக, தொழிலாளர் புரட்சிகரத் தன்மையும் மார்க்ஸ் காலத்தில் உணர்த்தப்பட்டது போல நேர் விகிதத்தில் அமைகிறதா?

Technology more and more revolutionary but can we say so about proletariat or about working class? Experiences does not help us to say so. Whether the forces of revolutionary ness changed ?

பால் ஸ்வீசி இப்படி ஒரு முக்கிய கேள்வியையும் மார்க்சியர் விடை தேடுவதற்காக வைத்துச் செல்கிறார். புரட்சிகர சூழல் இல்லாத போது, தொழிலாளர் உணர்வில் ஏற்படும் மாற்றமென்ன.. அது எப்போதும் புரட்சிகர உணர்வின் உச்சத்திலேயே இருக்கக்கூடியதா?

In the absence of a revolutionary situation, would the proletariat tend to become more or less revolutionary?. It would have been a logical question for Marx when he was

writing the capital, a hundred years later it seems to be not only a logical but an inescapable question for Marx's followers.

ஸ்வீசியின் கேள்விகள் இன்றும் பொருட்படுத்தி பார்க்கத்தக்கன.

25-6-2024

19. லூயி பிஷரின் லெனின்

லூயி பிஷர் என்றால் அவர் எழுதிய The Life of Mahatma Gandhi தான் இந்திய வாசகர்களுக்கு உடனடியாக நினைவிற்கு வரும். லூயி பிஷரின் காந்தி வாழ்க்கை வரலாறு மிகச் சிறப்பான ஆக்கம் என புகழ்பெற்றது. அப்புத்தகம் 1951ல் வந்தது.

லூயி பிஷர் ஏராள புத்தகங்களை எழுதியுள்ளார். காந்தி வாழ்க்கையை எழுதிய பிஷர் லெனின் வாழ்க்கை வரலாறையும் மிகப்பெரிய புத்தகமாக எழுதியுள்ளார். உயரமான 700 பக்கங்கள் கொண்ட ஆதார ஆய்வுடன் கூடிய சிறந்த புத்தகமது. பிஷர் எழுதி 1964 ல் வெளியான புத்தகம்.

லெனின் 54 ஆண்டுகளே இவ்வுலக வாழ்வில் (870- 1924) இருந்தவர். 1917 அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் உலகம் அறிய உயர்ந்தார். மார்க்சியம் என்பதுடன் லெனினியம் என்பதும் இணைக்கப்படும் அளவிற்கு உலகின் பல்வேறு நாடுகளின் இளைஞர்களை அறிவுஜீவிகளை உழைப்போரை கம்யூனிஸ்ட் ஸ்தாபன முறைப்படுத்திக்கொள்ள அவர் பெரும் ஆதர்சன மனிதராக தலைவராக இருந்தார். போராடுகின்ற மனிதர்களின் காதுகள் அவருக்காக திறந்து இருந்தன. அவர் இப்படி சொல்லியுள்ளார் என்பது எந்த argument - debate லும் மார்க்சியர்களிடம் செல்லத்தக்கதானது.

இந்திய விடுதலைப் போர் காலத்தில் பலரிடத்தும், விடுதலைக்குப் பின்னர் இன்றுவரை இடதுசாரி எண்ணம் கொண்டவர்களிடத்தும் பெரும் செல்வாக்கு செலுத்தும் பெயர் லெனின் என்பது.

பிஷர் 50 அத்தியாயங்களில் லெனின் வாழ்க்கை, ருஷ்ய சோவியத் வரலாறு, இடது இயக்கங்கள்- முரண்கள், போல்ஷ்விக்குகளின் வெற்றி ஆட்சி - அவர்கள் எடுத்த முடிவுகள் துயர்கள் என பல்வேறு அம்சங்கள் குறித்து இதில் விவாதித்துள்ளார். லெனின் கிருப்ஸ்காயா வாழ்க்கையும் சேர்த்தே பேசப்பட்டுள்ளது. பிஷர் வரிகளில்

..childless but leaving many ideological heirs and millions of political offspring throughout the world. எவ்வளவு சத்திய வரிகள்.

லெனின் அவரது காலத்தின் குழந்தை- புரட்சியாளர் என்பதை சொல்லும் வரிகளாக

Lenin might have become a professor of economics, a successful lawyer or chess champion. Nothing in his ancestry, childhood or adolescence offers a clue to his subsequent career as revolutionary, dictator and founder of soviet state. He was a child of Russia turbulent, violent and the fruit of a tree with long roots in her varied soil.

பிஷர் வாசகரை சோர்வடையாமல் வசீகரித்து இழுத்துச் செல்லும் நடையை கையாண்டவர். லெனின் போன்ற கோட்பாட்டளர்களை விளக்குவதில் நல்ல தேர்ச்சி இருந்தால்தான் அது சாத்தியமாகும். இல்லையெனில் வாசகர் எதையும் உள் வாங்காமல் அந்த எழுத்துடன் connect ஆக மாட்டார். நச்சென பிஷர் பேசக்கூடிய இடங்கள் சுவையைக் கூட்டி வாசிப்பவரை ரம்மியமாக அழைத்துச் செல்லும்.

முடிந்தவரை ,hagiography என்ற வகையில் அமைத்துக்கொள்ளாமல் தகவல்களை தோண்டித் துருவி ஆதாரங்களின் அடிப்படையில் பிஷர் தன் பிரதியை பின்னியுள்ளார்.

லெனின் அண்ணன் ஜார் கொலை வழக்கில் தூக்கு மேடைக்கு செல்லும்போது பிஷர் காட்சிப்படுத்திய லெனின் தாயாரின் நெஞ்சுரம் பிரம்மிக்கத்தக்கத்தாக இருக்கும்.

லெனினுடன் பிறந்தவர்கள் அன்னா, அலெக்சாந்தர் (சாஷா), ஓல்கா, டிமிட்ரி, மரியா. அப்பா இலியா நிகோலவிச் உலியனாவ். அம்மா மரியா அலெக்சாண்டிரவ்னா பிளாங். அவர்கள் குடும்பம் கொஞ்சம் வசதியான கல்வி பின்புலம் கொண்ட மத்தியதர வர்க்கம். வீட்டில் அப்போதே சிங்கர் தையல் மெஷின் உண்டு. பியானோ உண்டு. புத்தகங்கள் உண்டு. அண்ணன் சாஷா கல்லூரியில். லெனினை அவரது 9 வது வயதிற்கு மேல் தான் பள்ளிக்கூடம் சேர்த்தனர்- அங்கு

ஜிம்னாசியம் என்பர். மார்க்ஸ் பள்ளியும் ஜிம்னாசியம் என்றே ஜெர்மனியில் சொல்லப்பட்டது. முதல் கிரேடு 5 க்கு 4.99 பெற்ற மாணவன் லெனின்.

அப்பா ஜனவரி 1886 ல் மறைகிறார். நிலைமைகள் மாறுகின்றன. சாஷா நரோத்னிக் இலக்கியங்கள், மார்க்சிய நூல்களை வாசிக்கலானார். புரட்சிகர இயக்கத் தொடர்பு வலுப்படுகிறது. லெனின் தான் 'கடவுள் நம்பிக்கையற்றவர்' என தன் 16 ஆம் வயதில் வீட்டில் வெளியில் சொல்லத்துவங்குகிறார். சாஷா ஜெர்மன் மொழியில் மார்க்ஸ் எழுதிய கட்டுரையை ருஷ்ய மொழிபெயர்ப்பாக தருகிறார்.

நரோத்னிக் தோழர்கள் குண்டு வீசி இரண்டாம் ஜார் மன்னரை மார்ச் 1881ல் கொலை செய்கின்றனர். இவ்வழக்கில் சாஷா சம்பந்தம் உள்ளது என அவர் கைது செய்யப்பட்டு விசாரணை செல்கிறது. அக்கா அன்னா சம்பந்தமேயில்லாமல் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்படுகிறார். மூன்றாம் ஜாரிடம் அப்பீல் செய்து மரண தண்டனையை குறைக்கலாம் என நண்பர்கள் சொல்லினர். அம்மாவின் வேண்டுகோளை அண்ணன் சாஷா எற்கவில்லை. நாட்டிற்காக நமது குடும்பம் செய்த தியாகமாக இருக்கட்டும் எனச் சொல்லி சாஷா தனது 21 ஆம் வயதில் தூக்கு கயிற்றை எதிர்கொள்கிறார். இந்த தனிநபர் அழித்தொழிப்பு வன்முறை வழி வேண்டாம். அமைப்பு வழி ஆயுதப் போராட்டம் என்கிற வழியை பின்னர் லெனின் தேடலானார்.

பார்க்க வரும் அம்மாவிடம் சாஷா கேட்டதெல்லாம் கவிதை மற்றும் புத்தகங்கள்தான். அம்மாவும் மனதை அந்த நாளுக்காக தயார் படுத்திக்கொண்டார். இங்கு பிஷர் எழுதியிருப்பது.. வாசிக்கையில் மனம் உட்கார்ந்து போகும்..

She brought the books and kissed him good bye. He was executed on may 8 ,1887. His mother accompanied him to the gallows and said " Take courage Take courage" . He had just passed his 21st birthday.

தூக்கு மேடைவரை சென்று 'தைரியமாக இரு தைரியமாக இரு' என மகனை வழி அனுப்பிய அந்த தாயை உள்ள உறுதியை பிஷர் கண் முன் காட்டியிருப்பார்

மேலும் பார்க்கலாம்.. (டிசம்பர் 2 , 2023)

2

Theory ஒன்றை ஆட்சிக்கு வந்த பின்னர் அப்படியே அமுல்படுத்த முடிவதில்லை என்பதுதான் வரலாறு பல இடங்களில் சொல்லித்தரும் பாடமாக இருக்கிறது.

லெனின் அக்டோபர் புரட்சி 1917க்குப் பின்னர் பொறுப்பேற்றவுடன் , மற்ற எந்த போல்ஷ்விக் தலைவர்களையும் விட, இதை நன்கு உணர்ந்தவராக இருந்தார். 1918ல் ரஷ்யாவில் நிலவிய ஏராள பிரச்சனைகளுடன், கட்சிக்குள்ளும் விவாதம் சூடாக நிலவியது. புகாரின் போன்ற இளம் கோட்பாட்டாளர்கள் இடது அதிவாத குழுவாக தங்கள் நிலைக்காகப் போராடினர். மக்களின் ஆதரவை பல கிராமங்களில் பெற்றிருந்த எல் எஸ் ஆர் என்கிற சோசலிஸ்ட் புரட்சியாளர்கள் தினசரி லெனின் அரசை விமர்சித்து போராடிக்கொண்டிருந்தனர். மென்ஷ்விக்குகளும் பெரிய அளவில் இருந்த்கனர். ஒற்றை கட்சி ஆட்சியை பலப்படுத்தவேண்டிய போராட்டத்தை போல்ஷ்விக்குகள் நடத்திக்கொண்டிருந்தனர்.

புகாரின் லெனின் புரட்சிக்கு முன்னர் எழுதிய state and revolution யை சுட்டிக்காட்டி, அரசு எப்போது உதிர்ந்து விழும் எனச் சொல்ல வேண்டும்- சோசலிசம் மற்றும் கம்யூனிசம் குறித்து சரியான வரையறைகள் வேண்டும் என கடுமையாக போராடினார்.

மார்ச் 1918ல் கூட்டப்பட்ட 7வது கட்சி காங்கிரசில் 5000 உறுப்பினருக்கு ஒரு சார்பாளர் என 46 பேர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தனர். பிரஸ்ட் லிட்டோவெஸ்க் அமைதி ஒப்பந்தம், அய்ரோப்பிய நாடுகளில் புரட்சி போன்றவைகளும் விவாதமாயின.

புகாரின் வாயடித்தார் 'we the left are always right'. லெனின் புகாரின் போன்ற இளம் அறிவுஜீவிகளை சற்று மென்மையாக நடத்த விரும்பினார். செல்லமாக புகாரினை புகாஷ்கா என அழைப்பாராம். ஏய் குட்டி பூச்சி என்று பொருளாம். லெனின் தனது வாதங்களை கறாராக தந்தார்.

சோசலிசம் கட்டுவது என்பது இப்போது நடைமுறை வேலை- from the area of dogma to the area of practical work- pre revolutionary speculations about post revolutionary practice were impractical. ஆகையால் சோசலிசம் என்றால் இப்படி என வரையறை செய்யமுடியாது. அரசும் பலப்படவேண்டுமே தவிர அது உடனடியாக இற்று போய்விடாது என்கிற புரிதலை லெனின் வெளிப்படுத்தினார். லெனின் புகாரினுக்கு மேலும் தெளிவுபடுத்தினார்.

The materials for a characterisation of socialism yet to exist. The bricks with which socialism will be built have not yet been made. A program is a statement what we have begun to do and of the next steps that we want to make. We are in no position to describe socialism (page 256/707 of Fisher)

இந்த விவாதங்களை லூயி பிஷரின் லெனின் புத்தகத்தில் அத்தியாயம் 12-14 களில் விரிவாகக் காணலாம்.

நேருவிற்கும் இப்படிப்பட்ட சிக்கல்கள் இந்தியாவில் நேர்ந்தது. மார்க்சிய நம்பிக்கை தோய்ந்த நேரு , சோசலிசம் குறித்து காந்தியுடனும் மற்றும் பலருடனும் விவாதங்களை மேற்கொண்டவர். ஜேபி லோகியா போன்றவர்கள் முதலாளிகளை வைத்துக்கொண்டு, நேரு சோசலிசம் கட்டுவாராம்ப்பா என கிண்டலடித்தனர். நேரு என்னிடம் சோசலிசம் குறித்து கறாரான வரையறைகளை எதிர்பார்க்காதீர்கள்- வற்புறுத்தாதீர்கள் , அதை ஒரு tendency என்று புரிந்துகொள்கிறேன் என்றார். சோவியத்தின் யூடின் அவரை கேலி செய்து எழுதினார். அஜாய் கோஷ் நேருவின் hoax என்று கட்டுரைகள் எழுதினார்.

நேருவோ அதை socialistic pattern of society என்கிற ஆட்சி பொறுப்பில் வரும் practical difficulties உணர்ந்து பேசலானார் (dec 30 2023)

3

லெனின் குறித்த லூயி பிஷரின் பெரிய புத்தகம் ஒன்றை படித்துக்கொண்டிருக்கும் போது அதில் இடம் பெற்ற lighter moment செய்தி ஒன்றைப் பார்த்தேன். லெனின் சிரித்த இடங்களையெல்லாம் பிஷர் பதிவு செய்திருப்பார். லெனின் ஜோக் அடிக்கும் இடம் கூட வருகிறது. இதெல்லாம் ஜோக்கா என சொல்லக்கூடாது. அனுபவிக்க முடிந்தால் நல்லது.

லெனின், கிருப்ஸ்காயா மற்றும் கிருப்ஸ்காயா அம்மா மூவரும் பேசிக்கொண்டிருந்தபோது அந்த ஜோக் அடிக்கப்பட்டது.

லெனின் கேட்கிறார் இரட்டை கல்யாணம் செய்தவர்க்கு பெரிய தண்டனை என்ன தெரியுமா? அவரே சிரித்துக்கொண்டே பதில் சொல்கிறார். அய்யோ "இரட்டை மாமியார்" இருப்பார்களே. இவ்வளவிற்கும் கிருப்ஸ்காயா தாயார் அவர்களுக்கு உதவிகரமாக இருந்தவர்தான். Lighter moment ஆக எடுத்துக்கொள்ளவேண்டும்.

பொலிட்டிகலாக கீழே விழுந்து மேலே வந்தவர்கள் குறித்து நரசிம்மராவ் பற்றி எழுதிய வினய் சத்பதி ஒப்பீடு ஒன்றை தந்திருப்பார். சர்ச்சில் டெங்சியோபிங் நரசிம்மராவ் எனப் போகும். அதில் டெங் பற்றி ஒரு தகவலை வினய் தந்திருப்பார்.

1960களில் மாவோவுடன் டெங்கிற்கு ஏற்பட்ட கருத்து மாறுபாட்டால் அவருக்கு வினோத தண்டனை ஒன்று தரப்பட்டதாம். டெங்கும் அவரது மனைவியும் ஜிங்ஜியாங் டிராக்டர் ஒர்க்ஷாப் பகுதிக்கு அனுப்பப்பட்டனர். தினம் காலை 6.30க்குள் அவர்கள் எழுந்து மாவோவின் எழுத்துக்களை ஒருமணி நேரம் படிக்க வேண்டும். பின்னர் தினம் டிராக்டர் ஒர்க் ஷாப்பில் உடல் உழைப்பை செய்திட வேண்டும் என்பது தண்டனையாகி அவர் அதை செய்ய நேர்ந்தது. நான்கு ஆண்டுகள் முடித்தவுடன்தான் மீண்டும் மாவோ தரிசனமே

அவருக்கு கிடைத்ததாம். பொறுமை காத்த அந்த டெங்சியோபிங் தான் பின்னர் 1970 களின் - 1980களில் சீனாவின் மாபெரும் சீர்திருத்த தலைவராக எழுந்தார். அவரது சிந்தனைகளை உலகின் பல இடதுசாரிகள் படித்தனர். வலதுசாரிகளும் அவரது மேற்கோள்களை காட்டலாயினர். (jan 5 2024)

4

லெனின் ஆட்சிக் காலத்தில் கட்சிக்குள் கடுமையான விவாதங்கள் நடந்தன. அனைவருமே ஆட்சி நிருவாகத்திற்கு புதியவர்கள். மார்க்சிய தியரியை வெகுவாக நேசித்து நம்பியவர்கள். அதை சோதிக்க விரும்பியவர்கள். தொழிற்சங்கத்திற்கு என்ன பங்கு, மரணதண்டனை இருக்கலாமா, விவசாயிகள் தங்கள் நிலத்தின் விளை பொருட்களை விற்றுக்கொள்ளும் தனியார் முறை இருக்கலாமா என பல பிரச்சனைகளில் தீவிர விவாதம் இருந்தது. விவாதம் கட்சி ஒற்றுமை என்ற எல்லைக்குள் இருக்கவேண்டும், நடைமுறை தேவைகளை புரிந்து அனுசரிப்பதாக இருக்கவேண்டும் என்கிற அறிவுரையை மட்டும் லெனின் கொடுத்து வந்தார். லெனின் , புகாரின் டிராட்ஸ்கி, லுனாசார்ஸ்கி, ஸ்டாலின் என பல கோணத்தில் ஒத்துப்போகியும் வேறுபட்டும் அவர்கள் நின்றனர். வெளியே இருந்த கார்க்கிக்கு லெனின் கூட நடைமுறை சார்ந்து பேசாமல் தியரி பேசுவது போல் பட்டது. இருவரும் விவாதங்களை மேற்கொண்டனர்.

தொழிற்சங்க சார்பில் 5 அல்லது 6 பேர் கொண்ட குழு, production விவகாரங்களை கட்டுப்படுத்துவது என்பதை லெனின் ஏற்கவில்லை. ஒரு expert manager அவர் தலைமைக்கு கட்டுப்பட்டு பாக்டரி நிருவாகம் என்கிற முதலாளித்துவ நாடுகளின் முறையை புறக்கணிக்க வேண்டாம் என லெனின் அறிவுரை கூறிவந்தார். What industry needed was bourgeois specialists, not proletarian collegiums என்றார். உரிய காலத்தில் லெனின் கொடுத்த மிக நடைமுறைச் சார்ந்த அறிவுரையாக அது தொழிற்பட ஆரம்பித்தது.

அடுத்து governmentalisation or stateisation of Trade Union என்பது பிரச்சனையானது. லெனின் party-isation என்பது தேவை எனக்கருதினார். Workers state என்பதே காப்பு - அதைத் தவிர தனியாக ஏன் trade unions என்கிற அளவிற்கு கூட கட்சியில் விவாதம் சென்றது.

இந்த பிரச்சனை இந்திய சூழலிலும் இருக்கிற பிரச்சனை. இங்கு பாஜக ஆட்சி என்றால் பிஎம் எஸ் அரசாங்கமயமாகிவிடுவதைக் காண்கிறோம். முன்பு ஐ என் டி யு சி, கேரளா வங்கத்தில் சி அய் டி யு, தமிழகத்தில் எல் பி எப், அண்ணா பேரவை என ஆட்சிகள் காலத்தில் அவை governmentalisationக்கு உள்ளாகும் அனுபவத்தைக் கண்டோம்.

மரணதண்டனை கூடாது என்கிற விவாதம் வந்தபோது, கமிட்டி கூட்டத்தில் லெனின் இல்லை. பின்னர் பங்கேற்ற அவர் அது அவசியம். எதிர் புரட்சியாளர்களை ஒடுக்க அவசியம் என ஏற்க வைத்தார்.

கலை இலக்கியம் என்பதில் கூட கட்சிமயமாக்கும் தன்மையைதான் லெனின் ஆதரித்து பேசிவந்தார்.

முக்கிய ஒரு விஷயத்தில் அவர் தன் தெளிவை நல்கினார். சோவியத் சோசலிச ரிபப்ளிக் என நாம் நாட்டை அழைப்பதாலேயே, சோசலிசம் வந்துவிட்டதாக தோழர்கள் புரிந்துகொள்வது தவறு. அதை நிர்மாணிக்கும் வேலையை கவனப்படுத்துகிறோம் என அதை விளக்கி வந்தார். சோசலிசத்தை கட்டளைப்போட்டு கொணரமுடியாது என உணர்த்தி வந்தார்.

லெனின் ஆட்சிக்கு வந்த சில மாதங்களில் சுவையான நிகழ்வொன்றை எதிர்கொண்டார். துணைவியார் கிருப்ஸ்காயா உடல் நிலை தேறுவதற்காகவும் கல்விப் பணிகளை செய்வதற்காகவும் சோகோல்னிகி எனும் பகுதியில் இருந்தார் . அவரை பார்க்க லெனின் ஜனவரி 19, 1919ல் ஞாயிறு அன்று தனது சகோதரி மரியாவுடன் காரில் சென்றார். டிரைவர் பெயர் கில். எங்கும் பனிப்படலம். தூய்மை

பணிகள் நடக்காததை லெனின் பார்க்கிறார். வழியில் சிறு கும்பல் காரை நிறுத்துகிறது. கில் உள்ளே லெனின் என்கிறார். அவர்கள் அதையெல்லாம் தெரிந்து வைத்திருக்கவில்லை. காரை விட்டு இறங்கு என்கிறார்கள். கில் துப்பாக்கி வைத்திருந்தும், லெனினுக்கு ஏதும் நேர்ந்து விடக்கூடாது என யோசித்து அமைதி காக்கிறார். மரியா ஏதோ சொல்லப்போகிறார். அந்த வழிப்பறியாளர்கள் காரில் ஏறி அதை எடுத்துக்கொண்டு, வந்தவர்களை ஏதும் செய்யாமல் செல்கின்றனர்.

சிறிது தூரம் நாட்டின் அதிபர் தனது தங்கை டிரைவர் சகிதம் நடந்து சென்று , ஒரு தொலைபேசி நிலையத்தை அடைகின்றனர். அங்கு பணியாளர் ஒருவரிடம் நடந்ததைச் சொல்லி, போன் பேச கேட்கின்றனர். அவர் அரசாங்க பாஸ் இல்லாமல் எவரும் உள்ளே செல்ல முடியாது என விதியைச் சொல்கிறார். இவர் லெனின் நாட்டின் தலைவர் எனச் சொல்லி, போனில் விவரத்தை போலீஸ் தலைமையகத்திற்கு சொல்லி மாற்று ஏற்பாடுகளை செய்துகொண்டனர். இரவிற்குள் காரைத் தேடும் வேலை முடுக்கிவிடப்பட்டது. கார் ஓரிடத்தில் காணப்பட்டது. அருகில் இரு போலீஸ்காரர்கள் உடலும் கிடந்தன.

நாட்டின் அதிபர் , உலக புரட்சிக்கு நாயகர் என அறியப்பட்டவர் தன் மக்களை நம்பி மிகச் சாதாரணமாக தன் சொந்த வேலை என்பதால் செக்யூரிட்டி படை சூழாமல் செல்லும் எளிமை என்பதை இங்கு உணரமுடியும். அதேநேரத்தில் புரட்சி நடந்தாலும், பழைய நடைமுறைகள் சில கிரிமினல் முறைகள் மறைய காலம் தேவைப்படும் என்பதும் உணரப்படுகிறது.

Facts என்பவை இசங்கள் பார்ப்பதில்லை. Views என்பதற்கு இசங்கள் உதவலாம். (jan8 2024)

5

சோவியத்தில் பின்னாட்களில் மிகவும் சக்தியும் அதிகாரமிக்கதுமாக ஆகிப்போன பொதுச்செயலர் என்ற பதவியே 1922 ஏப்ரலில் நடந்த

ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில்தான் உருவாக்கப்பட்டது. அதற்கு முன்னர் அப்பதவி இருந்ததில்லை.

ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் (போல்ஷ்விக்) 11வது காங்கிரஸ் 1922 மார்ச் 27 முதல் ஏப்ரல் 2 வரை நடந்தேறியது. ஆட்சி அதிகாரத்தின் 5 ஆம் ஆண்டில் இருந்த லெனினுக்கு power , authority, affection என்பதின் உச்சம் இருந்த காங்கிரஸ். இது தான் அவர் கலந்துகொண்ட கடைசி காங்கிரசும் கூட. சோசலிச கட்டுமானத்தின் ஏராள பிரச்சனைகள் குறித்து, நடைமுறை சார்ந்த தீர்வுகளுக்காக அவர் போராடிக்கொண்டிருந்தார். Govt Bureacracy- party Bureaucracy என இரு அதிகார வர்க்க போக்குகள் குறித்து கடுமையாக விமர்சித்து, சுறுசுறுப்பான மக்கள் நலன் சார்ந்த செயல்பாடுகளை முடுக்கிவிட தன் உரையை அவர் பயன்படுத்திக்கொண்டார்.

அரசாங்க அலுவலர் தான் ஏதும் செய்யமுடியாது, கட்சி கமிட்டி நினைத்தால்தான் செய்யமுடியும் எனச் சொல்வது போன்ற புகார்களை அவர் தீவிரமாக சாடினார். 18 மக்கள் கமிசாரில் 15 பேர் வேலையில் அதிருப்தியை லெனின் வெளிப்படுத்தினார். எல்லாவற்றையும் முடிவெடுக்காமல், பொலிட் ப்யோரோவிற்கு கொண்டு வந்து காலதாமதம் செய்வதை கண்டித்தார்.

முன்னரே அவர் under the banner of communism என்கிற நீண்ட கட்டுரையை எழுதியிருந்தார்.

ரஷ்யாவில் அப்போது 14.5 கோடி மக்கள் இருந்திருப்பர். இதில் நகர்ப்புறத்தில் வாழ்ந்தவர்கள் 18 சதம். பல ஊர்களுக்கு எந்த செய்திப் பத்திரிகையும் போகாத நிலை. ரயில், சாலை, தந்தி , டெலிபோன் , மின்சாரம் என அடிப்படை கட்டுமானவேலைகள் பிரம்மாண்டமாக முன் நின்றன. 1918ல் தான் 'dial செய்து பேசும் போன்' வசதி முதன் முறையாக லெனின் உட்பட 200 பேருக்கு தரப்பட்டிருந்தது. இப்படி இருந்த ரஷ்யா/ சோவியத் யூனியன் பின்னர் 50 ஆண்டுகளுக்கு

மேலாக தன் திட்டங்களின் வழியாக மேற்கின் பொருளாதாரத்திற்கே சவால்விடும் நிலைக்கு உயர்ந்தது.

கட்சியில் 5.32 லட்சம் உறுப்பினர்கள் இருந்த பதிவை கட்சிக்காங்கிரசில் செய்தனர். 522 வாக்குரிமை பெற்ற சார்பாளர் பங்கேற்றனர். கூடுதலாக வாக்குரிமையில்லா 165 தோழர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். 1921 ல் கடுமையான களையெடுப்பு நடந்ததில் அப்போது இருந்த உறுப்பினர்களில் 24.8 சதம் அதாவது 1.69 லட்ச தோழர்கள் வெளியேற்றப்பட்டிருந்தனர்.

லெனினுக்கு அடுத்து அதிக நேரம் பேச முடிந்தவராக டிராட்ஸ்கி அந்த காங்கிரசில் இருந்தார். ஸ்டாலின் பேசவில்லை. புகாரின் வெளிநாட்டில் இருந்ததால் கலந்துகொள்ளவில்லை. அவர் சொல்லவேண்டிய மாற்று கருத்தை ப்ரயோபிரசன்ஸ்கி முன்வைத்தார்.

காங்கிரஸ் மத்திய கமிட்டியை தேர்ந்தெடுத்தது. மத்திய கமிட்டி ஏப்ரல் 3, 1922 ல் கூடி 7 பேர் கொண்ட பொலிட்ப்யுரோவை - லெனின், காம்னேவ்,ரைகோவ், ஸ்டாலின், டாம்ஸ்கி, டிராட்ஸ்கி, ஜினோவீவ் ஆகியோரை தேர்ந்தெடுத்தது. அழைப்பாளர்களாக புகாரின், காலினின், மாலட்டோவ் என அறிவிக்கப்பட்டது. டிராட்ஸ்கி தனது நெருக்கமான தோழரான நிகிடிக் ஸ்மிர்னாவ் என்பாரை பொதுச்செயலருக்கு நிறுத்தினார். ஸ்டாலினுக்கு லெனின் ஆதரவு இருந்ததால் அவரே பொதுச்செயலர் ஆனார்.

இதற்கு முந்திய மாநாடுகளில் ஒரே ஒரு செயலர், பின்னர் மூன்று செயலர்கள் என்ற வழக்கம்தான் இருந்தது. செயலர்களாக கொண்டுவருவதில் டிராட்ஸ்கியும் ஸ்டாலினும் தமக்கு இணக்கமான தோழர்கள் வரவேண்டும் என்று கவனம் செலுத்தியதையும் காணமுடிகிறது.

ஸ்டாலின் பொதுச்செயலர் ஆன பின்னர் தன்னை பலப்படுத்திக்கொள்ளும் முயற்சிகள் நடைபெறலாயின. லெனின்

இருந்தவரை, கட்டு இருந்தது என்றாலும், அவரே கோபமடையும் நிகழ்வுகள் நடைபெறலாயின. லெனின் மறைவிற்கு பின்னர் டிராட்ஸ்கி வெளியேற்றப்பட்ட நிலையில், முழுமையான சக்தி மிகுந்த அதிகாரமிக்க பலமான தலைமையாக ஸ்டாலின் உருப்பெறலானார் என்பது தொடர்கதை. ஒரு கட்சி ஆட்சி- பொலிட்ப்யோரோ ஆட்சி- பொதுச்செயலரின் ஆட்சி என்ற காட்சிகள் வளர்ந்து வரலாயின.. இந்த செய்திகளை நூலின் 46வது இயலில் பார்க்கலாம்.

சுவையான நூலில் எனக்குத் தோன்றிய சிலவற்றை மட்டுமே இங்கு குறிப்புகளாக தந்துள்ளேன். (jan 18 2024)

20. காந்தி -மார்க்ஸ் - இந்தியா

Aakar நிறுவனத்தார் 2020ல் Gandhi, Marx and India என்பதைக் கொணர்ந்தனர். 2001ல் மறைந்த புகழ் வாய்ந்த , பாட்னாவில் வாழ்ந்த பிரதான் பிரசாத் எழுதிய புத்தகமது. சோவியத் வீழ்ச்சிக்குப் பின்னர் 1992ல் பிரதான் இதை எழுதினார்.

பாட்னா எகனாமிக் அசோசியேஷன் நண்பர்கள், பிரதானிடம் கற்றவர்கள் அவர் நினைவை மீட்கும் வகையில் , ஆகார் வழி இந்த நூலை கொண்டு வந்துள்ளனர்.

மார்க்ஸ் காந்தி குறித்து நூல்கள் இருக்கின்றன. காந்தியர்கள் மார்க்ஸ் குறித்தும், மார்க்சியர்கள் காந்தி குறித்தும் எழுதியுள்ளனர். லெனின் - காந்தி, ஸ்டாலின்- காந்தி, மாவோ- காந்தி குறித்தும் நூல்கள் வந்தன. தோழர் பட்டாபியின் " காந்தியைக் கண்டுணர்தல், தோழர் காந்தி மகாத்மாவின் சோசலிச உரையாடல்கள்" இந்த திசையில் அமைந்த பிரதிகள்தான்.

பிரதான் அவர்களின் 'காந்தி , மார்க்ஸ் மற்றும் இந்தியா' அளவில் மிக கச்சிதமாக 140 பக்கங்களில் அமைந்த நூல்தான். பாடத்திட்டக் குறிப்புகள் போல அமைந்த நூல். பேசப்பட்டுள்ள விஷயங்கள் ஒவ்வொன்றும் விரித்து விவரமாக புரிந்து கொள்ள (முன்னரே புரிந்து கொண்டிருந்தால்) அதற்கு பெரும் உழைப்பு தேவைப்படும் (அல்லது தேவைப்பட்டிருக்கும்) .

மார்க்ஸ் எங்கெல்ஸ் புரிதல், லெனின் சோவியத் சோசலிச கட்டுமான புரிதல், சோவியத் வீழ்ச்சி- ஏற்பட்ட கோளாறுகள், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி- காந்தியின் நுழைவு- விடுதலைப் போராட்டம்- சுதந்திர இந்தியாவில் நேருவின் ஆட்சி- கம்யூனிஸ்ட் பிளவு- எம் எல் தோழர்கள் புரிதல் என ஒவ்வொன்றும் குறித்து மிகச் சுருக்கமாக ஒவ்வொரு பாரா என்கிற வகையில் பிரதான் அடுக்கி செல்கிறார்.

லெனின் புரிந்து எழுதிக்கொண்ட வகையில் சோவியத்தை கட்ட முடியவில்லை, காந்தி விரும்பிய வகையில் நேருவும் மற்றவர்களும் புதிய இந்தியாவை கட்ட முன் வரவில்லை என்கிற புள்ளிகளை பிரதானும் வந்தடைகிறார். லெனின் சோதனை குறித்து பிரதான் இவ்வரிகளையும் தந்துள்ளார்

"Lenin laid the foundation of emergence of a privileged stratum in the party which began to usurp more and more power and privileges for itself with the passage of time.

As struggle for being part of the privileged stratum within the party intensified and gathered momentum, all those who differed with the official party line were invariably condemned as class enemies of the proletariat and peasantry.

This process also resulted in the increasing use of state machinery for suppressing the so called class enemies in place of ideological and political struggle for uniting and working together with the overwhelming majority of people in the society

அதேபோல லெனினும் மாவோவும் தங்கள் சோதனைக்கான மார்க்சிய தியரியை எப்படி புரிந்து எடுத்துக்கொண்டனர் என்பதற்கான வரிகளை பிரதான் தருகிறார். லெனின் சொன்னது

We do not regard Marx's theory as something final and inviolable, on the contrary, we are convinced that it has only laid the cornerstones of science which socialists must advance in all directions if they do not want to lag behind the March of life

மாவோ கூறிய வரிகளை பிரதான் தருகிறார்

Marx in the era of laissez fair capitalism, could not correctly know certain laws peculiar to the era of imperialism before hand, because imperialism, the last stage of capitalism (இங்கு மாவோ லெனினை கையாள்கிறார்) , had not yet emerged and the relevant practice was lacking, only Lenin and Stalin can undertake this task என்று ஸ்டாலினையும் சேர்த்து மாவோ அப்போது பேசியுள்ளதைக் காண்கிறோம்.

காந்தி பார்வையை நேரு எடுத்துக்கொள்ளாமையை விளக்கும்போது பிரதான் தரும் வரிகள்

Gandhi : I am afraid , Industrialism is going to a curse for mankind..industrialism depends entirely on your capacity to exploit

பிரதான் நேரு குறித்து is it not strange as how Jawaharlal, the author of Discovery of India, did not take into account this simple historical fact while initiating India on the path of progress? Or was he completely duped by the trickery of the compradore class, feudal who began to dominate increasingly the Indian ruling class? என்று soft ஆக எம் எல் இயக்க பார்வையை பிரதான் வெளிப்படுத்துகிறார்.

சைதன்ய கிருஷ்ணா, பிரதான் தோழர்களில் ஒருவர், இந்நூலுக்கு முன்னுரை எழுதியுள்ளார் (2020 பதிப்பு) . அவர் தன் பார்வையில் வந்து நிற்கும் புள்ளி

Had Gandhiji's vision of self sustained villages been worked upon, we would perhaps not have witnessed the shocking spectacle of migrant workers walking back to their native places

Gandhi's solution was integrating economics, politics and technology with ethics and keeping the welfare of the poorest and the weakest as the goal

வாழ்ந்துகாட்டியபடி பேசியும், பேசினால் அப்படியே வாழ்ந்து காட்டிய பெரும் மனிதரை , வாக்கு அரசியலில் மாட்டிக்கொண்ட கோடானுகோடி இந்தியர்கள் பொருட்படுத்தாமல் இருக்கும் மாபெரும் சோகம் , இம்மண்ணில் தான் தொடர்ந்து நடந்தேறிக்கொண்டிருக்கிறது.

27-5-2024

21. பியாரிலால்- காந்தி- மார்க்ஸ்

பியாரிலால் மார்க்சின் மேலான பங்களிப்பு குறித்த உரையாடல் ஒன்றை காந்தியிடம் நடத்தினார். காந்தி மார்க்ஸின் சிறப்பாக கீழ்கண்ட வரிகளை ஏற்றார்.

From each according to his capacity to each according to his need. ஆனால் இதை அடைய மார்க்சியம் மட்டுமே வழி என காந்தியால் ஏற்கமுடியவில்லை.

பியாரிலால் மார்க்சிய தத்துவம் பற்றி மேலும் காந்தியிடம் எடுத்துரைத்தார். ஆகாகான் மாளிகை சிறைவாசத்தில் கிடைத்த மார்க்சிய இலக்கியங்களை படித்தபோது காந்தி இவ்வாறு கூறியிருந்தார். மார்க்ஸின் மேதமை என்னிடம் இல்லை. ஒருவேளை நான் அந்த அளவு scholarship புலமை பெற்றிருந்தால் அவரைவிட நன்றாக எழுதியிருப்பேன். Marx had the knack of making even simple things appear difficult என காந்தி கருதினார்.

பியாரிலால் உடன் தொடர்ந்த உரையாடலில் கீழ்கண்ட கருத்தையும் காந்தி தன் புரிதலாக முன்வைத்தார்.

" Marxist wants to abolish the labouring hand altogether and substitute in its place the machine. He has no use for the hand. Dependence on manual labour, according to Marx , is the symbol and root cause of the destitution and slavery of the worker. It is the function of the machine to emancipate him from this state. I , on the other hand, hold that machine enslaves and only intelligent use of the hand will bring to the worker both freedom and happiness."

மார்க்சை நாம் விமர்சிக்கலாம் ஆனால் அவர் சிறந்த மனிதர் என்பதை மறுக்க முடியாது என்றார் காந்தி.

தன்னைப் பார்க்க வந்த சோசலிஸ்ட் தலைவர்களிடம் எனக்கு வர்க்கங்கள் இல்லாத சாதியற்ற சமத்துவ சமூகத்தில் நம்பிக்கையிருக்கிறது. சோசலிசம் பேசுபவரானாலும் எவருக்கும் body

labour obligatory உடல் உழைப்பு கட்டாயமானது. அதில் விலக்கு எந்த காரணத்தாலும் யாருக்கும் கொடுக்க முடியாது என்றார்.

சோசலிசத்தில் நம்பிக்கைக்கொண்ட 15 மாணவர்கள் காந்தியை சந்தித்தனர். சோசலிசம் என்பது பிரச்சாரத்திற்கானது- அதைச் சொல்லி அந்த இசம் நோக்கி பலரையும் ஈர்க்கவேண்டும் எனச் செயல்படுகிறீர்கள். நீங்கள் நடந்து காட்டுவது உங்கள் பிரச்சாரத்தைவிட பலமானது. பலனையும் தரும். சில அன்றாட வேலைகளுக்கு நீங்கள் உங்களை பழக்கப்படுத்திக்கொள்ளுங்கள். உடல் உழைப்பை கீழானதாக கருதாமல் அதில் ஈடுபடுங்கள் எனச் சொல்லி அனுப்பினார். மாணவர்களாகிய உங்களுக்கு basic tips on practical socialism என கீழ்கண்டவற்றை சொன்னார்.

1. Fold your bedding on getting up in the morning
2. Give a helping hand in preparing and laying out the breakfast
3. Help in dusting and cleaning up the house
4. Wash your own clothes
5. Help your mothers and sisters in cleaning and scrubbing utensils
6. Spin daily to provide yourself with the clothes you need
7. Keep your books and papers neat and tidy
8. Use a two anna steel nib in preference to a fifty rupee worth fountain pen.

காந்தியடிகளின் சோசலிச உரையாடல்கள் குறித்து தோழர் காந்தி என்கிற நூலில் விரிவாக தேடிக்கண்டவற்றை கொடுத்துள்ளேன். வாய்ப்புள்ளவர் தோழர் காந்தி நூலை படித்துப் பார்க்கலாம். இணையத்தில் கிடைக்கக்கூடிய நூல்தான்.

feb 13 2024

22. தோழர் அ.மார்க்ஸ் எழுதிய கார்ல் மார்க்ஸ்

பேரா. தோழர் அ.மார்க்ஸ் எழுதிய கார்ல் மார்க்ஸ் புத்தகம் ஜனவரி 2023ல் வெளியானது. நேற்று கையில் கிடைத்தவுடன் ஒரே நாளில் சில மணிகளில் 198 பக்கங்களையும் படிக்க முடிந்தது. ஆர்வமும் நேரமும் உதவின.

மார்க்ஸ் மற்றும் மார்க்சிற்கு பிந்திய மார்க்ஸியம் குறித்த அம்சங்களை அறிமுகப்படுத்தி விளக்கும் ஆக்கமிது. இளைஞர்களுக்கு நல்ல கையேடாக இந்த புத்தகம் அமையும் என்றே வாசித்தவுடன் எனக்குத் தோன்றியது. இடதுசாரி இளம் தோழர்கள் கூட்டாக வாசித்து புரிதலை மேம்படுத்திக்கொள்ள வேண்டிய புத்தகம். கடினமாக இருக்காது.

தோழர் அ.மார்க்ஸ் அவர்கள் மார்க்ஸின் 200 ஆம் ஆண்டில் 'மக்கள் களம்' ஆசிரியரின் வேண்டுகோளுக்கேற்ப எழுதிய தொடர்கட்டுரைகள் புத்தக வடிவம் பெற்றுள்ளன. 17 கட்டுரைகள் அதைத் தொடர்ந்த பின் இணைப்புகளின் தொகுப்பு இந்த ஆக்கம். 17 கட்டுரைகளின் சாரமாக பின் இணைப்புகளை கொள்ளமுடியும்.

இந்நூல் அட்டையில் சொல்லப்பட்டுள்ளபடி மார்க்ஸ் அவரது ஆக்கங்கள் அறிமுகம் குறிப்பாக அவரது கம்யூனிஸ்ட் அறிக்கை, அந்நியமாதல், மதம், உபரிமதிப்பு, இந்தியா குறித்து மார்க்சின் கட்டுரைகள் என்பதுடன், அல்தூசரின் அமைப்பியல் சார்ந்த பார்வை, ஹார்ட் நெக்ரி இரட்டையரின் பேரரசு மற்றும் பெருந்திரள் குறிப்புகள் மற்றும் ஓரளவு மேலை மார்க்சியம் இதில் பேசுபொருளாக்கப்பட்டுள்ளன.

மார்க்சியமும் இலக்கியமும் தனித்து பேசப்பட்டுள்ளது. கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பு வெளிப்படையானதாக ஜனநாயகம் நிறைந்ததாக இருக்க மார்க்சே வலியுறுத்தியதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மார்க்சின் எழுத்துக்கள் ஏன் வாசிக்க கடினமாக இருக்கின்றன என்பதை பல இடங்களில் எழுப்பி தோழர் அ.மா பதில் தருகிறார்.

அதேபோல் அவரது உபரி மதிப்பு கோட்பாட்டின் பொருத்தப்பாட்டை இன்றும் எவரும் மறுக்க முடியாது என்பதைப் பேசுகிறார்.

மார்க்சியம் என்பதை வளர்ந்து வரும் அறிவியலாக, அது மார்க்ஸ் உடன் நின்று போகவில்லை என்பதை புரிந்துகொள்ளவேண்டும் எனச் சொல்கிறார்.

மார்க்சியம் தோற்றுப்போனதா என்ற கேள்விக்கான பதிலை அவர் தேடுகிறார். உலகம் முதலாளித்துவ நெருக்கடிகளிலிருந்து விடுபடவில்லை என்பதையும், இன்றுள்ள தொழில் நுட்ப வளர்ச்சி அதற்கான முழு தீர்வுகளையும் தரவில்லை எனப் பார்க்கும்போது , மாற்று சிந்தனைக்காக மார்க்சியம் நோக்கி பலரும் வருவதை தோழர் அ.மா சொல்கிறார். மார்க்ஸ் முதலாளித்துவம் மீதான விமர்சனம் என்பது பொருளாதாரம் தாண்டி அறவியல் தாக்கங்களையும் கொண்டது என அ.மார்க்ஸ் எழுதுகிறார்.

அது போலவே சோசலிசம் தோற்றுவிட்டது என்று வருகிற உரையாடலுக்குமான பதிலை அ.மா தேடுகிறார். புரட்சிக்கு பிந்திய சமுதாய கட்டுமானங்கள் அதன் சோதனைகள் தோற்றிருக்கலாம் என்பதை தாண்டி அதை சோசலிசத்தின் தோல்வியாக யார் நிறுவியுள்ளனர் என்ற கேள்வியை தோழர் அ.மா விடம் பார்க்கிறோம். அதே நேரத்தில் சோசலிச கட்டுமானங்கள் குறித்த உரையாடல் பெருகட்டும் என்கிறார்.

இந்த அறிமுகத்தை தோழர் அ.மார்க்சின் வரிகளுடன் நிறைவு செய்கிறேன்

“ கார்ல் மார்க்சை வெறும் தத்துவ ஆசிரியராக, பொருளாதார மேதையாக, களப்போராளியாக சுருக்கி பார்த்துவிட இயலாது..அவர் எல்லாமுவாக இருந்தவர்.. அப்படியாக ஒருவரை வரலாறு அவருக்கு முன்னோ பின்னோ யாரையும் அடையாளம் காட்டியதில்லை. மார்க்சிற்கு பிந்திய மாற்றங்களை அவர் வழி நின்று ஆய்வு செய்வோம்…மார்க்சிற்கு பிந்திய சிந்தனை வளர்ச்சிகளை ஏற்று

அறிந்து நம்மையும் மார்க்சியத்தையும் மேம்படுத்திக்கொள்வது மட்டுமல்ல; மார்க்சியத்தை வளப்படுத்த வேண்டிய கடமையும் நமக்குண்டு.

புதிய சிந்தனைகளை திறந்த மனத்துடன் எதிர்கொள்வோம். தோழர்களே! நமக்குத் தேவை திறந்த மனது, தெளிந்த அறிவு, கடின உழைப்பு! "

என் ஆர்வம் காரணமாக நான் விரைந்து இந்த ஆக்கத்தை படித்திருக்கலாம். ஆனால் அதில் பேசப்பட்டுள்ள கருத்தாங்களை தேட , படித்து புரிந்து கொள்ள பல நாட்கள் கடின உழைப்பு பேரா

அ.மார்க்ஸ் அவர்களுக்கு தேவைப்பட்டிருக்கக்கூடும். (28-3-2023)

sep 8 2022

23. தோழர் டிராட்ஸ்கி

ராபர்ட் சர்வீஸ் எழுதிய டிராட்ஸ்கி வாழ்க்கை சரிதத்தை படித்துக்கொண்டிருந்தேன். 'Trotsky A Biography by Robert Service' 600 பக்க அளவிலானது. 2009 மாக்மில்லன் வெளியீடு. அதில் டிராட்ஸ்கி முதலில் லெனினை தேடிப்போய் சந்தித்த நிகழ்வை ராபர்ட் சர்வீஸ் சொல்லியிருப்பார்.

டிராட்ஸ்கி தன் வரலாற்றிலும் இக்காட்சியைப் படித்த நினைவு இருக்கிறது. ராபர்ட் சர்வீஸ் என்ன சொல்கிறார் எனப்பார்ப்போம்.

சைபீரியாவின் வதை முகாமிற்கு தன் காதல் மனைவி புரட்சிகர தோழி அலெக்சாந்திரியாவுடன் டிராட்ஸ்கி அனுப்பப்பட்டார். அங்குள்ள அலவன்ஸ் போதாமல் சில முதலாளிகளிடம் வேலைப் பார்த்தார். இரு குழந்தைகள் அடுத்தடுத்து பிறந்தன. புரட்சியின் தாகம் துரத்த அவர் சைபீரியாவிலிருந்து துணைவியார் ஒப்புதலுடன் தப்பிக்கிறார். அவர்கள் நிலை…

நீண்ட பயணம். களைப்பு. வியன்னா வந்து புகழ்வாய்ந்த தோழர் விக்டர் அட்லரை சந்தித்து உரையாடுகிறார். பிளக்கானவ்,

ஆக்சல்ராட், லெனின், மார்ட்டோவ் போன்ற புகழ் வாய்ந்தவர்களின் புரட்சிகர பத்திரிகை இஸ்கரா சுவிட்ஜர்லாந்திலிருந்து வருவதை அறிந்து ஜெனிவா செல்கிறார். இரவு நேரம். வந்த குதிரை வண்டிக்கு கொடுக்கக்கூட காசு கிடையாது. ஆக்சல்ராட் இருப்பதை அறிந்து அவரை விளித்து கதவைத் தட்டுகிறார். டிராட்ஸ்கி என்பதை ஏதோ ஒரு வகையில் உறுதிசெய்த பாவல் கதவை திறந்து குதிரை வண்டிக்கான கட்டணத்தை கொடுத்து உள் அழைத்துச் செல்கிறார்.

ஆனால் லெனின் அங்கில்லை. அவர் லண்டனிலிருந்து இஸ்கரா வேலையை பார்த்துக்கொண்டிருக்கிறார் என டிராட்ஸ்கி அறிகிறார். பிளக்கானோவிடம் கேட்டால் கதைக்கு ஆகாது எனத் தெளிந்த டிராட்ஸ்கி, லெனினை பார்க்கப் புறப்படுகிறார். லெனின் வசிப்பிட முகவரியுடன் விடியற்காலை செல்கிறார்.

பிரிட்டிஷ் பழக்கத்தை டிராட்ஸ்கி அறியவில்லை. தூங்கும் நேரத்தில் விருந்தாளியாக போவது சரியல்ல. ஸ்டேஷனில் தங்கி பிறகுதான் செல்வது மரபு. மூன்றுமுறை கதவைத் தட்டினால்தான் சக தோழன் என லெனின் வீடு திறக்கப்படும். அது சங்கேதக் கோடு.

லெனின் கிருப்ஸ்காயா தம்பதியினர் உறக்கத்திலிருந்து எழவில்லை. தட்டலை அறிந்த கிருப்ஸ்காயா எழுந்து வந்து கதவை திறக்கிறார். தேநீர் உபசரிப்பு நடக்கிறது. லெனின் எழுந்து வந்து ‘ஓ பென் ‘ என்கிற டிராட்ஸ்கி புனைப்பெயரை சொல்லி அழைக்கிறார். லண்டனில் அவர்க்கான guide ஆகவும் இருக்கிறார். லெனின் புனைப்பெயரில் லண்டன் நூலக அட்டையை பெற்றிருந்தார். நூலகத்தின் புத்தகங்களை நுகர டிராட்ஸ்கிக்கும் வாய்ப்பை உருவாக்குகிறார். லெனின் மார்ட்டோவ் டிராட்ஸ்கி என இளம் புரட்சிக்காரர்களின் சந்திப்பு உரையாடல் அங்கு தொடர்ந்தது.

இந்தக் காலம் 1902 அக்டோபர்…

2

1900 களின் துவக்கத்தில் ரஷ்யாவில் மார்க்சிய புரட்சியாளர் குழுவில் பிளக்கானாவ், லெனின், ஆக்சல்ராட், மார்ட்டோவ், பர்வஸ், டிராட்ஸ்கி போன்றவர்களின் பெயர்கள் பாபுலராக இருந்தது.

◦ 1902-03 லேயே லெனின் போல்ஷ்விக்குகள், மார்ட்டோவ் மென்ஷ்விக்குகள் என உட்குழு பிரச்சனைகள் எழுந்தன. பிளக்கானோவ் மிக மூத்தவர். அவர் மென்ஷ்விக் பக்கம் இருந்தார். அங்கும் பெரும்பான்மை- சிறுபான்மை என அறியப்பட்ட இவர்கள் தனித்துக்கூட மாநாடுகளை கூட்டிக்கொண்டனர்.

◦ 1902ல் லெனின் டிராட்ஸ்கி இடையே நெருக்கம் இருந்தது. டிராட்ஸ்கிக்கு நல்ல ஷூ கூட இல்லையே என அவரை பாரிசிற்கு சந்திக்க வரும்போது லெனின் வாங்கி வந்தார். அளவும் சரியாகவே இருந்தது. லெனின் கணிப்பில் துல்லியமானவர் என பலரும் ஏற்பர்.

◦ டிராட்ஸ்கிக்கு பர்வஸ் மீதான ஈர்ப்பு கூடியது. பர்வஸ் எப்பக்கமும் சாயாமல் தனித்த அறிவுஜீவியாக தனது விளக்கத்தை கொடுத்து வந்தார். இது டிராட்ஸ்கி மனநிலைக்கு ஒத்துப்போனது. இந்தக் காலத்தில் அவர் லெனினுடன் முரண்பட்டார். மென்ஷ்விக்குடன் நின்றார். அதே நேரத்தில் பர்வஸ் நடத்திய ரஷ்ய கெசட், போல்ஷ்விக்குகளின் நோவாய சின், மென்ஷ்விக்குகளின் நாசலோ என மூன்று பத்திரிகைகளிலும் டிராட்ஸ்கியால் தனது கருத்துக்களை எழுத முடிந்தது.

◦ பெட்ரோகிரேடில் சோவியத் என்கிற மக்கள் பிரதிநிதி புரட்சிகர கவுன்சிலுடனும் 1905ல் டிராட்ஸ்கி தொடர்பில் இருந்தார்.. ஜார் ஆட்சி அவ்வாண்டின் எழுச்சியை ஒடுக்கியது. டிராட்ஸ்கி சிறைபிடிக்கப்பட்டு செல் 462ல் வைக்கப்பட்டார். முதல் 15 மாதம் கடந்தது. நல்லவேளையாக ஜார் போலீஸ் டிராட்ஸ்கிக்கு முழு உடல் சோதனை செய்யவில்லையாம்.

◦ சைபீரியாவில் மனைவி அலெக்சாந்திரியா இரு கை குழந்தைகளை விட்டுத்தான் தப்பி வந்தார் டிராட்ஸ்கி. ரஷ்யாவில் நதால்யா பழக்கம்

ஏற்பட்டது. அவர்தான் அடிக்கடி சிறைக்கு வந்து தேவையானதை டிராட்ஸ்கிக்கு கொடுத்துப்போனார்.

◦ சட்டப்படியான கணவன் மனைவி இல்லையென்றாலும் ஜார் நிர்வாகம் டிராட்ஸ்கி privacyக்கு அனுமதித்தது. நதால்யாவும் குழந்தையை ஈன்றெடுத்தார்.

◦ டிராட்ஸ்கிக்கு மார்ட்டோவ் மற்றும் மென்ஷ்விக் செயல்பாடுகள் மீது அதிருப்தி ஏற்பட்டது. லெனின் நடவடிக்கைகள் தான் புரட்சியாளர்களுக்கு நம்பிக்கையளிப்பதாக இருக்கிறது என டிராட்ஸ்கி வெளிப்படையாக சொல்ல ஆரம்பித்தார்.

◦ டிராட்ஸ்கி உள்ளிட்டோர் மீதான ராஜத்துரோக வழக்கு 1906 செப்டம்பரில் துவங்கியது. வழக்கம்போல் சைபீரியா நாடு கடத்தல் தண்டனை நவம்பரில் தரப்படுகிறது.

◦ சைபீரியா கொண்டு செல்லப்படும் வழிகளில் ஆங்காங்கே முக்கிய சிறைகளில் தங்கும் ஏற்பாடும் இருந்தது. ஓரிடத்தில் பர்வஸ் தப்பிக்க முயற்சி எடுத்தார். அப்போது டிராட்ஸ்கி உடன்படவில்லை. பர்வஸ் முயற்சி தோல்வியானது.

◦ 33 நாட்கள் பயணத்திற்கு பின்னர் தங்க வைக்கப்பட்ட இடத்தில் டாக்டர் ஒருவர் ஜாருக்கு எதிரானவர்களை ஊக்குவிப்பவராக இருந்தார். அவர் உதவியால் டிராட்ஸ்கி உடல்நிலை மோசமானதாக டிராமா நடத்தப்பட்டு அவரை தப்புவிக்க ஏற்பாடு நடந்தது. இராணுவ அதிகாரி ஒருவரும் இச்சதியில் உடந்தையாக இருந்தார்.

◦ டிராட்ஸ்கி பல நாட்கள் தொடர்ந்து காடு காடு காடு என காட்டு வழிகளிலும், பனிப்படலங்களிலும் செல்லவேண்டும். ரயிண்டீர் ஸ்லெட்ஜ் வண்டியும், காட்டில் வழிகாட்ட ஒருவரும் என்கிற ஏற்பாடு செய்யப்பட்டு டிராட்ஸ்கி ஜார் போலீஸ் இராணுவத்திற்கு தெரியாமல் தப்பிக்கிறார்.

◦ ஏராள அவதிகளை அனுபவித்து வோட்கா, தேநீருடன் காலம் கழித்து பெட்ரோகிராடிலிருந்து 700 மைல் தொலைவிலான ஊர் ஒன்றை அடைகிறார். அங்கிருந்து நதால்யா மனைவிக்கு தன்னை வந்து பார்க்கும்படி செய்தி அனுப்புகிறார். கைக்குழந்தையை நண்பர்களிடம் விட்டுவிட்டு நதால்யா 700 மைல் பயணப்பட்டு தன் அன்பான டிராட்ஸ்கியை ஆரத்தழுவுகிறார். இடையில் டிராட்ஸ்கி சொன்ன ஸ்டேஷன் பெயர் மறந்து போகிறது. எப்படியோ பலர் உரையாடலை கவனித்து அந்தப் பெயரை நினைவிற்கு கொண்டுவந்து நதால்யா வந்தடைவதை கேட்கும்போது நமக்கு அவர்களின் விடாமுயற்சி, போராட்ட தாகம் அதன் துரத்தல் புரிகிறது.

◦ சிந்தனை ஒன்று கவ்விப்பிடித்து அதற்காக போராட துணிபவர்களின் வாழ்க்கை சாகசங்களில் எதற்கும் குறைவில்லாத சாகசங்களுடன் தான் டிராட்ஸ்கி வாழ்க்கையும் இருப்பதைக் காணமுடிகிறது.

3

1910ல் டிராட்ஸ்கி தனது 30 ஆம் வயதை கடந்து கொண்டிருக்கிறார். பத்திரிகை பிராவ்தாவை ஆரம்பித்து அதற்கு நிதியை manage செய்வதில் பாடுதான்.

மாக்சிம் கார்க்கி இடது பத்திரிகைகளுக்கெல்லாம் தன்னால் ஆன உதவியை செய்துகொண்டிருந்தார். டிராட்ஸ்கியும் கார்க்கியை நிதிக்காக அணுகி உதவி பெறுகிறார். 1910ல் மென்ஷ்விக் போல்ஷ்விக் சேர்ந்து கூடினர்.

டிராட்ஸ்கிக்கு இரு பக்கத்திலும் செல்வாக்கில்லை. அவர் எழுதுகிறவர். கட்சி அமைப்பில் அவருக்கென குழுவோ செல்வோக்கோ இருக்கவில்லை. ஆனாலும் அவரின் எழுத்துக்களை மென்ஷ்விக், போல்ஷ்விக் உட்பட பலரும் பிரசுரித்து வந்தனர். இந்த அடிப்படையில் பிராவ்தாவிற்கு உதவி செய்யவும் ஏற்றுக்கொண்டனர்.

உதவி சும்மா வருமா நிபந்தனை வந்தது. லெனினுக்கு நெருக்கமாக இருந்த காம்னேவ்வை எடிட்டோரியல் குழுவில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பது நிபந்தனை. காம்னேவ் டிராட்ஸ்கி சகோதரியின் கணவர்தான். குடும்பத்திலிருந்த வேறுபாடுகள் பிராவ்தா அலுவலகம்வரை நீண்டது.

டிராட்ஸ்கி எதை எழுதினாலும் அதை கண்காணித்து விமர்சித்து வந்தார் காம்னேவ். நிதிப்பிரச்சனையுடன், இது போன்ற பிரச்சனையையும் அனுபவிக்க வேண்டியுள்ளதே என்ற உணர்வில் டிராட்ஸ்கி நாட்களை கடத்தினார்.

டிராட்ஸ்கி இந்த நேரத்தில் அவர் முக்கியம் எனக் கருதிய முழக்கம் ஒன்றை தந்தார்.

One party one working class one revolution -It is madness for the factions to conspire against each other.

சொல்லுதல் யாருக்கும் எளிதாம் என்பதாகவே டிராட்ஸ்கி வாழ்வும் காட்டியது. டிராட்ஸ்கி வாழ்வு மட்டுமல்ல, அமைப்பில் வேலை செய்த எவருக்கும் - அது எந்த அமைப்பாக இருந்தாலும் இப்படி ஏதோவொரு குழு சண்டையில் ஏதோவொரு காலத்திலாவது சிக்காமல் அமைப்பு வாழ்க்கை போயிருக்காது. அப்பிடி தப்பித்தவர் எவரேனும் இருந்தால் அவர் பாக்கியவானே

4

கம்யூனிஸ்ட் கட்சிகள் பொதுவாக லெனின் வகைப்பட்ட புதிய கட்சி என அழைக்கப்படும். சோவியத் புரட்சிக்கு பின்னர் அமைந்த லெனின் தலைமையிலான அரசாங்கம் Sovnarkom என்ற பெயரில் அழைக்கப்படும். டிராட்ஸ்கியை தலைமை பொறுப்பை எடுக்கச்சொன்னபோது யூதர் ஒருவர் எடுப்பது உகந்ததல்ல, லெனின் எடுக்கவேண்டும் என்று அனைவரும் வற்புறுத்தினர். டிராட்ஸ்கிதான் அந்த கருத்தை முன்வைத்தவர்.

புதிதாக அமைந்த அரசாங்கத்திற்கு பழைய ஜார் கால அதிகாரிகள் பலரும் தேவைப்பட்டனர். டிராட்ஸ்கிக்கு மிலிட்டரி கவுன்சில் அமைச்சர் people's commissariat for Military Affairs கொடுக்கப்பட்டது. உள்துறையையும் பார் என்றார் லெனின். டிராட்ஸ்கி தயங்கினார். வெளியுறவுத்துறையை எடுத்துக்கொண்டார். மாஸ்கோவில் தங்குவது என்பது இதனால் பெரும்பாலும் இல்லாமல் போனது.

ஜெர்மனியுடன் போர் நிறுத்த உடன்பாடு, அட்மிரல் கோல்சாக் வெள்ளை படையெடுப்பு போன்றவற்றை அவர் சமாளிக்க வேண்டியிருந்தது. கிழக்கு முனை மிலிட்டரி பொறுப்பு கூடுதலாக ஸ்டாலினுக்கு வழங்கப்பட்டது. அவர் டிராட்ஸ்கி உத்தரவுகளை ஏற்காமல் தல நிலையை சமாளிக்க தனி அதிகாரம் கோரினார். 1918ல் இந்த மோதல் அதிகமாகி 1919-20 ல் தணிந்த நிலை உருவானது.

ஜார் இம்பீரியல் இராணுவ அதிகாரிகளை வைத்துக்கொள்ள வேண்டும் என்பதை டிராட்ஸ்கி, ஸ்டாலின் நடைமுறை அனுபவத்திலிருந்து புரிந்துகொண்டனர். ஆனால் எவ்வளவு, எந்த தூரம் கட்டுப்பாடுகளை விதிப்பது என்பதில் வேறுபட்டனர். டிராட்ஸ்கி முழு கட்டுப்பாட்டை control விரும்பினார். லெனினிடம் ஜார் அதிகாரிகள் தேவை என எடுத்துச் சொல்வதில் டிராட்ஸ்கிதான் தேவைப்பட்டார். லெனின் அப்போதுதான் convince ஆவார் என்ற நிலையிருந்தது.

1918 ஜூலைவரை கூட ஒரே கட்சி கட்டுப்பாட்டில்தான் அரசாங்கம் என்பது பெயரளவில் இருந்தது. ருஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி என்கிற பெயர் மாற்றம் பின்னர் சோவியத் கம்யூனிஸ்ட்கட்சி என்ற மாற்றம் வந்தன. கட்சியில் மத்திய அதிகாரங்களை வலுப்படுத்தி அரசியல் முடிவுகளை கறாராக எடுக்க அமுல்படுத்த பொலிட் ப்யோரோ politburo மற்றும் அமைப்பு விஷயங்களை நேர்படுத்த Orgburo உருவாக்கப்பட்டன. இன்றும் உலகில் உள்ள பல நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளில் பொலிட்ப்யூரோ இருப்பதைக் காண்கிறோம்.

ஆர்க்ப்யூரோ இந்தியாவில் control commission என்ற வடிவத்தில் இயங்குவதை காணலாம்.

லெனினுக்கு அடுத்த சக்தி படைத்தவர், உலகை சுற்றக்கூடியவர், மயக்கும் பேச்சாளர் என்ற வகையில் டிராட்ஸ்கி பெரும் அதிகாரம் கொண்டவராக மாறினார். வீரர்கள் உணவு, உடை , பூட்ஸ், ஆயுதங்கள் ஆகியவற்றின் நேர்த்தியை அவரே பார்வையிட்டு சரி செய்வார். எவரும் அவர் முன்னால் நேர்த்தியாக நிற்கவேண்டும் என்ற கட்டளை இருந்தது. ஒழுங்கு கடுமையாக்கப்பட்டிருந்தது.

அவர் தனி ரயிலில் கிளம்புகிறார் என்றால் அவருக்கான 300 பணியாளர்கள் கிளம்பவேண்டும். தனி உதவியாளர்கள், பாதுகாவலர், ஆர்மி சார்ந்தவர், சமையல்காரர்கள், பிரஸ்காரர்கள், பிரிண்டிங் மெஷின்ஸ், டைப்பிஸ்ட்கள், குறிப்பு எடுப்பவர்கள் என பலவகை உதவியாளர்கள் உடன் செல்வர். போகும் வழி நெடுக மக்களை பார்க்கும் இடங்களில் எல்லாம் அரசாங்க செயல்பாடுகள் குறித்த துண்டு பிரசுரங்கள் வீசப்படும். கூட்டம் இருந்தால் டிராட்ஸ்கி 10 நிமிட சுருக்கமாக சொற்பொழிவாற்றுவார்.

ரயிலில் டிராட்ஸ்கி எழுத தனி டெஸ்க் ஏற்பாடுகள், அமர்ந்து விவாதிக்க சேர்கள், சிறிய ஓய்விற்கு சாய்வுநாற்காலி, வசதியான படுக்கைகள் வைக்கப்பட்டிருக்கும்…

புரட்சிக்குப் பின்னர் இப்படி உச்சத்தில் லெனினுக்கு அடுத்த இடம் எனத்துவங்கிய அவர் வாழ்வு பெரும் சோக வரலாறானது என்பதை உலகம் கண்டது. நேரு ஒருமுறை எழுதினார், எனக்கு intellectual ஆக லெனினைவிட டிராட்ஸ்கியிடம்தான் நாட்டம் செல்கிறது என..

வாழ்வின் இழுப்புகளில் யார் எங்கு சிக்குவோம் என முன்கூட்டியே எப்படி சொல்லமுடியும்.. (செப் 26, 2022)

5

தலைவர்களுக்கு கொஞ்சமாவது பீடம் ஏற்றாத நாடோ சமூகமோ இருப்பதில்லை. அதிகாரத்திற்கு வரும் தலைவரை சுற்றி நின்று அவர் சொல்வதையெல்லாம் எதிர்ப்பின்றி ஆமோதித்து ஆராதனை காட்டும் விசுவாசிகள் பெருக்கத்துடன் personality cult நேர்விகிதத்தில் பொதுவாக அமையும்.

சோவியத் புரட்சிக்குப் பின்னரும் இந்த 'கல்ட்' உருவாக்கம் லெனினை சுற்றி ஓரளவு, லெனின் மறைவிற்குப்பின்னர் ஸ்டாலினைச் சுற்றி பேரளவிலும் நடைபெறலானது.

புரட்சியின் காலத்தில் போல்ஷ்விக்குகள் மத்தியில் தலைமை பொறுப்பு தோழர்கள் தங்கள் புகைப்படங்களையோ, வாழ்க்கை குறிப்புகளையோ வெளியிடாமல் இருப்பதில் கவனமாக இருந்தனர். லெனின், டிராட்ஸ்கி என இருவரும் சம அளவிலான புகழை உலகத் தோழர்களுடன் பெற்றுக்கொண்டிருந்தனர். லெனினுக்கு மெதுவாக உள்நாட்டில் புகழ் கூடத்துவங்கியது. அதுவும் குறிப்பாக 1918ல் அவர் மீதான கொலை தாக்குதல் முயற்சி நடந்தவுடன் அவரின் முக்கியத்துவம் அதிகம் உணரப்பட்டது.

வெளிநாட்டு பத்திரிகையாளர்களை, குறிப்பாக அமெரிக்கர்களை சற்று சோசலிச நம்பிக்கையுள்ளவர்களையாவது நாம் அனுமதிக்கவேண்டும். அவர்கள் குறைகளை வேண்டுமானாலும் சுட்டிக்காட்டட்டும். நாம் நமது சோசலிச பிராஜக்ட் பற்றி எடுத்துச்சொல்லி புரியவைக்க முடியும் என தொடர்ந்து வாதாடியவர் டிராட்ஸ்கி. எல்லோரும் ஏற்ற நிலையில் பத்திரிகையாளர்கள் அறிஞர்கள் லூசி பிரையண்ட், மாக்ஸ் ஈஸ்ட்மேன், லிங்கன் எயிர், ஆந்த்ரே மொரிசெத், வெல்ஸ், ரஸ்ஸல் வந்தனர்.

பொதுவாக லெனின், டிராட்ஸ்கியை பேட்டி எடுக்க அவர்கள் விழைந்தாலும் லெனின் பேட்டிதான் முக்கியத்துவமானது என்ற உணர்வு இருந்தது. அது சரியானதும் கூட. டிராட்ஸ்கி இராணுவ

வேலை என பல நேரங்களில் பத்திரிகையாளர்களிடமிருந்து தப்பித்தும் சென்றார்.

ரஸ்ஸலாவது சில நிமிடங்கள் டிராட்ஸ்கியுடன் உரையாடியிருப்பார். வெல்ஸ்க்கு அதுவும் கிட்டவில்லை.

நாளடைவில் லெனின் போட்டோக்கள் பிரபலமாயின. பொதுவாக கூட்டமுடிவில் போட்டோ செஷன் என்ற ஏற்பாடு வந்தது. டிராட்ஸ்கி உடன் கீழே போய்விடுவார். ஒருமுறை அவரை வற்புறுத்தி வரவைத்தனர். கூட இருந்த ஒருவர் the dictatorship of photographer என்று comment அடித்து டிராட்ஸ்கியை புன்முறுவல் செய்ய வைத்தார்.

லெனின் வரலாறு ஒன்றை ஜீனோவீவ் எழுதினார். சிலர் டிராட்ஸ்கியை அணுகி வாழ்க்கைப்பற்றி கேட்டனர். அவர் பெரும்பாலும் வேலை கிடக்கிறது எனச் சொல்லி நகர்ந்துவிடுவாராம்.

எதை செய்தாலும் அது சோசலிச கட்டமைக்க செய்வதாக தலைவர்கள் மெய்யாலுமே நம்பினர். மார்க்ஸ் எங்கெல்ஸ்க்குப் பின் மார்க்சிய போப் என கருதப்பட்டவர் கார்ல் காட்ஸ்கி. இவர் குறித்து தான் லெனின் ஓடுகாலி காட்ஸ்கி என்கிற அரசியல் ஆக்கத்தைக்கொணர்ந்தார்.

காட்ஸ்கி ரஷ்யாவை இப்படி ராணுவமயமாக்குவது குறித்து விமர்சனத்தை வைத்தார். அதற்கு டிராட்ஸ்கி நாங்கள் கட்டுவது 'Socialist Militarism and we shall not renounce it' என்றார். இப்படி அவர்கள் சோசலிச எதார்த்தவாதம், சோசலிச இராணுவமயம் என்றெல்லாம் விளக்கங்களை கொடுத்துக்கொண்டிருந்ததை வரலாற்றில் காண்கிறோம்.

தொழிற்சங்கம் என்பது புரட்சிகர அரசாங்கம் வந்தபின் 'deadwood' என்ற கருத்து டிராட்ஸ்கியிடம் இருந்தது. தொழிலாளர்களை militarise செய்வது தொழிற்சங்கங்களை அரசாங்க பிரசங்கியாக்குவது அவசியம்- இல்லையெனில் தேவையில்லா நேர விரயம் ஏற்படும்

என்றார். லெனின் இவற்றை crude ஆக செய்வது கேடுவிளைவிக்கும் என்றார்.

அதேபோல் லெனின் முன்வைத்த NEP புதிய பொருளாதார கதவை அகல திறக்க டிராட்ஸ்கி விழைந்தார். அந்நிய முதலீடுகள் வராமல், ஜெர்மன் முதலாளித்துவ கம்பெனிகளை அனுமதிக்காமல் பொருளாதார முன்னேற்றம் இல்லை என்றார். இதிலும் கட்சிக்குள் இருந்த பல்வேறு கருத்தோட்டங்களை கணக்கில்கொண்டு லெனின் சற்று நிதானமாக செயல்பட விரும்பினார். கருத்து வேறுபாடுகள் முட்டின. இருவருமே உடல்நிலை பாதித்த நிலையில் பணியாற்றிக்கொண்டிருந்தனர்.

கட்சி வேலைகளை சற்று குறைத்துக்கொள்ள லெனின் விழைந்தார். ஸ்டாலின் பொதுச்செயலர் ஆனார். அரசாங்கத்திலும் டிராட்ஸ்கியையோ ஜீனவீவ் காம்னேவ் போன்றவர்களையோ தனக்கு அடுத்த நிலை ஆக்காமல் ரைகோவை ஆக்கினார் லெனின்.

அதேநேரத்தில் 'Russian Orthodox Church' யை சற்று முரட்டுத்தனமாக எதிர்கொள்ள அதாவது தீவிரமாக ஒடுக்க லெனின் முயற்சி எடுத்தபோது, மக்களின் நீண்டகால பழக்கம் ஒன்றை அப்படி கையாண்டு வெற்றிபெற இயலாது என்பதை டிராட்ஸ்கி லெனினிடம் சொல்லி ஏற்கவைத்தார். சர்ச்சுகளில் பிளவு உருவாக்கி, சோவியத் சோசலிச ஆதரவு Renovationists எனும் பிரிவிற்கு முன்னுரிமை கொடுத்து அவர்கள் கோரிய வழிபாட்டு உரிமையை லெனினை ஏற்க செய்தார்.

டிராட்ஸ்கியின் வெளிப்படையான கருத்துக்களால் பல அரசியல் தோழர்களை அவர் இழந்தார். பொலிட்ப்யூரோவில் தனிமைப்பட்டார். கட்சியின் முக்கிய இடங்களுக்கு அவரின் ஆதரவாளர்கள் தேர்ந்தெடுக்கப்படாத நிலை உருவானது.. (oct 1 2022)

புதியன புகுதலும் பழையன கழிதலும் இயற்கையின் தேர்வு மட்டுமல்ல, அமைப்புகளிலும் நடைபெற்றுவரும் தேர்வுதான். அங்கு சிலநேரம் உக்கிரமான போராட்டங்கள் வழி இவை நடந்தேறும்.

லெனின் சுகவீனத்துடன் போராடிக்கொண்டிருக்கிறார். மீண்டு வருவாரா என்பதை எவரும் சொல்லமுடியாத நிலை நீடிக்கிறது. பொதுச்செயலரான ஸ்டாலின் தன்னை ஸ்திரப்படுத்திக்கொண்டு வருகிறார். இவ்வளவிற்கும் அவர் அப்போது டிராட்ஸ்கி அளவிற்கு புகழ்பெற்ற பேச்சாளரோ, கோட்பாட்டாளரோ இல்லை. இருந்த இடத்தில் அமர்ந்து தனக்கான தோழர்களுடன் காரியமாற்ற தேர்ந்தவரானார்.

13வது சோவியத் கட்சி காங்கிரஸ் லெனின் இல்லாமல் 1924ல் கூடப்போகிறது. லெனின் இருக்கும்போது கூட்டங்களில் அவர் கருத்தை ஏற்கமுடியாது எனப் பேசியவர்கள் உட்பட எவரும் இனி லெனினிஸ்ட் என சொல்லாமல் இருக்கமுடியாது என்ற சூழலை லெனின் மறைவு ஏற்படுத்திவிட்டது. அதிகாரத்தில் இருந்த லெனினைவிட மறைந்த லெனின் பெரிதும் போற்றப்படலானார். அவரது எழுத்துக்கள் பேரளவு புனிதமாக்கப்பட்டன.

டிராட்ஸ்கி தானும் லெனினிஸ்ட் தான் என சொல்லவேண்டிய சூழலை உணர்ந்தார். ஆனாலும் மெதுவாக அவரது முக்கியத்துவம், அவரைச் சார்ந்தவர்களின் முக்கியத்துவம் குறையலானது. லெனின், டிராட்ஸ்கி, ஜினோவீவ், காம்னேவ், ஸ்டாலின், புகாரின் என்ற நிலை மாற்றம் பெற்று ஸ்டாலின், புகாரின் என்ன முடிவெடுக்கிறார்களோ அதுவே நடைமுறையாகும் என்ற நிலை 13, 14வது காங்கிரசில் உருவானது.

ஸ்டாலின் மிக அற்புதமாக தனக்கு மெஜாரிட்டி வரும் வகையில் பொலிட்ப்யூரோவில் மத்திய கமிட்டியில் காய்களை நகர்த்தமுடிந்தது. ஸ்டாலினுக்கு எதிரானவர் என நம்பி எவரிடமும் ஏதும் பேசிவிடமுடியாது என்ற நிலை உருவானது.

இராணுவ அமைச்சரக பொறுப்பிலிருந்து தானே முன்வந்து டிராட்ஸ்கி விலகவேண்டிய நிர்ப்பந்தங்கள் உருவாயின. அவர் அப்பொறுப்பில் இருக்கும்போதே அவரது போன் ஒட்டுக்கேட்புகள் நடந்த புகாரை எழுப்பினார். வேறு ஒரு போனை கேட்டு பெற்றார். அமெரிக்க நண்பர்கள் ஈஸ்ட்மேன் உள்ளிட்டவர்களுடன் அவரால் அனுப்பப்படும், அவருக்கு வரும் மெயில்கள் தணிக்கைக்கு உள்ளானதுடன் டெலிவரி ஆகாமல் நிறுத்தப்பட்டன.

லெனின் இருக்கும்போதே லெனின் துணைவியார் கிருப்ஸ்காயாவுடன் நடந்த தொலைபேசி உரையாடலில் மரியாதை குறைவாக ஸ்டாலின் நடந்துகொண்டார் என்பதும், கட்சி காங்கிரசில் ஸ்டாலின் நீக்கப்படவேண்டும், புதிய தோழர்கள் கட்சி பொறுப்புகளுக்கு முழுமையாக வரவேண்டும் என்பதை லெனின் தனது டெஸ்டமெண்டில் சுட்டிக்காட்டியிருந்தார்.

டிராட்ஸ்கி, ஜீனோவீவ், காம்னேவ் மூவரும் ஒருவருக்கொருவர் சந்தேகமில்லாமல் அவரவர் திறமையை மதித்து காய்களை இணைந்து நகர்த்தியிருந்தால் ஸ்டாலினிடம் கட்சி சிக்கியிருக்காது என்ற பேச்சு 'gossip' ஆக இருந்தது. ஆனால் புகாரினை வைத்துக்கொண்டு ஸ்டாலின் அற்புதமாக கட்சி மெஷினரியை தன்னிடத்தில் முழுமையாக்கிக் கொண்டார். பின்னர் புகாரினுக்கு நேர்ந்ததையும் காலம் பார்த்தது.

லெனின் மறைவிற்குப் பின்னர் கிருப்ஸ்காயாவும் டிராட்ஸ்கியிடம் லெனின் எண்ணங்களை விவரித்தார். ஸ்டாலினுக்கு அடிப்படை ஆரம்ப மனித நாகரீகம் கூட தெரியவில்லை - he lacked even the most elementary human decency என்ற தாக்கீதை லெனின் செய்ததாகவும் தெரிவித்தார்.

டிராட்ஸ்கி பொலிட்ப்யோரோவிலிருந்து 1926ல் வெளியேற்றப்பட்டார். ஈஸ்ட்மேன் மாஸ்கோ வந்து டிராட்ஸ்கியின் வாழ்க்கை குறித்தும், லெனின் குறித்தும் பல்வேறு குறிப்புகளை டிராட்ஸ்கியிடம் பெற்றுச்

சென்றார். லெனின் 'டெஸ்டமெண்ட்' கட்சியின் நலன் கருதி வெளியிடப்படாமல் இருந்தது. முக்கிய தோழர்கள் மட்டும் அறிந்திருந்தனர். அதன் நகல் எவருக்கும் கொடுக்கப்படாமல் இருந்தது.

ஈஸ்ட்மேன் அமெரிக்காவில் அதன் சாரத்தை வெளியிட்டுவிட்டார். அவருக்கு டிராட்ஸ்கி வழியாகத்தான் போய் இருக்கமுடியும் என்ற பேச்சு எழுந்தது. கட்சி கமிட்டிகளில் அதன் மீது கண்டனம் எழுந்தபோது அப்படியொரு டெஸ்டமெண்டை லெனின் எழுதவேயில்லை, அது அமெரிக்காவில் சொல்லப்படும் கட்டுக்கதை என டிராட்ஸ்கி உட்பட அனைவரும் பேசினர்.

மாக்ஸ் ஈஸ்ட்மென் சங்கடத்திற்குள்ளானார். பாரிசில் இருந்த சோவியத் அம்பாசிடர் ரகோவ்ஸ்கியிடம் லெனின் டெஸ்டமெண்டை காட்டினார். படித்த ரகோவ்ஸ்கி வெளியிட்டு உன்னை நிரூபித்துக்கொள் என்றார். டிராட்ஸ்கி தனி உரையாடலில் அந்த அமெரிக்க தோழன் உண்மையான புரட்சிகரவாதி என்றார். ...

7

டிராட்ஸ்கி மீது பொதுவாக நண்பர்களை வைத்துக்கொள்ளத்தெரியாது..தன்னை தலைமையாக ஏற்று வந்த factionயை தொடர்ந்து கட்டியாளத்தெரியவில்லை என்ற குற்றசாட்டுக்கள் உண்டு.

1902ல் லெனினை சந்தித்து பேசியிருந்தாலும் 1903-1917 காலங்களில் பெரும்பாலும் இரு பெரும் குழுக்களில் சிக்காமல் தனித்து பேசியும் எழுதியும் வந்தவர் டிராட்ஸ்கி. லெனினை பெரிதாக கொண்டாடவேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுக்காதவராக அவர் பயணித்தார்.

புரட்சி காலத்தில் லெனின் டிராட்ஸ்கி என இருவரும் ஒருவருக்கொருவர் தேவைப்பட்டனர். இணக்கமாகவும் சிறு வேறுபாடுகளுடன் நகர்ந்தனர். லெனின் ஆட்சி தலைமையில் அடுத்த நிலையில் டிராட்ஸ்கி என்ற நிலை இருந்தது. ஸ்டாலின் பொதுச்செயலர் ஆக்கப்பட்ட நிலையில் , லெனின் தனது இறுதி நாட்களில் அவரை இறக்கவேண்டும் என்ற செய்தியை அனுப்பினார். அது நிறைவேறவில்லை. லெனின் மறைவிற்குப்பின்னர் தன்னை லெனினிஸ்ட் ஆக டிராட்ஸ்கி காட்ட முயற்சித்தது ஏற்கப்படாமல் போனது. இதில் ஸ்டாலின் பெரும் வெற்றியைப் பெற்றார்.

டிராட்ஸ்கியிடம் ஏதோ ஒருவகையில் நெருக்கமாக இருந்தவர்கள் என அறியப்பட்டவர்கள் அனைவரும் ஸ்டாலின் ஆட்சியில் உழைப்பு முகாமில் சித்திரவதை மரணத்தை தழுவ நேர்ந்தது. ரடேக், பிரோபிரஜென்ஸ்கி, ரகோவ்ஸ்கி, செரெப்ரைகாவ், பைடகாவ், ஸ்மைல்கா என பல முக்கிய தோழர்கள் துப்பாக்கி குண்டுகளால் தொலைந்து போயினர். டிராட்ஸ்கியால் எவரையும் காப்பாற்ற முடியவில்லை.

டிராட்ஸ்கி சிகரெட் புகைத்து தள்ளுவார். லெனின் புகை பிடிக்கமாட்டார். டிராட்ஸ்கியும் 1917க்குப் பின்னர் புகையை விட்டார். லெனின் முக்கிய பார்ட்டிகளில் மரியாதை நிமித்தம் கொஞ்சம் பீர் எடுத்துக்கொண்டு போய்விடுவார்.

நண்பர்கள் வற்புறுத்தலால் சில நேரம் டிராட்ஸ்கி இருப்பார். பலதோழர்கள் பார்ட்டி என்றால் எப்படி சந்தோஷிக்கவேண்டுமோ அப்படி நடந்துகொள்வர். புகை மண்டலம், உயர பாட்டில்கள் இடையில் கொச்சை பேச்சுக்கள் இருக்கும். டிராட்ஸ்கி ஆபாச பேச்சுக்கள் என்றால் முகம் சுளிப்பார். போல்ஷ்விக்குகள் சுப்பீரியர் என்றால் அந்த 'conscious' இருக்கவேண்டும் என அத்தோழர்களை கண்டிப்பார். நதால்யாவுடன் பார்ட்டிக்கு செல்லும்போது இந்த ஆபாசங்களையெல்லாம் தாங்கமுடியவில்லை நேர விரயம் என்பார் டிராட்ஸ்கி.

டிராட்ஸ்கி சகோதரி ஓல்காவும் அவரது கணவர் முக்கிய தோழர் காம்னேவும் ஒரு நிகழ்விற்கு அழைத்திருந்தனர். ஓல்கா அந்நிகழ்வை பூர்ஷ்வாத்தனமாக நடத்துகிறாள் என டிராட்ஸ்கி கோபித்துக்கொண்டாராம்

லெனின் diplomatic ஆக நடந்துகொள்வது போல இல்லாமல் நேரிடையாக விமர்சித்து அத்தோழர்களிடம் டிராட்ஸ்கி உறவை கெடுத்துக்கொள்வார். தேவைப்படுகிறார்கள் என்றால் அவர்களை சற்று நிதானமாக நடத்த அறிந்தவராக லெனின் இருந்தார். ஆனால் டிராட்ஸ்கி 'Self righteous' ஆக எப்போதும் இருப்பார். தன் பேசும் திறன், எழுத்தாற்றல், வாதத்திறன் ஆகியவற்றையே அவர் தனது பலமாக நினைத்தார்.

ஒருமுறை 1926ல் அவருக்கு நெருக்கமாக இருந்த ஆந்த்ரே அந்த்ரீவ், பின்னால் ஸ்டாலின் புகாரினுக்கு நெருக்கமானவர், கூறினார். டிராட்ஸ்கி நீங்கள் ஏராளம் எழுதுகிறீர்கள் ஆனால் எவன் அவற்றை படிக்கிறான்.. அந்த்ரீவிடம் சிறு புன்னகை உதிர்த்துவிட்டு டிராட்ஸ்கி பதில் கூறாமல் இருந்து விடுகிறார்.

தோழர் Max Eastman பதிவு ஒன்றில் இப்படி டிராட்ஸ்கி பற்றிச் சொல்கிறார்.

He never boasts, he never speaks of himself or his achievements, he never monopolises his conversations. He gives his attention freely and wholly to anything that comes up..if I pay him a compliment, he says some little thing, ' I am glad' , and then passes on another subject..

ஆனால் அடுத்தவரின் அறியாமையை முட்டாள்தனத்தை சகிக்காதவர் என்ற பெயரை மட்டுமல்லாமல் மிகவும் arrogant என்ற பெயரும் அவருக்கு கிடைத்தது. இப்படி தம் மீது ஒட்டப்படும் லேபிள்களை துடைத்தெறியவேண்டும் என்ற எந்த முயற்சியும் அவரிடம் இல்லை என அவர் குறித்து அறிந்தவர்கள் சொல்லக்கேட்கிறோம்.

இந்திய சிறையில் லெனினை படித்த அளவு டிராட்ஸ்கியையும் பகத்சிங் படித்ததைப் பார்க்கிறோம். ஏராள இளைஞர்களை 1920- 1930 களில் ஈர்த்த அந்த டிராட்ஸ்கி வரலாற்றில் துயர நாயகன் ஆனார்..

(அக் 2 2022)

8

வரலாற்றில் நிலைபெற்றுள்ள பல தலைவர்களின் வாழ்க்கை குறிப்புகள் மானுஷ அமானுஷ என்ற இரு பக்கங்களையும் கொண்டதாகவே என்னால் உணரமுடிந்துள்ளது.

எவரையும் கடவுள் நிலைக்கு உயர்த்தும் absolute hagiography என்ற வகையில் நான் புரிந்துகொள்வதில்லை. அதேபோல் குறைகளை மட்டுமே issuing always charge sheet with all bias என்பதாகவும் நான் அமைத்துக்கொள்வதில்லை. கொண்டாடப்பட வேண்டிய தவிர்க்கவேண்டிய என்கிற இரட்டை குணங்களையும் கொண்டுதான் மனித வாழ்க்கை ஒவ்வொருவர் வழியாகவும் சமூகத்தில் நகர்கிறது.

டிராட்ஸ்கி சில துன்பம் நிறைச் சூழலிலும் நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்தியதை பார்க்கமுடிகிறது. பொதுவாக அவர் 'serious disciplined man' ஆகப் பார்க்கப்பட்டார். அவரின் அலெக்சாந்திரியா, நதால்யா வழியாக பிறந்த மகன்கள் மகள்களும் எப்போதும் கட்டுப்பாட்டுடன் இருக்கவேண்டிய சூழலே வீட்டில் இருக்கும்.

கட்சி விவாதங்கள் அனல் பறந்து பல அடிப்படைகளில் ஒற்றுமை இருந்தாலும், நடைமுறை வேறுபாடுகளில் மன உளைச்சல் உருவாகும். தனிமனித terror என்ற காட்சி கூடாது. அதுவே கட்சியின் பெயரில் என்றால் கூட்டுப்பொறுப்பாகிவிடும் என்பார் டிராட்ஸ்கி.

தொழில் வளர்ச்சிக்கு at the cost of peasantry என்பது விவாதமாகும்போது, அது தவிர்க்கமுடியாது என்ற கொள்கை ஏற்பு இருந்தாலும் எப்படி எந்த நேரத்தில் எவ்வளவு காலத்திற்குள் என்பதில் நடைமுறை வேறுபாடுகள் எழும். ரைகோவ் அதி நிதானம் என்றால், பிரபென்ஸ்கி

அனைத்தும் உடனே என்பார். காலின் பொருளாதார ஒடுக்குதல் என்பதை எப்படி செய்யவேண்டும் தெரியுமா என்பார். டிராட்ஸ்கி குலாக்குகளை அங்கு லோகல் விவசாயிகளை சுரண்டும்வரை கூட்டுப்பண்ணைகளில் நுழைய விடக்கூடாதென்பார்.

கட்சித்தோழர்கள் ஒருவருடன் மற்றவர் பேசக்கூட அஞ்சும் நிலையை நாம் உருவாக்கிவிட்டோம் என்றார் டிராட்ஸ்கி. உடன் Dzerzhinski என்கிற தோழர் யார் யாரிடம் பேச பயப்படுகிறார்களென வினவினார். நான் உங்களிடம் பயப்படவில்லை என்றார் டிராட்ஸ்கி. ஜெர்ஜென்ஸ்கி இல்லை இல்லை நான் உங்களிடம் பேச அஞ்சுகிறேன் என்றார். நீங்கள் தோழர்களின் பலவீனத்தை பயன்படுத்துகிறீர்கள் என விமர்சனம் வைத்ததைப் பார்க்கிறோம்.

1925ல் டிராட்ஸ்கி எங்கே செல்கிறோம் சோசலிசம் நோக்கியா முதலாளித்துவம் நோக்கியா என எழுதினார். டிராட்ஸ்கி சிறு பிரசுரம் எழுதவேண்டும் என்றால்கூட எழுது மேஜையில் சம்பந்தபட்ட அனைத்து விவரங்களையும் (materials) திரட்டி வைத்துக்கொள்வார். முடிந்தவரை ஆதாரங்களை திரட்டுவார். பின்னர் போல்ஷ்விக் நிலைப்பாடு இப்படித்தான் இருக்கவேண்டும் என எழுதி அதற்காக போராடுவார்.

லெனினுக்கு பார்த்துவந்த சிறந்த ஜெர்மன் டாக்டர்தான் டிராட்ஸ்கிக்கும் பார்க்க அனுமதிக்கப்பட்டு வந்தார். டிராட்ஸ்கிக்கு வலிப்பு நோய் உண்டு. இரண்டு மணிநேரம் உரக்க பேசிவிட்டு வரும்போது கூட விழுந்துவிடுவார் என்ற செய்தி உண்டு. அவரது டாக்டர் , ஜூலியஸ் சீசருக்கு உள்ள வியாதி உங்களுக்கு என்றாராம். நான் சீசர் ஆகப்போவதில்லையே அப்படி ஒரு நாளும் கனவு கூட வரவில்லையே என்றாராம் டிராட்ஸ்கி.

டிராட்ஸ்கி நேர்த்தியாக பார்ப்பதற்கு வசீகரமாக இருந்ததால் போல்ஷ்விக் கட்சி காலத்திலேயே உடன் பணியாற்றிய இரு பெண்கள் அவரிடம் நெருக்கமாக வந்தனராம். அப்போக்கை

இறுதிவரை அழைத்துச் செல்லும் விருப்பமில்லாதவராக டிராட்ஸ்கி இருந்துள்ள செய்தியைப் பார்க்கமுடிகிறது.

Clare Sherdian என்ற பெண் சிலகாலம் நெருக்கமாக இருந்தபோது, டிராட்ஸ்கி தடுமாறி பின்பக்கம் சாய்ந்துவிடப்போகிறாரே என தாங்க வந்தார். நிலைமையை சமாளித்துக்கொண்ட டிராட்ஸ்கி நான் விழுந்தாலும் முன் நோக்கித்தான் விழுவேன்- பின் நோக்கி வீழேன் என்றாராம்.

மற்றொரு பெண் லாரிசா லெய்ஸ்னர். டிராட்ஸ்கியுடம் இவர் குறித்து கதைப்புகள் இருந்தன. பேரழகியாக பார்க்கப்பட்டார் லாரிசா. கார்ல் ரடேக் லாரிசா மீது மோகம் கொண்டவர் என்ற செய்தி வம்பும் உண்டு. லாரிசா 'மிகுந்த ஞானம் கொண்ட டிராட்ஸ்கி ' மூலம் குழந்தை ஒன்று வேண்டும் என வற்புறுத்திகொண்டிருந்தார். ரடேக்கை அழைத்து இந்த விபரீத ஆசைகளை மூடிக்கொள்ளச் சொல் என டிராட்ஸ்கி அறிவுறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டதாம்.

கொலந்தாய் போன்றவர்கள் free love எனக் குரல் கொடுத்துக்கொண்டிருந்த காலமும் கூட…

1926ல் தன் மனைவியின் சகோதரன், சக தோழன் என்ற வகையில் காம்னேவ் டிராட்ஸ்கியை எச்சரித்தாராம். நீங்கள் கொலை செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். கவனம் தேவை என்றாராம். ஜீனவீவ் கேட்டாராம் Do you think that Stalin has not discussed the question of your physical removal.

1927ல் குடும்பத்தாருடன் டிராட்ஸ்கி சென்ற கார் மீது துப்பாக்கி சூடு நடந்தது. அனைவரும் தப்பித்தனர். நதால்யா இது அதிகாரபூர்வ ஏற்பாடுதான் என கருதினாராம். (oct 3 2022)

9

1927 ரஷ்ய புரட்சியின் பத்தாண்டுகள் கொண்டாட்டங்கள் துவங்கின. இந்திய விடுதலையின் நாயகர்கள் என்ற வகையில் மோதிலால்

ஜவஹர்லால் மாஸ்கோ சென்றனர். நேரு அவரின் சோவியத் பயணம் பற்றி புத்தகம் ஒன்றையும் எழுதியிருந்தார். இந்த தாக்கத்தில்தான் அவர் மதராஸ் வந்து காங்கிரஸ் மாநாட்டில் சோசலிசம் பற்றி பேசியதுடன் முழுவிடுதலை தீர்மானத்தையும் எழுதினார். காந்தி அதை விமர்சித்தார் என்பதை அறிவோம்.

சோவியத்தில் அதிகார போட்டி உச்சமாக அதன் முடிவை எட்டக்கூடிய நிலையில் அப்போது இருந்தது. இந்தியாவில் நமக்கு அவை குறித்து ஏதும் தெரியாது. நேரு அவற்றை அப்போது அறிந்திருந்தாரா ?

டிராட்ஸ்கி ஜீனோவிவ் காம்னேவ் ஐஒப் போன்றவர்கள் அய்க்கிய எதிர்ப்பணி எனத் தீவிரமாக செயல்பட்டனர். புகாரின் துணையுடன் பொலிட்ப்யூரோ மத்திய கமிட்டியை ஸ்டாலின் தன் கட்டுக்குள் கொணர்ந்தார். டிராட்ஸ்கி குழுவினர் இடது எதிர்ப்பாளர்களாக அறியப்பட்டால், பின்னொரு காலத்தில் வலது திரிபாளராக புகாரின் கருதப்பட்டார். எவரை எதிர்த்து யார் என காட்சி மாறிக்கொண்டிருந்தது. ஆனால் ஸ்டாலின் மய்யத்தால் டிராட்ஸ்கி குழு ஒழிப்பு என்பது காட்சியின் பிரதான திசையாக இருந்தது.

அக்டோபர் புரட்சியைக் காப்பது, லெனினிசத்தைக் காப்பது என்பதை இரு சாராரும் எடுத்துக்கொண்டு முழங்கினர். அநேகமாக டிராட்ஸ்கியுடன் நின்றவர்களை பொலிட்ப்யூரோ, மத்திய கமிட்டியிலிருந்து களையெடுப்பது என்பது ஏறத்தாழ 14 வது கட்சி காங்கிரசிலேயே முடிந்துவிட்டது.

தொழிலாளர்களை தூண்டி வேலைநிறுத்தம் என இந்தக்குழுவினர் அரசாங்கத்திற்கு நெருக்கடி செய்ய முனைகிறார்கள் என்ற செய்தி மூலம் எதிர்ப்பு நடவடிக்கைகள் முடக்கப்பட்டன. டிராட்ஸ்கி பேசுகிற கூட்டங்களில் மின்சாரம் அவ்வப்போது போய்க்கொண்டிருந்தது. சோவியத் பிளஸ் எலக்ட் ரிசிட்டி என்பது சோசலிசம் என்றார்

லெனின். ஸ்டாலின் சோவியத்தை ஒழித்தார். இப்போது மின்சாரத்தையுமா என கேலி செய்தார் டிராட்ஸ்கி.

இனியும் இந்த கும்பலை சகித்துக்கொள்ள முடியாது என ஸ்டாலின் மற்றும் அதிகாரத்திலிருந்தவர் முடிவெடுத்தனர். அவசியமெனில் கட்சியில் வாக்கெடுப்பு மூலமாவது இவர்களை அப்புறப்படுத்த முடிவானது. நவம்பர் 14, 1927 நாள் குறித்தனர். புரட்சியின் 10 ஆண்டு கொண்டாட்டங்களின் முதல் வாரமது. Control commission com Ordzhonikidze தலைமையில் கூடி டிராட்ஸ்கி, ஜினோவீவ்,காம்னேவ் ,ஜஃப் ஆகியோரை அடிப்படை உறுப்பினரிலிருந்து வெளியேற்றுவது என முடிவெடுத்தது.

தோழர் ஜஃப் மனம் நொந்து தற்கொலை செய்துகொண்டார். அவர் குறிப்பு மறைக்கப்பட்டது. இறுதி சடங்கிற்கு போராடி டிராட்ஸ்கி அனுமதி பெற நேர்ந்தது. ஜஃப் டிராட்ஸ்கி ஒரு நாள் அதிகாரத்திற்கு வருவார் என (தவறான கற்பனையை) அதில் எழுதியிருந்தார் என டிராட்ஸ்கி தோழர்கள் பேசினர்.

டிசம்பரில் கூடிய 15வது காங்கிரஸ் இவர்கள் நீக்கத்தை உறுதிசெய்தது. புகாரினுக்கு நிதானம் வரத்துவங்கியது. தனக்கும் இது நேரலாம் என உள்குரல் பேசியதா எனத்தெரியவில்லை. போனில் டிராட்ஸ்கியை அழைத்து இந்தக் கொடுமை நிகழ்ந்துவிட்டதாக புகாரின் தெரிவித்ததும் நடந்தது.

டிராட்ஸ்கி தோழர்கள் ஒதுக்கப்பட்ட வீடுகளை இழக்கின்றனர். தன் நண்பர் பெலோபோரோடாவ் வீட்டில் ஓர் அறையில் டிராட்ஸ்கி குடும்பம் ஒடுங்குகிறது. அடால்ப் ஜஃப் இறுதி சடங்கின் உரைதான் அவரது புரட்சி மண்ணில் டிராட்ஸ்கி பேசிய இறுதி உரையானது. அந்த அரசியல் இரவு தன் திரையை தொங்கவிட்டுக்கொண்டது…(oct 4 2022)

10

தீவாந்திர நாடுகடத்தல் ஆட்சி அதிகாரத்தின் தண்டனை முறைகளில் ஒன்றாக கருதப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சியில் அந்தமான் நம் புரட்சியாளர்களுக்கான வதைமுகாமாக இருந்தது.

ஜார் ஆட்சியில் ரஷ்யாவில் சைபீரியா இருந்தது. லெனின், டிராட்ஸ்கி என எல்லோரும் சைபீரியாவை அனுபவிக்காமல் இல்லை. 1917 அக்டோபர் புரட்சிக்குப்பின்னர், ஆட்சி கருதிய எதிர்புரட்சியாளர்களை என்ன செய்வது. சைபீரியா இருந்தது. வேறு மனித நடமாட்டம் உலகத்தொடர்பு குறைவான இடங்களும் தீவாந்திர தண்டனைக்கான இடங்களாக இருந்தன. சுடப்படாதவர்களை எங்காவது அனுப்ப வேண்டுமே என்ற நிலை அந்த ஆட்சியிலும் இருந்தது.

டிராட்ஸ்கியை என்ன செய்வது..எங்கு அனுப்புவது ..உலகம் ஏதாவது பேசுமா என்பதெல்லாம் விவாதிக்கப்பட்டு, கட்சியிலிருந்து நீக்கப்பட்ட டிராட்ஸ்கி குடும்பத்தாருடன் தீவாந்திரம் அனுப்ப அவரிடம் இடங்கள் சொல்லப்பட்டு option கேட்கப்பட்டது.

பதவி அதிகாரத்தை 10 ஆண்டுகள் பார்த்த டிராட்ஸ்கி வழக்கம்போல் போனை எடுத்து உள்துறை சம்பந்தப்பட்டவர்களை கடுமையாக ஏசினார். அவர்கள் cool ஆக வேறு இடம் வேண்டுமானாலும் சொல்லுங்கள்..மாஸ்கோ மற்ற முக்கிய நகரங்கள் இல்லை என்றனர். ஸ்டாலின் ஆட்சி இந்த அளவு அவரிடம் சற்று பரிவாகவே நடந்துகொண்டது என்பதை இந்த சூழலில் காண்கிறோம்.

அல்மா அட்டா என்ற இடத்திற்கு டிராட்ஸ்கி குடும்பத்தாருடன் அனுப்பப்படுகிறார். புத்தகங்கள், செஸ்போர்ட் உடன் செல்கிறார். செல்லவேண்டிய ரயில் காத்திருக்கிறது. ஆதரவாளர்கள் ரயில்நிலையத்தில் ஆயிரக்கணக்கில் திரண்டு விடுகின்றனர். ஆட்சியாளர் அவரை வேறு ரயில் நிலையம் கொண்டு சென்று இரகசியமாக அனுப்பிவைக்கின்றனர். ஜனவரி 1928ல் இக்காட்சியைப் பார்க்கிறோம் .

அல்மா அட்டாவிற்கு மாஸ்கோவிலிருந்து 9 நாட்கள் பயணம். மகன்லேவா 20 வயதில், செர்ஜெ 18ல். லேவா அரசியலில் தந்தையுடன் முழுமையாக நின்றார். பழைய நியூஸ் பேப்பர்கள் மட்டும் தரலாம். நாள் ஒன்றுக்கு 10 கடிதப்போக்குவரத்து மட்டுமே என்றனர். எப்படியோ அங்கும் டிராட்ஸ்கிக்கு குழாம் உருவானது. அவர் எழுதுவது வெளிச்சென்றதால் ஆட்சிக்கு தலைவலி உருவானது.

டிராட்ஸ்கியின் ஒரு மகள் நினா திருமணமாகி மாஸ்கோவில் இருந்தார். அவர் டிபி நோயால் ஜூன் 1928ல் மறைந்தார் என்ற செய்தி வருகிறது. போய் பார்க்கக்கூட முடியவில்லை. இனியும் டிராட்ஸ்கியை சோவியத் பரப்புக்குள் வைத்திருக்க முடியாது என்றநிலையை ஸ்டாலின் எடுத்தார்.

ஜெர்மனியிடம் கேட்கப்பட்டது. மறுத்ததால் துருக்கி முஸ்தபா கமால் அட்டாதுர்க்கிடம் கேட்டனர். அவர் இரு நிபந்தனைகள் விதித்தார். ஒன்று டிராட்ஸ்கியை துருக்கி நிலப்பரப்பில் கொல்லக்கூடாது. இரண்டு டிராட்ஸ்கி உள்ளூர் அரசியலில் தலையிடக்கூடாது. ஸ்டாலின் அரசு ஏற்று, டிராட்ஸ்கி குடும்பத்தை இஸ்தான்புல் அனுப்பியது. அங்கிருந்து 30 நிமிட பயணத்தில் நல்ல வில்லா ஒன்றில் டிராட்ஸ்கி குடியேற்றப்பட்டார்.ஆரம்ப செலவான 1500 அமெரிக்க டாலர்களை ஸ்டாலின் அரசு ஏற்றது. (oct 5 2022)

11

டிராட்ஸ்கி துருக்கியில் இருந்தபோது தீவிரமாக எழுத்துப்பணியில் இறங்கினார். அவரின் சுயவரலாறு 'My Life An Attempt at an Autobiography' 1930ல் முடித்தார்.

1932-33ல் 'History of The Russian Revolution' என்பது கொணரப்பட்டது. இரண்டுமே இலக்கியத்தரம் வாய்ந்தவையாகவும் அய்ரோப்பிய அமெரிக்க சந்தை விரும்பக்கூடியதாகவும் இருந்தன. முடிந்தவரை அவர் தன்னை முதன்மையான லெனினிஸ்ட்டாக காட்ட

முனைந்தார். அக்டோபர் புரட்சியில் இருவருக்குமான தலையாய பங்கை முன் நிறுத்தினார். 1903-1916 வரை லெனினுடன் நிலவிய மாறுபாடுகளை சுருக்க முனைந்தார்.

லெனின் மற்றும் ஸ்டாலின் குறித்தும் அவர் எழுதலானார். புரட்சிக்கு இழைக்கப்பட்ட துரோகம் எனும் புத்தகத்தையும் அவர் 1937ல் கொணர்ந்தார்.

1932ல் சோவியத் புரட்சியை காத்திட ஸ்டாலினுடன் சேர்ந்து வேலை செய்யத்தயார் என்று கூட அவர் தெரிவித்தார். We have got to show that we agree to work with Stalinists for the preservation of USSR என அவர் எழுதினார். ஆனால் ஆட்சியாளர்கள் அவரை நம்ப மறுத்தனர். டிராட்ஸ்கி தனது புகழை பங்கப்படுத்துகிறார் என்பதை உணர்ந்த ஸ்டாலின் அதற்கான தடுப்பு செயல்களில் இறங்கினார்.

பள்ளிப் புத்தகங்களில் சொல்லப்பட்டிருந்த டிராட்ஸ்கி குறித்த நல் மதிப்பீடுகள் நீக்கப்பட்டன. அவர் புரட்சியின் துரோகி, டாலர்களுக்கு விலைபோன அந்நிய ஏஜெண்ட் சித்திரங்கள் எழுதப்பட்டன.

ஸ்டாலின் அரசியலிருந்து அப்புறப்படுத்தவேண்டியவர் என டிராஸ்கி கருதினார். ஆனால் physical violence அதற்கு வழியாக வேண்டாம். மக்கள் திரளின் எழுச்சி மூலம் அதை செய்யவேண்டும் என அவர் கோரினார். Our platform counts entirely on the masses என தன் ஆதரவாளர்களுக்கு அவர் சுட்டிக்காட்டினார்.

ஸ்டாலின் போலவே குலக்குகளை, மென்ஷ்விக்குகளை, புரட்சிகர சோசலிசவாதிகளை அக்டோபர் புரட்சிக்கு விரோதிகள் என்றே டிராட்ஸ்கியும் கருதிவந்தார். அதே நேரத்தில் ஸ்டாலின் ஆட்சியின் வெளியுறவுக்கொள்கை பாசிச அபாயத்தை கவனிக்க தவறுகிறது என விமர்சித்தார்.

டிராட்ஸ்கியின் மகன் லேவாவிற்கு ஸ்டாலின் ஆட்சி நடத்துகிற விசாரணைகள் எல்லாம் கண்துடைப்புகள்தான் என்ற எண்ணம் அவர்

பாரிசில் இருக்கும்போது வலுவானது. தந்தை குறித்த கவலையும் எழுந்தது.

வெளிநாடுகளில் சோவியத் வர்த்தகம் தொடர்பான பிரதிநிதிகள் டிராட்ஸ்கியுடன் தொடர்பு என அறியப்பட்டால் அவர்கள் அழைக்கப்பட்டு மரணதண்டனை உட்பட ஒடுக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட செய்தியையும் அறிய முடிகிறது.

டிராட்ஸ்கியை, டென்மார்க் மாணவர்கள் எதிர்ப்புகளையெல்லாம் மீறி உரையாற்ற அழைத்தனர். துருக்கி அனுமதி, பிரான்ஸ் வழி பயணம் என்பதால் அனுமதி பெற்று நவம்பர் 1932ல் உரையாற்ற நதால்யாவுடன் டிராட்ஸ்கி சென்றார். வெகு ஆண்டுகளுக்கு பின்னர் பொதுமேடை ஒன்றில் அதுவும் இளம் மாணவர்கள் மத்தியில் என்பதே அவருக்கு உற்சாகம் தந்தது. பயணக்களைப்பை மீறி அவர் அந்த உரையை நல்கினார்.

ஸ்டாலினின் காணும் ஒரு நாட்டில் தனித்து சோசலிசம் என்பது கனவாக முடியும் என டிராட்ஸ்கி விமர்சித்தார். தான் பல ஆண்டுகளாக சொல்லிவரும் 'நிரந்தர புரட்சி' எனும் வாதம் சரியானதே எனப் பேசினார்.

1933ல் அவர் பிரான்சில் இருக்கும்போது பிரஞ்சு கம்யூனிஸ்ட் கட்சி அவரை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தது. மார்செய்ல்ஸ் அருகில் டிராட்ஸ்கிய நண்பர்களால் அவர் போஷிக்கப்பட்டார். 1935 களில் டிராட்ஸ்கி, நதால்யா இருவருமே உடல்நிலை பாதிக்கப்பட்டனர். நீ நன்றாகிவிட்டால், உலகில் எனக்கு வேறு எதுவும் தேவையில்லை என நதால்யா மிகுந்த 'எமோஷனலாக ' இருந்தார் என டிராட்ஸ்கி இந்தக் காலத்தை குறிப்பிடுகிறார்.. (oct 6 2022)

12

டிராட்ஸ்கியின் 1935 டைரி குறிப்பு இப்படி எழுதப்பட்டுள்ளது. லெனின் மட்டும் பெட்ரோகிராட் வராமல், நானும் அவரும் உறுதியாக நிற்காமல் போய் இருந்தால் அக்டோபர் புரட்சி நடந்திருக்குமா என்று

சொல்லமுடியாது. மே1917லிருந்து நான் மட்டும் பிற பொலிட்ப்யூரோ உறுப்பினர்களுடன் மோதி தோற்றுக்கூட போயிருப்பேன். அவர்கள் கூடவே கூடாது என்ற நிலையில் இருந்தனர். லெனின் உறுதி புரட்சியைக் கொணர்ந்தது.

டிராட்ஸ்கி வரலாற்றை எழுதிய ராபர்ட் சர்வீஸ் இதை மிகச்சரியான மதிப்பீடு என்கிறார்.

துருக்கி, பிரான்ஸ், நார்வே என டிராட்ஸ்கி குடும்பம் அடைக்கலம் தேடி நகர்ந்துகொண்டிருந்தது. எந்த நாட்டில் தங்கள் மீதிக் காலம் என்பதில் நிச்சியம்மின்மை நிலவியது. மகன் லேவா பிரான்சில் தொடர்ந்து வசித்துக்கொண்டு டிராட்ஸ்கி எழுதக்கூடியவற்றை நண்பர்கள் மூலம் புல்லட்டின் எனும் இதழ் வாயிலாக கொணர்ந்தார்.

டிராட்ஸ்கி நார்வேயில் இருந்தபோதுதான் ஸ்டாலின் ஆட்சி அவருக்கு ஆகஸ்ட் 24, 1936ல் மரணதண்டனை in-absentia விதித்தது. நார்வே அரசு செய்வதறியாது செப்டம்பரில் அவரை வீட்டுக்காவலில் வைத்தது. வெளித்தொடர்புகள் முற்றிலுமாக தடைசெய்யப்பட்டது.

உண்மையிலேயே நதால்யா தன் கணவருக்கு நார்வேயில் சற்று கூடுதல் பாதுகாப்பு இருப்பதாக நினைத்தார். அவர் கடுமையாக சோர்வுற்றார். சாய்வு நாற்காலியில் படிப்பதைத்தவிர வேறு வேலைகள் ஏதும் செய்யமுடியா சூழலில் டிராட்ஸ்கி மனம் நொந்து போனார்.

தனது வக்கீல்கள் மூலம் லீக் ஆப் நேஷன்ஸ்க்கு அப்பீல் செய்தார். தன் மீதான சோவியத் குற்றசாட்டுகளுக்கு ஆதராமில்லை. அபாண்டமானவை என்றார். புல்லட்டின் வழியே தன் வாதங்களை உலகறிய செய்ய முயற்சித்தார். நார்வேயிலிருந்து வெளியேறினால்,அடுத்து எங்கே என்ற கேள்வி துளைத்தது.

அமெரிக்காவின் ஆசி கிட்டவில்லை. மெக்சிகோ இடதுசாரிகளுக்கு அடைக்கலம் என்பதில் சற்று இதமாக நடந்துகொண்டிருந்தது. புகழ்வாய்ந்த ஓவியர் டீகோ ரிவெரா மெக்சிகன் அதிபருக்கு விடாமல்

பெட்டிஷன் போட்டுக்கொண்டிருந்தார். டிராட்ஸ்கிக்கு அடைக்கலம் அவசியம் என்பதை வற்புறுத்தினார். டிராட்ஸ்கிய நண்பர்கள் மெக்சிகோ ஏன் என்றனர். மாக்ஸ்சாஷ்மேன் ஒரு பைசாவிற்கு அங்கு பிரயோசனம் இல்லை என கருத்தறிவித்தார். ஆனால் அமெரிக்கா காதுகொடுக்காத நிலையில் வேறு வழியின்றி மெக்சிகோதான் என்ற நிலை உருவானது.

நதால்யாவும் டிராட்ஸ்கியும் நார்வேயிலிருந்து மெக்சிகோ நாட்டிற்கு டிசம்பர் 20, 1936ல் பயணம் கிளம்பினர். இன்னும் சில ஆண்டுகளில் தனக்கான இறுதி நாள் அங்கு அமையும் என டிராட்ஸ்கி அன்று எண்ணியிருக்கமாட்டார். 20 நாட்கள் தனித்த பயணம் . பயணத்தில் The Crimes of Stalin என்கிற புத்தகத்தை டிராட்ஸ்கி எழுதலானார்.

டாம்பிகோ எனும் எண்ணெய் நகர் ஒன்றில் அவரது கப்பல் ஜனவரி 9 1937ல் அவரை இறக்கிவிட்டது. ஓவியர் டீகோ உடல்நிலை பாதிக்கப்பட்டு அழைக்க வரவில்லை. அவர் துணைவியார் பிரைடா வந்திருந்தார். புகழ்வாய்ந்த டிரட்ஸ்கிய அறிஞர்கள் ஜார்ஜ் நோவாக், மாக்ஸ் சாஷ்மேன் வந்திருந்தனர்.

மெக்சிகோவின் தகவல்தொடர்பு அமைச்சர் பிரான்சிஸ்கோ என்பார் நல்ல ஏற்பாடுகளை செய்து மெக்சிகோ சிட்டி செல்ல உதவினார். அங்கிருந்து மேற்கு பகுதியில் கோயோகான் என்ற இடத்தில் பிரைடா அருமையான தன் 'Blue House' யை டிராட்ஸ்கி தங்கிட கொடுத்தார். காற்றோட்ட அறைகளுடன் கிளிகள் கொஞ்சும் அருமையான சூழலுடன் அவ்வீடு இருந்தது. மேம்பட்ட உணவு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. டிராட்ஸ்கி தன் கூடுதல் செலவிற்கு தன் எழுத்தை நம்பி வாழத்துவங்கினார்.. (oct 7, 2022)

13

அழகான நீல வீடு மெக்சிகோவில் வாழ்விடமாக டிராட்ஸ்கி நதால்யாவிற்கு அமைந்தது. வீட்டை தந்த பெண்மணி திருமதி பிரைடா. ஓவியர் டீகோ ரிவேராவின் துணைவியார். பிரைடாவும்

ஓவியர்தான். அழகான பெண்ணும் கூட. டிராட்ஸ்கியின் புத்திக்கூர்மையால் இவரும் கவரப்பட்டார்.

நான்காவது அகிலத்தை கட்டுவதில் டிராட்ஸ்கி தனது கவனத்தை எடுத்துக்கொண்டார். 1938ல் பிரான்சில் தனது ஆதரவாளர்கள் சிலருடன் அந்த புதிய அகிலத்தை அமைத்தார். 12 நாடுகளிலிருந்து ஸ்டாலின் ஆதரவு கம்யூனிஸ்ட் கட்சிகளிலிருந்து ஆங்காங்கே மாறுபட்டவர்கள் இதற்கு துணையாக இருந்தனர். ஆரம்பத்தில் உலக முழுதும் சில ஆயிரம் பேர்கள்தான் தங்களை டிராட்ஸ்கியர்கள் எனச் சொல்லி முன்வந்தனர்.

பிரான்சில் புல்லட்டின் பணிகளை பார்த்து வந்த டிராட்ஸ்கியின் மகன் சுகவீனமிற்று அருகாமை மருத்துவமனையில் இறந்தார். அவர் தவறான சிகிட்சையால் கொல்லப்பட்டிருக்கலாம் என டிராட்ஸ்கியர்கள் கருதினர். எவராலும் ஆதாரம் எதையும் வெளியிட முடிந்ததாக தெரியவில்லை.

லேவாவிற்கும் தந்தையின் செயல்களில் அதிருப்தி கூடிக்கொண்டே வந்தது. தானே சரி என்ற போக்கில் தோழர்களை இழப்பது அவரின் மோசமான குணம் என பகிரங்கமாக விமர்சிக்க ஆரம்பித்தார் லேவா. டிராட்ஸ்கியிடம் எவராவது உங்கள் மகன் என பேச ஆரம்பித்தால், அவருக்கு பெயர் இல்லையா என்ன என் மகன் என எரிந்து விழுவார். வேறுபாடுகள் இருந்தாலும் மகனின் துயரம் டிராட்ஸ்கி குடும்பத்தை பாதித்தது.

சோவியத் கட்சியிலிருந்து டிராட்ஸ்கி வெளியேற்றப்பட்டவுடன், அவரின் இரத்த உறவு கொண்ட யூதர்கள், அவர்களை மணந்தவர்கள் என ஸ்டாலின் அரசாங்கம் தேடிப்பிடித்து வேட்டையாடியது. மரணதண்டனை கூட நேர்ந்தது என ராபர்ட் சர்வீஸ் பெயர்களை குறிப்பிட்டு சொல்கிறார்.

மெக்சிகோ நீல வீட்டில் அதன் உரிமைக்காரர் ஓவியர் பிரைடாவுடன் டிராட்ஸ்கிக்கு காதல் உறவு ஏற்பட்டது. சில மாதங்கள் அவர்கள்

நெருக்கமாக இருந்தனர். அறிந்த தோழர் ஒருவர் ஸ்டாலினுக்கு தெரிய வந்தால் ஆபத்தாக முடியும். மேலும் நான்காவது அகில செயல்பாட்டிற்கும் கேடாகும் என அறிவுறுத்தியதாக அறிகிறோம்.

நதால்யாவும் இந்த உறவை அறிந்து நீல வீட்டிலிருந்து சற்று தள்ளி குடியேற முயற்சிகள் எடுத்தார். டீகோ ரிவேரா அகிலத்தில் தனக்கு முக்கியத்துவத்தை எதிர்பார்த்தார். பிரைடா டிராட்ஸ்கி உறவு அவருக்கு தெரியுமா என புரிந்துகொள்ளமுடியவில்லை. ஆனால் டிராட்ஸ்கி மீதான அன்பால் 'புளூ ஹவுஸ்' விட்டு போகவேண்டாமே - அது பிரைடா வீடு , அவளிடம் தெரிவிக்கவும் என வேண்டிக்கொண்டார் டீகோ.

அலெக்சாந்திரியாவை கைக்குழந்தையுடன் அப்படியே சைபீரியாவில் விட்டுத்தான் அடுத்த வாழ்வை நதால்யாவுடன் டிராட்ஸ்கி மேற்கொண்டார். முன்பே இரு பெண்மணிகள் அவருடன் இணைத்து பேசப்பட்டனர். இப்போது பிரைடாவும் பேசப்பட்டார். ஆனால் நதால்யாதான் அவருடன் வாழ்நாட்கள் முழுவதும் வாழ்ந்த பெருமாட்டி. 30 ஆண்டுகளுக்கு மேலாக இணைந்து வாழ்ந்தவர். இருவரும் அதிகாரபூர்வமாக திருமணம் செய்துகொள்ளவில்லை. அவரின் ஆத்ம தோழி நதால்யாதான். இன்பதுன்பங்களில் முழுமையாக நின்றவர் அவர்தான்.

பிரைடா விலகிக்கொண்ட பின்னர் 'ஸ்டாலினிஸ்ட்களுடன்' அரசியல் ரீதியாக நெருக்கமானார். ஸ்டாலினின் அற்புத ஓவியம் ஒன்றையும் அவர் வரைந்தவரானார்.

டிராட்ஸ்கி எப்போதும் தான் கொல்லப்பட வாய்ப்புண்டு என்ற அச்சத்துடன் மெக்சிகோவில் வாழ்ந்துகொண்டிருந்தார். பெரும்பாலும் பேட்டிகளை மதிய நேரத்தில்தான் வைத்துக்கொள்வார். செலவிற்கு எழுத்துப்பணியையே நம்பினார். ஸ்டாலின் மீது விமர்சனம் செய்பவர் என்ற வகையில் ஏராள அமெரிக்க ரிபோர்ட்டர்கள் அவரிடம் வந்தனர். சில நேரம் பேட்டி என்றால் 1000 டாலர்கள் தரவேண்டும் என

டிராட்ஸ்கி கோரிய செய்தியைப் பார்க்கிறோம். அவரின் புத்தகங்களுக்கு ஆரம்பத்தில் இருந்த வரவேற்பு மெதுவாக குறையத் துவங்கியது.

வாழ்வின் போராட்டம் இன்னும் வதைகளிலிருந்து அவரை மீட்கவில்லை. நிச்சயமற்ற வாழ்வு என்கிற நிலை நீடித்துக்கொண்டிருந்தது….(oct 8 2022)

14

இரண்டாவது உலகப்போர் துவங்கிய நேரத்தில் ஹிட்லர் ஜெர்மனியுடன் ஸ்டாலின் சோவியத் செய்திருந்த non aggression pact இருந்தது.

சோவியத்தை காப்பது என்ற அடிப்படை அம்சத்தில் டிராஸ்கி வேறுபடவில்லை. தன் ஆட்சியை அதன் மூலம் சோவியத்தை காப்பது என்பதற்காக ஹிட்லருடன் எந்த அளவு வேண்டுமானாலும் ஸ்டாலின் சமாதானம் செய்துகொள்கிறார் என்பதுதான் டிராட்ஸ்கியின் 1939 செப்டம்பர் கால விமர்சனமாக இருந்தது.

கிழக்கு போலந்து தாக்குதலை ஹிட்லர் செய்தார். ஸ்டாலின் ஆட்சி தலையிடாது என்ற உறுதிமொழி இருந்தது. எஸ்டோனியா,லாத்வியா,லிதுவேனியா ஆகிய மூன்று ஆட்சி அரசாங்கங்களையும் உடனடியாக ’incorporation with USSR’ என ஸ்டாலின் ஆட்சி அறிவுறுத்தி ஆணையிட்டது. அப்பகுதிகள் சோவியத்மயம் (Sovietisation) என்பதற்கு உள்ளாக்கப்பட்டன.

பின்லாந்த் ஸ்டாலின் அறிவுறுத்தலை ஏற்கமறுத்து போராடியது. டிராட்ஸ்கி கூட பின்லாந்த் சோவியத்மயமாதல் அம்மக்களுக்கு நல்லதே எனக் கருதினார். கோமிண்டர்ன் சார்ந்த ஆட்டோ குசினன் அரசை பின்லாந்தில் அமர்த்தினர். ஆனால் அமெரிக்க

டிராட்ஸ்கியர்கள் இதை விமர்சித்தனர். ஸ்டாலினோ இம்பீரியலிசம் எனக் குற்றம் சாட்டினர்.

பொதுவாக டிராட்ஸ்கி தான் நினைப்பதையே சரி என வாதாடிவருகிறார் என அவரது நெருங்கிய சகாக்களே எண்ணலாயினர். சோவியத் விரிவாக்க நடவடிக்கைகளுக்கு இரகசிய ஆதரவை டிராட்ஸ்கி தந்துகொண்டிருக்கிறாரா என்ற எண்ணம் வரத்துவங்கியது. சாஷ்மேன் போன்றவர்களை சமாதானப்படுத்த தான் அமெரிக்கா வரத்தயார் என டிராட்ஸ்கி சொல்லவேண்டியதானது.

இரண்டாவது உலகப்போருக்கு முன்பு பாலஸ்தீனிலிருந்து தனியாக யூதர்கள் நாடு என்பதை டிராட்ஸ்கி ஏற்காமல் இருந்தார். சோசலிச புரட்சி மூலம்தான் அவர்கள் வாழும் நாடுகளில் பாதுகாப்பு என்ற பொது அம்சத்தையே பேசிவந்தார்.

ஹிட்லரின் வதைகளை அறிந்தபின்னர் Jews State எனப்பேசவேண்டியிருந்தது. நியூயார்க் டிராட்ஸ்கியர்களுக்கு இனியும் அரசியல் கேள்விகளுக்கு டிராட்ஸ்கியை நம்ப முடியுமா என்ற எண்ணம் உருவானது.

சோவியத் மீதான பேரன்பு, ஸ்டாலின் மீது அவர் பார்த்த குறைகளை மீறி அவரை துரத்தியது. சோவியத் தொழிலாளர்களிடத்தும் விவசாயிகளிடத்தும், ஜவான்களிடத்தும் மெக்சிகோவிலிருந்து வேண்டுகோள் விடுத்தார். தாய்மண்ணை காப்பாற்றுவீர் என்பதாக அவ்வேண்டுகோள் அமைந்தது.

ஆனால் துரதிருஷ்டமாக அவரது செய்தி எவ்விடத்திற்கும் போகாமல் ஆட்சியாளர்களால் பார்த்துக்கொள்ளப்பட்டது. மெக்சிகோவில் புளூ ஹவுசிலிருந்து வெளியேறி அவெனிதா வியன்னா எனும் பகுதியில் டிராட்ஸ்கி வாழத்துவங்கினார். அவருடைய தோழர்கள் உயிருக்கு பெரும் ஆபத்து என்பதை எச்சரித்து வந்தனர்.

மெக்சிகோ போலீஸ், அமெரிக்க தூதரகம், கிரெம்ளின் ஒற்றர்கள் என பலராலும் அவர் தீவிரமாக கண்காணிக்கப்பட்டார். டிராட்ஸ்கி என்ற

பெயரில் கடிதங்களை எழுதாமல் old man, uncle, Vidal,oaken, crux என பல புனைப்பெயர்களில் கையெழுத்திட்டார்.

அவருக்கு 60 வயது முடிந்த நிலை. டாக்டர் சொலிங்கர் என்பார் டிராட்ஸ்கிக்கு மெடிக்கல் செக் அப் செய்தவுடன் பிப் 27 1940ல் testament எழுதலானார். நதால்யா டாக்டரை கடுமையாக கோபித்துக்கொண்டார். உயில் எழுதும் நிலைக்கு அவர் மனநிலை போன வருத்தம் நதால்யாவிற்கு.

எனது புரட்சிகர வாழ்வில் துளி கறை கூட இல்லாமல் இருக்கவே விழைகிறேன். பாட்டாளிவர்க்க புரட்சியாளனாக, மார்க்சிஸ்ட்டாக, இயக்கவியல் பொருள்முதல்வாதியாக, பழுத்த நாத்திகனாகவே சாவேன். இளமையில் இருந்ததைவிட மனிதகுலத்திற்கு உகந்த எதிர்காலம் கம்யூனிசமே என்கிற உறுதிப்பாடு எனக்கு வயதான பின் அதிகமாகியுள்ளது என டிராட்ஸ்கி எழுதினார்.

மரணம் நெருங்குவதை அவர் உணர்ந்தார். கொல்லப்படலாம் என்ற உள்ளுணர்வும் இருந்தது. ஆனால் தன் மரணம் கொலையாக மட்டுமே அமையும் என்கிற நம்பிக்கையில்லாமல் போனது. 1940 மே 24 விடியற்காலை அவரது வில்லா குடியிருப்பில் 20 ஆயுதம் தாங்கியவர்களால் துப்பாக்கி சூடு நடந்தது. கட்டில் அடியில் பதுங்கியும், ஒவ்வொரு அறையாக ஊர்ந்து நகர்ந்தும் டிராட்ஸ்கி நதால்யா உயிர் தப்பினர்.

உதவியாளராக இருந்த பாப் ஹர்த் மீது சந்தேகம் எழுந்தது. அவர் 'செக்யூரிட்டி' பணியில் ரொம்ப காஷுவலாக இருக்கிறார் என நதால்யா சொல்லிவந்தார். தாக்குதல்காரர்கள் அவரை தூக்கிச் சென்று கொலை செய்த தகவலும் கிடைக்கிறது.

மெதுவாக அந்நிகழ்விலிருந்து மீண்ட டிராட்ஸ்கி ஸ்டாலின் குறித்த புத்தகம் எழுதலானார். ஆனாலும் அவரின் உயிர்க்கான போராட்டம் தொடர்ந்தது. அது உதவியாளர் ஜாக்சன் வடிவில் வந்தது.

ஜாக்சனை நம்பவேண்டாம் என தோழர்கள் சொல்லினர். அவன் உண்மையை பேசுவதில்லை என்றனர். நல்ல வெயிலில் ஏன் மழைகோட் என நதால்யா கேட்டதற்கு எப்போ மழைவரும் என தெரியுமா என ஜாக்சன் சொன்ன பதிலை நதால்யா தெரிவித்தார்.

ஜாக்சன் நேரம் பார்த்து டிராட்ஸ்கியை தாக்க விரும்பினார். களைகொத்து/ சுத்தியல் கோட்டுக்குள் எப்போதும் மறைந்து இருந்தது.

டிராட்ஸ்கி தான் எழுதிய பக்கங்களில் தலை கவிழ்ந்து இருந்தார். மண்டையில் ஒரே போடு. டிராட்ஸ்கி சுருண்டார். மருத்துவமனையில் ஆகஸ்ட் 21 1940ல் அவர் மரணத்துடன் போராடுகிறார் என்ற செய்தி உலகெங்கும் பரவியது. அமெரிக்க வானொலி ஆகஸ்ட் 21ல் மறைந்தார் என்ற செய்தியை வெளியிட்டது. ஜாக்சன் பெயர் ரமான் மெர்கடர் என விசாரணையில் தெரியவந்தது.

டிராட்ஸ்கியின் பலம் பலவீனம் சாதனைகள் எழுத்தாற்றல் குறித்து பத்திரிகைகள் எழுதின.

புரட்சியின் துரோகி, அந்நிய ஏஜெண்ட், சோவியத் எதிர்த்த சதிகாரன் என பிராவ்தா எழுதிக்கொண்டது.அந்த எடிட்டோரியல் ஸ்டாலினால் சரிபார்க்கப்பட்டு வெளியிடப்பட்டது.

டிராட்ஸ்கியை முடிந்தவரை நான்காவது அகிலத்தினர் எடுத்துச் சென்றனர். நதால்யா பின்னரும் 20 ஆண்டுகள் வாழ்ந்து டிராட்ஸ்கியவாதிகளை உற்சாகப்படுத்தி வந்தார். சோவியத் வரலாறு பேசும்போது பேசவேண்டியவர்களுள் ஒருவராக டிராட்ஸ்கியும் இருக்கிறார்…. (oct 10 2022)

24 மாவோ- தோழர் டாங் பிங் ஹான்

Dong ping Han அமெரிக்க வாழ் சீனப் பேராசிரியர். மாவோ காலம் பொற்காலம் எனப் பேசிவருபவர். Unknown Cultural Revolution என்கிற புத்தகம் எழுதியவர். அவரின் கட்டுரைகளை think china இணையத்தில் பார்க்க முடிகிறது.

சீனாவில் டெங்ஷியோ பிங்கால் கொணரப்பட்ட one child policy குறித்து கடுமையான விமர்சனங்களை எழுதி வருகிறார். கலாச்சார புரட்சி பெரும் மாற்றங்களை தன் ஊர் உட்பட , சீனா முழுதும் கொணர்ந்தாக சொல்லும் டாங் பிங் , மாவோவிற்கு பின்னர் டெங் காலத்தில் கொணரப்பட்ட சீர்திருத்தங்களால், பெண்களும்- உழைப்பாளர்களும் துயர்களுக்கு உள்ளாக்கப்பட்டும், கொழுத்த பணக்காரத்தட்டு உருவாகி, லஞ்சம் ஆடும் நாடாக சீனா மாறிவிட்டதாக எழுதி வருகிறார்.

மாவோவின் ஆட்சியை பொற்காலம் என்றும், அவருக்கு என வங்கி கணக்கின் இருப்போ சொத்தோ இல்லாமல் அவர் எளிய வாழ்க்கை மேற்கொண்ட கதைப் பிரதியை டாங் பிங் ஹான் எழுதி வருகிறார்.

டாங் எழுதிய The socialist legacy underlies the rise of today’s China in the world என்கிற நீள் கட்டுரை ஒன்று ’Aspects of India’s Economy’ இதழில் வந்தது. அதை புதிய ஜனநாயக முன்னணி தோழர்கள் சோசலிச சீனாவும் முதலாளித்துவ சீனாவும் என மொழி பெயர்த்து கொண்டு வந்தனர். கீழைக்காற்றின் சிறிய புத்தகம் தான். படித்துப் பார்க்கலாம்.

மாவோ உலகம் முழுவதிலுமான போராளிகளுக்கு நம்பிக்கையூட்ட ஏகாதிபத்தியத்தை காகிதப்புலி என வர்ணித்தார். மாவோ மறைவிற்கு பின்னர், அவரையும் காகிதப்புலியாக கருதிக்கொண்ட ஆளும் establishment கொஞ்சம் அவரை விமர்சனக்கண் கொண்டு பார்க்க ஆரம்பித்தது. மாவோ சிந்தனைகள் என்கிற invocative clause சீனாவின் அரசமைப்பு விதிகளிலேயே சொல்லப்பட்டிருந்தாலும், நமது காந்தி

ரூபாய் நோட்டில் இருப்பதைப் போன்ற செலாவணியாகவே அங்கு இருப்பதாக தோன்றுகிறது.

மூன்றாம் உலக நாடுகளில் மாவோ சற்று தாக்கத்துடன் இன்னும் இருந்து வருகிறார் என்பதில் உண்மையில்லாமல் இல்லை. அதேநேரத்தில் ’Mao our chairman’ போன்ற அதீத முழக்கங்கள் இருப்பதில்லை. (jan 20 2024)

25. மாவோ- ஜோனத்தன் கிளமண்ட்ஸ்

Jonathan Clements எழுதிய மாவோ biography 200 பக்கங்கள் கொண்ட சிறிய புத்தகம்தான். ஆனால் சுவாரஸ்யமான புத்தகம். மாவோவின் திறமை பலம் பலவீனங்களுடன் இந்த ஆக்கம் நகர்கிறது.

Philip Short's Mao A Life, Jung Chang and Holliday's Mao the Unknown Story, Stuart Schram's Mao's Road to Power, Li Zhisui's Private Life of Charman Mao, Edgar Snow's Red Star over China மற்றும் மாவோ எழுத்துக்கள் உரைகள் வால்யூம்களையும் ஆதாரமாக்க கொண்டு இந்நூலை கிளெமெண்ட்ஸ் எழுதியுள்ளார். நூலாசிரியர் சீன, ஜப்பானிய மொழியறிவு கொண்டவர்.

இந்நூலில் சில சுவையான/ வருந்ததக்க தகவல்கள் கிடைக்கின்றன.

மாவோவும் தந்தையிடம் முரண் கொள்ளவேண்டிய சூழலையே எதிர்கொண்டார். கந்து வட்டிக்காரர். ஊர் நிலங்களை வளைத்துப் போட்ட கஞ்சத்தனம் கொண்ட கறார் தந்தை.

மாவோ 1893ல் பிறந்தவர். இவ்வாண்டு அவரின் 130 ஆம் ஆண்டு. மாவோவிற்கு இந்த நிகழ்வு நடந்தபோது வயது 13. வீடு நிறைய விருந்தாளிகள். அவர்கள் முன்னிலையில் உதவாக்கரை, சோம்பேறி என மாவோவை தந்தை கடுமையாக திட்டுகிறார். இவர் முகத்தை தொங்கவிடவேண்டும் என மாவோ முடிவெடுத்து , வீட்டை விட்டுப் போகிறேன் என கத்திவிட்டு அருகே குளக்கரைக்கு சென்று குதித்து விடுவேன் என எச்சரிக்கிறார். தாய் ஓடிவர, தந்தையும் வழியில்லாமல் நில்லுடா என குரல் கொடுத்துக்கொண்டே வருகிறார்.

மகன் மாவோ வீம்பும், தந்தையின் வரட்டு கௌரவ கோபமும் ஒன்றுடன் ஒன்று போட்டியிடுகின்றன. முட்டி போடுடா என தந்தை. ஒரு முட்டியை மட்டும் போட்ட நிலையில், அடிக்க மாட்டேன் எனச் சொல் வருகிறேன் என மகன் மாவோ. Thus the war ended என இந்த இடத்தை கிளெமெண்ட்ஸ் முடித்திருப்பார்.

அப்போதே வீட்டில் அய்க்கிய முன்னணி ஒன்றை அதிகாரத்திற்கு எதிராக மாவோ கட்டியுள்ளார். தந்தை தனியாக அதிகார மய்யம். மாவோ தன் அம்மாவுடன், சகோதரர்களுடன், சில வீட்டுத் தொழிலாளர்களுடன் கூட்டு ஏற்படுத்திக்கொண்டார். தாயாரின் ஒரே அறிவுரை பகிரங்க கலகம் கூடாது. மறைமுக தாக்குதல் நடத்தலாம் , அதுதான் சீன முறை என்பது. இந்தக் காட்சியை மாவோவின் மொழியில் எட்கர் ஸ்னோ புத்தகத்திலிருந்து இவ்வாறு சுவையாக கிளெமெண்ட்ஸ் தருகிறார்.

There were two parties in the family. One was my father, the ruling power. The opposition was made up of myself, my mother, my brother and sometimes even the labourers. In the United Front of the opposition, however there was a difference of opinion.

My mother advocated a policy of indirect attack. She criticised any overt display of emotion, and attempts of open rebellion against the Ruling Power. She said it was not the Chinese way

1907-8 மாவோவின் 14 வயதில் அவருக்கு விருப்பமில்லா 20 வயது லுவோ என்ற பெண்ணை மணமுடிக்க அழைத்து வருகின்றனர். வீட்டு வேலைக்கு ஆள் என்ற அளவுதான் தந்தை யோசித்தார் போலும். தந்தையின் நடத்தைகளால் தாயார் உட்பட குடும்ப உறுப்பினர்கள் வெளியேற நேர்ந்தது.

மாவோ தன் வாழ்நாளில் அதிகாரபூர்வமாக 1920ல் Yang Kaihuiவை மணந்து 3 குழந்தைகளுக்கு தந்தையானார். 1928ல் He Zizhen மணந்து 5 குழந்தைகளுக்கு தகப்பன் ஆனார். 1938ல் Jiang Qing மணந்து அவர் ஒரு மகவை பெற்றெடுத்தார்.

மாவோ கம்யூனிஸ்ட் கட்சி வாழ்க்கை 1922ல் துவங்கியது. ஒருமுறை 1928ல் அவர் கட்சியிலிருந்து விலக்கப்பட்டதாக செய்தி வந்து கட்சி அல்லாத பிற பணி என 'army divisional commander' என பணிபுரிய வேண்டியிருந்தது.

1930 களில் தேசியவாதிகள் கம்யூனிஸ்ட்கள் போராட்டத்தில் அவரது துணைவியார் யாங் தூக்கில் ஏற்றப்பட்டார் என கிளெமெண்ட்ஸ் எழுதுகிறார்.

புகழ்வாய்ந்த Long March காலத்தில் 86000 வீரர்களும், மாவோ உட்பட 15000 பொறுப்பாளர்களுக்கும் சேர்த்தே 25 தாதிகள் (Nurses) தான் இருந்தனர். மாவோவின் துணைவியார் He Zizhen பேறு காலமும், கைக்குழந்தையை வைத்துக்கொள்ள முடியாத சூழலில் பிறந்த பெண் குழந்தையை பெயர் கூட வைக்காது அப்படியே வழியில் கண்ட விவசாயி வசம் கொடுத்து விட்டு நகர்ந்த தாயுள்ளமும் கலங்க வைக்கும். He Zizhen 1938ல் மாஸ்கோ அனுப்பப்பட்டு அங்கு பிறந்த குழந்தை Lyova நிமோனியா கண்டு இறந்தது, ஜீஜென் துக்கத்தை கூட்டியிருக்கும்.

மாவோவின் மகன் Anying கொரிய யுத்தத்தில் மறைந்த செய்தி கூட மாவோவிடம் அரசியல் முடிவுகளில் ஏதாவது செல்வாக்கை செய்துவிடக்கூடாது என்பதற்காக மூன்று மாதம் சொல்லப்படவில்லை என கிளெமெண்ட்ஸ் தகவல் தருகிறார்.

1949 சீன புரட்சி- மாவோ ஆட்சி, 1950 களின் நூறு பூக்கள் மலரட்டும் இயக்கம், கலாச்சார புரட்சி, bombard the head quarters, இந்தியப் போர் பிரச்சனை , அமெரிக்காவிடம் கைகுலுக்கல் என நிகழ்வுகளின் தொகுப்பாக இந்த புத்தகம் செல்கிறது.

மாவோவை வழிபாடு செய்யாமல் அமைப்புபலம் , சிந்தனை பலம், அதிகார பலம் என்பவற்றுடன் பலவீனங்கள், தனி நபர் ஒழுக்க பலவீனங்கள் என்கிற சித்தரிப்புடன் , மார்க்சியத்தை சீனமயமாக்குதல் என்ற தனி தடத்தை அவர் அமைத்த அவரின் சிறப்புக்களுடன் இந்த புத்தகம் நகர்கிறது. (march 18 2023)

26. மாவோ- காந்தி

தோழர் மாவோ அவர்களின் selected vol ஒன்றை கொடுத்து முதலில் என்னை படிக்கச் சொன்னவர் தோழர் கி வெங்கட் ராமன் (இப்போது தமிழ்தேச பொதுவுடைமை). அப்போது திருவாரூர் சிபிஎம் மாவட்டக் கட்சி ஊழியர் அவர். அங்கிருந்த நூலகத்திலிருந்து தான் அதை அவர் எடுத்துக்கொடுத்தார். நாங்கள் சிபிஅய் சிபிஎம் என வெவ்வேறு இயக்கங்கள் சார்ந்தவர்களாக இருந்தாலும், தோழமை கொண்டவர்களாக இருந்தோம். திருவாரூர் தொழிற்சங்க கூட்டமைப்பு இயக்கத்திற்கு அவர் தலைவர், நான் செயலர். ஏறத்தாழ ஊரில் இருந்த 50 தொழிற்சங்கங்கள் அதில் இடம் பெற்றிருந்தன. இப்போதும் 45 ஆண்டுகளை தொட்ட அவ்வியக்கத்தை அவ்வூர் தலைவர்கள் சிறப்பாக நடத்திக்கொண்டிருக்கின்றனர்.

தோழர் வெங்கட் கொடுத்த அந்த தொகுப்பில்தான் மாவோவின் on practice, on contradiction போன்ற புகழ் வாய்ந்த மெய்யியல் விசாரணைகள் இருந்தன. 1985க்கு முன்னரா அடுத்த ஆண்டா என எனக்கு சரியாக நினைவில்லை. அப்போது எவ்வளவு புரிந்து கொண்டேனோ…

16 ஆண்டுகளுக்கு முன்னர் ராகுல் பவுண்டேஷன் தோழர்கள் மாவோவின் 5 கட்டுரைகள் என்ற தொகுப்பை 'Five Essays on Philosophy' என்கிற புத்தகத்தைக் கொணர்ந்தனர். மாவோயிச பயிற்சி உள்ள தோழர்கள் பெரும்பாலும் நடைமுறையைப் பற்றி, முரண்பாடு குறித்து என்கிற இரண்டையும் படித்திருப்பார்கள்.

ராகுல் நிறுவனம் 1937 ல் பேசப்பட்ட இந்த மாவோவின் இரண்டுடன், தொடர்புகொண்ட முரண்பாடுகளை கையாளுதல் handling the contradictions, propaganda work பிரச்சார வேலை என்கிற 1957 குறிப்புகளையும், சரியான சிந்தனை எண்ணங்கள் எங்கிருந்து வருகின்றன என்கிற மிகச் சுருக்கமான 1963 குறிப்பு ஒன்றையும் இணைத்து இந்த 5 கட்டுரைகள் தொகுப்பை கொணர்ந்தனர்.

அதைப் படித்தபோது தான் 1980களின் நினைவுகள் வந்தன. திருவாரூர் சிபிஎம் அலுவலகத்தோழர் சேகர் (விவசாயத்தலைவர் கோ வீரையன் மாப்பிள்ளை) சிபிஎம் அனைத்து பத்திரிகைகளையும் RP என எழுதி அலுவலக போஸ்ட் பாக்சில் வைத்து சென்றுவிடுவார். தீக்கதிர் மட்டும் வீட்டிற்கு வந்துவிடும்.

வெங்கட் இருந்தபோது சிபிஎம் people's democracy யும், சிபிஅய்யின் new age யையும் மாற்றி கொடுத்து வாங்கிக்கொண்டிருந்தோம். சென்னை வந்த பிறகு பீப்பிள்ஸ் டெமாக்ரசி, மார்க்சிஸ்ட் இதழ்களை அதிகாரிகள் சங்கத்தில் மாநில செயலராக இருந்த , தற்போது ஓய்வூதிய சங்க செயலராக உள்ள தோழர் ராஜசேகர் கொடுத்துக்கொண்டிருந்தார்.

On practice அளவில் சிறிய கட்டுரைதான். மாவோவும் காந்தியும் சந்திக்கும்புள்ளிகளை, மாறுபடும் இடங்களை இதில் பார்க்க முடியும். 'தோழர் காந்தி' நூலில் லெனினும் காந்தியும், மாவோவும் காந்தியும் போன்ற கட்டுரைகளை எழுதியிருந்தேன். அதில் சில ஒப்பீடுகள் காட்டப்பட்டிருக்கும்.

காந்தியிடம் 'தான் செய்துவிட்டு அதை செய்ய சொல்வது' என்கிற முன்னுதாரண exemplariness இருக்கும். செய்த ஒன்றின் அனுபவ பிழிவாகா அவரது தியரி (தியரி கோட்பாடு என்ற பொருளில் அல்ல) அமையுமென புரிந்துகொள்ளலாம்.

மாவோவின் சில வரிகளை இங்கு தருகிறேன்.

முதலில் where do correct ideas come from என்கிற 1963 குறிப்பில் மாவோ

Leading from practice to knowledge and then back to practice. Such is the the Marxist theory of knowledge, dialectical materialist theory of knowledge. Among our comrades there are many who do not yet understand this theory of knowledge.

காந்தி எப்போதும் dialogical ஆக இருப்பவர். தொடர் செயல்கள் விவாதங்கள் வழி அவ்வப்போதைக்கான உண்மைகளை

இனங்காண்பவர். டன் கணக்கான பேச்சுக்களைவிட ஓர் அவுன்சு நடைமுறை, ஓரடி முன்னால் என்கிற கவலையுடன் செயல்பட்டவர். செய்யமுடியுமா எனில் தொடர்ந்து வா என்கிற முன்னொட்டை அவரிடம் பெறாமல் எவரும் அவர் கூட செல்ல முடிந்ததில்லை.

எங்கள் டெலிகாம் இயக்க தோழர் ஓ பி குப்தாவிடம் ஓரடி ஆனாலும் அனைவருடன் - தீர்வை நோக்கிய செயலும் பேச்சும் என்பதை நாங்கள் உணர்ந்தோம். தீர்வைத் தருவதே புரட்சிகரமானது என்கிற பாலபாடத்தை குப்தா எங்களுக்கு உணர்த்தினார். அடைந்தால் மகாதேவி அடையாவிட்டால் மரணதேவி என்பதை mass movement எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதை நாங்கள் அங்கு கற்றுக்கொண்டோம்.

சரி , இப்போது மாவோவின் புகழ் வாய்ந்த 1937 on practice ல் சில வரிகள்

Marxists regard man's activity in production as the most fundamental practical activity, emphasises that theory is based on practice and in turn serves practice.

Dialectical materialism குணங்களில் ஒன்றாக மாவோ அதன் practicality என இங்கு குறிப்பிடுவார். இங்கு காந்தியின் உழைப்பின் தத்துவம் bread labour theory சந்திப்பை காணமுடியும்.

அடுத்து மாவோ குறிப்பிடும் வரிகள்

Whoever wants to know a thing has no way of doing so except by coming into contact with it , that is by living practising in its environment. All genuine knowledge originates in direct experience (Mao also like Lenin did not deny indirect experiences)

மாவோ எளிமையாக புரியவைப்பார். மாம்பழத்தின் சுவை அறிய வேண்டுமெனில் அதை சுவைக்க வேண்டும். அதாவது அதில் மாற்றத்தை உருவாக்க வேண்டும் என்பார். That is bring change in that shape என்பார்.

’Living in its environment’ என்பது இந்திய சோசலிஸ்ட்கள் கம்யுனிஸ்ட்களுக்கு காந்தி கொடுத்த மிக முக்கிய அறிவுரையாக இங்கு இருந்தது. காந்தியும் ‘something is given here’ என்கிற indirect experience யை கணக்கில் கொள்ளச் சொன்னார். அதன் கேடான பகுதிகளை கைவிடுவது , ஏற்பதில்லை என்பதில் உறுதி காட்டினார். முற்றிலுமாக annihilation என்பதில் அவர் வேறுபட்டார். There can be no knowledge apart from practice என்பதில் மாவோ வும் காந்தியும் சந்தித்ததாக கொள்ளலாம். Knowledge must be deepened by more practices என்பதிலும் அவர்கள் சந்திக்கின்றனர்.

மாவோ ‘on practice’ essay வை இப்படித்தான் முடிக்கிறார்.

Discover truth through practice, and again thro practice verify and develop truth.

காந்தி absolute truth என எதையும் சொல்வதில்லை. Relational truths பற்றித்தான் பேசுவார். மாவோ லெனினை சுட்டிக்காட்டி The sum total of innumerable relative truths constitutes absolute truth என புரிந்துகொண்டார்.

காந்தி இந்த எல்லாவற்றிலும் செய்யத்தகுந்த வழிமுறைகள் , அகிம்சை வழி உண்மையை நோக்கி - நெறி தவறாத பாதை morality என்பதற்கு அழுத்தம் கொடுத்தார்.

- ‘அவர் அதை செய்வாரா, அவர் செய்யாத ஒன்றை என்னிடம் எப்படி எதிர்பார்க்கலாம் ‘ என்கிற பிறர் என்ன செய்யவேண்டும் என்கிற கேள்விகள் காந்தியிடம் primacy பெறாது. நான் இந்த கணத்தில் நெறியுடன் செய்யவேண்டியதென்ன, நான் சரியாக நடந்து கொள்கிறேனா என்கிற primacy அங்கு தொழிற்படும்.

நீளம் கருதி நிறுத்துகிறேன். மாவோவின் on contradiction பற்றி பலரும் பேசியுள்ளனர். பார்க்கலாம்..வாய்ப்பு எப்படி என்று.. (14-9-2024)

27. சீனா கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு

சீனா கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு எனும் வகையில் சீனாவின் புரட்சிக்குப்பின்னர் அங்கு என்னதான் இந்த 70 ஆண்டுகளில் நடந்தது எனப் பார்க்கவேண்டிய கடமை உந்தி தள்ளிக்கொண்டேயிருந்தது. சீன வகுப்பு (China Period) என சில மணிநேரங்களை பலநாட்கள் ஒதுக்கினால்தான் நான் குறைந்தபட்சம் படிக்கவேண்டும் எனக் கருதிக்கொண்டுள்ள கீழ்கண்டவற்றை படிக்க இயலும்.

1. China's Grand Strategy from Mao to Xi Jinping by SULMANN Wasif Khan

2.China's startegy to replace America as the SuperPower by Michael Pillsbury

3.How China's Leaders Think by Robert Lawrence Khun

இந்த மூன்று புத்தகங்களும் ஏறத்தாழ 1400 பக்கங்களைக் கொண்டவையாக இருக்கின்றன. நேரம் கிடைக்கும்போது அதில் China Period என நேரப்பங்கீடு கொடுத்தால் படிக்கலாம் என்கிற நம்பிக்கை ஓடிக்கொண்டிருக்கிறது.

படிப்பவர்களுக்கு பொதுவாக உள்ள பிரச்னை படித்துவிட்டால் அதை எப்படியாவது தெரியப்படுத்திவிடவேண்டும் என்கிற பேரவா பேய்துரத்தல் இருந்துகொண்டேயிருக்கும். அடக்கிவைக்கமுடியாத உபாதையிது. இந்தக்குறை என்னையும் படுத்திவருகிறது. 'குறைகுட தளும்பல்' நடக்கிறது. முதல் புத்தகமான சீனாவின் பெரும் செயல்தந்திரம்- மாவோ காலம் தொடங்கி ஜீ ஜின்பிங் வரை என்பதை வாசிக்க ஆரம்பித்த சில பக்கங்களிலேயே சுல்மான் வாசிஃப் கான் அவர்களின் எளிய மொழி கட்டமைப்பை உணரமுடிந்தது. என்னை வெளித்தள்ளாமல் அழைத்துப்போகும் என நம்பியுள்ளேன். சில உரையாடல்கள் சுவையான வரிகளாக எனக்கு தோன்றியது. அதன் ஆங்கில வாசகங்கள் இங்கு தரப்பட்டுள்ளன. அறம் சார்ந்த உரையாடல்களா என்பது வேறு விவாதத்திற்குரிய ஒன்று.

*How to weave together different categories of power to win and keep a state

*The Greater the discontent in a country, the harder it is to Govern

*Start aiming for something small with ambition..ambition alters with circumstances, as success followed success

*It is not matter how unpleasant the people one to negotiate, but the matter is dragging the Colossus together

*Doctrine had to fit the circumstances. The Corollary was that when the circumstances changed, the doctrine could too.

*The United Front meant a suspension of hostilities, not of distrust

* Young idealistic revolutionaries have a way of making promises that they later cannot keep

* Smaller powers mattered; they could help as one sought to cope with the larger ones

படிப்பவர்க்கு உரையாடல் வளரும். (sep 11 2021)

28. அகலத் திறந்து வைப்பீர்- தோழர் மாவோ

நூறு பூக்கள் பூக்கட்டும், நூறு சிந்தனைகள் மலர்ந்து முட்டி மோதட்டும் என்றவர் மாவோ

நாட்டிற்கும், ஏன் ஒவ்வொரு அமைப்பிற்கும் அறிவுஜீவிகளும் தேவைப்படுவர். அவர்கள் பொதுவாக எண்ணிக்கையில் மிகக்குறைவாக இருப்பர். பல நேரங்களில் இவர்களும் கேலி கிண்டல் நையாண்டிக்கு உள்ளாக்கப்படுவர். சமீபத்தில் அர்பன் நக்சல் எனக்கூட இவர்களில் சிலர் நம் நாட்டில் முத்திரை குத்தப்பட்டு பெரும் அவதிக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இவர்களை கையாள்வது என்பது பலநேரங்களில் ideological என்பதாகவும் அமையக்கூடும். பெரும்பாலும் அவர்கள் mental workers- also Educators. இந்த educators க்கும் தொடர் கற்றல் அவசியமானது. கற்றது போதும் என அவர்கள் எந்த அமைப்பிலும் ஒப்பேற்றல் கூடாது என மார்க்சைப்போலவே மாவோவும் சொன்னதைப் பார்க்கிறோம்.

எதை பிறருக்கு உபதேசிக்கிறோமோ அதை நாம் செய்கிறோமா என்பதில்தான் ஒருவரின் remoulding தொடங்குகிறது. எளிமையாக இரு, நேர்மையாக இரு, கடுமையாக உழை, தன்னலமற்று இரு, நியாயம் கேள் , பணத்தாசை கொள்ளாதே, துன்பத்தை எதிர்கொள்- துவளாதே , சாதி மதம் பார்க்காதே என்பதெல்லாம் சொல்லிக்கொடுக்க மட்டும்தானா, இல்லை அவரவர் மட்டத்தில் அனுசரிப்பதற்கானவையா என்பதிலும் ஒருவரின் remoulding தொடங்குகிறது.

எதையாவது சொல்லப்புகுமுன், அதை ஓரளவிற்காவது தெரிந்து சொல்கிறோமா, அனுசரிக்க முடிந்துள்ளதா என்ற கேள்வி educators என நினைப்போர் மத்தியில் வருகிறதா ? காந்தி தொந்திரவு செய்யுமிடம் இது.

மாவோவிற்கும் இந்த பிரச்சனை ஏற்பட்டது. புரட்சிக்கு பின்னரான சோசலிச கட்டுமானத்தில் சீனாவில் உள்ள அறிவுஜீவிகளை

கையாள்வது எப்படி- கட்சியில் இருப்போர் - கட்சியில் இல்லாதவர் என்கிற அந்த மிகச் சிறுபான்மையை எப்படி புரிந்துகொள்வது, ஏற்பது- சரிசெய்வது- நிராகரிப்பது என்பது குறித்து அணிகளிடம் அவர் சிந்தனை சொற்பொழிவை மார்ச் 12, 1957ல் ஆற்றினார். சில balanced வழிகாட்டல்களை அணிக்கு கொடுத்தார்.

60கோடியளவில் இருந்த சீனர்களில் , மாவோ அரசாங்க உத்தேச கணக்கெடுப்புப்படி 50 லட்சம் அறிவுஜீவி தட்டினர் இருந்தனராம். இவர்களில் 90 சதத்திற்கு மேல் அரசாங்கம் எடுக்கும் சோசலிச கட்டுமான திட்டங்களுக்கு ஆதரவு தந்தவர்கள். 3 சதம் சோசலிசம் குறித்து கடுமையான விமர்சனங்களை வைத்துக்கொண்டிருந்தனர் என்றும், இவர்கள் எதிர்புரட்சிக்குரிய சாதக சூழலை உருவாக்கவும் அதற்காக காத்தும் கிடப்பவர்கள், இவர்களால் ஏதும் செய்யவியலாது என்றாலும் கண்காணிப்புக்குரியவர்கள் என மாவோ குறிப்பிடுகிறார். மீதமுள்ள அந்த 90க்கும் மேற்பட்ட பகுதியில் மார்க்சிசத்தில் ஊறி தேர்ந்தவர் என 10 சதம் இருக்கலாம். மேலும் பெரும்பகுதி மார்க்சியம், சோசலிசம் குறித்த கற்றலில் ஈடுபட்டுக்கொண்டு வருபவர்கள். நாம் அவர்களில் resolute-wavering- antagonist என பாகுபடுத்தி சரியாக புரிந்துகொண்டு கையாளவேண்டும் என்கிற சிந்தனையை மாவோ வெளிப்படுத்தினார்.

மார்க்சியம் அறியாத ஆனால் குறைகாண முடியாத தேசப்பற்றாளர்களும் இருக்கிறார்கள்.இவர்களுடன் பொறுமையாக விவாதம் செய்துதான் ஏற்பினை கொணரவைக்கமுடியும். நாத்திகர்- ஆத்திகரும் இருப்பர். மார்க்சியம் அனைவரும் கற்றாக வேண்டும் என மக்களின் எந்த பிரிவினைரையும் நமது அரசு நிர்ப்பந்திக்க கூடாது. அது எதிர் விளைவுகளைக்கூட தரலாம். நூறு பூக்கள் பூக்கட்டும், நூறு சிந்தனைகள் மலர்ந்து முட்டி மோதட்டும் - ஆனால் சோசலிச கட்டுமானம் என்பது எல்லை என மாவோ அப்போது பேசிவந்தார்.

கட்சி 'to open wide or restrict ' இதில் எதை கடை பிடிக்க வேண்டும் என்கிற வந்தபோது அவர் to restrict எனப்பேசியவர்களை நிராகரித்து 'to open wide ' என்பது 'பாலிசியாகட்டும்' என சொல்லித்தந்தார்.

சோசலிச கட்டுமானம் கட்சித்தோழர்களால் மட்டும் நடத்தப்படக்கூடிய ஒன்றல்ல. அந்த இராட்சத பெரும் வேலை நாட்டின் பெரும்பாலான கட்சியல்லாத மக்களின் ஒத்துழைப்பால் , அன்றாட பணிகளால் நடத்தப்பட வேண்டிய ஒன்று என்கிற அடக்கமான உணர்வு தேவை என அவர் அந்த மார்ச் 1957 உரையில் தெளிவுபடுத்தினார்.

மார்க்சிசம் குறித்து விமர்சனம் வந்தால் அச்சப்படவேண்டாம். எதிர்கொள்க என வேறு ஒருமுறை அவர் பிப் 1957ல் உரையாற்றினார். அவ்வரிகள் கீழே தரப்பட்டுள்ளன.

This spoke com Mao

Hundred flowers blossom and a Hundred Schools of Thought content

Marxism is scientific truth and fears no criticism. People may ask (China after 8 years revolution 1957) , since Marxism is accepted as the guiding ideology by the majority of the people in our country, can it be criticised? Certainly it can.

If it could be overthrown by criticism, it would be worthless.

Marxists should not be afraid of criticism from any quarter.. quite contrary they need to temper and develop themselves and win new positions in the teeth of criticism and stress of struggle.

Fighting against wrong ideas is like vaccinated- a man develops greater immunity from disease.

Both Han chauvinism and local nationalism are harmful to the unity of nationalities

Ideological struggle is not like other forms of struggle. The only method used in this struggle is that of painstaking reasoning and not crude coercion

Carrying out the policy of letting a hundred flowers blossom and a hundred schools of thought content will not weaken but strengthen the leading position of Marxism in the ideological field.

It is only by employing the method of discussion, criticism and reasoning that we can foster correct ideas …

19-10-2024

29. No bounds to practice - no end to theoretical innovation

சீன கம்யூனிஸ்ட் கட்சி நூற்றாண்டை கடந்து , கடந்த 75 ஆண்டுகளாக சீனத்தன்மையிலான நாட்டு கட்டுமானத்தை செய்து வரக்கூடிய கட்சி.

சிபிசி என்கிற சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 20 வது காங்கிரஸ் அக்டோபர் 2022ல் பெய்ஜிங்கில் நடந்தது. அதில் அறிக்கையை ஜின்பிங் (Xi Jinping)அந்நாட்டின் அதிபர், கட்சி பொதுச் செயலர் அக் 16, 2022 ல் முன் வைத்தார். நீண்ட அறிக்கை. பல்லாண்டுகளாக ஆட்சி அதிகாரத்தில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சி , நவீன உலகுடன் எப்படி அனுசரித்து, தங்கள் கட்டுமானத்தை செய்கிறார்கள் என்பதை அறிய ஆர்வம். முன்பு கட்சி காங்கிரஸ் வந்தபோது, சிறிது எழுதியிருந்தேன்.

இந்தியாவில் சிபிஎம் 24 வது காங்கிரஸ் ஏப்ரல் 2025 சூழலில், 2022ல் நடந்த சிபிசி புரிதலையும் சேர்த்து பார்த்தால் உசிதம் என மனம் கோரியது. திரும்ப சிபிசி அறிக்கையை (ஆங்கில வழி) வாசித்ததில் …மனதில் பட்டவை- தொட்டவை.

சிபிசியின் 'இரண்டாம் நூற்றாண்டு கனவை ' அறிக்கை , கொஞ்சம் தொட்டுக்காட்டுகிறது. முதல் நூற்றாண்டான 1921-2021 காலச் சூழலில் கட்சி உதயம், போராட்டங்கள், மாவோ தலைமை புரட்சி, ஆட்சி, மக்கள் ஜனநாயகம், ஆரம்ப சோசலிசம் சீனத்தன்மைகளுடன் என்பதை அறிக்கையில் சொல்கின்றனர். கட்சி வரலாற்றிற்கென புதிய சீன மொழி ஆவணங்களை கொண்டு வந்தது, தனி அருங்காட்சியகம் வைத்துள்ளது பற்றி பெருமையாக குறிப்பிடுகின்றனர்.

Building a Modern Socialist Country with Chinese characteristics என்பது தான் கட்சி காங்கிரசின் மய்ய அறைகூவல். அப்படியென்றால் என்ன, எத்தகைய முயற்சிகள், வாய்ப்புகள் என்ன, எப்படிப்பட்ட மேன்மை அடையப்பட்டுள்ளது, என்ன தடைகள்- குறைகள்- பலவீனங்கள் என ஓரளவிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளன.

75 ஆண்டுகால கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி, 'எல்லாம் இன்ப மயம் என்கிற தோரணை ' அறிக்கையை உள்ளார்ந்து பார்த்தால் இல்லை என்கிற புரிதல் கிடைக்கிறது. 140 கோடி மக்கள் வாழும் சீன நாட்டில், 75 ஆண்டுகளாக ஒரே கட்சி கம்யூனிஸ்ட் கட்சி உள்ள நாட்டில், மாற்று அரசியல் கட்சி என ஏதுமில்லா சூழலிலும், அக்கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை 96 லட்சம்தான் என ஜின்பிங் தெரிவித்துள்ளார். அதாவது மொத்த ஜனத்தொகையில் 7 சதம் கட்சி உறுப்பினர்கள். இந்தியாவில் போகவேண்டிய தூரம் மிக மிக தொலைவு என உணரமுடியும்.

கட்சி உறுப்பினர்களின் 'குவாலிட்டி' , சிறப்பு- போதாமை, மார்க்சிய லெனினிய மாவோ சிந்தனை தேர்ச்சி போன்றவையும் பேசப்பட்டுள்ளது.

மிக முக்கியமாக தாங்கள் மிக ஆரம்ப நிலை சோசலிச் கட்டுமான stageல் இருப்பதை தொடர்ந்து அடக்கத்துடன் , சிபிசி தலைமை சொல்லி வருகிறது. அதற்குரிய சுபிட்சம்- வறுமை, வேலைக்கான போராட்டம், கிராமப்புற அவலங்கள் என ஓரளவு அறிக்கை மூடி மறைக்காமல் பேசுகிறது. கடந்த 10 ஆண்டுகளில் கோடிக்கணக்கானவரை வறுமையிலிருந்து மீட்டு சற்று உயர்த்தியுள்ளதாகவும், வாழவே தகுதியற்ற இடத்திலிருந்து மில்லியன் கணக்கான மக்களை வெளியேற்றி , வாழத்தகுந்த இடங்களில் குடியமர்த்தியதை அறிக்கை ஏற்கிறது. பல counties டிவிஷன்கள் முன்னேற வேண்டியுள்ளது.

ஊரக இடிபாடுகளுடன் கூடிய வீடுகளை சரி செய்து வரும் திட்டம் பற்றிப் பேசுகிறது. நகர்ப்புற பெருக்கத்தால் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள், வேலை வாய்ப்பு சவால்கள், மருத்துவ சவால்கள் சொல்லப்பட்டுள்ளன. தனியார் மருத்துவமனைகளின் அவசியம் சொல்லப்பட்டுள்ளது.

அவர்கள் கட்சி காங்கிரசை 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை என நடத்தி வருகிறார்கள். இந்தியாவில் மூன்று ஆண்டுக்கு ஒருமுறை என கட்சிக் காங்கிரஸ் நடத்தப்படுகிறது. சீனா தனது 14 வது ஐந்தாண்டு திட்டத்தை நிறைவேற்றி, அதன் திசைகாட்டலில் பயணிக்கிறது. 2035ல் சில குறியீட்டு எல்லைகள் அடைதல் என நிர்ணயித்துள்ளனர். Advanced Socialist culture- moderately prosperous society- process of people's democracy- improved public well-being எனச் சொல்கின்றனர்.

கட்சிக்குள் தலைமையை ஏற்று நடத்தல் என்பதில் இன்னும் ஒழுங்கீனம் இருப்பதை சுட்டிக்கட்டியுள்ளனர். அசிரத்தை, கடமை வழுவுதல், shocking cases of corruption-ஊழல், சலுகை கோரும் இயல்புகள், அதிகார வர்க்க மனப்போக்கு , ஆங்காங்கே செய்யப்படும் ஊதாரித்தனம், wavering political conviction என பல பலவீனங்களை அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

நாட்டின் பொருளாதாரத்தில் acute structural and institutional problems- ஏற்றத்தாழ்வான வளர்ச்சி, ஒருங்கிணைக்கப்படாத வளர்ச்சி, நீடித்து நிலைபெறா வளர்ச்சி என்பதை சுட்டிக்காட்டிவிட்டு, traditional development model நாட்டை முன்னேற்ற பாதைக்கு அழைத்துச் செல்லாது என மதிப்பிட்டுள்ளனர். இதனால் சோசலிச கட்டுமான மீது சிலர் அவநம்பிக்கையுடன் பேசுவதை நிராகரித்துள்ளனர்.

கட்சியின் தலைமைத்துவம் குறித்து முறையான மாற்றங்களை உருவாக்கி வருவதும், மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தி , நவீன சோசலிச கட்டுமான செய்வதையும் சொல்கின்றனர். Centralised unified leadership என்பதற்கு அழுத்தம் கொடுத்துள்ளனர்.

4 அம்சங்களை உத்தியாக சொல்கின்றனர். Deepen reforms, modern socialist country, advancing law based governance, strengthening party self governance. கட்சி நிர்வாகம், சட்டப்படியான ஆட்சி நிர்வாகம் என்பனவும் strategy ஆக காட்டப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

தலையாய முரண்பாடு என கம்யூனிஸ்ட்கள் பொதுவாக ஏகாதிபத்தியத்திற்கும் தேசிய மக்களுக்கும் எனச் சுட்டிக் காட்டுவர். ஆனால் இந்த அறிக்கை இப்படிச் சொல்கிறது.

We have identified the principal contradiction facing Chinese society as that between unbalanced and inadequate development and the people's ever growing needs for better life. இது மிகச் சரியான புரிதலாகவே எனக்குப்படுகிறது. 832 கவுண்டிஸ் என்கிற ஆட்சி பிரதேச மக்கள் வாழ் நிலங்கள் மிக மோசமான impoverished counties என அடையாளம் காட்டப்பட்டு மீட்டதாக சொல்கின்றனர். மொத்தம் 2851 டிவிஷன் கவுண்டிஸ் இருப்பதாக அறியமுடிகிறது. நிலைமை சற்று மோசமாகவே தெரிகிறது.

GDP எனப்பார்த்தால் 114 டிரில்லியன் யுவான் என்கிறார்கள். யுவான் மதிப்பு 12 ரூபாய் எனச் சொல்லலாம். அமெரிக்காவிற்கு அடுத்த உற்பத்தி நாடு . நகர்ப்புற மக்கள் 68 சதம். பிரம்மாண்ட கட்டுமானங்கள் கொண்ட நாடு சீனா. மக்கள் கசக்கப்பட்டிருக்கலாம். இப்போதும் அதிகமாக வேலை செய் அதிகமாக சம்பாதி more hard working more earning என்றுதான் சொல்கின்றனர். Deepened reform with tremendous political courage என அவர்கள் சொல்வதை decode செய்து பார்த்தால்தான், கோடிக்கணக்கான மக்களின் புலம்பலையையும், வதையையும் ஊகிக்க முடியும்.

140 நாடுகளுடன் வர்த்தக உறவு கொண்ட பெரும் பொருளாதாரத்தை சீனர் கட்டியுள்ளனர். High standard free trade zones , global oriented network, proactive opening up என்பதை பாலிசி ஆக்கியுள்ளனர். சீனர் வாழும் வயது 78 என உயர்ந்து இருப்பதை கவனிக்காமல் இருக்க முடியாது. Per capita disposable income 35000 yuan . அதாவது ஆண்டிற்கு தலைவாரியாக சராசரி செலவு செய்யும் சக்தி 4 லட்சத்து 20 ஆயிரம் ரூ. மாதம் ரூ 35 ஆயிரம். இந்தியாவில் தனிநபர் கையில் செலவழிக்க கிடைக்கும் வருவாய் என 2024ல் 2 லட்சத்து 14 ஆயிரம். மாதம் இந்தியர் ஒருவரால் செலவழிக்க முடிந்த சராசரி வருவாய் 18000.

மத்திய 7 வது சம்பளக் கமிஷன் 2016ல் குறைந்தது 18 ஆயிரம் என நிர்ணயித்ததைப் பார்த்தோம். இந்தியா போக வேண்டிய தூரம் புலப்படும்.

சீனர்களில் 100 கோடி பேருக்கு old age insurance- medical insurance இருக்கிறது எனச் சொல்கின்றனர். இன்னும் கோடிக்கணக்கில் வீடுகள் சரி செய்ய வேண்டியதை சொல்கின்றனர். சீனாவின் முன்னேற்றம் உலக வறுமை கோட்டை குறைக்கும் என நம்பிக்கையை தெரிவிக்கின்றனர். நகர்ப்புற ஊரக வருவாயில் பெரும் ஏற்றத்தாழ்வுகள் இருப்பதை ஏற்றுள்ளனர்.

கட்சியில் Self reform என்கிற பதத்தை பயன்படுத்தியுள்ளனர். உலகிற்கு நாம் Chinese insight ஒன்றை கொடுத்துள்ளோம் என பெருமை கொள்கின்றனர். கீழ்கண்ட வரிகளை அவர்கள் எழுதிக்கொண்டுள்ளனர். நல்ல தெரிப்புகள் அவை.

To uphold and develop marxism , we must integrate it with china's specific realities..less does it mean memorising and reciting as rigid dogma.

We must continue to free our minds, seek truth from facts, move with the times, and take a realistic pragmatic approach.

We must base everything we do on actual conditions and focus on solving real problems arising in our reforms, opening up and socialist modernisation

We must keep responding to the questions posed by China, by the world, by the people and by the times- we should find right answers suited to the realities of China and the needs of our day

Governing by virtue, selecting on the basis of merit, promoting harmony between humanity and nature, pursuing self improvement, embracing the world with virtue, in good faith and being friendly with others, fostering neighbourliness.

Just as there are no bounds to practice, there is no end to theoretical innovation.

Good command of world view. We must put people first. People centeredness is an essential attribute of Marxism

அழகான வரிகள். 75 ஆண்டுகால அதிகாரமிருந்தும், வாழ்வின் சோதனைகளால் புடம்போட்டு, நிலத்தில் கால் ஊன்றி பேசியுள்ளனர். ஆயிரம் குறைகள் இருக்கலாம் . மக்கள் நல்வாழ்விற்காக, தங்கள் பார்வையில் அவர்கள் போராட்ட நடத்தி வருகின்றனர். இந்தியர்களும் கற்போம். நம் பெருமிதங்களை குறைக்காமல், பலவீனங்களை மூடாமல் கற்போம்.

14-2-2025 காதலர் தினம்

இது என் சீனக் காதல் அல்ல (காதலர்கள் அனைவரின் கண்ணியமான வாழ்விற்கு நல் வாழ்த்துகள்- let us behold our love with all dignity)

30. தோழர் ஹோசிமின்

மனிதன் காலடி பட்டால் பாதை என்பார்கள். கால்களை பழக்குங்கள் என்றார் தோழர் ஹோசிமின்.

" உங்கள் கால்கள் பல செயல்களுக்கு பழகட்டும். நடக்கட்டும். ஓடட்டும். காட்டுப்பாதைகளிலும், மலை முகடுகளிலும், வழுக்குப் பாறைகளிலும் ஏறி இறங்கட்டும். நீச்சல் அடிக்கட்டும். இன்னும் செய்யவேண்டிய பயிற்சிகளை கால்கள் பழகட்டும்" என்றார்.

புரட்சிகர பணிகளில் ஈடுபடும் மனிதனுக்கான கடும் பயிற்சியை எதிர்நோக்கி, இவ்வாறு அவர் சொல்லியிருக்கக்கூடும். தோழர் ஹோ தினம் 40 மைல்கள் கூட நடந்தவர். சொகுசுவாசி எங்கெல்ஸ் கூட அப்படி மைல் கணக்கில் நடக்க வேண்டியிருந்தது. காந்தி நடக்காத நாள் இல்லை. அவரும் தினம் 40 மைல்கள் நடந்தவர்தான். இந்தியா முழுக்க நடந்தவர்தான். நமது ஏழை பாழைகள் நடக்காத நடையா?

செயல் என வந்தால் ஓர் அடி போதும் என கருதியவர் காந்தி. ஓர் அடியானாலும் அனைவருடனும் எனப் போராடியவர் குப்தா. அந்த ஓர் அடி எடுத்து வைக்க வேண்டுமே?

இதெல்லாம் சரி. படிப்பது இராமயணம், இடிப்பது கோயிலா என உள்குரல் கேட்காமல் இல்லை. நான் கால்களுக்கு நடையைக் கூட பழக்கவில்லை. பின்னர் எங்கு ஓடுவது, நீச்சல் அடிப்பது… என்னை ஏன் தொந்தரவு செய்கிறாய் என எப்போதும் இறைஞ்சி, சொகுசை பழகிக்கொண்டன என் கால்கள்.

'காட்சியில் தெளிந்தனம்' என்பார்கள். எனக்கோ விட்டலாச்சார்யார் படம் தோற்றுவிடும் double vision காட்சிகள். எதிரே வருபவரின் தலை மட்டும் உடலிலிருந்து பிரிந்து முன்னே வந்து காட்சி கொடுத்துவிடும். மேலே உள்ளது கீழேயும் தெரியும். பார்வை தீர்க்கம் வேண்டும் என்பார்கள். என் பார்வையில் பல குழப்பங்கள். சரி , எல்லாம் உலகில் தெளிவாகத் தெரிந்துவிட்டால், அதில் என்ன சுவாரஸ்யம் இருக்கும்.

தெளிந்துவிட்டது என்றால் பார்வைக்கு என்ன தேடல் வேண்டி கிடக்கு?

வழக்கம் போல் ஏதாவது ஆரம்பித்து போகாத ஊருக்கு வழி கேட்பதாகவே நடக்கிறது. ஹோ சி மின் என ஆரம்பித்தேன். தோழர் ஹோ சி மின் நூல்கள் பல வந்திருக்கலாம். தமிழில் ஓரளவிற்கு விரிவாக அவர் குறித்து எழுதப்பட்ட நூல் யெவ்கனி கொபலெவ் எழுதியது. இந்நூல் மாஸ்கோவில் 1989ல் வெளியாகி, 2003ல் தமிழில் வெளிவந்தது. நல்ல மொழிபெயர்ப்பு. படிக்க இதமாக இருக்கும் நடை. 400 பக்கத்திற்குள்தான்…ஆர்வமுள்ளவர் தேடி வாசிக்கலாம்.

தோழர் ஹோ எழுதிய 'The Revolutionary Path' என்கிற நூலை லெனினின் செய்ய வேண்டியது என்ன என்கிற நூலுக்கு இணையாக வைத்து பேசுகிறார்கள். ஹோ அவரது 'புரட்சிகர பாதை' எழுதியபோது அவர் 40யைக் கூட தொடவில்லை. மிகக் கவனமாக சொற்களின் தேர்ச்சி, சொற்செட்டுடன், தன் சொந்த மக்களுடன் உரையாட விழைகிற சக தோழன் போன்ற நடையில் ஹோ எழுதியிருப்பார்.

இந்தியாவில் மார்க்ஸ் எங்கெல்ஸ் லெனின் மாவோ கிராம்சி செகுவாரா எழுத்துக்கள் சென்ற அளவு ஹோ போய் இருக்கமாட்டார். நல்ல ஆசியத்தனம் கொண்ட எழுத்தாக ஹோ வை பார்க்க முடியும். My writing style is too direct என அவரே சொல்வார். புரட்சிகர பாதை இணையத்தில் கிடைக்கிற நூல் தான். புரட்சிகரவாதியின் இலக்கணத்துடன் நூல் வாயில் திறக்கும். சில வரிகள்

A revolutionary must be

thrifty and Industrious

Show solidarity, not self interest

Learn to correct mistakes and inquisitive

Interested in research, open to new ideas

Take care without being cowardly

Have patience and hardworking

Support common interests,not private one

Keep ideology , sacrifice and work for the party

Have little interest in material things

Keep silent when needed

Show integrity, not opportunism

Evaluate people with care

Accept and forgive the errors of others

Examine the situation carefully

Be decisive be brave

கவிதை போல போகிறது. ஹோ கவிஞரும் கூட. Practice makes perfect என ஹோ சொல்வார். அவரும் இங்கு கம்யூனிஸ்ட்கள் சொன்னது போல இரு கட்ட புரட்சி- தேசிய ஜனநாயக புரட்சி கட்டம், சோசலிச புரட்சி கட்டம் எனப் பேசினார். லெனின் லெனின் என கொண்டாடி வந்தார்.

நம்மூர்ல ஏராளம் , 'மனுஷன் மனுஷனுக்காக' சொல்லி வைத்து போயிருக்கான்

எல்லாம்தான் படிச்சிங்க என்ன பண்ணி கிழிச்சிங்க (நல்லவேளை இணையத்தில் படித்ததால் கிழிக்க முடியவில்லை)

ஏட்டு சுரைக்காய் சமைக்க உதவா

படிச்சவன் பாட்டை கெடுத்தான்

எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்.. இன்னும் இப்படி எத்தனையோ கருத்து கற்குவியல். வேண்டாதவனைப் பார்த்து எடுத்து அடிக்க உதவும்.

உள்ளூர்க்கு வருவோம்.பாவம் நடந்தே தேய்ந்த காந்தி ஓர் அடி போதுமென்றார். ஆனால் அந்த ஓரடியை நான் எடுத்து வைக்க வேண்டுமே?

7-3-2025

31. டேவிட் ரியாஜனாவ் (David Riazanov)

நம் காலத்தின் புகழ் வாய்ந்த 'மார்க்சோலாஜிஸ்ட்' தோழர் ரியாஜனாவ். இன்று மார்க்சிய உலகில் பலராலும் வாசிக்கப்படும் மார்க்ஸ்- எங்கெல்ஸ் நூல்தொகைகள் உருவாக காரணமான பெரும் அறிஞர். எவ்வளவு பெரும் உழைப்பை மார்க்சிய உலகிற்கு நல்கினாலும் வரலாற்றில் ஆட்சி செய்பவர்க்கு சந்தேகம் இருந்தால் அவர் இல்லாமல் ஆக்கப்படுவார் என்பது டேவிட் வாழ்க்கையிலும் சம்பவித்தது. ஸ்டாலின் ஆட்சியில் 'செகா' போலீஸ் அடக்குமுறைகளுக்கு அவர் உள்ளாக நேர்ந்தது. 20 நூற்றாண்டின் குறிப்பாக 1930களில் பெரும் மார்க்சிய அறிஞராக அவர் கருதப்பட்டவர்.

ரஷ்ய கம்யூனிஸ்ட் போல்ஷ்விக் கட்சியின் மத்திய கமிட்டி முடிவையொட்டி மார்க்ஸ்- எங்கெல்ஸ் இன்ஸ்டிடியுட் (1920-21ல்) அமைப்பதில் பெரும் பங்கு வகித்தவர் ரியாஜனாவ். இந்த அமைப்பை நிறுவிட தோழர் லெனின் மிக ஆர்வம் காட்டினார்.

மார்க்ஸ்- எங்கெல்ஸ் எழுதிய சிறு துரும்பைக் கூட - துண்டு சீட்டுக்களைக் கூட விடாமல் தொகுப்பதில் பெரும் உழைப்பை நல்கியவர் ரியாஜனாவ். எதையும் விடாது என வரும்போது, இதெல்லாம் வேண்டும்- கூடாது என கருத்துக்கள் வருவதும் இயற்கைதான். அவற்றை எதிர்கொண்டு வரலாற்றை நேர்த்தியுடன் வருங்காலம் அறிய நாம் மிக நேர்மையாக இருப்போம் என்ற போராட்டத்தை ரியாஜனாவ் நடத்த வேண்டியிருந்தது. லெனினுடன் கூட இந்தப் போராட்டம் நடந்தது. Marx- Engels GESAMTAUSGABE MEGA என நாம் இன்று அறிந்துகொள்ளும் கொண்டாடும் அரிய மார்க்ஸ்- எங்கெல்ஸ் நூல்தொகை தொகுப்பை தன் கடும் உழைப்பால் நமக்கு தந்து போயிருப்பவர் ரியாஜனாவ்.

1930க்குள் தன் வேலைக்காக அவரால் பல மூல ஆவணங்கள் சேகரிக்கப்பட்டன. தவிர 55000 நகல்கள், 32000 வெளியீடுகள், 4.5 லட்சம்

புத்தகங்கள், கிடைக்கப்பெற்ற இதழ்களின் பவுண்ட்கள் என ஏராளம் அவரால் கூடுதலாக சேகரிக்கப்பட்டன என்றால் எவ்வளவு ராட்சத கவனக்குவிப்பை அந்த Institute of Marxism- Leninism என்பதற்காக அவர் செய்திருப்பார். அதற்கான ஆவண கிடங்கு- நூலகம் ஒன்றை அவர் உருவாக்கினார். ஹெகல்- பாயர்பாக் தொகுப்புகளையும் அவர் எடிட் செய்தார். அவரின் மகத்தான சாதனையை

In the realm of Marxology- acquiring, preparing and publishing for the first time previously unknown writings of Marx- Engels என பல வரலாற்றாய்வாளர்களால் புகழ்ந்துள்ளனர்.

1917 புரட்சிக்கு முன்னராகவே உலகின் பல மார்க்சியர்கள் மத்தியில் லெனின் டிராட்ஸ்கி அளவிற்கு ரியாஜனாவ் புகழ் வாய்ந்தவராக இருந்தார்.

மார்ச் 10, 1870ல் பிறந்தவர் ரியாஜனாவ். உக்ரைனில் யூத தந்தைக்கும் ருஷ்ய தாய்க்கும் பிறந்தவர். தனது 15 வயதில் நரோத்னிக் புரட்சியாளர்களின் தொடர்பு ஏற்பட்டது. புரட்சிகர சிந்தனையால் பள்ளியிலிருந்து வெளியே அனுப்பப்பட்டார். உக்ரைன் ஒடெஸ்ஸா பகுதியில் சோசலிஸ்ட் குழுவினருடன் உறவிருந்தது. பிளக்கானாவ் தான் அங்கு எல்லோருக்கும் ஆரம்ப குரு.

ரியாஜனாவும் வெளிநாட்டு வாழ் ருஷ்ய மார்க்சியர்களை சந்திக்க செல்கிறார் என்ற செய்தி கிடைத்தவுடன் ஜார் போலிசாரால் கைது செய்யப்படுகிறார். அவருக்கு அப்போது வயது 19. 4 ஆண்டு கடும் சிறை. உழைப்பு முகாமில் சித்திரவதை. வழக்கு விசாரணைக்கு வரும் முன்னரே 15 மாதம் கொடுந்தண்டனை அனுபவிக்க நேர்கிறது.

விடுதலைக்குப் பின்னர் பெர்லின் சென்று அங்கு தலைமறைவாக இருந்த ரஷ்யா மார்ச்கியர்களுடன் சேர்ந்து 'போர்பா- போராட்டம்' என்ற குழுவைத் தொடங்கினார். ஆனால் இவர்களின் குழுவிற்கு ரஷ்ய சமூக ஜனநாயக கட்சியின் 1903 மாநாட்டிற்கு அழைப்பில்லை. கட்சியும் போல்ஷ்விக்- மென்ஷ்விக் என பிரிந்து குழுக்களாக

போராடிக்கொண்டிருந்தனர். ரியாஜனாவ் குழு இரண்டிலும் வேண்டாம் என முடிவெடுத்தனர்.

ருஷ்யாவில் முதலாளித்துவ வளர்ச்சி பிற அய்ரோப்பிய நாடுகளின் வடிவத்தில் இல்லை என்ற தனது ஆய்வை பிளக்கானாவிற்கு மாற்றாக ரியாஜனாவ் வைத்தார். எனவே ரஷ்யாவில் ஜாரை தூக்கி எறிவதன் மூலம் நேரிடையாக சோசலிச பயணம் துவங்க முடியும் என்றார்.

1905ல் ரஷ்யா திரும்பிய டேவிட் தொழிற்சங்கத்தில் செயிண்ட் பீட்டர்ஸ்பர்கில் பணியாற்றினார். மீண்டும் 1907ல் கைது- நாடு கடத்தல் என்பதற்கு உள்ளானார். பின்னர் மார்க்ஸ்- எங்கெல்ஸ் எழுத்துக்களை சேகரிப்பது என்பதிலும், அவை குறித்த ஆய்விலும் ஈடுபடலானார். இரண்டாம் அகில மாநாடுகளில் பங்கேற்றார். ரஷ்யாவில் ரயில்வே தொழிற்சங்கத்தை சிறப்பாக்கியவர் ரியாஜனாவ். 1917ல் பிப்ரவரி எழுச்சியில் ஜார் அகற்றப்படுகிறார் என அறிந்து மீண்டும் ரஷ்யா வர வாய்ப்பு கிட்டியது. பின்னர் போல்ஷ்விக்குகளுடன் இணைந்து அக்டோபர் புரட்சியில் பங்காற்றினார். கட்சி பள்ளிகளுக்கு டேவிட் ரியாஜனாவ் பொறுப்பாக்கப்பட்டார்.

1920ல் அறிவியல் கழகம் உருவாக ரியாஜனாவ் துணையாக இருந்தார். பிரெஸ்ட்- லிட்டொவஸ்க் உடன்பாட்டின்போது லெனினை அவர் விமர்சித்தார். குழுக்களில் சிக்காமல் தன்னை முடிந்தவரை தனித்து வைத்துக்கொள்ள முயற்சித்தார். அப்போது அவரின் புகழ் வாய்ந்த வாக்கியம் I am not a Bolshevik- not a Menshevikand not a Leninist. I am only a Marxist and as Marxist I am a communist என்பதாகும்.

ஆட்சி குறித்த விமர்சனத்தை கம்யூனிஸ்ட்கள் தங்கள் ஆட்சியாக இருந்தாலும் விட்டுக்கொடுக்கக்கூடாது எனக் கருதினார் ரியாஜனாவ். மரணதண்டனையை லெனின் ஆட்சி ஒழிக்கவேண்டும் என்ற அவரது வேண்டுகோள் ஏற்கப்படவில்லை. அதேபோல் 1921ல் தொழிற்சங்க மாநாட்டில் அவர் ஸ்டாலினுடன் பொருளாதாரக் கொள்கைகள்

குறித்து மாறுபட்டு பேசினார். கட்சியின் தொங்கு சதையாக தொழிற்சங்கத்தை வைக்காமல் அதன் சுயேட்சை வர்க்கத்தன்மையை நாம் வளரவிடவேண்டும் என்றார். அவர்கள் சற்று கீழிறங்கி கூட பேசிக்கொண்ட பதிவு கிடைக்கிறது.

ஸ்டாலின் ரியாஜனாவைப் பார்த்து Shut up you Clown- கோமாளியே நிறுத்து என பேசியதாகவும் பதிலுக்கு ரியாஜனாவ் Don't make a fool of yourself. Everybody knows theory is not your field என்றாராம். அதாவது கோட்பாடு விஷயங்கள் உமக்கு பற்றாது என்பது எல்லாருக்கும் தெரியும்- முட்டாளாக்கிக்கொள்ளாதீர். இப்படி எல்லாம் மோதிக்கொண்டபின்னரும் அவர் பல செயல்களை செய்துள்ளார். செய்யவும் விட்டுள்ளனர் என்பதையும் சேர்த்தே பார்க்கவேண்டும்.

ரியாஜனாவ் மென்ஷ்விக்குகளுடன் தொடர்பில் இருக்கிறார் என்பது கசியத்துவங்கியது. மார்க்ஸ்-லெனின் கழகத்தில் இருந்த ஆய்வாளர் ரூபின் மென்ஷ்விக் தலைமறைவு ஸ்தாபனத்தை நடத்துகிறார் என்று சொல்லப்பட்டது. அவர் 'லாயர்' ஆக இருந்தும், தன்னை காத்துக்கொள்ள முயற்சித்தும் அது பயனளிக்காது சிறைத்தள்ளப்படார். ரூபின் அச்சுறுத்தப்பட்டதால் ரியாஜனாவே காரணம் என வாக்குமூலம் தந்தார்.

ரியாஸனாவ் மீதான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன. மா-லெ கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டர். அப்போது மெகா நூல்தொகை திட்டத்தில் 42 வால்யூமிற்கான மார்க்ஸ்- எங்கெல்ஸ் எழுத்துக்கள் அவரால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. 5 வால்யூம் முழுமையாக எடிட் செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில் கட்சியும் அவருக்கு கதவடைத்தது. அவரை சாரடோவ் நூலக பணிக்கு மாற்றினர்.

1937ல் டிராட்ஸ்கியுடன் தொடர்பு என அவர் கைது செய்யப்பட்டர்.சோவியத் யூனியனின் சுப்ரீம் கோர்ட்டின் மிலிட்டரி பிரிவு அவரை குற்றவாளி எனத் தீர்ப்பிட்டது. அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு அன்றே நிறைவேற்றவும்பட்டது. குருசேவ்

காலம் அவரை 1958ல் மறுபரீசிலனை செய்து அவர் குறித்து பேசுதல் என்பதை மீட்டது. கோர்பசாவ் காலத்தில் மீண்டும் அவர் பேசப்படலானார்..

ஸ்டாலின் காலத்து மீறல்கள் குறித்து ஏரான பதிவுகள் வந்துள்ளன. அதில் ஒன்றான பதிவாக மெட்வெதேவ் பதிவும் இருக்கிறது.

Roy A. Medvedev, who has carried out a detailed investigation of the case, argued in Let History Judge: The Origins and Consequences of Stalinism (1971) that the Union Bureau of Mensheviks did not exist. "The political trials of the late twenties and early thirties produced a chain reaction of repression, directed primarily against the old technical intelligentsia, against Cadets who had not emigrated when they could have, and against former members of the Social Revolutionary, Menshevik, and nationalist parties."

ரியாஜனாவ் ஜனவரி 21, 1938ல் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டு கொல்லப்பட்டார்.

ரியாஜனாவ் எழுதிய மார்க்ஸ்- எங்கெல்ஸ் வாழ்வும் செயலும் குறித்த புத்தகம் பலராலும் வாசிக்கப்பட்ட ஒன்று. அது தமிழிலும் பாரதி புத்தக நண்பர்களால் கொணரப்பட்டுள்ளது.

இன்று நாம் காணும் மார்க்ஸ்- எங்கெல்ஸ் அறிவு கிடங்கு புதையலை தேடிக்கொணர்ந்த பெரும் மார்க்சிய அறிஞரின் 150 ஆம் ஆண்டு உலகில் மெளனமாகவே போனது வரலாற்றின் சோகம்..

Dissent என்பதை சகிக்காத ஆட்சியர் அதற்கு பக்கபலமாக நின்ற சமூகங்கள் தங்களின் அற்புத மனிதர்களை அவர்களின் உழைப்பை கொண்டாடாமல்விட்டாலும் அவர்களை உயிர்ப்பலி கேட்டே நகர்ந்துள்ளன என்பதும் வரலாறு தரும் சோகம்.

27-9-2022

32. தோழர் கோர்பசேவ் மறைவு

கோர்பசேவ் பதவிக்கு வந்தவுடன் அவரின் பெரிஸ்த்ராய்கா-கிளாஸ்நாத் குறித்து பல தலைவர்கள் நேரிடையாக பேசியதைக் கேட்கும் வாய்ப்பு கிட்டியவர்களில் நானும் ஒருவன். தோழர் சி ராஜேஸ்வரராவ் திருவாரூரில், என் இ பலராம் தஞ்சாவூரில், பரதன் தஞ்சாவூரில், தோழர் ஞானையா பல வகுப்புகளில் என அப்போது அவர்கள் பேசியதும் விவாதித்ததும் நினைவிற்கு வருகிறது.

ஆங்கிலத்திலும் தமிழிலும் கோர்பசாவ் உரைகள் அவரது அட்டைப்படத்துடன் சிறுவெளியீடுகளாக அப்போது எங்களுக்கு கிடைத்தன. மெயின்ஸ்ட்ரீம் ஏராள கட்டுரைகளை எழுதியது. சிபிஅய் தனது பார்ட்டி லைஃப் பத்திரிகை மூலம் எதிரும் புதிருமான ஏராள கட்டுரைகளை வெளியிட்டது. என் இ பலராமும், ஏ பி பரதனும் எதிரும் புதிருமாக இரு பார்வைகளை வைத்த கட்டுரைகள் ஓரளவிற்கு மனதில் நிழலாடுகின்றன. சோவியத் வீழ்ச்சிக்கு பின்னர் இவை பெருமளவிலான விவாதங்கள் ஆயின.

நியுஏஜ், பீப்பிள்ஸ் டெமாக்ரசி, இண்டெர்னேஷனல் புல்லட்டின், மார்க்சிஸ்ட் , பிராண்டியர், மெயின்ஸ்ட்ரீம், ஜனதா, மன்திலி ரிவ்யூ என வெளிவந்த கட்டுரைகளை கையில் தாங்கிக்கொண்டு அவற்றை சுட்டி பேசிக்கொண்டு தெருவில், சிபிஎம் அலுவகத்தில், ஞானையா முகாம்களில் இருந்த காலமது. கட்சி காங்கிரஸ்கள் கூடி சோவியத் வீழ்ச்சி குறித்து தனி ஆவணங்களை அணிகளுக்கு அனுப்பி புரியவைக்க முயற்சித்ததும் நினைவிற்கு வருகிறது. சோசலிசம் வீழவில்லை- ஒரு மாடல்- சோசலிச கட்டுமான சோவியத் மாடல் சோதனைக்கு உள்ளானது. மார்க்சியம் பொருந்தக்கூடியதே என்றமுடிவிற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் வந்தன.

பல நாடுகளில் கட்சிகள் தங்கள் பெயரை அமைப்பு விதிகளை மாற்ற முனைந்தபோது இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சித்தலைமை தங்கள்

அணிகள் சோர்ந்து போவதை தடுப்பதற்கான பெருமுயற்சிகள் எடுத்தனர்.

அப்போதைய என் குறிப்பு நோட்டை கோர்பி மறைவையொட்டி அதன் தூசு வாசத்துடன் - சைனஸ் வதையுடன் பார்த்தேன். லெனினிலிருந்து மாலங்கோவ் வரை என லண்டனில் பேராசிரியராக இருந்த ஹக் வாட்சன் புத்தகத்தை படித்தது ஆரம்பத்திலேயே இருந்தது.

அதிலிருந்து சில வரிகள்

“ சிலநூறு பேர்கள்தான் சண்டையில் அக்டோபர் புரட்சி காலத்தில்..4 நாட்கள் சண்டை..போல்ஷ்விக் அரசாங்கம் வடக்கு, மத்திய ரஷ்யாவில்..பின் சைபீரியாவில்

அரசியல் நிர்ணயசபையில் 410 சோசலிஸ்ட் புரட்சிவாதிகள், 175 போல்ஷ்விக், 16 மென்ஷ்விக், 17 லிபரல்கள், மீதி உபரிகள்..தேர்தலை மக்கள் தீர்ப்பாக ஏற்கமுடியாது - சோவியத்துகளே அதிகாரம் மிக்கவை என்றார் லெனின். ஆனால் லெனினின் வாதத்தை அரசியல் நிர்ணய சபை நிராகரித்தது..”

தொடர்ந்து எரிக் பிராம், கிராம்சி, பௌலண்ட் சாஸ், மிஷேல் பூக்கோ, எட்வர்ட் செய்த், அம்பர்த்தோ எக்கோ, தமிழவன் அமைப்பியல்,, மார்க்யூஸ் என என் குறிப்புகள் அந்த நோட்டில் செல்கிறது.

அடுத்த குறிப்பாக ரெஜி சிரிவர்த்னேவின் சோவியத் யூனியனின் உடைவு காணப்படுகிறது. இதையும் God that Failed இரண்டையும் ஜெயமோகன் அனுப்பி படிக்கச் சொன்னார். ரெஜியைப் படித்தபோது எழுதியிருந்த குறிப்பிலிருந்து சில வரிகள்..

கோர்பி சொன்னார் - வரலாறு திறந்திருக்கிறது என்றோ அது முன்னரே திட்டமிட்ட தண்டவாளத்தில் செல்கின்றது என்றோ நாம் கருதக்கூடாது.

இது விதிவாதம்- டிடெர்மினசிசம் என்பதற்கானவை குறித்த எச்சரிக்கை அறிவுரை போல் தோன்றியது.

ரெஜி கேள்வியை எழுப்பினார் - சோவியத் உள் அமைப்பிலேயே எதேச்சகரமானது என்றால் கோர்ப்பி போன்ற சீர்திருத்தவாதியை எப்படி அது உருவாக்கியது. அங்கு தாராளவாத கூறுகளும் இருந்திருக்க வேண்டாமா?

" கிழக்கு அய்ரோப்பாவில் நிராகரிக்கப்பட்டது ஸ்டாலினிசம் என சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால் லெனினிசமும் கூடத்தான்.."

" ஒரு புரட்சிகர குழாம் முதல் தரமானது. அது எந்த வரலாற்று குறிக்கோளை தேர்ந்துகொண்டதோ அதை நோக்கி ஏனையோரை தலைமைதாங்கி நெறிப்படுத்தி அழைத்துச் செல்ல அனைத்து உரிமையும்யுடையது என்ற சிந்தனை…கேள்விக்கு உட்படுத்த முடியாத சித்தாந்தமாக அரசியல் ஞானத்தின் ஊற்றுமூலமாக லெனினிசம் எனச் சொல்லப்பட்டு லெனின் தெய்வமாக்கப்பட்டது…"

அப்புத்தகத்தின் பக் 89 எனப்போட்டு எழுதிய குறிப்பு

" மனித குலத்தை இறுதியாக அதன் எல்லாப் பிரச்னைகளிலிருந்தும் விடுவிக்கும் ஒரு பூரணத்துவமான சமூகத்தை உருவாக்க முடியும் என்று நம்புவது மிகவும் ஆபத்தானதாகும்"

அடுத்து அய்சக் டாயிச்சர் எழுதியது பற்றிய குறிப்புகள்- அதில் புகாரினை அவர் துன்பியல் நாயகன் என எழுதியிருப்பார். இப்போது நம் காலத்தில் கோர்ப்பி அப்படிப்பட்ட துன்பியல் நாயகனாக தெரிகிறார்.

சார்த்தர் எழுதிய Existentialism and Human Emotions (sent by Jayamohan) என்ற தகவலுடன் குறிப்பெடுத்துள்ளேன். அதில் காணப்பட்ட வரிகள் அப்புத்தக பக் 30-31 எனப்போட்டு எழுதியுள்ளேன்.

I do not know what will become of the Russian Revolution…that at the present time that the proletariat plays a part in Russian that it plays in no other nation. But I

can’t swear that this will inevitably lead to a triumph of the proletariat..I have got o limit myself to what I see

அடுத்து தோழர் கோவை ஞானியின் புத்தகம் பற்றியும், டி எஸ் இலியட் பற்றியும் இருக்கிறது.

இலியட் வரிகளாக - ஒவ்வோரு தலைமுறையும் ஒவ்வோரு தனிமனிதனைப் போலவே ரசனைக்கான தனது சொந்த வரையறைகளை கலைச்சிந்தனையில் கொள்வதுடன் கலையில் தன் சொந்த தேவைகளை நாடுகிறது.

நு:ஃமான்,ஓஷோ, இ எம் எஸ், நேதாஜி, மண்டேலா, அக்ஞேயா, அரவிந்தர், தளய சிங்கம்,சுந்தர ராமசாமி, அ.மார்க்ஸ், சூசன் சோன் டக், நகுலன் என என் குறிப்புகள் சிறு அளவில் செல்கின்றன. நகுலனை வங்கித் தலைவர் ரகு கொடுத்திருக்கவேண்டும். அதில் ஒரு வரி

” மனம் தெளிந்த நிலையில் வெகு தொலைவிலிருந்து தகவல்கள் வந்து சேரும்.”

ஓஷோவிடமிருந்து

” வாழ்விற்கு எதிர்முனை தேவை…உயிர்ப்பான சமன் உயிர்ப்பான மௌனம் வேண்டும். முயற்சியில் ஓய்ந்து போய்விடு. ஓய்வெடுக்கும்போது அது நிஜமான ஓய்வாக இருக்கும். பாதையாக இரு- சர்வாதிகாரியாக இருக்காதே”

அடுத்து அந்த என் நோட்டின் 127 பக்கத்தில் ஆகஸ்ட் 1994ல் சிபிஅய் எம் எல் லிபரேஷன் செண்ட்ரல் பார்ட்டி ஸ்கூல் பேப்பர்ஸ் குறிப்புகளை எழுதியுள்ளேன். அது போஸ்ட் மாடெர்னிசம் குறித்த விமர்சன உரையாடல். அதில் ஓரிடத்தில் பூக்கோ எனப்போட்டு மேற்கோளை power is that which represses என குறித்துள்ளேன். தொடர்ந்து நிறப்பிரிகை இதழ் 8 பின் நவீனத்துவம் பற்றிய குறிப்புகளாக இருக்கிறது.

காவ்யாவின் காட்டு மலர்கள், பூரண சந்திரனின் ஸ்ட்ரக்சுரலிசம், காம்யூவின் மனிதநேயம் ஸ்ரீராம், வ கீதாவின் காம்யூ, நிகழ், படிகள், ஊடகம், ழான் போத்ரியா, ரவிக்குமார், அந்தோணி எஸ்தோப் சொல்லாடல், கைலாசபதி, வித்தியாசம் இதழ், ஜமாலன், அமீபா 2 என என் குறிப்புகள் சிறு அளவில் செல்கின்றன.

அமீபா வரிகள் வெள்ளை அறிவியல்வாதத்தின் கொடுமை, இந்திய பார்ப்பன பாசிசம் என்பதை விமர்சித்துவிட்டு இறுதிவிடுதலையை அறிவிக்கும் பாட்டாளிவர்க்க கதையாடல்கள் பற்றிப் பேசுகின்றன.

” எல்லா சரித்திரத்தையும் அறியும் பொதுமுறை பன்மை அழிப்பு உத்தியாகச் செயல்படுகிறது. உலகின் தொல்சமூக அமைப்புக்களை, ஆதிகுடிகளை, நாடோடிகளை அர்த்தமற்றவையாக இருப்பு நியாயம் அற்றவையாக மாற்றியதில் இந்த பாட்டாளி வர்க்க தொழில்நுட்ப வன்முறை பெரும்பங்கு வகிக்கிறது”

“ சரித்திரம் என்பது நிகழ்காலத்தின் அதிகாரம் கூறும் மாயக்கதை… வரலாறு எப்போதும் பேசப்படமுடியாத எண்ணற்ற மௌனங்களை புதைக்கும் மொழிப்பரப்பு… அறிவு அதிகாரத்தின் சிக்கலான வெளியில் உற்பத்தியாகிறது. வித்தியாசங்கள், வேறுபாடுகள், பன்மை உருவங்கள் மட்டுமே வாழ்தலின் செயல்…”

Althusser and the Semiostics of Karl Marx என சிறிய குறிப்பு எடுத்துள்ளேன். சித்த பிஸ்வாஸ் பால் ராப்சன் நியுஏஜ் கட்டுரையுடன் அந்த குறிப்பு நோட்டு தன் பக்கங்களை பவுண்ட் செய்துகொண்டுள்ளது. ராப்சன்-ல் கண்ட வரி

I must keep fighting unil I am dying

கோர்பசாவ் மறைந்தார். அவருக்கு அஞ்சலி என எழுதத் துவங்கியவன் அவரால்- அங்கிருந்த உள் மற்றும் வெளிநிலைமைகளால் சோவியத் என்ற சோதனை முடிவிற்கு வந்த காலத்தின் எண்ணத்தை எல்லோரையும் போல் என்னாலும் தவிர்க்கமுடியவில்லை.

தோழர் கோர்பியை பற்றிய மதிப்பிடல் தீர்ப்பிடல் என்பதைவிட அந்த தாக்கத்தில் அக்காலத்தில் என் சிந்தனை அலைக்கழிப்புகள்- தேடல் அலைச்சல்கள் ஓயாது எப்படி பயணப்பட்டன என்பதை கிடைத்த ஒரு நோட்டு புத்தகத்தைக்கொண்டு இங்கு எழுதிப்பார்த்துள்ளேன்.

சோவியத்துடன் சேர்ந்து தன் வரலாற்று முக்கியத்துவத்தையும் மூடிக்கொண்ட அந்த நாயகனுக்கு என் அஞ்சலி

2-9-2022 20 hrs.

33. ஷரியாதி எனும் சமூகவியலாளர்

பல மாதங்களாக படிக்காமல் , தள்ளிப்போட்டுக்கொண்டே இருக்கிறாயே, எப்போது எங்களை எடுக்கப்போகிறாய் என நூல்கள் வாசிப்பவர்களை தொந்தரவு செய்திடும். அதை தடுக்க முடியாது. மனிதன் அடுத்த நொடிக்காக இல்லாமல், பல காலம் வாழும் ஆசை கொண்டவன் என்பதால், சேர்த்துக்கொண்டேயிருப்பான். சேர்த்தவை அவனிடம் சிநேகமும் காட்டும், சில நேரம் மூஞ்சியையும் காட்டும்.

அப்படி இரு நூல்கள் தொடர்ந்து மூஞ்சி காட்டிக்கொண்டேயிருந்தன. இரு நூல்கள் மட்டும்தானா- இன்று மூஞ்சி காட்டியவற்றில் இரண்டை மட்டும் சொல்கிறேன். இரண்டு நூல்களும் கம்யூனிசத்தை-மார்க்சியத்தை- இயக்கங்களை விமர்சன கண்ணோட்டத்தில் பார்க்கும் நூல்கள். ஒன்று இஸ்லாமிய சமூகவியல் அறிஞர் எழுதிய நூல், மற்றது இந்திய வலது இந்துத்துவா சார்புடையவர் எழுதிய நூல்.

நூல்களின் பெயர்கள் Marxism and other Western Fallacies An Islamic Critique by Ali Shariati, Denying National Roots Early Communism and India by Dr Rahul Shastri. முதல் இஸ்லாம் பார்வை நூல் 2008ல் வந்ததெனில், இரண்டாவது 2018ல் வந்தது. ஷரியாதியைப் பார்க்கலாம்

முதல் நூலான 'மார்க்சியம் மற்றும் மேற்கு இசங்கள் மீதான இஸ்லாமிய விமர்சனம்' நூலை எழுதியவர் அலி ஷரியாதி. ஈரானில் ஷா ஆட்சி எதிர்த்து கொமெயினி தலைமையில் நடந்த புரட்சியின் கருத்தியல் நாயகர் அலி ஷரியாதி (Ideologue of Iranian Revolution). ஈரான் மசூதிகளில் அலி அவர்களின் கோட்பாடுகள் முற்றாக பரவி, கொமெயினின் புரட்சிக்கு வழி ஏற்படுத்தின. இஸ்லாமின் சமூகவியல் குறித்து ஈரானில் புகழ் வாய்ந்த உரைகளை நல்கியவர் அலி ஷரியதி. அதே சமயத்தில் நிறுவன மத அதிகாரங்கள் குறித்தும் கேள்வி எழுப்பியவர் ஷரியதி. பூசாரித்தனமில்லா இஸ்லாமிய சமூக அறிஞர்.

மார்க்சியம் குறித்து விமர்சகர்கள் பலரும் வைத்த அதே விமர்சனங்களை சற்று மாறுபட்ட மொழியில் ஷரியாதி வைத்துள்ளதாக , இந்நூலை வாசிக்கத் தொடங்கியவுடன் எனக்குப்பட்டது. இவ்வளவிற்கும் ஷா எதிர்த்த ஈரான் மக்கள் எழுச்சி காலத்தில் ஈரானின் இடதுசாரிகள் மக்களுடன் நின்றனர். இஸ்லாமும் மார்க்சியமும் கைகோர்த்தன என மேற்கு பத்திரிகைகள் இதை சுட்டிக்காட்டவும் செய்தன. ஷரியாதி இஸ்லாம் பலமான சக்தியாகவும், மார்க்சியத்தை நம்பிய இடதுகள் பலவீனமான சக்தியாகவும் இருந்ததாகவே இந்நூலில் சொல்கிறார். அதே நேரத்தில் மார்க்சிய பாடங்கள் உதவியாக இருந்ததை ஏற்கிறார். புரட்சிகர இயக்கங்களின் பாடங்கள் ஈரானுக்கு தேவை எனவும் சொல்லியவர் ஷரியாதி.

அலி ஷரியாதி முதலில் Man Marxism Islam என்ற உரைதான் நிகழ்த்தினார். டெஹ்ரான் பத்திரிகைகள் அவர் அனுமதி பெறாமலேயே உரைகளை வெளியிட்டன. பின்னர் நூலாக்கம் பெறும்போது மேற்கூறிய தலைப்பைப் பெற்றது.

நவீன மனிதன், அவனுக்கு முன்னரான மனிதனைவிட ஓர் அம்சத்தில் குறையுள்ளவனாக இருக்கிறான் என்கிறார் அலி ஷரியாதி. மனித கட்டுமானம் (construction of Man) என்பதில் தெளிவற்றவனாக இருக்கிறான். மேற்கு வகைப்பட்டு கட்டுதல் என்கிற மயக்கம் என்கிற விமர்சனத்தை அலி ஷரியதி வைக்கிறார். இவ்வளவிற்கும் மேற்கு கல்வி பெற்ற நவீன சிந்தனையாளர் ஷரியாதி.

மனிதாபிமானம் 4 அம்சங்கள் வழியாக தன் இழுவைகளை முரண்களை சுமந்து செல்வதாகவும் ஷரியாதி சொல்கிறார். மேற்கு லிபரலிசம், மார்க்சியம், இருத்தலியம் (அவர் உரை நிகழ்த்திய காலத்தில் அதிகம் பேசப்பட்டவராக சார்த்தர்), மற்றும் சமயம் என இந்நான்கை அவர் வகைப்படுத்துகிறார்.

கிரேக்க வகை தத்துவங்கள், 'மனிதாயம் மற்றும் இறையியல்' முரண்களைப் பேசுகிறது. கடவுள் எதற்கு, மனிதனே எல்லாம் என்கிற பகுத்தறிவு வாதத்திற்கும் செல்கிறது. இதை பொருளாதாரவாதமாக மார்க்சியம் உயர்த்திச் செல்கிறது என ஷரியாதி சொல்கிறார். வால்டேரும் மார்க்சும் மனித சாரத்தின் spiritual dimension என்பதில் கண்ணை மூடிக்கொண்டுவிட்டனர் என்கிற விமர்சனம் செய்யப்பட்டுள்ளது. இது மார்க்சியம் மீதான வழக்கமான விமர்சனம்தான். ஓரளவிற்கு ஜார்ஜ் பொலிட்சர் போன்றவர் மார்க்சிய மனித சாரம் குறித்து பேசியுள்ளனர்.

ஷரியாதி மேற்கு தத்துவம் மனிதனை கடவுளாக்கப் பார்க்கிறது. மனிதனோ நுகர்வின் பூசாரியாகிறான் என்கிற கடுமையான விமர்சனத்தை வைத்துள்ளார்.

அறிவியல் உண்மையைத் தேடுவதாகச் சொல்லி, அதிகாரத்தையே ஆராதிக்கிறது என்கிற விமர்சனமுள்ளது. சமயவாதிகள் அறிவியல் குறித்து சொல்வது போலவே, மார்க்சியர்கள் மத நிறுவனங்களின் வர்க்க பாசத்தை பல நூல்களில் பேசியுள்ளனர்.

ஷரியாதி வைக்கும் அடுத்த விமர்சனம் is not Marxism more bourgeoisie than bourgeoise? என்பதாக இருக்கிறது. சோவியத், சீனா அதிகாரிவர்க்க life style அவரை அப்படி பேச வைத்திருக்கலாம்.

இயக்கவியல் பற்றி பேசுகிற இடத்தில் ஷரியாதி ஒரு விமர்சனத்தை வைக்கிறார். Marx transfers humanity from the realm of nature to that of history. மார்க்ஸ் எங்கெல்ஸ் இருவருமே தங்கள் மீதான அதீத குற்றச்சாட்டான நிர்ணயவாதத்திற்கு எதிராக பதிலை தந்துள்ளார்கள். தாங்கள் எதிர்கொண்ட intellectual climate காரணமாக வரலாற்று பொருள்முதவாத அழுத்தங்கள் இருந்திருக்கலாம் என எங்கெல்ஸ் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

சோவியத் சீன அனுபவங்களைப் பார்த்து மற்றொரு விமர்சனத்தை அலி ஷரியாதி வைக்கிறார். சோசலிசத்தை அரசு

முதலாளித்துவமாக்கிவிட்டனர். அரசாங்க சர்வாதிகாரத்தை பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் எனச் சொல்லிவிட்டனர். ஒரு கட்சி ஆட்சியை 'டயாமட்' என்கிற இயக்கவியல் சாரமாக சொல்லிவிட்டனர் என்கிறார். இது கடுமையான ஒன்று என்றாலும், என் பார்வையில் விவாதிக்கப்படவேண்டிய ஒன்றாகவே உள்ளது.

அலி ஷரியாதி பார்வையில் அவருக்கு மார்க்சியம் குழப்பம் கொண்ட சிந்தனா முறையாக இருக்கிறது.

Regarding man as anything but an element within the confines of the material world- a kind of reductionism . The primacy of man in Marxism derives from the primacy of tools- a kind of utensil ism என்கிற விமர்சனம் அவரிடம் தொழிற்படுகிறது . இதுவும் மேலே சொல்லப்பட்ட விமர்சனம் போன்ற ஒன்றுதான் , வேறு வார்த்தைகளில் வருவதாக எடுத்துக்கொள்ளலாம். மார்க்சியத்தை விதிவாதம் fatalism என சிலர் விமர்சித்தது போலவேத்தான் ஷரியதி விமர்சனமும் செல்கிறது. மேலும் Fanatics என்கிற மாற்று குற்றச் சாட்டை ஷரியாதி வைப்பது ஆச்சர்யமாக இருக்கிறது.

ஷரியாதி சீனாவின் லாவோயிசியம், கன்பூசியசியம், இந்து மதம், புத்தம் ஆகியவற்றின் நிறைகுறைகளை சிறிய அளவில் சொல்கிறார் . புத்தரும் idol worship ஆக வீழ்ந்துவிட்டதைச் சொல்கிறார். கிறிஸ்துவமும் அமைதிக்காக எனப் பிறந்து நிறைய இரத்தம் பார்த்துவிட்டதென்கிறார். இஸ்லாம் வாழ்விக்க வந்த மதம் என உயர்த்தி அலி ஷரியாதி தன் வாதங்களை வைக்கிறார். மதங்களை ஒப்பிட்டு அவர் நல்ல நூல்களை எழுதியுள்ளதாக ஆய்வாளர்கள் சொல்கின்றனர்.

Capitalism's pseudo man, Marxism's moulded man- which is more tragic என்கிற ஒப்பீட்டுக் கேள்வியை முன் நகர்த்துகிறார் ஷரியாதி. Work , the highest manifestation of humanity, is placed at the disposal of Capital in capitalism என்கிற மார்க்சியர் ஏற்கும் பார்வையை அலி ஷரியாதி வைக்கிறார்.

அதேநேரத்தில் Society , human mind , values, morals, cultures, ideas, sensibilities all from the means of production- man the machine என மார்க்சியம் குறுக்கிவிட்டதாகவும் அவர் விமர்சிக்கிறார். Is not Marxism just the other side of the coin of western capitalism என கேள்வி கேட்டு ஒருவகையான குறுக்கிப் பார்க்கும் தீர்ப்பையே அலி ஷரியதியும் எழுதுகிறார்.

ஷரியாதி எழுதுவதை ஒருவர் ஏற்கலாம்- மறுக்கலாம். ஆனால் அவர் ஏராள சிந்தனைக்குரிய கேள்விகளை எழுப்புவதைக் காணலாம்.

Man is god Who creates himself..by his own act?

Materialism is monotheism, how then dualistic shirk, dichotomising man and the world?

Has matter itself produced a being that is immaterial ?

What is choice?

What is good and evil- is that a personal sentiment?

ஷரியாதி , சார்த்தரின் இருத்தல்வாதமும் கடவுளாக பேசப்படும் மனிதனை சாத்தானாக்கி விடுவதாக விமர்சிக்கிறார். மத்திய தர வர்க்கத்தை சேர்த்துக்கொண்டு அவர்களின் நம்பிக்கையில் பாசிசம் ஆட்டம் போட்டதையும் ஷரியாதி இந்நூலில் கொணர்கிறார்.

மார்க்சின் மதம் குறித்த பார்வை பாயர்பாகிடம் பெறப்பட்ட ஒன்று. அதில் மார்க்ஸ் எந்த தத்துவ ஆழத்தையும் ஏற்றாமல் இலக்கிய சுவை நடையை மட்டுமே ஏற்றியுள்ளார் என்கிற மதிப்பிடலுக்கு அலி ஷரியாதி வருகிறார்.

இரு கேள்விகளை மார்க்சிய சிந்தனைக்கு அவர் எழுப்புகிறார். ஒன்று மார்க்சின் limitation பற்றியது. Beyond communism- human destiny leads this world where என்பது பற்றியானது. மார்க்சியர் எல்லோரும் அறிவர் - மனிதகுலத்தின் காலா காலத்திற்குமான சிந்தனையை மார்க்சோ வேறு யாருமோ தந்துவிட முடியாதென்பதை.. . ஷரியாதி போன்ற அறிஞர்களுக்கு இது தெரிந்தும், இப்படியான விமர்சனத்தை அவர் ஏன் வைத்தார் எனத் தெரியவில்லை.

மற்றொரு கேள்வி மார்க்சியர் பார்க்க மறுக்கும் பக்கம் என்பதான கேள்வி. - the historical and social role of religious minded fighters. இப்படியான சுதந்திர கிறிஸ்துவம் சார்ந்த சிந்தனையாளர்கள், நிறுவனங்களை தாண்டி மக்களுக்காகப் பேசியதை அலி சொல்கிறார். இதில் மார்க்சியர்களுக்கு மறுக்க என்ன இருக்கிறது? ஏன் மதத்தின் பகைவர் மொழியை போல மார்க்ஸ் லெனின் போன்றவர் பேச வேண்டும் என்கிற ஆதங்கம் ஷரியதிடம் இருப்பதை இந்நூல் காட்டுகிறது. ஒவ்வொரு சமயத்திலும் மக்களுக்கான மொழியுடன் கூடிய போராளிகள் இருப்பர் என்பதை ஏற்பதில் சிக்கல் இல்லை.

மக்கள் மீது அபிமானமுள்ள, அவர்களை கைவிடாத சமய போராளிகளிடமும், இதே எதிர்பார்ப்பை மார்க்சியர்களும் வைக்க முடியுமல்லவா? மார்க்சியம் பகை சக்தியா என்பதை அவர்களும் கேட்டுக்கொள்ள வேண்டாமா?

சிந்தனையாளர் அலி ஷரியாதியின் புகழ் வாய்ந்த மேற்கோள்

Don’t believe anything in a nation where only the government has the freedom of speech.

ஷரியாதி மனிதன் இஸ்லாம் சமூகம் முதலாளித்துவம் மார்க்சியம் என பெரும் உரையாடல்களை தந்தவர். இன்று அவர் போராடிய ஈரானில் கூட அவர் ஒளிர்கிறாரா எனத் தெரியவில்லை.

16-1-2025

feb 24 2023

34. இந்திய வரலாறு குறித்த கார்ல் மார்க்ஸ் குறிப்புகள் :

மார்க்ஸ் 170 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில் முகலாயர் ஆட்சியில் நில உறவுகள் குறித்தும் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்தும் தெரிந்துகொள்ள ஆர்வம்கொண்டு, இந்தியா குறித்து கிடைத்தவற்றையெல்லாம், குறிப்பாக அதன் வரலாற்றை மிக ஆர்வத்துடன் படித்துள்ளதை இந்த குறிப்புகள் நமக்கு காட்டுகின்றன.

இந்தியாவில் வாழும் நம் தலைமுறையே இந்தியா குறித்து முனைப்புடன் தெரிந்துகொள்ளும் ஆர்வத்தைக் காட்டாத நிலையில், அந்த மனிதர் அன்று அவ்வளவு ஆர்வத்துடன் தெரிந்துகொள்ள தவித்தது அவர் மீதான மரியாதை கூட்டாமல் இருக்காது. மார்க்ஸ்க்கு வணக்கம்.

==============================

இந்திய வரலாறு குறித்த கார்ல் மார்க்ஸ் குறிப்புகள்

இந்திய வரலாறு குறித்த கார்ல் மார்க்ஸ் குறிப்புகள் ஆங்கிலத்தில் காலவரிசைப்படி (664-1858) அவரால் எழுதப்பட்டுள்ளது. அவற்றை தொகுத்து Moscow Foreign Language Press வெளியிட்டது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி கட்டுப்பாட்டில் இருந்த மார்க்சிய லெனினிய இன்ஸ்டிட்யூட் ருஷ்ய பதிப்பிற்கு பின்னர் ஆங்கில பதிப்பை 1947ல் இறுதிப்படுத்தி வெளியிட்டது.

632 என அந்தக்குறிப்பு நபிகள் மறைவுடன் துவங்கும். முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளை காலவரிசையில் சிற்சில வரிகளாகச் சொல்லும். இந்த இந்திய வரலாறு குறித்த மார்க்சின் குறிப்புகளை பலவேறு வரலாற்று புத்தகங்கள் வழி மார்க்ஸ் சேகரித்ததாக இதன் பதிப்பாளர்கள் சொல்கின்றனர். அதன் இறுதிக் குறிப்பு ஆகஸ்ட் 2, 1858 தேதியிடப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 2, 1858 ஸ்டான்லி பிரபுவின் இந்தியா பில் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் கிழக்கிந்திய ஆட்சி முடிவுற்று 'இந்தியா ராஜதானி ' விக்டோரியா மகாராணி ஆட்சிக்குள் வந்தது. இங்கு மார்க்ஸ் India Province என்று பயன்படுத்தியிருப்பார்.

இந்த சிறு கட்டுரையில் மார்க்ஸ் எழுதியவற்றிலிருந்து கஜினி படையெடுப்பு, துக்ளக் ஆட்சி, பாபர்- அக்பர்- அவுரங்கசேப், சிவாஜி என்கிற காலத்தின் குறிப்பை மட்டும் கொடுத்துள்ளேன். சுவாரஸ்யமான வரலாற்றுத்தகவல்கள்.

எனது பள்ளிக்கால சரித்திர புத்தகம் கஜினி முகம்மது 17 முறை படையெடுத்தாக எனக்குச் சொல்லித்தந்தது. மார்க்ஸ் தன் இந்த குறிப்பில் கஜினியின் 12 படையெடுப்புகளைத் தருகிறார். கஜினி சுல்தான் 1001ல் லாகூர் மீதான படையெடுப்பு அவரின் முதல் படையெடுப்பு. லாகூர் ராஜா ஜெயபால் வீழ்த்தப்பட்டார். பஞ்சாபின் பதிந்தாவரை அப்போது கஜினி வந்துள்ளார். 1003, 1005, 1008 என அடுத்த படையெடுப்புகள் நடந்தன. 1008ல் ஜெயபால் மகன் ஆனந்த் பால் கஜினியை எதிர்த்து நின்றுள்ளார். மார்க்ஸ் இங்கு இவ்வாறு குறிப்பை எழுதியுள்ளார். Hindus fought fanatically; Mahmud defeated them, sacked temple of Nagarkot.

கஜினியின் அடுத்த படையெடுப்பு 1010, 1011களில் நடந்துள்ளன. 1011ல் கஜினி தானேஷ்வர் கோயிலை கைப்பறிய செய்தியை மார்க்ஸ் தருகிறார். 1013, 1014 கால படையெடுப்புகள் காஷ்மீர் மீதாக இருந்தன என மார்க்ஸ் குறிப்பிட்டுள்ளார். கஜினியின் 9 ஆம் படையெடுப்பு 1017 குளிர்காலத்தில் பெஷாவர்- காஷ்மீர் வழியாக கனாஜ் நோக்கியிருந்ததாம். 1022லேயே அவர் இருமுறை படையெடுத்து வந்தாராம்.

1024தான் மார்க்ஸ் கூறும் 12 ஆம் படையெடுப்பாண்டு. சோம்நாத் கொள்ளை என்கிற வரலாற்று முக்கிய செய்தியை நாம் காணமுடியும். கஜினி மூல்தான் சிந்து வழியாக குஜராத்தை

அடைகிறார். அதன் தலைநகரான அங்கல்வாரை கைப்பற்றியதாக மார்க்ஸ் எழுதியிருப்பார். ஆஜ்மீர் ராஜாவின் பிரதேசங்கள் அழிக்கப்பட்டதாகவும், ராஜபுத்திரர்கள் gallantly defended என்கிற வார்த்தைகளை நாம் காண்கிறோம். ஜெர்மனியில் மார்க்ஸ் என்ன பதத்தைப் பயன்படுத்தினார் எனத் தெரியவில்லை. கஜினி அத்தலைநகரில் ஓராண்டு இருந்தாராம். முன்பெல்லாம் படைத்தாக்குதல், கைப்பற்றல் திரும்ப ஊர் திரும்புதல் என்பது இங்கு மாறுவதைக் காண்கிறோம். இதை மார்க்ஸ் குறிப்பிடவில்லை. இந்த படையெடுப்பில்தான் சோமநாத் கோயில் கைப்பற்றப்பட்டதாக மார்க்ஸ் எழுதியிருப்பார்.

ஏப்ரல் 29, 1030ல் கஜினி மறைந்த செய்தியையும் அவரது அவையில் பிர்தௌசி எனும் புகழ்வாய்ந்த மேதை இருந்ததையும் மார்க்ஸ் குறிப்பிடுகிறார். கஜினி படைப்பிரிவில் துருக்கிய அடிமைகள் இருந்ததாகவும், அராபியர் கனவான்களாக இருந்ததாகவும் சொல்கிறார். மதம், நீதி, சிவில் ஆட்சி முறை அனைத்தும் பெர்ஷியர் கட்டுப்பாட்டில் இருந்ததையும் அவர் எழுதியுள்ளார்.

முகம்மது துக்ளக் பற்றி 1325-1351 கால குறிப்பில் ablest prince of his time, he ruined himself by his own much too extensive plans எனச்சொல்லிவிட்டு சில மோசமான விளைவுகளைத் தந்த அவரது திட்டங்கள் பற்றி மார்க்ஸ் சொல்லியிருப்பார். கஜான காலியாகும் போதெல்லாம் கொடும் வரிகளைப் போட்டார் என்கிறார். Most ruinous exactions on the people- taxes heavy என மார்க்ஸ் எழுதுவதைக் காண்கிறோம்.

1421 ஆண்டின் குறிப்பில் பாமினி அரசு தெலங்கானா ராஜாவை வாரங்கலிருந்து வெளியேற்றினார் என்ற செய்தியை மார்க்ஸ் தந்திருப்பார். தெலங்கானா என்பது Northern Circars, Hyderabad- Balaghat, carnatic and the language spoken Telinga என அவர் குறிப்பிடுவதைக் காண்கிறோம். தெலுங்கு என்பதை அப்படி குறித்துள்ளார். ராஜமுந்திரி, மசூலிப்பட்டினம், காஞ்சிபுரத்திலும் தெலுங்கு மொழி பேசப்பட்டதாக அவரது குறிப்பு சொல்கிறது.

பாபர் என அவர் ஆரம்பிப்பது 1526-1530 காலத்தில். பாபர் துவக்கிய முகலாயர் ஆட்சி 1526- 1761 என 235 ஆண்டுகள் குறிக்கப்பட்டுள்ளது. பாபர் டிசம்பர் 26, 1530ல் உடல்நிலை சரியில்லாமல் டெல்லியில் மறைந்தார். அவரது விருப்பப்படி அவரது உடல் காபூலில் அடக்கமானது என மார்க்ஸ் சொல்வார். ஹீமாயுன் பானிபட் யுத்தம் பற்றியெல்லாம் சிறு குறிப்புகளை மார்க்ஸ் எழுதியிருப்பார்.

அக்பர் 1560ல் ஆட்சிக்கு வருகிறார். 18 வயது அக்பரின் ஆளுகை டெல்லி, ஆக்ரா, பஞ்சாப் சுற்றி இருந்தது. பின்னர் ஆஜ்மீர், குவாலியர், லக்னோ, மால்வா என அவர் கைப்பற்றினார். அக்பரின் சகோதரர் ஹக்கீம் காபூலைப் பிடித்தார். 1568ல் ராஜ்புதன ஆட்சிகளை அக்பர் கைப்பற்றினார். இங்கு மார்க்ஸ் குறிப்பில்

Akbar married two Rajput queens in order to have peaceful connection with Jaipur and Marwar .

அக்பர் மீர்சாக்களை வென்று குஜராத் பகுதிகளை எடுத்துக்கொள்கிறார். மீர்சாக்கள் கலவரங்களை அவர் ஒடுக்கினார் என மார்க்ஸ் குறிப்பு செல்கிறது. 1575ல் ஒரிஸ்ஸா, வங்கம் அக்பர் வசமாயின. பீகாரும் அவரின் ஆளுகையில்.

1582-85 காலக்குறிப்பில் மார்க்ஸ் எழுதியிருப்பதாவது

Akbar settled the empire- was different in religious matters, tolerant; his chief religious literary advisors were Faizi and Abdul Fazl. Faizi translated old Sanskrit poems, including Ramayana and Mahabharatha. Akbar brought a Roman Catholic Portuguese Priest from Goa, Faizi also translated the Evangelists. Indulgence towards the Hindus; Akbar only insisted on abolition of Suttee. He abolished Jeziah- capitation tax.

அக்பரின் வருவாய் நிர்வாகம் பற்றியும் மார்க்ஸ் சொல்லியிருக்கிறார். 15 ராஜதானிகளில் வைஸ்ராய்கள் அமர்த்தப்பட்ட நிர்வாகம். Mir-i-Adl என்கிற தலைமை நீதிபதியின் கீழ் நீதித்துறை- represents will of the Sovereign, hearing the conclusion and passing sentence. Akbar reformed the Code of Punishments partly on Mohammedan Custom, partly on the laws of Manu என்கிற

முக்கிய விஷயத்தை மார்க்ஸ் தன் குறிப்பில் தருவதைக் காண்கிறோம்.

1657 அவுரங்கசேப் பற்றிய குறிப்பாகும். ஷாஜஹானுக்கு தாரா ஷிகோ, ஷுஜா, அவுரங்கசேப், முரத் என்கிற நான்கு புதல்வர்கள். தாரா ஒரு பகுதி வைஸ்ராய், முராத் குஜராத் பொறுப்பு, ஷுஜா வங்கப்பொறுப்பு கவர்னர், அவுரங்கசேப் ஹைதராபாதை கைப்பற்றினார். ஷாஜகான் உடல் சுகவீனத்தால் தாராவிடம் பொறுப்பு என்றனர். ஷுஜா கூடாது என்றார். அவுரங்கசேப் இஸ்லாமின் பெயரால் எனச் சொல்லி தாராவையும், ஷுஜாவையும் போட்டியில் பின் தள்ளி அவர் முன்னேறினார். தாராவையும் ஷாஜகானையும் அவுரங்கசேப் சிறை வைத்தார். A lamgir என்ற பட்டத்துடன் அரியணை ஏறிய அவுரங்கசேப் கதையை மார்க்ஸ் மிக சுருக்கமாக குறிப்பெடுத்துள்ளார். தாரா ஷிகோ பல நகர்களுக்கு தப்பிச் சென்றாலும் இறுதியில் கொல்லப்பட்டார். டெல்லி கலவரங்களை அவுரங்கசேப் ஒடுக்கினார்.

ஸ்ரீநகர் அரசன் தாராவின் புதல்வன் சுலைமானை விடுவிக்க அவர் விஷம் வைத்து அவுரங்கசேப்பால் கொல்லப்பட்டதாக மார்க்ஸ் குறிப்புச் சொல்கிறது. சகோதரன் முராத்தும் கொலை செய்யப்பட்டார்.

1660-70 என்கிற குறிப்பில் சிவாஜி பற்றி மார்க்ஸ் எழுதுகிறார். He acquired habits of a robber, which he practiced early. He seized his father's own territory, captured many forts with his capital Kalyan.

1665 சிவாஜியின் செயல்களால் ஆத்திரமடைந்த அவுரங்கசேப் படையெடுத்தார். சிவாஜியுடன் உடன்பாடு ஏற்பட்டது. சிவாஜி மராத்தியர்கள் as nation என்ற கட்டுமானத்தை செய்தார். சிவாஜி தனது பிரதேச விரிவாக்கத்தை செய்தார்.

1677ல் சிவாஜி கர்நூல், கடப்பா வழியாக மதராஸ், வெல்லூர், ஜிஞ்சி வரை வந்தார்.. 1680ல் சிவாஜியிடம் மைசூர், தஞ்சாவூர் வந்ததையும் மார்க்ஸ் குறிப்பாக எடுத்து வைத்துள்ளார். 1680 சிவாஜி

மரணமடைகிறார். அவரது மகன் சாம்பாஜி பொறுப்பேற்கிறார். 1689ல் சாம்பாஜி பிடிபட்டு அவுரங்கசேப் ஆட்சியில் தலைகொய்யப்படுகிறார். பிப்ரவரி 21, 1707 தனது 89ஆம் வயதில் அவுரங்கசேப் மறைந்தார். தனது மகன்கள் எவரும் சாகும்போது அருகே இருக்கவிடவில்லை என்ற குறிப்பையும் மார்க்ஸ் எழுதிவைத்துள்ளார்.

16-9-2024

35. கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ

சில நூல்களும், கருத்துக்களும் காலவரையறைகளில் காணாமல் போகாது, ஒளித்துணையாய் மனித வாழ்க்கையில் வந்துகொண்டிருக்கும். தமிழில் திருக்குறளை அப்படி நாம் கொண்டாட முடியும்.

Political Track என்கிற வரிசையில் ரூசோவின் சமுதாய ஒப்பந்தம், மார்க்ஸ் எங்கெல்சின் கம்யூனிஸ்ட் மானிபெஸ்ட்டோ, காந்தியின் ஹிந்த் சுயராஜ் போன்ற ஆக்கங்களை நாம் சொல்லலாம். அப்படி சொற்செட்டுடன் மிக ஆழமாக மனித வாழ்வின் துயரங்களை நீக்க துணிச்சலான மாற்றுகளை , காலத்தை விஞ்சி தீர்க்கமாக வைப்பவைகளாக இந்நூல்கள் இருக்கும். இவைகளை இணைத்து படிக்க முடிந்தால் சிறப்போ சிறப்புதான். அவைகளின் சிந்தனைத் திறன் உயர்தரமானவை.

இங்கு நான் கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ வாசித்தலை சொல்ல விழைகிறேன். கட்சிகளில் மானிபெஸ்டோ குறித்து கொஞ்சம் சொல்லிக்கொடுக்கப்பட்டிருக்கும். கேள்வி ஞானம் , சில முக்கிய மேற்கோள்களை நம்பிக்கை அடிப்படையில் வெளிப்படுத்துதல் என்கிற பழக்கம் இருக்கும். அங்கு பலர் ஒருமுறையாவது வாசித்திருப்பர். வாசிக்காத மார்க்சியர் எவராவது இருந்தால் அவசியம் வாசித்தல் நலம். வாழ்வு குறித்த புரிதலை கூடுதலாக பெற மானிபெஸ்டோ உதவும். நூலை உள் நுழைந்து முழுமையாக வாசிக்க வேண்டும்.

மானிபெஸ்டோவின் 25 ஆண்டுகள் துவங்கி மார்க்ஸ் எங்கெல்ஸ் வெவ்வேறு மொழி பதிப்புகளுக்கு முன்னுரை எழுதியிருந்தனர். மார்க்ஸ் மறைந்த பின்னர் எங்கெல்ஸ் இருந்தவரை அவர் புதிய மொழி, அல்லது வருகிற புதிய பதிப்புகளுக்கு முன்னுரை எழுதியிருந்தார். ஆரம்ப வாசகர்களை முன்னுரையை விட்டுவிட்டு

நூல் இயல்களுக்கு நேரடியாக சென்றுவிடுங்கள் எனச் சொல்லும் வழக்கம் உண்டு. முதல் முறைக்கு மேல் அந்நூலை அடிக்கடி வாசிக்கச் செல்பவர்கள் அனைத்து முன்னுரைகளையும் படிப்பது உகந்தது. அவை எழுதப்பட்ட ஆவணத்தின் சாரத்தை, சற்று மேலும் ஒளி படவேண்டிய inadequacy யை குறிப்பிட்டு பேசும். 1848 ல் வந்த வரலாற்று ஆவணம் என்பதால், தாங்கள் மாற்ற விரும்பவில்லை என 25 ஆண்டுகள் கழித்த பதிப்பொன்றில் மார்க்ஸ் எங்கெல்ஸ் சொல்லியிருப்பர்.

அவ்வப்போது நம்மிடம் ஏற்பட்டு வரும் political influence , ideological influence , life experiences in movements அடிப்படையில் நம் வாசிப்பும் இந்நூலுடன் சேர்ந்து செல்லும். மார்க்ஸ் எங்கெல்ஸ் இருவரும் 1848 லிருந்து அவர்கள் இருந்த காலம்வரை முதலாளித்துவ தொழில்மயமாதல்- மற்றும் தொழிலாளர் இயக்க வரலாற்றுடன் மானிபெஸ்டோ வரலாறும் பயணிப்பதாக முன்னுரைகளில் சொல்லியிருப்பர்.

மானிபெஸ்டோ அளவில் சின்னஞ்சிறு நூல்தான். மார்க்சிய பதங்களில் கொஞ்சம் பயிற்சி கொண்ட எவரும் 2 மணி நேரத்திற்குள் படித்துவிடக்கூடிய நூல்தான். ஆனால் அது பேசும் கருத்துக்கள் மிக ஆழமானவை. முழுமையாக தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளாமல் படிப்பவர்களுடன் பெரும் உரையாடல் திறப்புகளை மானிபெஸ்டோ செய்திடும். படித்துவிட்டு ஏற்க முடியவில்லை என விமர்சனம் கூட செய்யலாம். ஆனால் படிக்காமல் அது குறித்த ஓரிரு மேற்கோள்களை வைத்துக்கொண்டு புகழ்வது அல்லது இகழ்வது என்கிற ஏமாற்று குறித்து அவரவர்தான் யோசிக்க வேண்டும்.

மானிபெஸ்டோவை ஆங்கில வாசிப்பு பயிற்சி இருக்கும் மார்க்சியர் அல்லாதவர்களும் ஓரிரு முறை வாசித்தல் நலம். இலக்கிய வாசிப்பாளர்கள் கூட வாசிக்கலாம்.

பூர்ஷ்வா குறித்த விமர்சனம் என்கிற வாசிப்பாக, தொழிலாளி வர்க்கம்தான் விடுவிக்கும் என்கிற நம்பிக்கை வாசிப்பாக பலமுறை செய்ததுண்டு. மானிட உறவுகள் வெறும் பண உறவுகளாக சீரழிந்து கிடக்கின்ற நெறியற்ற வாழ்க்கைமுறை என்கிற வாசிப்பில் , மானிபெஸ்டோ காந்தி சந்திப்பு புள்ளிகளைக் கூட நாம் பெறமுடியும்.

இப்பூமி அனைவருக்கும் வாழ்க்கைக்கான ஆதாரங்களை தரக்கூடியதாக இருக்கிறது. ஆனால் சிலரின் பேராசையால் பெரும் துன்ப பூமியாகிறது என்கிற புரிதலை மானிபெஸ்டோ தரும். மீட்சியாளன் தொழிலாளி வர்க்கமா, அவன் தான் புரட்சிகர மனித கூட்டமா வர்க்கமா என்கிற புள்ளி விவாதங்களை பெருக்கலாம். ஆனால் நமக்கு greedy ஏன் என்கிற புள்ளியில் மானிபெஸ்டோவை காந்தி சந்திக்கிறார். வன்முறை வழியில் மாற்றம் எனும் போது அவர் விலகுகிறார்.

மானிபெஸ்டோவின் சில வரிகள் குறிப்பாக அதன் முதல் இரு இயல்கள் முதலாளித்துவம்- தொழிலாளர் இயக்கம் எனப் பேசுகிறவற்றில் வாழ்வை நவீன எந்திர வாழ்க்கை எப்படி சீரழித்துள்ளது என்கிற சித்திரம் , காந்தியின் ஹிந்த் சுயராஜ்ஜில் சொல்லப்பட்டுள்ள சித்திரமாகவும் இருக்கும். மார்க்ஸ் எங்கெல்ஸ் முன்வைக்கும் radical agenda பலவற்றை நாடுகள் welfare அரசுகளாக சோதிக்காமல் இல்லை. தொழில்கள் அரசுமயம், இலவச கல்வி, மருத்துவம், progressive taxation போன்ற சோதனைகள் நடத்தப்படாமல் இல்லை. ஆனால் பெருந்தொழில் என்கிற முதலாளித்துவ சோதனையை private property என்பதிலிருந்து State property என்கிற Property legality மாற்றம் என்பதாக அவை நடத்தப்பட்டன.

சோசலிசமும் பெருந்தொழிலும் ஒத்துப்போகுமா என்கிற புள்ளி விரிவாக பேசப்படாமல் போனது. காந்தி அதை சோதிக்க நினைத்தார். விடுதலைக்கு பின்னரான காலத்தில், நேருவின் ஆட்சி தொடர்ந்து இன்றுவரை , அச்சோதனை பக்கம் இந்தியா போக முடியாமல் போனது சோகமான ஒன்றுதான். Greedy குணம் ‘பத்தலை இன்னும்

இன்னும் ‘ என்கிற ஓட்டம் முதலில் தன் மனசாட்சியைத்தான் மூடிவைக்கும். அதை புறக்கணிப்பதில்தான் தன் சுகத்தை அதனால் காணமுடியும். இப்படி ஒரு வாசிப்பை கூட மானிபெஸ்டோ தருகிறது. இது ஏதோ முதலாளிகளிடம் மட்டுமே உள்ள குணம் அல்ல. நம் எல்லோரிடமும் பற்றியுள்ள போக்கு.

எங்கெல்ஸ் ஒரு முன்னுரையில் முக்கியமான ஒன்றை விளக்கியிருப்பார். சோசலிச திட்டம் கொண்ட மானிபெஸ்டோவை ஏன் ‘சோசலிஸ்ட் மானிபெஸ்டோ ‘என அழைக்காமல் கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ என்று அழைத்தோம் என்பது அது. சோசலிசம் என்பது அப்போது மத்தியதர வர்க்க இயக்கமாக உணரப்பட்டிருந்தது. தொழிலாளர் இயக்கத்தை நாங்கள் முன் வைத்ததால் கம்யூனிஸ்ட் எனப் பயன்படுத்தியுள்ளோம் என விளக்கம் தந்தார் எங்கெல்ஸ். வேறு ஒரு முன்னுரையில் அவர் சோசலிசம் பூர்ஷ்வா இயக்கம் என மாற்றிச் சொல்லியிருப்பார். இரண்டே ஆண்டு இடைவெளிகளில் எங்கெல்சை மாற்றி பேசவைத்த அனுபவம் என்ன என எனக்குத் தெரியவில்லை.

நேரு பேசிய ஆவடி சோசலிசம் கூட பூர்ஷ்வா சோசலிசமாக சோவியத் யூடினும் இங்கு கம்யூனிஸ்ட்களும் பார்த்ததுண்டு என்கிற ஒன்றை இணைத்துப் பார்த்துக்கொள்கிறேன். மானிபெஸ்டோ முன்வைத்த radical agenda சிலவற்றை நேரு நிகழ்த்திப் பார்த்தார் என்கிற புரிதலும் தேவைப்படுகிறது.

முன்பெல்லாம் மிக மலிவான விலைக்கு கிடைத்த மானிபெஸ்டோ இப்பாதெல்லாம் ரூ 150, ரூ 200 என்கிற விலையில் அமேசானில் கிடைக்கிறது. கம்யூனிஸ்ட்கள் பலரின் வீட்டில் பழைய பிரதிகள் இருக்கலாம். என் பிரதிகளை வழக்கம்போல் தமிழ் ஆங்கிலம் இரண்டையும் தவறவிட்டேன். எங்கெல்ஸ் கூட மூல ஜெர்மன் பிரதியை தொலைத்துவிட்டதாக எழுதியிருப்பார். மார்க்ஸ் மறைந்த பின்னர் மேம்பட்ட மொழிபெயர்ப்பாக சாமுவேல் மோர் கொணர்ந்த ஆங்கில பதிப்பைத்தான் எங்கெல்ஸ் பாராட்டி சொல்வார். அவர்

மேற்பார்வையில் அம்மொழிபெயர்ப்பு வந்தது. அதுதான் நமக்கு கிடைத்து வருகிறது.

என் சி பி எச் நிறுவனத்தார் தோழர் எஸ் வி ராஜதுரை விளக்கத்துடன் விரிவான பதிப்பு ஒன்றை கொணர்ந்துள்ளனர். அவர் சாமுவேல் மோர் மற்றும் ஹால் டிராப்பர் மொழிபெயர்ப்புகளை ஒப்பிட்டு தமிழ் மொழியாக்கத்துடன் பெரிய வேலை உழைப்பை தந்துள்ளார். தீவிர வாசிப்பாளர்கள் ஆய்வு கண்களுடன் அந்நூலை வாசிப்பதும் நலம்.

மானிபெஸ்டோ குறித்து அதன் 25 , 50, 75,100,125, 150 மற்றும் 175 ஆண்டுகளில் காலந்தோறும் ஏற்பட்ட மாற்றங்களுடன் ஏராளம் எழுதப்பட்டுள்ளது. காலத்துடன் பயணித்து வரும் நூலாக கருத்து பெட்டகமாக மானிபெஸ்டோ இருப்பதைக் காண்கிறோம். மனித அறிவு தான் சேமித்த கிடங்குகளிலிருந்து எவரோ ஒரு தீர்க்கதரிசி வழியாக அவ்வப்போது உச்சம் தொடுகிறது. அனைவரின் நல்வாழ்விற்கான ஏக விழைவை அது வெளிப்படுத்துகிறது. அப்படி ஒரு பெரும் புற மாற்றத்திற்கான அக விழிப்பாக மானிபெஸ்டோவும் வாழ்கிறது.

வாசித்து பார்க்க வேண்டிய நூல்

16-9-2024

feb 13 2022

36. ஹெரால்ட் லாஸ்கியின் கம்யூனிசம்

Communism என்கிற ஹெரால்ட் லாஸ்கியின் புத்தகம் இந்திய பதிப்பில் ஆகார் நிறுவனத்தாரால் 2022ல் (ஜன - பிப்) வெளிவந்துள்ளது. ரூ 325 வைத்துள்ளனர். அமேசான் மூலம் பெறமுடிகிறது.

ஹெரால்ட் லாஸ்கி பிரிட்டனின் புகழ்பெற்ற அரசியல் அறிஞர். ஏராள புத்தகங்களை எழுதியிருப்பவர். இந்த கம்யூனிசம் புத்தகம் கூட இணையத்தில் கிடைக்கிறது. ஆனாலும் 1927ல் லண்டனில் வெளியான இந்தப் புத்தகம் இப்போது ஆகாரால் மீண்டும் மலிவுவிலையில் நமக்கு கிடைக்கத் துவங்கியுள்ளது. மார்க்சியர் மற்றும் அரசியல் ஆர்வலர் எவரும் படிக்கக்கூடிய வகையில் அமைந்துள்ள புத்தகமது. லாஸ்கியின் இந்த நூல் 250 பக்கங்களைக்கொண்டது.

லாஸ்கியின் புகழ் வாய்ந்த சிறு பிரசுரம் (52 பக்கங்கள்) Karl Marx An Essay என்பதாகும். இந்த சிறு பிரசுரத்தை 1942ல் கார்ல் மார்க்ஸ் வரலாற்றை (இன்றும் தமிழில் சிறந்த புத்தகமாக கருதப்படுவது) எழுதிய வெ சாமிநாத சர்மா பயன்படுத்திக்கொண்டார். வெ சா இரு புத்தகங்களை ஆதாரமாக கொண்டு அதை எழுதினார். ஒன்று லாஸ்கி- மற்றொன்று ஐசையா பெர்லின் (மார்க்ஸ் குறித்த முதல் 10 சிறந்த புத்தகங்களுள் ஐசையா புத்தகமும் '1939ல் வந்தது' இருப்பதைக் காண்கிறோம்)

இனி லாஸ்கியின் கம்யூனிசம் புத்தகம் பற்றி..

மார்க்சியர்களும் இதை நல்ல குறிப்பு புத்தகமாக பயன்படுத்திக்கொள்ளமுடியும். மார்க்ஸ் எப்படி தனது theoryயை வந்தடைந்து வலுப்படுத்தினார் என்பதை இந்நூல் நமக்கு சொல்லும். ஹெகல் குறித்த சிறு விளக்கம், வரலாற்றை மார்க்ஸ் எப்படி விளக்கினார்- வர்க்கப்போராட்டம்- மார்க்சிய பொருளாதார விளக்கங்கள்- அரசு குறித்து மார்க்சின் பார்வை, கம்யூனிச உத்தி ,

லாஸ்கியின் முடிவாக வந்தடையும் கருத்துக்கள் என இந்நூல் விரிகிறது.

மார்க்சின் கருத்துக்களை சொல்லி அதில் அதீத உரிமைக்கோரல்கள், emotional agitator என பேசும் இடங்கள் மீது மெலிதான விமர்சனத்தை லாஸ்கி வைக்காமல் இல்லை.

இந்த புத்தகம் வேறு ஒருவகையிலும் பயனுள்ளதாக இருக்கிறது. மார்க்ஸ் எதை எங்கிருந்து எடுத்து அதை தன் சிந்தனை ஒளியேற்றி தருகிறார் என்பதும் ஆங்காங்கே தொட்டுக்காட்டப்பட்டுள்ளது. சில நாட்களுக்கு முன்னர் தமிழக அறிஞர்களான தோழர் அருணன், திரு பி ஏ கிருஷ்ணன் டிவி விவாதத்தில் மார்க்சின் From each according to his powers, to each according to his needs பற்றி வேறொரு contextல் பேசிக்கொண்டனர். இதை மார்க்ஸ் எங்கிருந்து பெற்றார் எனபதை லாஸ்கி சொல்வார். இந்த வரிகள் ஜெரார்ட் வின்ஸ்டான்லி என்பவரால் 1652ல் Law of Freedom in a platform ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோல் value as a product of labour என்பதை அவர் ரிகார்டோவிடமிருந்தும், டயலாக்டிக்ஸ் என்கிற மெதடாலஜியை ஹெகலிடமிருந்தும், Babeuf என்பாரிடமிருந்து idea of proletarian dictatorship என்பதையும் எடுத்து மார்க்ஸ் வளப்படுத்தியுள்ளார்.

மார்க்ஸ் குறித்த மேலான மதிப்பீடுகளை லாஸ்கி தராமல் இல்லை. இந்த புத்தகம் விமர்சனவகைப்பட்டும் புகழுரைகள் கொண்டும் critically acclaimed வகைப்பட்ட ஒன்றானது எனக் கருத இடமுண்டு. வாய்ப்புள்ளவர்கள் மின் புத்தகமாகவோ அல்லது ஆகாரிடம் வாங்கியோ வாசிக்கத் தகுந்த புத்தகம்

my 11 2025

37. பீட்டர் வோர்ஸ்லியின் மார்க்ஸ்- மார்க்சியம்

‘மார்க்ஸ் -மார்க்சியர் - இந்தியாவில் தாக்கம்’ குறித்து அவ்வப்போது கடந்த சில மாதங்களில் சிறு சிறு குறிப்புகளை முகநூலில் தந்து வந்துள்ளேன்.

இடுகைகளை முழுமையாக சேர்த்து தொகுத்து வைத்துக்கொள்ள முடியாமல் போனது. கடந்த 15 ஆண்டுகளாக எழுதி வந்த இணையதளமும் , பிப்ரவரி 4, 2025 அன்று முடிவிற்கு வந்தது. ஏறத்தாழ இணைய தளத்தில் 600 கட்டுரைகளாகவது இருந்திருக்கும். சேமித்திருந்த சில கட்டுரைகள் நீங்கலாக மற்றவை போயே போயின.

முகநூலில் எடுக்க முடிந்த சில இடுகைகளை , இப்போது தொகுத்தாலே ஏ4 பிடிஎப் மின் வடிவத்தில் 200 பக்கங்களுக்கு மேல் வரலாம். முயற்சிக்கலாம் என்கிற ஆசை.

இதை செய்ய ஆரம்பித்தபோது, பிரிட்டனின் சமுக இயல் அறிஞர் பீட்டர் வோர்ஸ்லியின் Marx and Marxism நினைவிற்கு வந்தது. அதன் அற்புத தமிழாக்கத்தை புகழ் வாய்ந்த பிரமிள் ‘ மார்க்ஸூம் மார்க்ஸீயமும்’ எனச் செய்தார். அந்த நூலை வாசித்து 25 ஆண்டுகள் ஆகியிருக்கலாம். ஏதாவது குறிப்பெடுத்து திருவாரூரிலேயே பறக்க விட்டுவிட்டேனா , நினைவில் இல்லை.

தற்போது மீண்டும் வோர்ஸ்லியை பார்த்ததால் இப்பதிவு..

வோர்ஸ்லி ஆங்கில நூல் 1982ல் வந்தது. பிரமிள், இலங்கை விடுதலை இயக்கத்தவர்க்காக 1985 லேயே மொழிபெயர்க்க ஆரம்பித்தாலும், எழுத்தாளர்களுக்கே ஏற்படக்கூடிய அவஸ்தைகள், தடைகளைக் கடந்து, கால சுப்பிரமணியம் முயற்சியால் 1999ல் வெளிவந்தது.

வழக்கமான அந்த காலத்தில் கிடைத்த பல மார்க்சிய நூல்களின் மொழிபெயர்ப்பு நடையிலிருந்து, சற்று இலகு நடையில் வோர்ஸ்லி

நூலை பிரமிள் தந்திருப்பார். மார்க்ஸ் குறித்த மதிப்பிடல்களை சற்று விமர்சனபூர்வ நோக்கில் பார்த்து, அதேநேரத்தில் மார்க்சின் பங்களிப்பை அறிமுகப்படுத்த முயற்சித்த நூல் என இதைச் சொல்லலாம்.

இயல்களை பிரமிள் தலைப்பிடும் போது மூல நூலில் இயல்தலைப்பு ஆங்கிலத்தில் இருந்ததையும் சேர்த்தே தந்திருப்பார்.

Introduction, Materials and Synthesis, The Model of Capitalism- British political Economy, Social Evolution, Socialism Ideal and Reality, Marxism Sociology and Utopia என்கிற இயல் தலைப்புகளை பிரமிள்-மார்க்சியத்தின் சரித்திரச் சுவடுகள், சாதனங்களும் சமான விருத்திகளும், முதலாளித்துவ மாடல் பிரிட்டிஷ் அரசியல் பொருளாதாரம், சமூகப் பரிணாமம், சோசலிசம் லட்சியார்த்தமும் யதார்த்தமும், மார்க்ஸீயம் சமுகவியலும் யூட்டோப்பிய பூரண அரசும் என்று கொடுத்திருப்பார்.

மார்க்சியத்தை முழுமையாக ஆராதிப்பவர்களிடம் அகப்பட்டுக்கொள்ளாமலும், வெறும் தூஷணை செய்பவர்களிடம் சிக்கி விடாமலும், கம்பி மேல் நடப்பதை போன்று சமூகவியல் புரிதலில் பிரதியை வோர்ஸ்லி முடைந்திருப்பார்.

மார்க்சியத்தை ஏற்றவர்கள் எந்த அம்சத்திற்கு அழுத்தம் கொடுத்தனர், எப்படி பயன்படுத்த விழைந்தனர் என்கிற கேள்வியை ஆசிரியர் எழுப்பி பதில் தேடப்பார்த்திருப்பார். அதை சித்தாந்தமாகவே செய்து கொண்டிருப்பவர்கள், காணப்படும் இடைவெளிகளை வெளிப்படுத்தி அதை நிராகரிப்பவர்கள் என்கிற இரு சாரார் குறித்தும் எச்சரிக்கையுணர்வு கொண்டிருப்பார் வோர்ஸ்லி.

ஸ்டாலின் மாவோ காலத்திற்கு பின்னர் உலகப் பொது மார்க்சியம்- ஒரு இடத்திலிருந்து கட்டளைகள் என்பதெல்லாம் நின்று போயின. அந்த அந்த தேச மார்க்சியர் சுயாதீனமாக தங்கள் ஊருக்கான மார்க்சிய புரிதல்களை சொல்லும் சுதந்திரம் உருவானது. சில இடங்களில் ‘தேசிய வைதீக மார்க்சியம்’ உருவாகவும் இது இடம்

கொடுத்தது. கொரிய அனுபவத்தை இங்கு வோர்ஸ்லி சொல்வார். லெனின் மாவோ போன்றவர் பெரும் ரட்சகர்கள் நிலைக்கு உயர்த்தப்பட்ட நிலையையும் சொல்வார்.

மார்க்சியம் இன்றளவும் முதலாளித்துவ நிலபிரபுத்துவ சுரண்டல்களுக்கு எதிராக குரல் கொடுக்கும் , அதன் நம்பகத்தன்மையால் ஜீவித்து நீதியின் குரலாக நின்று வருகிறது என்பதை வோர்ஸ்லி பெரிதாக அங்கீகரித்திருப்பார்.

மார்க்சின் அத்துனை எழுத்துக்களையும் கேள்விக்கு அப்பாற்பட்டவையாக்கி, எல்லா பிரச்சனைக்கும் அதில் தீர்வுண்டு- அனைத்து கேள்விகளுக்கும் பதில் உண்டு என்கிற பேச்சுக்களை சகித்துக்கொள்ள வேண்டியதில்லை என்பது வோர்ஸ்லியின் நிலைப்பாடு.

மார்க்சின் எழுத்துக்களை உபரி மதிப்பு உட்பட - இந்நூலில் மிகச் சுருக்கமாக வோர்ஸ்லி அறிமுகம் செய்திருப்பார். பொருளாதார நிர்ணயவாதம் போன்ற தோற்றத்தை அவரது எழுத்து ஏற்படுத்தியதை ஏங்கெல்ஸ் ஏற்றார் என்பதையும் வோர்ஸ்லி சொல்கிறார். எல்லா சமூகங்களுக்கும் பொருந்தக்கூடிய ஒரே மாடல் என ஏதும் இருக்க முடியாது என்கிற பார்வை வோர்ஸ்லியிடம் இருந்தது. மார்க்சின் மூலதன நூலை அவரின் மாபெரும் அறிவு சாதனை என வோர்ஸ்லி ஏற்கத்தவறவில்லை. ஆனால் அதற்கு இணையான சமூக இயல் சாதனையை அவர் ஏற்படுத்தவில்லை என வோர்ஸ்லி மதிப்பிட்டார்.

மார்க்ஸின் எழுத்துக்கள் அவரிடமிருந்து ஏராள எழுத்துக்களை தொடர்ந்து உற்பத்தி செய்திடும் ஆற்றல் கொண்டதாகவும் இருக்கிறது என்பதை அழுத்தமாக ஏற்கவும் செய்கிறார் வோர்ஸ்லி. மார்க்சிற்கு பிந்திய மார்க்சியம் என்பதிலும் அவர் தன்னை கவனப்படுத்திக்கொண்டார்.

மார்க்சின் அரசியல் விஞ்ஞானம், சமூகத்தின் சகல அம்சங்களையும் உள்ள்டக்கிய விஞ்ஞானமாக - சமூகவியலாக ஆகாமல் நின்றதாக

சமூகவியல் அறிஞராக வோர்ஸ்லி மதிப்பிடுகிறார். உற்பத்தி தளத்தில் சுரண்டல் என்பதை மட்டும் பார்க்காமல், ஒத்துழைப்பு என்பது குறித்தும் பார்க்க வேண்டியுள்ளது என்றார் வோர்ஸ்லி. அரசுகள் வெறும் வன்முறை பயமுறுத்தலில் மட்டும் இருப்பதில்லை. ஆளப்படுபவர்களின் ஏற்பை பெற்றே நிலைக்கிறது என்கிற கிராம்சியின் பங்களிப்பையும் அவர் சொல்கிறார். தொழிலாளி வர்க்கம் பூர்ஷ்வா வாழ்க்கை முறையில் உள்ளிழுக்கப்படுவதை மார்க்ஸ் தன் காலத்திலேயே இங்கிலாந்தில் கண்டார் என்பதையும் வோர்ஸ்லி நினைவுபடுத்துகிறார்

சோசலிசம் தானாக எங்கும் வந்துவிடாது. தடுப்பதும் மனித முயற்சிதான். அதைக் கொணர விரும்பி செயல்படுவதும் மனித முயற்சி தான். வரவழைக்க முடியும் என்கிற நம்பிக்கை வெற்றி பெறலாம்- தோல்வியிலும் முடியலாம் என்பதை சோவியத் அனுபவம் நிறுவியது. சீனா தான் விழையும் சோசலிச கட்டுமானத்திலும் ஏராள பிரச்சனைகளை சந்திக்க வேண்டியுள்ளது. அது நீண்டகால வேலை என்பதை சீனா ஏற்றுள்ளது. இவற்றை உலகமெங்கும் மார்க்சிய கட்சிகள் புரிந்துள்ளன.

உலக முழுதும் தொழிலாளர்களை வேறுபடுத்தும் அம்சங்களும் இருக்கின்றன. உழைக்கும் வர்க்கம் கலாச்சாரரீதியாக ஓர் படித்தான ஒன்றல்ல. வேலைத் தளங்களில் கூட தொழில் வித்தியாசம், திறன், வேலை நிரந்தரம் என வேறுபாடுகளை உணர்கின்றனர். இந்தியாவில் கூடுதலாக சாதி உள்ளது. தொழிற்சங்க வழியே மட்டும் அவர்களை புரட்சிகரமாக்கிவிட முடியாது என்பதை லெனின்- ஏன் காட்ஸ்கி கூட, ஏற்றார் என்கிறார் வோர்ஸ்லி.

பொருளாதாரத்திற்கும் , அதற்கு புறம்பான சமூக அம்சங்களுக்குமிடையிலான உறவைப் பற்றி , மார்க்சை தாண்டி போக வேண்டிய தேவையை வோர்ஸ்லி உணர்வதாக புரிந்துகொள்ளலாம். சமூக வளர்ச்சி படிநிலை நியதிகளை மாற்றவே முடியாத இரும்பு நியதிகள் போன்ற தோற்றத்தை மார்க்சை விட

எங்கெல்ஸ் எழுத்துக்கள் கொடுத்துவிட்டன என்கிற பொதுவான விமர்சனமும் உண்டு. அப்படி நேரடியாக அவர்கள் எங்கும் சொல்லவில்லை என்ற கருத்தை வேறு சில ஆய்வாளர்கள் போலவே வோர்ஸ்லியும் ஏற்றார். ஸ்டாலின் காலத்து பார்முலாக்கள் அப்படி புரிதலை கொடுத்தன எனவும் அவர் மதிப்பிட்டார்.

எங்கெல்ஸ் காலத்தில் வளர்ந்த எட்வர்ட் பெர்ன்ஸ்டைன் போன்றோர் முதலாளித்துவத்தின் வீழ்ச்சி என்பதோ , வர்க்க திரட்சி என்பதோ நடந்தே தீரும் எனக் கருத வேண்டியதில்லை எனப் பேசியதையும் காண்கிறோம். அவர் ரிவிஷனிஸ்ட் ஆக பார்க்கப்பட்டதும் உண்டு. சோசியல் ஜனநாயகம் என்பதே , வாக்குரிமை அரசியலில் வளர்ந்தோங்கும் என பெர்ன்ஸ்டைன் கணித்தது ஓரளவிற்கு சரியானது போலவே தோன்றுகிறது.

மார்க்ஸ் லெனின் தொழிலாளர் ஆட்சி எனப் பேசியபோது, அராஜகவாதி சிந்தனையாளர்கள் கட்சித் தலைமையின் 'சிறு குழு ஆட்சியாகவே' அது அமையும் என எச்சரித்ததும் உண்டு. சோவியத் சீன அனுபவங்கள் உருவானது கட்சித் தலைமை சிறு குழு ஆட்சி என்பதே எனக் காட்டாமல் இல்லை. நாளடைவில் அரசு உதிரும் என்பதற்கு பதில் , வலிமையான மய்யப்படுத்தப்பட்ட அரசு கட்டுமானம் என்பதையே பார்க்க முடிந்தது. சீனாவில் அரசு எப்படி , உலகச் சூழலில் உதிரும் என்கிற கேள்வி அங்கு முக்கியமாக இருக்கவே செய்யும். பலப்படுத்தவே அவர்கள் முனைவதையும் காண்கிறோம்.

" சோசலிசத்தின் கீழ் அரசை உறுதியாக்க உறுதியாக்க, அது லிபரல் முதலாளித்துவ சமூகத்தை விட , எதேச்சதிகாரமான சமூகத்திற்கே இட்டுச் செல்லும் என பகுனின் பேசியது தீர்க்கதரிசனமானது" என வோர்ஸ்லி பதிவிட்டுள்ளார்.

ராபர்ட்டோ மிஷல்ஸ் எழுதிய அரசியல் கட்சிகள் நூலை வோர்ஸ்லி சுட்டிக்காட்டுகிறார். எல்லா அமைப்புகளிலும் அங்கத்தினர் குரலுக்கு

மிகக் குறைந்த space ஏ கிடைத்தது. கட்டமைப்பு என்றால் அது சிறு குழு ஆட்சியாகவே முடியும் என ராபர்ட்டோ 1911ல் எழுதியதாக வோர்ஸ்லி தெரிவிக்கிறார். ஸ்டாலின் ஆட்சி ஜனநாயகத்தை மத்தியத்துவம் எப்படி தோற்கடித்தது என்பதற்கு உதாரணமானது என அவர் காட்டுகிறார். பூரண அதிகாரத்துவத்திற்கான போட்டியாக சற்று பயங்கரவாதமாக கூட இருந்த மதிப்பீட்டை வோர்ஸ்லியிடம் காணமுடிகிறது.

மார்ட்டோவ் லெனின் தோழமையும் வேறுபாடும் சோவியத் கட்சி வரலாற்றில் அபூர்வமாக பேசப்படுபவை. மார்ட்டோவ் மென்ஸ்விக்காகி காணாமல் போனார். பிளக்கானோவ் மென்ஸ்விக் ஆனாலும் கூட, லெனின் ஆட்சி காலத்தில் காணடிக்கப்படவில்லை. 1903ல் மார்ட்டோவ் பேசியதை அநேகமாக உலக கம்யூனிஸ்ட் வெகுஜன கட்சிகள் பின்பற்றுவதைக் காண்கிறோம்

கட்சிக்கொள்கையுடன் உடன்படுகிற எவரையும் கட்சியில் சேர்த்து வெகுஜன கட்சியாக்க வேண்டும் என்றார் அன்று மார்ட்டோவ். அன்று புரட்சிகர கட்சி என்கிற லெனின் பார்வையில் மார்ட்டோவ் கருத்து ஏற்கப்படாமல் போனது என்பது அவர்களின் வரலாறு.

உழைப்பும் பணிவும் கொண்ட மக்களையையே எங்கும் ஆளும் வர்க்கம் விரும்புகிறது என்கிற செய்தி இந்நூலில் கிடைக்கலாம்.

வோர்ஸ்லியின் நூல் இப்படி பல சிந்தனைகளை கிளறக்கூடிய நூலாக இருப்பதை உணர முடிந்தது.

11-5-2025

nov 6 2016

38. நினைவுச் சுழல்

பலரோ சிலரோ ஒருவர் குறித்து பெருமிதத்துடன் புகழ்வதும்- சிலரோ பலரோ அதே நபர் குறித்து இகழ்வதும் தவிர்க்கமுடியாத ஒன்றே. தோழர் லெனினுக்கும் இது நிகழ்ந்தது. சோவியத் புரட்சி- ஆட்சி , உலகத்தின் பல்வேறு நாடுகளின் உழைக்கும் மக்களுக்கு நம்பிக்கை ஒளி என புகழப்பட்டதும் அனார்க்கிஸ்ட்கள், நோம் சாம்ஸ்கி போன்றவர்கள் கூட லெனினை விமர்சித்து வருவதும் நடந்து வருவனவாகவே இருக்கிறது. நூற்றாண்டு என்பதால் இது குறித்து நாம் அதிகம் தெரிந்து கொள்ளமுடியும். பரேஷ் சட்டோபாத்யாய் கனடா க்யூபெக்கில் உள்ள மார்க்சிய ஆய்வாளர். The marxian concept of capital and soviet experience-Paresh Chattopadhyay என்ற புத்தகமும் எழுதியவர். பல்வேறு கட்டுரைகளை எழுதி வருபவர். அவரது சமீபத்திய கட்டுரை ஒன்று Party problematic in Revolution: Some Random Remarks பிராண்டியர் இதழில் படிக்க நேர்ந்தது .அக்கட்டுரையில் ஜெர்மன் வரலாற்றாசிரியர் OSKAR ANWEILER அவர்களின் சோவியத் இயக்கம் குறித்த ஆய்வு புத்தகம் ஒன்றை குறிப்பிட்டிருந்தார். அதை தேடும் முயற்சி பலனளித்து 360 பக்கங்களை கொண்ட The Russian Workers peasants and Soviet councils 1905-1921 OSKAR ANWEILER படிக்க துவங்கியுள்ளேன்.

பிராண்டியர் இதழ் கல்கத்தாவிலிருந்து வருகிறது. திருவாரூரில் இருந்தபோது பல ஆண்டுகள் வீட்டிற்கு வந்து இதழ். பேராசிரியர் அ. மார்க்ஸ் அவர்கள்தான் எனக்கு பிராண்டியர் முகவரி தந்து உதவியவர். மார்க்ஸ் அவர்கள் தமிழகம் அறிந்த களப்போராளி-Public Intellectual எதையும் focussed ஆக சொல்லியும் எழுதியும் வருபவர். ஏராள புத்தகங்களை எழுதியுள்ளார். பின்நவீனத்துவம் குறித்து எனக்கு புரியாமல் இருந்தபோது தன் கடிதம் மூலம் எனக்கு புரிதலை

தந்திருந்தார். பேரா அ. மார்க்ஸ் அவர்களுக்கு எனது நன்றியை பதிவு செய்கிறேன்.

பிராண்டியரில் எனது கட்டுரை ஒன்றும் வந்தது. நியுஏஜ்ஜில் எழுதிக் கொண்டிருந்தபோது பிராண்டியருக்கு எழுதலாமே என்ற முயற்சிக்கு பிராண்டியர் ஆதரவு தந்ததற்கு எனது நன்றி. மரியாதைக்குரிய தோழர் சி. இராஜேஸ்வரராவ் (பொதுச் செயலர் சி பி அய்) அவர்களுடன் மூன்று நாட்கள் இருக்க வாய்ப்பு எனக்கு கிடைத்தது. வாய்ப்பை நல்கிய ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட கட்சிக்கும் என் மீது நம்பிக்கை வைத்து அப்பொறுப்பை ஒப்படைத்த திருவாரூர் மறைந்த தோழர் பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் எனது நன்றி. தோழர் ராஜேஸ்வரராவுடன் இளைஞனுக்கே உள்ள ஆர்வத்தில் நக்சல் இயக்கம்-தன்னார்வ இயக்கம் மற்றவை விவாதித்த போது அவர்தான் நியுஏஜ்ஜிற்கு எழுது என பணித்தார். அவர் மறைந்த பின்னர்தான் சில கட்டுரைகளை எழுத முடிந்தது. இதேபோல் வேறு ஒரு நல்வாய்ப்பும் கிட்டியது. சி பி அய்யின் புகழ் வாய்ந்த தலைவர்களுள் ஒருவரான தோழர் ராஜசேகர ரெட்டி அவர்களுடன் முழுமையாக ஒருநாள் உரையாட வாய்ப்பு கிடைத்தது. அப்போது social Science probings முதல் இதழ் வந்திருந்த நேரம். அவர்தான் ஆசிரியர். CPIM தோழர்கள் Social Scientist பத்திரிக்கையை சிறப்பாக பல ஆண்டுகள் நடத்திக்கொண்டிருந்த நேரம். Science Probings தோழர்களை வாங்க வைக்க மத்தியதர வர்க்க தோழர்கள்முயற்சி செய்ய வேண்டும் என தோழர் ராஜசேகர ரெட்டி அறிவுரை செய்தார். சில இதழ்கள் வந்து மிக சிறந்த பத்திரிக்கையாக வரவேண்டியது நின்றுபோய்விட்டது.

இந்நேரத்தில் மிக முக்கிய தஞ்சை தலைவர் தோழர் கே எஸ் கே அவர்களுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். நான் கல்லூரியிலிருந்து அப்போதுதான் வேலைக்கு சேர்ந்த நேரம். ஜெகன் கூட்டம்... என்னை பேச சொன்னபோது இங்கிலீசில் உளறினேன். ஜெகன் நீ இங்கே தங்கி வேலை செய்யறதா இருந்தால் தமிழில் பேசு என்றார். கே.எஸ் கே Dialectics புத்தகத்தை கொடுத்து படி என்றார்.

ஆங்கிலம்தானே என்று நினைத்து வாங்கிய எனக்கு புரிந்தது ஆங்கிலம் படிக்கத் தெரிந்தாலே எல்லாம் புரிந்து விடாது என்பது. கே எஸ் கே தான் மிகச் சிறந்த அப்போது பெரிதும் நாங்கள் படிக்க காத்துக்கிடக்கும் PartyLife அறிமுகப்படுத்தினார். மார்க்சிய அரிச்சுவடியில் சேர உதவிய தோழர் கே எஸ் கேவுக்கு எனது அன்பு நன்றி.

2017 மார்க்சிய உலகில் பெரும் விவாதங்கள் நடைபெறவேண்டிய ஆண்டு. ருஷ்ய புரட்சி 100 படிப்பினைகள், நக்சல்பாரிகள்-50 படிப்பினைகள், சீனா கலாச்சார புரட்சி-50 படிப்பினைகள் என விவாதம் பெருக போகிறது. உடல் ஆரோக்கியம் ஒத்துழைக்கின்றவரை நீண்ட பயணத்தில் சில மைல்கள் பயணிக்க உத்தேசம்.

march 18 2025

39. ஆர் பி தத் (1896-1974)- இந்தியாவின் உற்ற தோழர்

ரஜனி பாமி தத் என்கிற பெயர் இந்திய கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றுடன் கலந்து போன பெயர். குறிப்பாக விடுதலைக்கு முன்னரான கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றில் பெரும் பாத்திரமாக இருந்த பெயர்.

லண்டன் ஓரப்பகுதி கிராமம் ஒன்றில் அக்கால நம்மூர் ' ஒரு ரூபா ' டாக்டர் போல, ஏழைகளின் மருத்துவராக இருந்தவர் உபேந்திர கிருஷ்ண தத். அவர் ஸ்வீடிஷ் பெண் 'அன்னா பாமியை ' மணந்து கொண்டார். கிளமன்ஸ் பாமி தத், ரஜனி பாமி தத் என்கிற அவர்களது இரு மகன்களும் பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தாலும், கம்யூனிஸ்ட்களாலும் மறக்க முடியா மனிதர்களாயினர்.

ரஜனி என்றால் இரவில் பிறந்தவன் எனப் பொருள். அம்மாவின் பாமி , அப்பாவின் தத் சேர்ந்து அவர் ரஜனி பாமி தத் ஆனார். இந்தியாவில் ஆர் பி தத் என அறியப்படலானார். தோழர்களால் ரஜி என அழைக்கப்பட்டார்.

கல்லூரி காலத்திலேயே , சோவியத் தாக்கத்தால் அவர்கள் புரட்சிகர இயக்கம் நோக்கி சாய்ந்தனர். கிரேட் பிரிட்டன் கம்யூனிஸ்ட் கட்சியின் நாயக இளைஞர்களாகவும் வளர்ந்தனர். ஆர் பி தத் 'லேபர் மன்த்லி' தொடங்கி 53 ஆண்டுகள் அதன் எடிட்டராக ஏராளம் எழுதி குவித்தார். சிபிஜிபி என்கிற கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்குழுவில் செயல்பட்டார்.

ஷாபுர்ஜி சக்லத்வாலா, எமிலி பர்ன்ஸ், ஹாரி பொலிட் போன்றவர்கள் கூட்டாளிகள். சக்லத்வாலாவும் தத்தும் ஒருவரையொருவர் நேசித்த தோழர்கள். 1922ல்வெளியான எம் என் ராயின் India in Transition, 1926ல் வெளியான தத்தின் Modern India இரண்டும் அப்போதைய அறிவுசார் இளம் கம்யூனிஸ்ட்களுக்கு பொக்கிஷங்களாயின. இந்தியா குறித்த மார்க்சிய ஆய்வு நூல்களாக அவை பார்க்கப்பட்டன.

பிரிட்டிஷ் கட்சியில் அப்போதிருந்த இளம் தோழர்களில் சிலர் - சார்லஸ் அசிலே, ஜார்ஜ் அலிசன், பென் பிராட்லி, பிலிப் ஸ்ப்ராட் போன்றோர் இந்தியா வந்தனர். இங்கிருந்த இளம் குழு தோழர்களுடன் ஸ்ப்ராட் தொடர்பு கொண்டு மீரத் சதி வழக்கில் சிறைக் கொடுமையையும் அனுபவித்தார். சிங்காரவேலர் பேத்தியையும் மணந்து, இந்தியாவிலேயே வாழ்ந்து மறைந்தார். அது தனி வரலாறு.

இங்கிலாந்திற்கு படிக்கப்போன ஏராள இந்திய இளைஞர்கள் மார்க்சியம் பக்கம் திரும்பினர். ஆர் பி தத்திற்கும் இதில் பெரும் பங்குண்டு. அவர்களில் பலர் பெரும் பொறுப்புகளில் பின்னர் அமர்ந்தனர். அவர்களில் சிலர் டி ஆர் காட்கில், எஸ் சி சர்கார், ஜோதிபாசு, ஹக்சர், மோகன் குமார மங்கலம், இந்திரஜித் குப்தா, புபேஷ் குப்தா, என் கே கிருஷ்ணன், பெரோஸ் காந்தி, நிகில் சக்கரவர்த்தி, ரேணுகா, ஹஜ்ரா பேகம், டாக்டர் அகமது, தேவி பிரசாத் சட்டோ, திலிப் போஸ், ஜகதீஷ் குப்தா எனச் சொல்லலாம்.

அப்போதெல்லாம் கோமிண்டர்ன் (மூன்றாவது அகிலம்) என்ன எழுதி அனுப்புகிறதோ அதுதான், அனைத்து கம்யூனிஸ்ட்களுக்கும் பாடத்திட்டம். வேறு பிரதியை நினைத்துக்கூட பார்க்க முடியாது. மெத்த படித்த இந்த அனைத்து இளைஞர்களும், சோவியத் மகுடியில் முழுமையாக மனதை கொடுத்தனர். முளைவிட்ட இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கும் , ஸ்டாலின் பேசிய அறிக்கைகளும், கோமிண்டர்ன் அறிக்கைகளும் தான் road map.

எம் என் ராயின் தாக்கம் நீங்கிய நிலையில், பிரிட்டிஷ் தோழர்களுக்கு வழிகாட்டும் பொறுப்பு கூடியது. தத் முக்கிய வழிகாட்டியாக வரலானார். ஹிட்லரின் பாசிசத் தன்மை உணரப்பட்ட நிலையில், கோமிண்டர்ன் டிமிட் ராவ் அறிக்கை வழியே, ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களில் அய்க்கிய முன்னணி என்கிற கோட்பாட்டை முன்னெடுத்தது. இந்தியாவிலும் காங்கிரசுடன் இணைந்து என்கிற அறிவுரையை டிமிட் ராவ் முன் வைத்தார். இதற்கு முன்னால் இருந்த, காந்தி- காங்கிரஸ் குறித்த விமர்சன பார்வையில் கொஞ்சம் தணிவு

ஏற்படலானது. தத்தும் பிற கம்யூனிஸ்ட்களைப் போலவே காந்தியை 'ரீ ஆக்ஷனரி ' எனத்தான் எழுதி வந்தார்.

ஆறாவது கோமிண்டர்ன் வழிகாட்டல் , மிக மோசமான இடது குறுங்குழு வாதம் நோக்கியே , இந்தியாவில் கம்யூனிஸ்ட்களை அழைத்துச் சென்றது. தத் அக்கூட்டத்திற்கு செல்லாவிடினும், அவர் இந்த செக்டேரியன் நிலைப்பாட்டை மிக அதிகம் உயர்த்திப்பிடித்தவர் என பார்க்கப்பட்டார். ஸ்டாலினின் ஊதுகுழல் எனப் பெயர் எடுக்கும் அளவு அவரது எழுத்துக்கள் சென்றன. இந்த தாக்கம் இந்திய கம்யூனிஸ்ட்கள் மீதும் பரவியது. காந்தியும் காங்கிரசும் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாயினர். இந்திய தல நிலைமை குறித்த அறியாத்தனத்தால் விமர்சிக்கப்பட்டு வந்த காலமிது.

1936ல் இன்றும் கட்சி வட்டாரத்தில் புகழ் வாய்ந்த சொற்றொடராக இருக்கும் Dutt- Bradley thesis வெளியானது. ஆர் பி தத் மற்றும் பென் பிராட்லி பெயரில் வந்த ஆவணப்படி, காங்கிரசுடன் சேர்ந்து உள்ளிருந்து வேலை செய்வது என்ற திசை பின்னர் உருவானது. இளம் பி சி ஜோஷி பொதுச் செயலராகி, இதை முன்னெடுக்கலானார்.

இந்த சூழலிலும் வங்கத் தோழர்கள் தங்கள் செக்டேரியன் பாதையை விடாமல் league against Gandhism- fight the reactionary and bourgeois ideology of Gandhism' என்று இயங்கியதாக சோம்நாத் லாகிரி நினைவு கூர்ந்துள்ளார். சோம்நாத் லாகிரி மட்டுமே ஓராண்டு அரசியல் அமைப்பு அவையில் கம்யூனிஸ்ட்கள் சார்பில் இருந்தவர்.

மாஸ்கோ சென்ற கிளமன்ஸ் தத் , ஹாரி பொலிட், பென் பிராட்லி அங்கே வந்திருந்த அன்றைய காங்கிரஸ் சோசலிஸ்ட் தலைவர் மினு மசானியை சந்தித்து CSP- CPI இடது கட்சிகளின் நெருக்கம் குறித்து, அணி குறித்து உரையாடினர். கிளமன்ஸை, ரஜனி தத் என மசானி அப்போது தவறாக புரிந்து கொண்டார். கம்யூனிஸ்ட்களிடம் அவநம்பிக்கை வைத்திருந்த மினு மசானி இரு நிபந்தனைகளை விதித்தார். சிபிஅய்யை கலைத்துவிட்டு காங்கிரஸ் சோசலிஸ்ட்

கட்சியில் சேரவேண்டும். கோமிண்டர்ன் இணைப்போ, உத்தரவுகளோ கூடாது என்பன நிபந்தனைகள். இது நடைபெறாது என அவர் அறிவார்.

இந்தியாவில் ஆங்காங்கே காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சிக்குள் கம்யூனிஸ்ட் தோழர்கள் இயங்கத்தொடங்கினர். நம்பூதிரிபாத், ராமமூர்த்தி, ஜீவா போன்றோரை இப்படி சொல்லமுடியும்.

காங்கிரசில் மாறுபட்டு 'பார்வேர்ட் கட்சியை ' தொடங்கிய நேதாஜி left consolidation platform ஒன்றை உருவாக்கினார். எம் என் ராய், ஜேபி, நரேந்திரதேவ், பி சி ஜோஷி, நேதாஜி என பெரும் குழாம் சிறிது காலம் சேர்ந்தும் , பின் ஒருவரை ஒருவர் நம்பாமல் செயல்பட்டு , ஒற்றுமையை குலைத்துக்கொண்டனர்.

சுவிட்ஜர்லாந்தில் 1936 ல் நேருவை சந்தித்த ஆர் பி தத், காங்கிரஸ் இயக்கம், கம்யுனிஸ்ட் கட்சியை தோழமையாக பார்த்து வளர உதவ வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். நேரு மார்க்சியத்தை ஆழமாக கற்றவராக தெரியவில்லை என்றாலும், அதன் மீது emotional attachment அவருக்கு இருப்பதாக தத் மதிப்பிட்டார். நேரு மீது தத்தின் தாக்கம் இருந்ததை, அவர் இந்தியா திரும்பிய உரைகள் காட்டின என்கிற பேச்சு இருந்தது. சிபிஅய் மத்திய கமிட்டி ஜூலை 1936 அறிக்கையில், காங்கிரஸ் மேடையிலிருந்து கணிரென ஒலித்த நேருவின் ஏகாதிபத்திய எதிர்ப்புக் குரல் என இதனை பதிவிட்டது.

லக்னோ காங்கிரசில் நேருவின் தலைமையுரையை- 12 பக்க அளவில் முழுமையாக தத் 'லேபர் மந்த்லியில்' வெளியிட்டார்.

அதேபோல் நேதாஜியிடமும் சிறிய அளவு செல்வாக்கை தத்தால் உருவாக்க முடிந்தது. வியன்னாவில் இருந்து The Indian Struggle நூலை எழுதிய நேதாஜியிடம் கம்யூனிஸ்ட்கள் மீது கடும் விமர்சனம் இருந்தது. அவர்கள் தேசியத்திற்கு விரோதமானவர்கள், நாத்திகர்கள், மத விரோதிகள் என நேதாஜி விமர்சித்து வந்தார். நேரு கூட இந்த 'கம்யூனிச பாச வலையில்' இருக்கிறார் எனக் கூட பேசினார். லண்டனில்1938ல் நேதாஜி இருந்தபோது, தத் அவரை சந்தித்து

உரையாடினார். தத் தலைமையில் நேதாஜி பேசுகிற கூட்டங்கள் அமைக்கப்பட்டன.

அதற்கு பின்னர் டெய்லி ஒர்க்கர் பத்திரிகை பேட்டியில், நேதாஜி விடுதலை இந்தியா சோசலிச பாதையையே தேர்ந்தெடுக்கும் என்றார். இந்த தாக்கத்தை அவர், காங்கிரசிலிருந்து வெளியேறி இடது மேடை ஒன்றை அமைக்கும்வரை இருந்ததைக் காண்கிறோம்.

1940ல் ஆர் பி தத் எழுதிய India Today பெரும் புகழை ஈட்டிய புத்தகமாக இன்றுவரை இந்திய கம்யூனிஸ்ட்களால் உணரப்படுகிறது. அப்புத்தகம் இந்தியாவில் தடை செய்யப்பட்டு, இரகசியமாக பெறப்பட்டு படிக்கப்பட்டது. இந்தியா குறித்த மேம்பட்ட மார்க்சிய புரிதலாக அது பாவிக்கப்பட்டது.

1939ல் இரண்டாம் உலகப்போரை 'ஏகாதிபத்திய யுத்தம்- நாடுகளை பங்குபோட வளங்களை கொள்ளையாக்கிட போர்' என்றுதான் இந்திய கம்யூனிஸ்ட்களும் பார்த்தனர். சோவியத் யூனியன் போரில் இங்கிலாந்து அமெரிக்க அணியில் இறங்கியவுடன், பாசிசத்திற்கு எதிரான 'மக்கள் யுத்தம் ' என்ற நிலையை எடுத்தனர்.

கட்சி தடை காலத்தில் , தலைவர்கள் சிறைக் காலத்தில் , கூடி விவாதித்து முடிவு என்பது பிரச்சனையாக இருந்தது. தத் 'மக்கள் யுத்தம்' என எழுதிய கட்டுரைகள் உடனடியாக இங்கு தாக்கத்தை உருவாக்கவில்லை. ஆறுமாதம் ஏதோவொரு வகையில் முடிந்த விவாதங்களை மேற்கொண்டு, மக்கள் யுத்தம்- பிரிட்டிஷ் ஆதரவு நிலைப்பாட்டிற்கு இந்திய கட்சியினர் வந்தனர். குவிட் இந்தியாவிலும் 1942ல் பங்கேற்கவில்லை என்ற விமர்சனத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட்கள் உள்ளாயினர். ராஜாஜி, அம்பேத்கர், பெரியார் , இந்து மகா சபா உட்பட எவரும் குவிட் இந்தியாவை ஆதரிக்கவில்லை - குவிட் இந்தியாவிற்கு எதிராகவே நின்றனர். ஆனாலும் விமர்சனக் கணைகள் கம்யூனிஸ்ட்கள் மீதே அதிகம் விழுந்தன.

பாகிஸ்தான் தீர்மானத்தை முஸ்லீம் லீக் 1940ல் நிறைவேற்றியது. தொடர்ந்த ஆண்டுகளில் இந்திய கம்யூனிஸ்ட்களும், சுயநிர்ணய உரிமை பார்வையில் இத்தீர்மானத்திற்கு ஆதரவு நிலை எடுத்தனர். புகழ் வாய்ந்த 'அதிகாரி தீசிஸ் ' அறிந்தவர் இதை உணர்வர். 1946ல் ரஜனி பாமி தத் இந்த நிலை ஏற்புடையதல்ல என எழுதலானார்.

1946ல் இந்திய கம்யூனிஸ்ட்கள் '17 அரசியல் அசெம்பிளிகள்' என தீர்மானித்தனர். லண்டனில் இருந்த டாங்கேவிற்கும் தந்தி அனுப்பப்பட்டு, பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியிலும் இப்படி ஒரு தீர்மானத்தை கொணரக் கோரினர். தோழர் டாங்கே தந்தியை தோழர் தத்திடம் காட்டினார். தத் 'மய்யப்பட்ட ஒரே அரசியல் நிர்ணய சபை தான் ' தீர்வாக இருக்கும். 17 என்று கோரினால் இந்தியா என்ற ஒன்றே இல்லாமல் போய்விடும் என்கிற எச்சரிக்கையை செய்தார். லேபர் மந்த்லியிலும் ஒரே 'மய்யப்பட்ட அரசியல் நிர்ணய சபை ' என எழுதி , இங்குள்ளவர்களுக்கு வழிகாட்டினார்.

அதேபோல் இந்தியாவை பிளவுபடுத்தும் மவுண்ட்பாட்டன் திட்டத்தை அவர் ஏற்கவில்லை.

இந்தியா வந்த பாமி தத் - காந்தி, நேரு, படேல், ஆசாத்,ஆசப் அலி, ராஜாஜி போன்றவர்களை சந்தித்தார். காங்கிரஸ் - கம்யூனிஸ்ட்கள் சேர்ந்து தோழமையுடன் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை முன்னெடுக்க வேண்டினார். காங்கிரசின் 'பாஸ், இரும்பு மனிதன்' என கருதப்படும் படேலுடன் தான் அதிக நேரம் விவாதிக்க வேண்டியிருந்தது என தத் குறிப்பிட்டுள்ளார். பெதிக் லாரன்ஸ் தூதுக்குழு வந்த 1946 மார்ச்சில், டெய்லி ஒர்க்கர் பத்திரிகையாளராக தத் இந்தியப் பயணம் இருந்தது. தனது தந்தையின் மூதாதையர் இடமான கல்கத்தா சென்று மகிழ்ந்தார். தொழிலாளர் கூட்டங்களில் உரையாற்றினார். மே தின பேரணியில் பங்கேற்றார். கல்கத்தா தோழர்களின் அன்பில் திளைத்தார்.

அதேபோல் தன்னை சந்தித்த சோசலிஸ்ட் தலைவர் மது லிமாயிடம், 1947 நவம்பரில், காங்கிரசை விட்டு நீங்கள் வெளியே போவது நல்லதல்ல என எடுத்துரைத்தார் தத். நேருவிற்கு ஆதரவான சக்திகள் வெளியேறுவது, படேல் போன்றவர்களையே பலப்படுத்தும் என அவர் கருதினார்.

1948ல் தோழர் ரணதிவே தலைமையில் மீண்டும் குறுங்குழு வாதம் கட்சியைப்பற்றியது. பெற்ற விடுதலையை ஏற்கவில்லை. அதிவீர நிலைப்பாடுகளால் , லட்சம் உறுப்பினர்களை தொட்ட கட்சி பெருமளவு சரிந்து 20 ஆயிரம் என்றானது. தத் நேருவின் வெளிநாட்டு கொள்கையை பாராட்டி எழுதினார். திரும்பவும் கட்சி நிதானமடைய அவரின் கருத்துக்கள் உதவின. இந்திய கம்யூனிச இயக்கம் பற்றி புகழ் வாய்ந்த நூல் எழுதிய ஓவர் ஸ்ட் ரீட்- விண்ட்மில்லர், 1951 கட்சி திட்ட வரையறைகளில் ரஜனி பாமி தத் செல்வாக்கு இருந்ததாக மதிப்பிட்டுள்ளனர்.

பின்னொரு காலத்தில் டாங்கே இவ்வாறு நினைவு கூர்ந்தார். மிக முக்கியமான கட்சி வரலாற்று கட்டங்களில் எல்லாம், ஆற்றுப்படுத்த தத் நம்மோடு நின்றுள்ளார் . எம் பி ராவ் எடிட் செய்த கட்சி வரலாற்று ஆவணம் இப்படி பதிவை செய்தது.

“On so many critical the CPGB and Palme Dutt had corrected us- the three party letters of 1933, Dutt Bradley Thesis 1936, after Hitler attack, criticism on our wrong stand with regard to Muslim League and finally his letter to Andhra comrade in 1949”

1959ல் கேரளா இ எம் எஸ் ஆட்சி கலைக்கப்பட்டபோது, நேருவை விமர்சித்தார் தத். 1962 இந்திய சீனா போரை , தொடர்ந்த 1964 கம்யூனிஸ்ட் இயக்க உடைவை அவர் துரதிருஷ்டமான நிகழ்வுகள் என வருந்தினார்.

தத் தனது மார்க்சிய பயிற்சியால், இந்தியத் தோழர்களுக்கு துணையாக நின்றார். சோவியத்தை ஸ்டாலினை உயர்த்திப் பிடித்தார். இந்திய மக்களின் விடுதலைக்காக ஓயாமல் குரலை

லண்டனில் கொடுத்து வந்தார். அவர் காந்தியை கடுமையாக விமர்சித்தவர்தான். அதே நேரத்தில் லண்டனில் அவர் தேர்தலில் நின்றபோது, 1945ல் மகாத்மாவின் ஆசியை கோரினார். காந்தியும் வெற்றிபெற நல்வாழ்த்துகள் என்கிற செய்தியை அனுப்பியதாகவும் அறிய முடிகிறது. ஹங்கேரி 1956, செக் 1968 சோவியத் தலையீடுகளை தத் வரவேற்பவராகவே இருந்தார். அவர் அதை நியாயப்படுத்தியது விமர்சனமானது. அப்போது கம்யூனிஸ்ட்களுக்கு இருந்த ஒரே பற்றுக்கோல் சோவியத்தாக இருந்தது.

தத் Labour Monthly ல் பெரும் அறிஞர் பெருமக்கள் எழுதி வந்தனர். இந்தியா குறித்தும் ஏராள கட்டுரைகள் வந்தன. மார்க்சியம், சோவியத் பற்றி எழுதப்பட்டது. காந்தியின் கட்டுரை கூட அதில் இடம் பெற்றது. அவர் எழுதிய Britain, India and Swaraj அதில் வந்தது. இந்தியத் தோழர்கள் சட்டோ (சரோஜினி நாயுடு சகோ) , எம் என் ராய்., கிருஷ்ண மேனன், சக்லத்வாலா, பி சி ஜோஷி, டாங்கே, சர்தேசாய், என் எம் ஜோஷி (தொழிற்சங்க தலைவர்) , ஷேக் அப்துல்லா போன்றவர் எழுதியுள்ளனர்.

உலக அறிஞர்கள் பலர் அதில் பங்களித்தனர். பெர்னார்ட் ஷா, ரொமயின் ரோலந்த், எமிலி பர்ன்ஸ், ரால்ப் பாக்ஸ், ஸ்ட் ராட்சி, கார்ல் ராடெக், மௌரிஸ் டப், ஒலாப் பாமி, , நெக்ருமா, பால் ராப்சன், புகாரின், கிளாரா ஜெட்கின் எனச் சிலரை சொல்லலாம்.

லண்டனில் வாழ்ந்த தத், இந்தியா குறித்து விடாமல் சிந்தித்தவராக இருந்தார். இப்படி 50 ஆண்டுகளுக்கு மேலாக தன் வாழ்நாளின் பெரும் பகுதியை செலவழித்த மனிதர், இந்தியாவில் கம்யூனிஸ்ட் அல்லாதார் மத்தியில் ஏனோ போய் சேரவில்லை. விடுதலைக்கால அனைத்து தலைவர்களுடனும் தன் விவாதத்தை நடத்தியவராக தத் இருப்பதைக் காணமுடிகிறது.

லேபர் மன்த்லி இதழ்கள் இணையத்தில் கிடைக்கின்றன. இந்தியாவில் அவருக்கு நெருக்கமாக இருந்த திலிப் போஸ் அவர்

பற்றி எழுதியுள்ளார். சக்லத்வாலா பற்றி எழுதிய டாக்டர் பஞ்சனன் ஷாகா ரஜனி பாமி தத் குறித்து தனி நூல் ஒன்றும் எழுதியுள்ளார். இந்தியாவின் உற்ற நண்பராக விளங்கிய தத் மறைந்து (1974) அய்ம்பது ஆண்டுகள் ஆன நிலையில், அவர் குறித்த சில செய்திகளை எழுதத் தோன்றியது.

18-3-2025

march 7 2025

Akeel Bilgrami's Inquiry on Unalienated Life-

40 பில்கிராமியின் ஆய்வுலகில் அந்நியமாகா பெருவாழ்வு..

அகில் பில்கிராமி எழுத்து எப்போதும் ஈர்க்கக்கூடியது. மார்க்சின் அந்நியமாதல் குறித்து தொடர்ந்து அவர் பேசிக்கொண்டிருப்பார். மார்க்சின் Economic and Philosophical Manuscripts 1844 மொழியில் அல்லாமல், அந்நியமாதலுக்கு உள்ளாகாத வாழ்வு குறித்து, காந்தியை முன்வைத்து பொதுவாக பேசி வருபவர் பில்கிராமி. காந்தியின் 'வாழ்ந்து காட்டும்' மாடலின் முக்கியத்துவத்தை பில்கிராமி வலியுறுத்துவார். டன் டன்னாக பேசுவதிலிருந்து இந்த Gandhian ideal எப்படி மாறுபட்டு முக்கியமாகிறது என அவர் சொல்வார்.

அகில் பில்கிராமியும், மார்க்சிய அறிஞர் பிரபாத் பட்நாயக்கும் நடத்திய உரையாடல் ஒன்றும் அற்புதமானதாக இருக்கும்.

அகில் பில்கிராமியின் Marx Gandhi and Modernity மிக முக்கியமான நூல். இது குறித்து சில உரையாடல்களிலும், முகநூலிலும் தொட்டுக்காட்டியுள்ளேன். கிண்டில் வழி முன்பு படித்தது.

பில்கிராமியின் மேற்கு தத்துவ விளக்கங்களை புரிந்து கொள்வதில் நான் தடுமாறுகிறேன். பயிற்சியின்மையை உணர்கிறேன். இதனால் கடந்த 2022 ல் வெளிவந்த அவரின் நூலான

Capital Culture and the Commons யை விளங்கிக் கொள்வதில் என் போதாமையை பெரிய அளவு உணர்கிறேன்.

அசோகா பல்கலை ஒத்துழைப்புடன் வந்துள்ள சிறிய நூல்தான் இந்த capital culture and the commons . ஆனாலும் பக்கந்தோறும் தன் அடர்த்தியை பரப்பிக்கொண்டிருக்கிறது. பெரும் சிந்தனையாளர்கள் இந்த நூல் குறித்து விதந்து பேசியுள்ளனர். தட்டுத் தடுமாறி படித்தேன் என்றாலும், உள் வாங்கிய திறனில் தோல்வியை உணர்ந்தேன். இருந்தபோதிலும் , அகில் பில்கிராமி தொடர்ந்து பேசும் மய்யத்தை - unalienated life என்பதை பிடிக்க முடிந்தது. அது தான் ஆறுதல்.

அறிஞர் நோம் சாம்ஸ்கி , இந்நூல் அழைத்துச் செல்லும் திசையை தன் வரிகளால் உணர்த்தியுள்ளார். அவ்வரிகள்

..this impressive inquiry leads us step by step to recognise how essential it is to attain a unified unalienated mentality if we are to have any hope of overcoming crises so severe that we can barely find words to capture their immensity

சாதாரண மனிதர்களை commons என்கிற சொல் விரிவில் பில்கிராமி அழைத்துச்செல்கிறார். அவர்கள் தங்களுக்கிடையேயான ஒத்துழைப்பால் சக வாழ்வை நடத்த வேண்டியவர்கள். Can human cooperation be enforced by regulation, by policing and punishing என்கிற கேள்வியை வைத்து பில்கிராமி விவாதிக்கிறார்.

அன்றாட எளிய உதாரணங்களை அவர் லாக், விட்ஜென்ஸ்டைன், நீட்சே , பூக்கோ தத்துவ மொழியில் வைத்து நூலை கட்டுகிறார். மார்க்சின் அந்நியமாதலை எடுத்து விவாதிக்கிறார்.

ஊருடன் ஒத்துழைக்காமல் தன் ராஜ்யத்தை, மேலாண்மையை தன் நலனை மனிதர்களில் சிலர் நிறுவ செய்யும் முயற்சிகள் ஆங்காங்கே- வீடு, வெளி, அமைப்பு, ஆட்சி, நிலம் என அனைத்து இடங்களிலும்- சிறப்பிடம் கோரும் நிலையை நாம் காண்கிறோம். இது ஏன் எப்படி என்கிற தத்துவ விசாரணையில் அகில் நுழைகிறார். அவர் வரிகளில்

An individual commoner decides not to cooperate is always at an advantage, since the gains are immediate, whereas the gains from cooperating are long term, dispersed over the whole group, and above all, always uncertain.

நம் எல்லோருக்கும் 'காந்தி கண்ணாடியை' அகில் பில்கிராமி காட்டுவதை நான் உணர்ந்தேன்.

அகில் பில்கிராமி எழுப்பக்கூடிய , நம் அன்றாட வாழ்வில் நாமெல்லாம் கேட்கக்கூடிய மிக முக்கிய கேள்வி

What if I cooperated and others did not?

